# இராமர் செய்த கோயில்

## இராமேஸ்வரம்



எஸ்.எம்.கமால்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இராமர் செய்த கோயில்

(இராமேஸ்வரம் திருக்கோயில், திருத்தலம் பற்றி
முழுமையான தொகுப்பு நூல்)

ஆசிரியர்
**Dr. எஸ்.எம். கமால்**

வெளியீடு
**சர்மிளா பதிப்பகம்**
21 – ஈசா பள்ளிவாசல் தெரு,
இராமநாதபுரம் – 623501.

## Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title of the Book | : | ERAMAR SAITHA KOIL |
| Author | : | Dr. S.M. Kamal |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition<br>December, 2004 |
| Publishers | : | Sharmila Publishers,<br>Ramanathapuram - 623501 |
| Copy right | : | Author |
| Paper used for Text | : | Map Litho |
| Size of the Book | : | 21.5 x 14 Cms (Demi) |
| Type used for Text | : | |
| Pages | : | 13+211 = 224 |
| No. of Copies | : | 1,200 |
| Price | : | **Rs. 85/-** |


| | | |
|---|---|---|
| Summary | : | Various information relating to purana's, literary and Historical details on the Rameshwaram Temple and the contribution made by the Sethupathi Kings for the up keep of the temple and the administration are compiled in this book. |

# சமர்ப்பணம்

இராமேஸ்வரம் திருக்கோயிலின் எழிலுக்கும் ஏற்றத்திற்கும் தங்களை அர்ப்பணம் செய்து கொண்டு வழி வழியாக தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் வழங்கி வரலாற்றில் நிரந்தரமான இடம் பெற்றுள்ள சேதுபதி மன்னர்களது நினைவிற்கு இந்த நூல் சமர்ப்பிக்கப்படுகிறது.

# பதிப்புரை

வரலாற்றின் தூசு படிந்த ஏடுகளில் மறைந்திருக்கும் சேதுநாட்டின் தொன்மைச் சிறப்பினையும் வரலாற்றுப் பெருமையினையும் பல அரிய ஆய்வு நூல்களாக வெளியிட்டு வரும் சேதுநாட்டு வரலாற்றுச் செம்மல் டாக்டர் எஸ்.எம்.கமால் அவர்களது இந்தத் தொகுப்பினை எங்களது பதினைந்தாவது வெளியீடாக அச்சில் கொண்டு வருவதில் நாங்கள் பெருமையடைகிறோம்.

வரலாற்று ஆய்வாளர்களும் வாசகர்களும் வழக்கம் போல எங்களது இந்த நூலுக்குத் தக்க ஆதரவை நல்குவார்கள் என நம்புகிறோம்.

டிசம்பர் 2004 - சர்மிளா பப்ளிஷர்ஸ்

# அணிந்துரை

பாண்டிச்சேரி
15.09.2004

முனைவர்
கோ. விசயவேணுகோபால்
முதுநிலை ஆய்வாளர்
பிரெஞ்சுத் தொலைகிழக்கு நாடுகள் ஆய்வுப்பள்ளி

கண்பார்வை மங்கிய நிலை, உடற்சோர்வு ஆகியன வருத்தியும் கூட உள்ளச்சோர்வடையாதவர் அன்பு நண்பர் திரு. கமால் அவர்கள். வரலாறு, புதினம், செப்பேடுகள், கல்வெட்டுகள் பதிப்பு, ஆய்வுக் கட்டுரைகள் எனத் தொடர்ந்து எழுதி வருகின்றார். இவ்வகையில் தற்போது "இராமேசுவரம்" என்ற பெயரில் இந்தியாவின் புகழ்மிக்க திருத்தலங்களுள் முக்கியமான ஒன்றினைப்பற்றி எழுதியுள்ளார். இந்திய மக்கள் பாவங்களைக் கழித்துக் கொள்ளும் புனித நீர்த்தலமாகக் கருதி ஆண்டு முழுவதும் வரும் யாத்திரைத் தலம்.

இராமாயணக் காவியத்துடன், பௌத்த சமயத்துடன், சிங்களவர் படையெடுப்புடன், இப்படிப் பல தொடர்புகளுடன் இயங்கிவரும் உயிர்த் துடிப்பு மிக்க தலம். சேது மன்னர்களது பரந்த கொடைகளாலும் தணியாத பக்தியினாலும் தொடர்ந்து உயர்வு பெற்ற தலம். பொதுமக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பல சிறப்பான செய்திகளை எடுத்துரைக்கும் இந்த நூல் மிகவும் பாராட்டத்தக்கது. ஆசிரியரது அயரா உழைப்பு நூலின் அனைத்துப் பக்கங்களிலும் பளிச்சிடுகிறது.

புராணங்கள் தொடங்கி இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் எனப் பன்முகங்களில் இராமேசுரத் தலத்தின் சிறப்புக்கள் இயல்பான எளிய நடையில் தெரிவிக்கப் பட்டுள்ளன. திருக்கோவில் அமைப்பு, வழிபாடுகள்,

பின்பற்றப்படும் நடைமுறைகள், விழாக்கள், வாகனங்கள், சிலைகள், செப்புத் திருமேனிகள் எனப் பகுதி பகுதியாகச் சிற்பி செதுக்குவது போல் செய்திகளை அடுக்கித் தந்துள்ளார் ஆசிரியர்.

கோயில் பண்டாரம், அவரது நி நடத்தைகள், சேது மன்னர்களது பரந்த உள்ளம் எனப் பல பரிமாணங்கள் இந்நூலில் ஒளிபெறச் செய்யப்பட்டுள்ளன.

கோயிலில் நடைபெற்ற திருப்பணிகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இராமேசுவரத்தைச் சுற்றியுள்ள புனிதத் தலங்களும் கூட இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இராமேசுவரம் பற்றிய ஆவணங்கள், சேது மன்னர்களது அறக்கொடைகள் எல்லாம் கால வாரியாகத் துல்லியமாக விவரிக்கப்பட்டுள்ளன. இப்படிப் பல பரிமாணங்களுடன் "பட்டை திட்டப்பட்ட வைரம் போல" ஒளிர்கிறது நூல். இராமேசுவரம் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் ஊர் என்பதை ஆசிரியர் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். ஆசிரியரது நிறைவு வரிகள் இந்தியக் குடிமகன் ஒருவனின் பாரபட்சமற்ற உணர்வுச் சிதறல்களாகப் படிப்பவர் மனத்தை உருக்குகின்றன.

இராமேசுவரம் வந்தவர், வருபவர் கையில் இருக்க வேண்டிய நல்ல நூல். அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டுமெனப் பரிந்துரைக்கின்றேன்.

வாழ்க நண்பர் கமால் ! வளர்க அவரது எழுத்துப் பணி.

அன்புடன்

**கோ. விசயவேணுகோபால்**

## இந்நூல் வரைவதற்கு ஆதாரமாக அமைந்த நூல்கள்

1. தேவாரத் திரட்டு – பாலசுப்பிரமணிய முதலியார்
2. கம்பராமாயணம்
3. அகநானூறு
4. புறநானூறு
5. கலித்தொகை
6. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள்
7. சேதுபுராணம் – நிரம்ப அழகிய தேசிகர் – சக்தி வெளியீடு
8. தேவைஉலா – சொக்கநாதப் புலவர்
9. பணவிடுதூது – சொக்கநாதப் புலவர்
10. தளசிங்கமாலை – அழகிய சிற்றம்பலக்கவிராயர்
11. பெருந்தொகை – மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு (1932)
12. சேதுபதி மன்னர் செப்பேடுகள் – டாக்டர் எஸ்.எம். கமால்
13. இராமேஸ்வரம் குடமுழுக்கு மலர் – 1967
14. இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் – தொகுதி – 3
15. அபிதான சிந்தாமணி – தமிழ்க்கலைக் களஞ்சியம்
16. முற்காலப் பாண்டியர் வரலாறு
– சதாசிவ பண்டாரத்தார்
17. பாண்டியர் வரலாறு – குடந்தை – என். சேதுராமன்
18. சேதுபதிகளின் செந்தமிழ்ப் பணிகள் – Dr. S. கந்தசாமி
unpublished Thesis
19. சேது சமஸ்தான நில மான்யக் கணக்குகள் (1811)
20. சேதுபதி மன்னர் கல்வெட்டுகள் (2003) Dr. S.M. கமால்
21. கண்ணுடையம்மன் பள்ளு

| | | |
|---|---|---|
| 1. South Indian Studies Vol. II | : | Dr. R. Nagasamy |
| 2. Manual of Madura Country (1861) | : | A. Nelson |
| 3. Manual of Ramnad Samasthanam 1891 | : | Rajaram Raw |
| 4. Ramanathapuram District Gazetteer - 1978 | : | S. Ramasamy |
| 5. Madura District Gazetteer 1909 | : | A. Francis |
| 6. South India and Her Mohammedan Invaders, 1928 | : | Dr. S. Krishnasamy Iyengar |
| 7. Concise History of Ceylon | : | A. Nicholson and Paranavitana |
| 8. Tamil and Sanskrit Inscriptions Vol - IV (1886) | : | James Burguson and Natesa Sastri |
| 9. Rameswaram Island | : | Captain New well |
| 10. Topographical list of inscriptions of Tamil Nadu. (Vol. I - III) | : | K.V. Rengachariya |
| 11. Sethu or Rameswaram (1932) | : | Vanamaamalai Pillai |

12. Rameswaram Temple 1932 by R. Balasubramania Iyer.

13. History of India and the great eastern architucture (1881) - Dr. Fergusson

14. The History of Setupatis - Dr. Seshadri (1974) Unpublished Thesis

# பொருளடக்கம்


| இயல் | முன்னுரை | பக்கம் |
|---|---|---|
| I. | இமயம் முதல் குமரி வரை | 1 – 11 |
| II. | 1) புராணங்களில் இராமேஸ்வரம் | 12 – 20 |
| | 2) இலக்கியங்களில் இராமேஸ்வரம் | 21 – 37 |
| | 3) வரலாற்றில் இராமேஸ்வரம் | 38 – 45 |
| III. | 1) இராமேஸ்வரம் திருக்கோயில் அமைப்பு | 46 – 58 |
| | 2) மன்னர்களின் திருப்பணிகளும் அறக்கொடைகளும் | 59 – 66 |
| | 3) நகரத்தார் திருப்பணிகள் | 67 – 75 |
| IV. | கோயில் நடைமுறைகள் | |
| | 1) தினசரி நடைமுறைகள் | 76 – 82 |
| | 2) பிற நடைமுறைகள் | 82 – 88 |
| | 3) சிறப்புச் செய்திகள் | 89 – 92 |
| | 4) வாகனங்கள் | 92 – 93 |
| V. | 1) ஆலய நிர்வாகம் | 94 – 111 |
| | 2) கோயில் வருவாய் | 112 – 113 |
| | 3) சேதுப்பாதையில் அன்னதானம் | 114 – 121 |
| VI. | 1) கல்லிலும் செம்பிலும் | 122 – 124 |
| | 2) கல்வெட்டுச் செய்திகள் | 124 – 126 |
| | 3) செப்பேட்டுச் செய்திகள் | 127 – 133 |
| | 4) செப்புத் திருமேனிகள் | 134 – 137 |
| VII. | இராமேஸ்வரம் நகரைச் சுற்றியுள்ள புனிதத் தலங்கள் | 138 – 150 |
| VIII | இராமேஸ்வரம் குடிகள் | 151 – 160 |
| IX. | சில குறிப்புகள் | 161 – 165 |
| X. | 1) வரலாற்றில் பதிவு பெற்றுள்ள இரமேஸ்வரத்து வருகைகள் | 166 – 175 |

2) இராமேஸ்வரம் பற்றிய வரலாற்றுச் செய்திகள் 176 – 187

XI. ஆவணங்களின் சுருக்கம்
இராமேஸ்வரம் திருக்கோயிலுக்குச் சேதுபதி மன்னர்கள் வழங்கிய நிலக்கொடைப் பட்டியல்

XII. 1) புண்ணியர்களைப் பயந்த புனித பூமி 193 – 198
2) வட்டார வழக்குகள் 199 – 202
3) சுவாமி விவேகானந்தரின் இராமேஸ்வரம் வருகை 203 – 205
4) வெளிநாட்டார் குறிப்புகளில் இராமேஸ்வரம் 206 – 208
5) நிறைவு வரிகள் 209 – 211

# முன்னுரை

நமது நாட்டில் பரவலாகப் பாமரரும் கேட்டு ரசித்து ஏற்றிப் போற்றும் ஒரு காவியம் இராமாயணம் ஆகும். இந்தக் காவியம் எப்பொழுது யாரால் புனையப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால் கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வடமொழியில் வான்மீகி முனிவர் வரைந்த இராமாயணக் காப்பியம் மக்களால் தொடர்ந்து படிக்கப்பட்டு வருகிறது. இதனை அடியொற்றி இந்திய நாட்டின் பல மாநிலங்களில், அந்தந்த மாநில வட்டார மொழிகளில் இராமாயணம் மறு உருப்பெற்று வந்துள்ளது.

தமிழில் மகாகவி கம்பனும், தெலுங்கில் அல்லூரி பெத்தண்ணாவும் ஹிந்தியில் சந்த்துளசிதாசரும், மலையாளத்தில் ஆசான் எழுத்தச்சனும் இதேபோன்று கன்னடம், மராட்டியும், கொங்கணி, குஜராத்தி, போஜ்புரி, ஒரியா, வங்காளி, அஸ்ஸாம் போன்ற பல இந்திய மொழிகளிலும் இந்த இராமாயணக் கதை பக்திச்சுவையுடன் புனையப்பட்டு மக்களுக்குப் பயன்பட்டுவருகிறது.

இன்னும் நமது நாட்டைத் தவிரக் கிழ்த்திசை நாடுகளான இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளிலும் இராமாயணக் கதையின் தாக்கம், வலுவுடன் விளங்கி வருகிறது. இங்கெல்லாம் இந்தக் கதையின் பாத்திரங்களின் பெயர்களும், பண்புகளும், மாற்றமாக அமைந்திருந்தாலும் இந்த இலக்கியத்தின் அடி நாதமான

பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், சகோதர மாண்பு, மனிதநேயம், மறத்தை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் போன்ற மனிதப் பண்புகளைச் சித்திரிக்கும் வகையில் எந்த மாற்றமும் காணப்படவில்லை.

இந்த இணையற்ற இராமகதையின் பாத்திரங்கள் அனைத்தும் என்றும் நம்முன்னர் நடமாடுவது போன்ற நிழல் உருவம் நமது சிந்தனையில் தொடர்ந்து கொண்டே வருகின்றன. இராமாயணக் கதையின் நிகழ்வுக்களங்களான அயோத்தி, கங்கை, தண்டகாரண்யம், பஞ்சவடி, கோதாவரி, கிஷ்கிந்தை மகேந்திரமலை, சேது அணை போன்ற இடங்களும் இன்றும் நிலைத்து நின்று அந்த இதிகாசத்தை நினைவூட்டும் காலச் சுவடுகளாக இருந்துவருகின்றன. என்றாலும் இராமாயணக் கதையில் சித்தரிக்கப்படும் அயோத்தி அரண்மனை இராமனும், சீதா பிராட்டியும் இலக்குவனும், மரவுரி தரித்து வாழ்ந்த பஞ்சவடி பர்ணசாலை, இராமனும், இலக்குவனும் சுக்கிரிவனது உதவிக்காகக் காத்திருந்த கிஷ்கிந்தை நாட்டு மலைக்குகை, சீதாப் பிராட்டி சிறையிலிருந்த இலங்கை அசோகவனம் போன்ற இராமாயணம் சம்பந்தப்பட்ட நிகழ்விடங்கள் இன்று நமது காட்சியில் காணத்தக்கதாக இல்லை. இராமபிரானும் சீதாப் பிராட்டியும், வங்கக் கடற்கரையில் தங்களது திருக்கரங்களினால் அமைத்து வழிபட்ட சிவலிங்கமும், அதனையொட்டி எழுந்த இராமேஸ்வரமும், நமக்கு இராமாயண இதிகாசத்தை எளிதில் நினைவு கொள்ளச் செய்யும் தடயமாக அமைந்துள்ளது.

ஸ்ரீ இராமபிரானது, ஈஸ்வரன் ஆலயமாகிய இராமேஸ்வரம் என்ற இந்தத் திருத்தலம் ஏறத்தாழ 1500 ஆண்டுகளாக நமது மக்கட் சமுதாயத்தின் நடுவில் அமைந்திருந்து நாள் தோறும் நமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இந்திய மக்களைப், பரமபதத்தின்

இறைவனான மகா விஷ்ணுவின் அவதாரமாகிய இராமன் மீது தாளாத பக்தியும், மீளாத காதலும், கொள்ளச் செய்து தன்னகத்தே கவர்ந்திழுக்கும், சந்திர காந்தக் கல்லாக அமைந்துள்ளது.

பாரத சமுதாயத்தின் பல்வேறு வாழ்க்கை நிலைகளில் உள்ள பக்த கோடிகளது பேச்சும், மூச்சுமாக விளங்கும், இராமேஸ்வரத் திருத்தலத்தைப் பற்றி மக்கள் அனைவரும் மேலும் மிகுதியான செய்திகளைத் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். நமது கடந்த காலப் பழமையையும், நிகழ்காலப் பெருமையையும், நினைத்து நமது நாட்டின் சமய நம்பிக்கையிலும், சமய ஒற்றுமையிலும், மக்களின் சிந்தனைகளை ஒன்றுபடச் செய்ய வேண்டும் என்ற இலக்கில் இந்தச் சிறிய நூல் படைக்கப்பட்டுள்ளது.

கடந்த 1800 ஆண்டுகளில் வரலாற்றில், புராண, இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டு வந்துள்ள இராமேஸ்வரம் திருக்கோவில் பற்றிய மக்கள் சமுதாயத்தின் பக்திப் பூர்வமான செயல்கள் ஆகியன இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இந்திய நாட்டின் பாரம்பரியப் பெருமையிலும், சமுதாய ஒற்றுமையிலும், மாண்பான மனிதநேயத் தொண்டுகளிலும் மக்களை மேலும் அர்ப்பணிக்கச் செய்ய வேண்டும் என்பதே இந்த நூலின் இலக்கு ஆகும். அதனை நடைமுறைப்படுத்த மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பது அவர் தம் கடமை.

டாக்டர் **எஸ்.எம். கமால்,**
நூலாசிரியர்

## இயல் - I

# இமயம் முதல் குமரிவரை

நமது நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ளவர்களைத் தெற்கே தொலைதூரத்தில் உள்ளவர்களுடன் உணர்வுப் பூர்வமாக ஒன்றுபடுத்திக் குறிப்பிடுவதற்கு அரசியலார் அண்மைக் காலம்வரை பயன்படுத்திய வழக்கு "இமயம் முதல் குமரி வரை" என்பதாகும். இதையே நாமக்கல் கவிஞர் "இமயம் தொட்டு குமரி மட்டும் இசை பரந்த மக்கள் நாம்"......... என்று பாடியுள்ளார். நன்கு உயர்ந்த இமயமலை ஏறத்தாழ இரண்டாயிரம் மைல் நீளத்தில் கிழக்கு மேற்காக நாட்டின் வட எல்லையாக அமைந்திருப்பது ஒரு முக்கியக் காரணமாகும். அத்துடன் பரம்பொருளும் பனிக்கரசனுமான பரமசிவனும் அவரது உடலின் இடது பாகத்தைத் தமது உறைவிடமாகக் கொண்ட பர்வதவர்த்தினி என்ற பார்வதியும் வசிக்கின்ற கைலாசம் இந்த மலைத் தொடரின் முகட்டில் அமைந்து இருப்பதாக நமது மக்கள் கருதி வருவது இன்னொரு காரணமாகும்.

இந்தத் தெய்வீகத் திருத்தலமாகிய புனித மலையைப் பன்னெடுங் காலமாக மக்கள் போற்றி வந்துள்ளனர். மகாகவி பாரதியாரும் "மண்ணும் இமயமலை எங்கள் மலையே........" எனப் பாடியுள்ளார். கைலாச யாத்திரை மேற்கொண்ட காரைக்கால் அம்மையார் இந்தப் புனித மலையகத்தில் தம் கால்களைப் பதித்து மாசு படுத்தக் கூடாது என்ற நோக்கில் தமது தலையைப் பதித்து அந்த மலைப் பகுதியைக் கடந்தார்

என்பது காரைக்கால் அம்மையாரது புராணம் தரும் செய்தியாகும்.

இமயமலை தமிழகத்திற்கு வடக்கே வெகு தொலைவில் இருந்த பொழுதும் சங்க காலத்தில் இந்த மலை தமிழக மன்னர்களது வீரத்திற்கு வரம்பாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. சேர மன்னன் நெடுஞ்சேரலாதனுக்கு இமயவரம்பன் என்ற சிறப்புப் பெயர் இருந்தது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இமயத்தில் தனது இலச்சினையைப் பொறித்த செய்தி சங்க இலக்கியமாகிய பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தில் காணப்படுகிறது.

"தொன்றுமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து
வெஞ்சின வேந்தனைப் பிணித்தோன்" என சங்க காலப் பாட்டு ஒன்று அவன் புகழ் பாடுகிறது.[1]

இன்னொரு அரசனான சேரன் செங்குட்டுவன். வடவாரிய மன்னர் மீது "தண்டெடுத்து அவர்தம் தருக்கழித்து மீளுகையில் இமயத்தில்

மீன் தவழுமிமய நெற்றியில் விளங்கு விற்புலிகயல்
பொறித்தான் ................." என இளங்கோ அடிகளது சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. பரணிபாடிய செயங்கொண்டார்[2] சோழன் திருமாவளவனது பாய்புலிச் சின்னத்தைப் பண்டைய இமயத்தில் பதித்ததைப் பாடியுள்ளார் புறநானூற்றுப் பாடல் ஒன்றில்:

"கொடுவரிக் கோள்மாக் குயின்ற
சேண் விளங்கு தொடு பொறி
நெடுநீர்க் கெண்டையோடு பொறித்த"

---

1. அகநானூறு பாடல் எண். 396
2. செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடல் எண்.

சோழனும், பாண்டியனும் இணைந்து தத்தம் இலச்சினைகளான புலியையும், மீனையும் இமயத் தொடரில் பொறித்ததாகப் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.[1]

இத்தகைய தமிழ் இலக்கிய வரலாற்றுச் செய்திகளில் சிறப்புற்ற இமயத்தைத் தங்களது ஆட்சிக்கு வரம்பாக இன்றைய அரசியலாரும் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் ஆன்மீக உணர்வுமிக்க முந்தையோர் சேது முதல் இமயம் என்ற வழக்கைப் பயன்படுத்தினர். "ஆ சேது ஹிமாலயம்" என்பது இதே பொருளின் சமஸ்கிருதப் பிரயோகம் ஆகும். அப்படியானால் சேது என்பது என்ன? எதைக் குறிப்பிடுகிறது? அது எங்கே உள்ளது? அதன் சிறப்பு எது? என்பதைப் பார்ப்போம்.

நமது நாட்டு இதிகாசமாகிய இராமாயணக் கதையின் கொடுமுடியாக விளங்கும் நிகழ்ச்சி இராம – இராவணயுத்தம். இராமபிரான் இலங்கையை எய்துவதற்கு கடலில் அமைக்கப்பட்ட அணை 'சேது' என குறிப்பிடப்படுகிறது.

இராவணன் என்ற தீமையை வெல்வதற்கு இராமன் என்ற நன்மையின் திருவுருவிற்குத் துணை நின்று கடலடைத்த காரணத்தினால் இந்தத் திருவணை புனிதம் பெற்றதாகப் போற்றப்பட்டு வருகிறது.

நூறு யோசனை தூர நீளமும் பத்து யோசனை அளவு அகலமும் கொண்டதாக வானரங்களினால் கடலில் அமைக்கப்பட்ட இத்திருவணையின் சிறப்பை எங்கனம் உரைப்பது? இராமனது வாக்கினையே கேட்போம் :–

"............நளனைக் கொண்டுகட்டுவித்த இந்த சேதுவைப் பார் சேதுபந்தனம் என்று போற்றப்படுவது. மூன்று உலகங்களாலும் பூசிக்கத்தக்கது. மிகவும் பவித்திரமானது. சகல

1. புறநானூறு பாடல் எண். 58

பாவங்களையும் போக்கவல்லது : இங்கு பிரபு மகாதேவர் எனக்கு அருள் புரிந்தார். இவ்வாறு புட்பக விமானத்தில் இலங்கையிலிருந்து அயோத்தி நோக்கிப் புறப்பட்டுச் சென்ற இராமன் சீதா பிராட்டிக்குச் சேது வைக் காண்பித்து அதன் பெருமையைக் கூறியதாக ஆதிகாவியமான வால்மீகி இராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ளது.[1]

மகாகவி. கம்பனும் தனது காவியத்தில் இந்தச் செய்தியை சேது அணையின் புனிதத்துடன் போற்றிப் பாடிய பொழுது.

“கற்றையம் சடையில் மேவிய கங்கையும் சேது ஆகப்
பெற்றிலம் என்று கொண்டே பெருந்தவம் புரிகின்றாளால்
மற்று இதன் தூய்மை எவ்வாறு உரைப்பது?”


என மயங்கிப் பாடுகிறார் :[2] இவ்விதம் இராமபிரான் அமைத்த சேது. கங்கையிலும் மிக்க புனிதமுடையது என்ற கருத்து மக்களிடையே நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்துள்ளது.

இதனை எட்டாம் நூற்றாண்டில் காலடியில் பிறந்த ஆதிசங்கரர் இமயம் வரை பாதயாத்திரை செய்து தெற்கே திரும்பிய காரணத்தினால் இத்தகைய நம்பிக்கை மக்களிடம் மேலும் வலுவடைந்தது.

---

1 வால்மீகி இராமாயணம் - யுத்தகாண்டம்

2. கம்பராமாயணம் - யுத்தகாண்டம் - மீட்சிப் படலம். பாடல் எண்.7



**இராமேஸ்வரம் கடற்கரையில் அமையப்பெற்றுள்ள சங்கர ஸ்தூபியின் தோற்றம்**

இவ்விதம் புனிதமிக்க தலங்களை இணைத்துச் சொல்வதிலும், பேசுவதிலும் நமது முன்னோர்கள் ஆறுதலும், மகிழ்ச்சியும் அடைந்தனர் எனத் தெரிகிறது. இந்தப் புனிதத்தன்மை அங்குள்ள தீர்த்தம் மூர்த்தி தலம் ஆகியவற்றுள் ஒன்றினாலோ அனைத்தினாலோ ஏற்படுகின்றது. பல நூற்றாண்டுகளாக இந்திய நாடு முழுவதிலும் விரும்பிப் படிக்கப் பட்டும் பேசப்பட்டும் வரும் இராமாயணக் கதையின் பாத்திரப் படைப்புகளில் மனத்தைப் பறிகொடுத்த பக்தி உள்ளங்களில் படிந்த ஆழமான நம்பிக்கை அந்த மக்களைச் சம்பந்தப்பட்ட புனித இடங்களை நோக்கிப் புனித

யாத்திரையாக புறப்பட்டுச் செல்லுவதில் முடிவதைக் காண முடிகிறது. இவ்வகையில் நமது நாட்டின் பல பகுதியிலுமுள்ள மக்கள் சேதுயாத்திரை மேற்கொள்கின்றனர்.

காசி – இராமேஸ்வரம் என்ற வழக்கும் பின்னர் ஏற்பட்டதற்கு இதுவே காரணமாகும். பிற்காலக் கல்வெட்டுகளிலும். செப்பேடுகளிலும் இந்த வழக்காறு ஒம்படைக் கிளவியாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது.

**சேது.....**

இராமபிரான் இராவணனை வெற்றி கொண்டு பிராட்டியை மீட்க மேற்கொண்ட முயற்சியில் அமைத்த பேரணை பெருமையும். புனிதமும் பெற்ற சேது ஆகும். இதிகாசத்தின் எச்சமான அந்த இடம். எங்கு அமைந்திருந்தது?. இராம கதையின் மூலமான வால்மீகி இராமாயணத்தில் சேது அமைந்துள்ள இடம் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. பிராட்டியைத் தேடும் பணியில் தண்டகாரணியத்தைக் கடந்து தெற்கே வந்த இராமபிராமன் மகேந்திர பர்வத உச்சியிலிருந்த கடலைக் கண்டார். பின்னர் மலைய பருவதத்தைக் கடந்து சமுத்திரக் கரையை அடைந்தார். ஆலோசனையை முடித்து சேது பந்தனத்தைத் தொடங்கினார் என்ற செய்தி மட்டும் அந்த இலக்கியத்தில் காணப்படுகிறது. அதே கதையை வழிமொழிந்து பாடும் கம்பனது காவியத்திலும். சேது பந்தனப் படலத்திலும் சேது அமைக்கப்பட்ட நிகழ்ச்சி எழுபத்தொரு பாடல்களில் இடம் பெற்று இருந்தும் கிழ்கடற்கரையில் எந்தப் பகுதியில் சேது அமைக்கப்பட்டது என்ற குறிப்பு அவைகளில் இடம் பெறவில்லை.

ஆனால் பன்னெடுங்காலமாக இன்றைய இராமேஸ் வரத்திற்குத் தெற்கே வில்போல் நீண்டு வளைந்து சென்று கடலில் முடியும் தனுஷ்கோடிக் கடற்கரையில் இருந்துதான் இராமபிரானது வானரப் படை அமைத்த சேது மூலம் தொடங்கியது என மக்கள் நம்பி வருகின்றனர். 23.12.1964ல்

ஏற்பட்ட மழை, புயல், கடல் கோளினால் தனுஷ்கோடி முழுவதும் அழிக்கப்பட்டுவிட்டது. இந்தச் சேது அணை என்ற சேது பந்தனம் இராமேஸ்வரத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் (நவபாஷாணம் எனப்படும் இடத்தில்) அமைந்து இருப்பதாகப் பாரசிக நாட்டுப் பேரறிஞர் ஆல் பெருனி தமது நூலில் குறிப்பிடுகிறார்.[1]

மக்கள் அங்குத் திர்த்தக் கட்டம் அமைத்துப் புனித நீராடலையும் மேற்கொண்டு வந்தனர். இராமபிரான் இலங்கையிலிருந்து திரும்பிய பிறகு சேது அணை வேறு யாருக்கும் பயன்படக்கூடாது என்பதற்காக தனது வில்லின் நுணியினால் அதனை உடைத்து அழித்தார் என்பது ஐதிகம். இங்கு அர்த்தோதய மகோதிய நாட்களில் நீராடினால் மிகுந்த புண்ணியம் சேருமென்பதுடன், பிதிர்களுக்கு இங்குச் செய்யப்படும் கருமங்கள் அவர்களுக்குச் சிறந்த பாவ விமோசனமாக அமையும் என்றும் கருத்தப்பட்டு வருகிறது.

"வாட்டி விடும் சென்மம் வரும் வழியைத் தாழ் இட்டுப்
பூட்டிவிடும் சேது" என்ற தேவை உலாவின் இனிய வரிகள் இந்த நம்பிக்கையைத்தான் பிரதிபலிக்கின்றன.[2]

இனி இராமநாதபுரத்திற்கு அடுத்துள்ள திருப்புல்லாணி சேதுக்கரையும் ஆதிசேதுவாகக் கொள்ளப்பட்டு வருகிறது. தர்ப்பாசயன அழகியரான இராமர் சேது அணைக் கட்டுமானத்தைத் திருப்புல்லாணி சேதுக்கரையில் திருப்புல்லாணி ஊரில் இருந்து இரண்டு கி.மீ. தொலைவில் கிழக்கே அமைந்துள்ள கடற்கரை சேது மூலம் என வழங்கப்படுகிறது. இங்குச் சேது அணை அமைத்து இராமர் இலங்கை சென்றார் என்பது திருப்புல்லாணி மகாத்மியங்களில் ஒன்று. ஆடி, தை அமாவாசைக் காலங்களில் திருப்புல்லாணி

1. K.A. Neelakanda Shastri - Foreign notices of South India (1952 Edn.)
2. சொக்கநாதப் புலவர் – தேவை உலா – கண்ணிகள்

சேதுக்கரைக் கடலில் சேது மூலே புல்லாரண்ய க்ஷேத்ரே" என்ற சங்கல்பத்துடன் மக்கள் கடலில் புனித நீராடி எழுந்து வருகின்றனர்.

மேலும். முந்நீர்க் கடல் சூழ்ந்த கன்னியாகுமரிதான் ஆதிசேது எனக் கன்னியாகுமரித் தலபுராணம் கூறுகிறது.[1] இராமாயணக் கதையில் சேது அணை எங்குக் கட்டப்பட்டது என்ற தெளிவான செய்தி விடுபட்டுப் போனதால் இந்தக் குழப்பங்கள் என்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம் என்றாலும். "இராமன் இருக்கும் இடம் தான் அயோத்தி" என்பது போல் இராமன் பற்றிய செய்திகள் மக்களது மனத்தில் கொள்ளும் மனநிலையைப் பொறுத்தே இந்த ஐதிகங்கள் அமைகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்த சேதுபந்தன நிகழ்ச்சி காரணமாகக் கிழக்குக் கடற்கரையை ஒட்டிய மறவர் சிமை கோடிநாடு என்றும். சேது நாடு என்றும் வழக்குப் பெற்றது. இந்த நாட்டில் செங்கோல் செலுத்திய மன்னர் பரம்பரையினர் சேதுபதிகள் என்று அழைக்கப்பட்டனர். சேனை அதிபதி. சேனாதிபதி என்றாற்போல சேதுவிற்கு அதிபதி சேதுபதியாகும். இராமநாதபுரம் மன்னர் பற்றிய ஆவணங்களில் பதினைந்தாவது நூற்றாண்டு முதல் சேதுபதி என்ற சொல்லாட்சி ஏற்பட்டு இருப்பது தெரிய வருகிறது.[2]

## இன்னொரு செய்தி

இராவண வதத்தை மேற்கொண்ட பிறகு பிராட்டியுடன் இராமபிரான் வான்வழியே அயோத்தி திரும்பும் பொழுது இராவணனது நிழல் அவர்களைத் தொடர்ந்து வந்ததாகவும். அதற்குக் காரணம் என்ன என்பதை

1. இராகவ ஐயங்கார் மகாவித்வான் - மு. ஆராய்ச்சித் தொகுதி
2. Ferguson - History of India and the eastern Architechture - 1876

ஆராய்ந்த பொழுது புலத்திய மகரிஷி வழியினனான இராவணனைச் க்ஷத்திரியனான இராமன் கொன்றதால் பிரம்மகத்தி தோஷம் அவரைப் பற்றித் தொடர்ந்ததாகவும் அதனை நிவர்த்தி செய்வதற்கு இராமன் சேதுவிலே பூஜை செய்தான் ; அப்பொழுது கடற்கரை மணலினால் சிவலிங்கம் ஒன்றை அமைத்திடச் சீதாப் பிராட்டி உதவினாள் என்பதும், அந்த லிங்கத்தை பிரதிட்டை செய்து இருவரும் வழிபட்டதாகவும் கூறுவது மற்றொரு தொன்மைச் செய்தியாகும்.

இந்த நிகழ்ச்சியைத் திருநாவுக்கரசு சுவாமிகளும் திருஞான சம்பந்தரும் தங்களது தேவாரத் திருப்பதிகங்களில் குறிப்பிட்டுள்ளனர். அவைகளில் இரண்டு பாடல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப்பதிகம்

தேவியை வவ்விய தென்னிலங்கைத்தச மாமுகன்
பூவியலும் முடி பொன்றுவித்த பழிபோயற
வேவியலுஞ்சிலை யண்ணல் செய்த விராமேச்சுரம்
மேவிய சிந்தையினுர் கடம்மேல் வினைவீடுமே

அணையிலைசூழ் கடலன்றடைத்துவழி செய்தவன்
பணையிலங்கும் முடிபத்திறுத்த பழிபோக்கிய
வினையிலியென்று மிருந்த கோயிலிராமேச்சுரந்
துணையிலிதூ மலர்ப்பாதமேத்தத்துயர் நீங்குமே.

### திருநாவுக்கரசர் பாடிய பதிகம்

பலவுநாள் தீமை செய்து பார்தன் மேற்குழுமி வந்து
தொலை விலார் கொடியரராயவரக்கரைக் கொன்று வீழ்த்த
சிலையினான் செய்தகோயிற் றிருவிராமேச்சுரத்தைத்
தலையினால் வணங்குவார் கடாழ் வராந்தவம தாமே.

கோடி மாதவங்கள் செய்து குன்றினார் தம்மை எல்லாம்
வீடவே சக்கரத்தா லெறிந்துபின் னன்பு கொண்டு
தேடிமால் செய்தகோயிற் றிருவிராமேச் சுரத்தைத்
நாடிவாழ் நெஞ்சமே நீ நன்னெறியாகுமன்றே.

முதலான தேவாரப் பதிகங்கள் இராமபிரான் அயோத்திக்குத் திரும்பிய பிறகு. பிராட்டியுடன் இங்கு வந்து ஈஸ்வரனை வழிபட்டான் என்பது இந்த வரலாற்றினின்றும் திரிந்து வழங்கி வரும் மற்றொரு செய்தியாகும். இதனையே சேதுபுராணம் பாடிய நிரம்ப அழகிய தேசிகரும் குறிப்பிடுகின்றார்.[1]

"அண்ண காகுத்தன் ஆழ்புனற் சேதுவை கண்ணினான லொருனற்
கண்ட மாலை ............. வேள்வி தலம் புனல் யாத்திரை
பண்ணி முற்றிய பண்புடையானது (1)

"உள்ள நாலத்தொரு நகர் கொடுத்த
நற்றமிழ் கவியாற்றந்த தாழ் நீ
தரற்றுஞ் சேது விராமேசுவரமிதில் (2)

"வயங்கொளி இராமன் வானரத்தால் வகுத்த சேதுவதன் மூலை
நயங்கொள் தருப்பசயன ஞாலம் பகருராமர் படியில்
கயல் கொள் கடலின் முக சேது.............முடிவில்லாத (3)

சேது எங்கே ! எப்பொழுது ! அமைந்தது என்பது பற்றிய கருத்துக்களில் வேறுபாடுகள் இருந்த பொழுதிலும். இராமபிரானும். சிதாப் பிராட்டியும் இராமனுக்கு ஈஸ்வரனாகிய சிவனை. லிங்கவடிவில் பிரதிட்டை செய்து வழிபட்ட இடம் இராமேஸ்வரம் என்பதில் புராணங்களும்.

1. நிரம்ப அழகிய தேசிகர் - சேதுபுராணம் - பாடல் எண் 16. 11. 42 (1868)

தொன்மையான வழக்குகளும். பொருந்தி நிற்கின்றன. ஆன்மீக ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் இந்த அற்புத நிகழ்ச்சி - மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய இராமன் மகாதேவராகிய சிவனை வழிபட்டமை காலங் காலமாக மக்கள் மனத்தில் பதிந்து இடம் பெற்று இராமேஸ்வரத்தை அனைத்து இந்திய அளவில் சைவ. வைணவ ஒருமைப்பாட்டுக்குச் சிறப்பான பெருமைமிக்க பெருந்தலமாக விளங்கச் செய்துள்ளது. அரியும். சிவனும் ஒன்றே என்ற சைவ வைணவ சமரச சித்தாந்தத்திற்கு இராமேஸ்வரத்தை விடச் சிறந்த சான்று வேறு இருக்க முடியாது.

# இயல் - II

## 1) புராணங்களில் இராமேஸ்வரம்

**( 1 ) ஸ்காந்தபுராணம்**

மானுட வடிவும் வாழ்வும் பெற்ற மனிதவர்க்கம் உயர்வதற்கும் நன்னெறியில் உய்ப்பதற்கும் உறுதுணையாக அமைந்து விளங்குவன "நான்கு வேதமும் ஆறு சாஸ்திரமும். பதினெண் புராணங்களுமாகும். இவைகளில் இருந்து புராணங்கள் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இந்திய சமுதாய மக்களது ஆன்மீக, அறிவு, வளர்ச்சிக்கு ஏற்ப வரையப்பட்டவை. அவை பெரும்பாலும் அன்று வடமாநிலங் களில் வழக்கில் இருந்த சமஸ்கிருத மொழியில் வரையப் பெற்றவை. அந்தப் புராணங்களில் நமது இராமேஸ்வரம் பற்றிய விரிவான தகவல்களை அளிப்பது ஸ்காந்தபுராணம். இந்தப் புராணத்தின் மூன்றாவது தொகுதியில் உள்ள ஐம்பத்து இரண்டு அத்தியாயங்கள். பிரம்ம காண்டம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதில் சேதுவின் பெருமை. இராமலிங்கப் பிரதிட்டை. கந்தமாதனம் மற்றும் இராமேஸ்வரத்திலும். இராமேஸ்வரத்திற்கு அண்மையில் உள்ளதுமான இராமாயண இதிகாசப் பாத்திரங்களுடன் தொடர்புடைய இருபத்து ஐந்து புனித திர்த்தங்கள் பற்றியும் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**அந்தத் தீர்த்தங்களாவன :**

(1) சக்கரதிர்த்தம் (2) வேதாளவரததிர்த்தம் (3) பாபவிமோசன அல்லது கந்தமாதனதிர்த்தம் (4) சிதா திர்த்தம் (5) மங்கலதிர்த்தம் (6) அமிர்தவாபி (7) பிரம்மகுண்டம் (8)

அனுமகுண்டம் (9) அகஸ்திய திர்த்தம் (10) இராமதிர்த்தம் (11) லக்ஷ்மன திர்த்தம் (12) ஜடாயு திர்த்தம் (13) லக்ஷ்மி திர்த்தம் (14) அக்னி திர்த்தம் (15) சக்கரவாள திர்த்தம் (16) கபாலதிர்த்தம் (17) சிவதிர்த்தம் (18) சங்கு திர்த்தம் (19) யமுனா திர்த்தம் (20) கங்காதிர்த்தம் (21) காயத்ரீ திர்த்தம் (22) கோடிதிர்த்தம் (23) சத்யாஅம்ருத திர்த்தம் (24) மனவ்திர்த்தம் (25) தனுக்கோடி திர்த்தம்.

மேலும் இந்தப் புராணம் இந்தப் புனித திர்த்தங்கள் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றினையும் விரிவாக விரித்துச் சொல்கின்றது. மற்றும் சேதுவில் உள்ள பிரதான கோயிலையும் அங்குள்ள இறைவர் இராமநாதரையும். இராமபிரானால் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கத்தையும். தண்டகமுனிவரது ஆலோசனைப்படி இராவண வதத்தினால் ஏற்பட்ட கரையைப் போக்குவதற்கு அனுமான் கைலாசம் சென்று லிங்கத்தைக் கொண்டுவருமாறு பணித்தது. ஆனால் அதனைக் கொண்டு வருவதற்குள் குறித்த சுபவேளை நெருங்கியதால். சிதாப்பிராட்டி கடற்கரை மண்ணினால் ஒரு லிங்கத்தை அமைத்து அதை வைத்து ஸ்ரீ இராமர் பிரதிஷ்டையும் பூஜையும் நடத்தியது. ஷேஸ்ட மாதம் சுக்கில பகஷம். தசமி திதியில் பின்னர் அனுமன் கொண்டு வந்தது. இராமலிங்கப் பிரதிஸ்டை அறிந்து அனுமன் வருத்தப்பட்டதும். இராமபிரான் அவனுக்கு ஆறுதல கூறி அந்த லிங்கத்தையும் அங்கே சற்று வடக்கே பிரதிஷ்டை செய்யுமாறு பணித்துப் பிரதிஷ்டை செய்தது ஆகிய செய்திகளைத் தெரிவிக்கின்றது.

அத்துடன் இராமேஸ்வரம் இராமநாதரது புனிதத்தையும் பெருமை சாற்றும் வகையில். இராமபிரான் சிதாப்பிராட்டி. லட்சுமணன். சுக்கிரிவன். மற்றவர்கள் பாடிய நூறு செய்யுட்களும் இந்தப் புராணத்தில் கொடுக்கப் பட்டுள்ளது. அடுத்து சேதுயாத்திரை பற்றியும் அப்பொழுது தேவிபட்டனம். தர்ப்பசயணம் மற்றும் திர்த்தங்களில் செய்ய

வேண்டிய தானம் ஆகியவைகளையும் இராமநாத தர்சனத்தையும் குறிப்பிடுகிறது.

இந்த நூலின் இறுதிப் பகுதியில் சைவத் திருத்தலங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டு அதில் இறுதி திருத்தலமாக இராமேஸ்வரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே கந்தமாதனக் குன்று, சேதுவின் மத்திய பகுதியில் இருப்பதாகவும் இராமரும், சீதையும், லட்சுமணரும் புனித தீர்த்தங்களில் நீராடித் தங்களது பாவங்களைப் போக்கியதால் ; இராமர் இராமேசுவரரை பிரதிஷ்டை செய்து இருப்பதால், இங்கு நீராடலும் தானம் வழங்கலும் மிகவும் ஏற்ற முடையதாக சொல்லப்பட்டுள்ளது.

**( 2 ) சிவமகாபுராணம்**

சிவமகாபுராணம் என்பது இராமேசுவர சிவத்தலம் பற்றிய இன்னொரு நூல். பாரத நாட்டின் பன்னிரு தலங்களில் உள்ள ஜோதிர் லிங்கங்களின் பட்டியல் அதில் கொடுக்கப்பட்டுள்ளது. அவையாவன (1) குஜராத் மாநிலத்தில் உள்ள பிரபாகபட்டணம் (2) மராத்திய மாநிலத்தில் உள்ள பஞ்சவடிக்கு அண்மையில் உள்ள திரியம்பகம் (3) ஆந்திரா மாநிலத்தில் நந்தியாலுக்கு அண்மையில் உள்ள ஸ்ரீசைலம் (4) மத்திய பிரதேசத்தில் உள்ள உஜ்ஜயினி (5) உஜ்ஜயினியிலிருந்து 90கல் தொலைவில் உள்ள ஓங்காரம் (6) மராட்டிய மாநில புனேக்கு அருகில் உள்ள பிர பீமசங்கரம் (7) தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரம் (8) மராட்டிய மாநில எல்லோராவிற்கு அண்மையில் உள்ள குங்குனேஷ்வரம் (9) இமயமலையில் உள்ள கேதாரம் (10) உத்திரப்பிரதேசத்தில் உள்ள காசி (11) பீகார் மாநிலத்தில் உள்ள வைத்தியநாதம் (12) சவாண்டிக்கு அருகில் உள்ள நாகநாதம் ஏற்கனவே சொல்லப்பட்டதற்கு மாற்றமாக இராமேஸ்வர லிங்கப்பிரதிஸ்டை, இலங்கைப் படையெடுப்பிற்கு முன்னதாக இராமபிரான் அங்கு நிறுவியதாக இந்தப் புராணம் தெரிவிக்கிறது. இராமர் சீதையைத் தேடிவரும் பொழுது இராமேஸ்வரம் கடற்கரைக்கு

வருகிறார். அப்பொழுது அவருக்கு ஏற்பட்டகளைப் புடன் தாகமும் மிகுதியாக இருந்தது. கொண்டுவரப்பட்ட நீரினை அருந்துவதற்கு முன்னர் அவருக்கு ஒரு சிந்தனை பளிச்சிடுகிறது. சிவபிரானை வழிபாடு செய்யாமல் நீரினைப் பருகலாமா? உடனே சிவனை வழிபடுகிறார். சிவபக்தனான இராவணனை வெற்றி கொள்ள அருள்பாலிக்குமாறும். மேலும் சிவபிரான் அந்தக் தலத்தில் உலக நன்மைக்காக நிலைத்திருந்து அருள்பாளிக்க வேண்டுமென்றும். வேண்டுகிறார். ஈசுவரனும் இராமனது கோரிக்கையை ஏற்று லிங்க வடிவில் அங்குப் பிரசன்னமானார். அடுத்து அவரது ஆசிர்வாதத்தினைப் பெற்ற இராமர் கடல் கடந்து இராவணனைப் போரில் வெற்றி பெற்றார்.

ஆதலால் புனித கங்கை நீரினைக் கொண்டு வந்து இந்த இராமேசுவர லிங்கத்தை வழிபடுவதும் இந்த நூலில் சொல்லப் பட்டுள்ளது.

### (3) மத்ஸ்சய புராணம்

அடுத்து. மத்ஸ்சய புராணத்தில். பாரத நாட்டின் பழம்பெரும் புனித தீர்த்தத் தலமாக இராமேஸ்வரம் குறிக்கப் பெற்றுள்ளது.

### (4) சேதுபுராணம்

இராமேஸ்வரம் திருத்தலத்தைப் பற்றி விரிவாகச் சொல்லுகின்ற ஒரே இலக்கியம் சேது புராணம் ஆகும். இந்நூல் கி.பி.15. 16-ம் நூற்றாண்டுகளில் இன்றைய குன்றக்குடியை அடுத்த துளாவூரில் மடாதிபதியாக வாழ்ந்த நிரம்ப அழகிய தேசிகர் என்ற சைவத் துறவியினால் பாடப் பெற்றதாகும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ள புராணங்களைப் போன்று இந்த நூலும் வடமொழியில் அமைந்து இருந்ததால் அதனைச் சிறப்பாக அப்படியே தமிழில் தமது புலமைத் திறத்தால் பக்திச்

சுவை பொலியப் பாடியுள்ளார் இந்தப் புலவர்.

இந்த இலக்கியத்தில் மற்ற புராணங்களைவிட மிகுதியாக அப்பொழுது இராமேஸ்வரத்தில் அமைந்து இருந்ததாகக் கருதப்படும் 64 தீர்த்தங்களின் சிறப்புப் பற்றிய செய்திகளை இந்த இலக்கியம் தருகிறது. தீர்த்தம் என்ற வட சொல் தூய நீரை குறிப்பதாகும். இத்தகைய புனிதமான பவித்திரமான நீர்ச்சுனைகள், தடாகங்கள் ஆகியவைகளில் முற்காலங்களில் தேவர்களும், பின்னர் இராமாயண காலத்துப் பாத்திரங்களான இராமர், இலக்குவன், சீதை போன்றவர்கள் நற்கதி பெறும் மார்க்கத்துடன் இந்த நீர் நிலைகளில் நீராடி எழுந்தனர். ஆதலால் இந்தத் தீர்த்தங்கள் அந்தப் புராண புருஷர்களது பெயரால் இன்றும் வழிபடப்பட்டு வருகின்றன.

இந்தத் தீர்த்தத் தடாகங்களில் நீராடுவதற்கு முன்னர் இராமநாதபுரத்திற்கு வடக்கே உள்ள உப்பூரிலும், தேவிபட்டணத்தில் நவபாஷணத்திலும் மூழ்கி எழுதல் வேண்டும் என்பதும், பின்னர் இராமேஸ்வரம் தீவின் தொடக்கமான பாம்பனில் அமைந்துள்ள வைரவத் தீர்த்தத்தில் நீராடியும் பின்னரே மேலேகண்ட இராமேஸ்வரம் தீர்த்தங்களில் நீராட வேண்டும் என்பதும் ஐதிகம். ஆனால் தற்பொழுது இராமேஸ்வரத்தில் கால நீட்சியின் காரணமாகப் பல தீர்த்தங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. அவைகளில் இப்பொழுது இருப்பவை கீழ்க்கண்ட தீர்த்தங்களாகும்.

**தீர்த்தங்கள் :**

(1) சேது தீர்த்தம் (2) அக்னி தீர்த்தம் (3) மகாலட்சுமி தீர்த்தம் (4) காயத்ரி, சாவித்ரி, சரசுவதி தீர்த்தங்கள் (5) சேது மாதவ தீர்த்தம் (6) கந்தமாதன தீர்த்தங்கள் (7) சங்கு தீர்த்தம்

1. இந்த நூலினை முதன் முதலாக தமிழில் பதிப்பித்து வெளியிட்டவர் இராமநாதபுரம் வள்ளல் பாண்டித்துரைத் தேவரது தந்தை **பொன்னுசாமித்** தேவர் ஆவார்.

(8) சக்கர திர்த்தம் (9) பிரமஹத்தி விமோசன, சூரிய, சந்திர திர்த்தங்கள் (10) கங்கை, யமுனை, கயை திர்த்தங்கள் (11) சிவ திர்த்தம் (12) சத்யாமிர்த திர்த்தம் (13) சர்வ திர்த்தம் (14) வேதாளவரத திர்த்தம் (15) பர்பவிநாச திர்த்தம் (16) பைரவ, கபி, திர்த்தங்கள் (17) மங்கள திர்த்தம் (18) இரணவிமோசன திர்த்தம் (19) இலட்சுமண திர்த்தம் (20) இராம திர்த்தம் (21) பிரம திர்த்தம் (22) அகத்திய திர்த்தம் (23) நாக திர்த்தம் (24) சுக்கிரிவ, அங்க, சாம்பவ, தரும, பீம, அருச்சுண, நகுல சகாதேவ திரெளபதி திர்த்தங்கள் (25) ஜடாமகுட திர்த்தம் (26) மகாலக்ஷ்மி திர்த்தம் (27) சாவித்திரி திர்த்தம் (28) காயத்திரி திர்த்தம் (29) சரசுவதி திர்த்தம் (30) சேதுமாதவ திர்த்தம் (31) கந்தமாதன திர்த்தம் (32) கவாட்ச திர்த்தம் (33) கவய திர்த்தம் (34) நள திர்த்தம் (35) நீல திர்த்தம் (36) சங்கு திர்த்தம் (37) சக்கர திர்த்தம் (38) பிரமஹத்தி விமோசன திர்த்தம் (39) சூரிய திர்த்தம் (40) சந்திர திர்த்தம் (41) கங்கா திர்த்தம் (42) யமுனா திர்த்தம் (43) கயா திர்த்தம் (44) சிவ திர்த்தம் (45) சாத்தியாமிருத திர்த்தம் (46) சர்வ திர்த்தம்

இந்தத் திர்த்தங்களில் பெரும்பாலனவை காலநீட்சியில் நீர்ச்சுனைகள் வற்றி தூர்ந்து மண் மேடிட்டு விட்டன. இராமேஸ்வரம் பயணிகள் நீராடுவதற்கு ஏற்றவாறு கீழ்கண்ட நான்கு திர்த்தங்கள் மட்டுமே இருந்து வருகின்றன.

1. இராமேஸ்வரம் திருக்கோயில் வாயிலுக்கு முன்னர் அமைந்துள்ள் அக்கினி திர்த்தக் கடற்கரையாகும். 1964–இல் தனுஸ்கோடியில் உள்ள சேதுதிர்த்தம் அழிந்துவிட்டதால் இந்த அக்கினி திர்த்தத்தையே சேதுதிர்த்தமாக கொள்ளலாம் என விளக்கம் தந்துள்ளார் காஞ்சி பெரியவர்.

2. சுவாமி அம்மன் கருவறைக்கு பின்னர் அமைந்துள்ள சேதுமாதவ திர்த்தம்.

3. இராமேஸ்வரம் நகரின் மேற்கே பஸ் ஸ்டாண்டிற்கு அருகில் அமைந்துள்ள லெக்ஷ்மண திர்த்தம் ஆகும்.

4. ஜடாமகுடம் தீர்த்தம் இராமேஸ்வரம் தனுஸ்கோடி நெடுஞ்சாலையில் இராமேஸ்வரத்திற்கு தெற்கே இரண்டு மைல் தொலைவில் இது சிறப்பாக அமைந்துள்ளது. இதனை கி.பி. 10வது நூற்றாண்டு இராமேஸ்வரம் திருக்கோயிலில் துலாபாரம் நடத்திய பராந்தக சோழன் கட்டளையின் படி இந்தத் தீர்த்தம் அமைந்திருத்தல் வேண்டும்.

## (5) கூர்ம புராணம்

இதில் சூரிய வமிச மன்னர்களது செய்திகள் அளிக்கப் பட்டுள்ளன. மேலும் ரவிகுல இராமனது வரலாறும் கொடுக்கப்பட்டுள்ளது. இராவணனை வெற்றி கொண்ட இராமர், மகாதேவலிங்கத்தைச் சேதுவின் மத்தியப் பகுதியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்றும், அப்பொழுது சிவபிரான் பார்வதி தேவியுடன் இராமருக்குக் காட்சி கொடுத்ததுடன், இராமரது பிரதிஷ்டை லிங்கத்தைத் தரிசித்துச் சேதுவில் தீர்த்தமாடியவர் களை விட்டு அனைத்துப் பாவங்களும் விட்டோடும் என்றும், கண்களது பார்வையில் இருந்து சேது மறைந்தாலும் ஊழிக்காலம் வரை அது நிலைபெற்று இருக்கும் என்றும் தெரிவித்ததாக இந்த நூலில் சொல்லப்பட்டுள்ளது.[1]

## (6) பத்ம புராணம்

இந்த நூலில் இராமேஸ்வரமும் சேதுவும் சொல்லப் படுகின்றன. இராமர் சேதுவை மூன்று பகுதிகளாகத் தமது வில்லின் நுனியினால் பிரித்தார் என்றும் இங்குச் சிவனை இராமர் வழிபட்டார் என்றும் இராமநாதசுவாமி ஆலயத்தின் பவித்ரம் பற்றிப் பிரசித்தம் செய்தார் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது.

---

1 கூர்ம புராணம் - அத்தியாயம் 21

### (7) சௌரபுராணம்

இந்த நூலிலும் இராமாயணக் கதை, சொல்லப்பட்டு இராமபிரான் இராமேசுவரத்தில் லிங்கப்பிரதிஷ்டை செய்ததையும் இதன் காரணமாக இங்குள்ள ஆலயத்திற்கு ஏற்பட்டுள்ள மகத்துவத்தையும், சேது ஆராதனையினால் ஏற்படும் பாவ விமோசனத்தையும் சிறப்பாகக் குறிப்பிடு -கிறது.[1]

### (8) நாரதீய புராணம்

இந்த நூலின் உத்தரகாண்டம் பகுதியில், இராமேஸ்வரத்தின் பெருமைகளைச் சிறப்பாக விவரிக்கும்பொழுது சேதுவில் இராமர் பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்தைத் தரிசனம் செய்தாலே பாப விமோசனம் பெற்று வாழ்வின் வளங்கள் அனைத்தும் வாய்க்கப்பெறும் என்று குறித்து இருப்பதுடன் இங்குள்ள பல தீர்த்தங்களையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளது.[2]

மேலேகண்ட புராணங்கள் அனைத்தும் (சேது புராணம் நீங்கலாக) வரையப்பெற்ற காலம், ஆசிரியர் பெயர் எதுவும் அறிந்து கொள்ள இயலாத வகையில் உள்ளன. இந்தப் புராணங்களில் சொல்லப்படும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒன்றுக் கொன்று முரண்பட்டதாகவும் உள்ளன. இவற்றைப் போன்றே அவைகளில் குறிப்பிடப்பெறும் இடங்களும் இன்றைக்கு இராமேஸ்வரத்தினின்று வேறுபட்டனவாக குறிக்கப்பட்டுள்ளன. எனினும் இந்தப் புராணங்களின் அடிப்படை நோக்கம் இராமேஸ்வரத் திருத்தலத்தின் புனிதத்தையும் பெருமையையும் பறைசாற்றுவது ஆகும்.

ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்னர் வரையப்பட்ட இந்த நூல்கள் இன்றும் மக்களிடையே பக்தி நெறியையும், மானிட

---

1. சௌர புராணம் அத்தியாயம் 30 பாடல் 48 – 69
2. உத்திர காண்டம் அத்தியாயம் 76

வாழ்க்கையின் இலக்கான புண்ணியச் செயல்களில் ஈடுபட்டு வாழ வேண்டும் என்ற இலட்சியதத்தை அறிவித்துக் கொண்டிருப்பதால் அவை மக்களிடையே இன்றும் படித்துப் பின்பற்றப்படுகின்றன.

## 2. இலக்கியங்களில் இராமேஸ்வரம்

பனி படர்ந்த காஷ்மீரில் இருந்து பகலிரவாக அலை முழங்கிக் கொந்தளிக்கும் குமரித்துறை வரை பரந்து விரிந்துள்ள இந்தப் பாரத கண்டத்தில் வாழும் மக்களைச் சாதி, இனம், குலம், மொழி என்ற பிரிவினை வேலிகளுக்கு அப்பால் இருந்து அவர்களது இதயங்களை ஆன்மீகத்தில் ஈர்த்து இணைக்கச் செய்யும் ஒரே கதை இராமாயணக் கதையாகும். ஆதலால் இந்த இணையற்ற காவியம் நமது தமிழ் இலக்கியங்களிலும் ஊடுருவி இணைந்து இருப்பதில் வியப்பு இல்லையல்லவா? இதன் காரணமாக இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இராமாயணக் கதை பற்றிய செய்திகள், சங்க இலக்கியங்களில் ஆங்காங்கு இடம் பெற்று உள்ளன.

சீதாப் பிராட்டியைக் கவர்ந்த இராவணன் புட்பக விமானம் மூலம் வான்வழி இலங்கைக்குச் சென்றபொழுது, அலமருந்த பிராட்டியார் தான் அணிந்து இருந்த அணிமணிகளைக் கழற்றிக் கீழே விட்டெறிந்தவாறு சென்றார் ; இப்படிச் செய்தமை அவரைத் தேடி அலையும் இராமனது கண்களில் ஒரு வேளை, அவை பட்டு அவள் சென்றுள்ள திக்கைத் தெரிவிக்க உதவும் என்ற நினைப்பில் ; ஆனால் அவைகளைக் கண்டெடுத்த வானரங்கள் அவைகளைப் பொருத்தமற்ற முறையில் அணிந்து கொண்டன ; இந்தக் காட்சியினை புறநானூற்றுப் புலவர் ஒருவர் பாடல் ஒன்றில் உவமையாகப் பயன்படுத்தியுள்ளார்.

"கருந்தேரி ராமன் உடன் புணர் சிதையை
வலித்தகை யரக்கன் வவ்விய நாள்
நிலம் சேர் மாதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப் பொலிந்தாங்கு
அறா அருநகை யின்று பெற்றிடுமே"[1]

அகநானூற்றுப் பாடல் ஒன்றிலும். இராமன் பற்றிய நிகழ்ச்சி ஒன்று உவமையாகக் கையாளப்பட்டுள்ளது. இராமபிரான் கடற்கரையையடுத்த அடர்ந்து பரந்து நின்ற ஆலமரத்தின் நிழலில், கடலைக்கடந்து இலங்கைக்கு செல்வது பற்றி வானர வீரர்களுடன் ஆலோசனை ஒன்றில் ஈடுபட்டு இருந்தார். அதற்கு இடையூறாக ஆலமரத்தில் இருந்த பறவைகளின் ஆரவார ஒலி அமைந்து இருந்தது. அந்த ஒலியை இராமபிரான் கையமர்த்தி அடங்கச் செய்தார் என்பது ஒரு செய்தி. ஒரு ஊரில் களவு மனத்தில் ஈடுபட்டு இருந்த தலைவன் தலைவி பற்றியெழுந்த அலர் (வசை) அடங்கியதற்கு ஒப்புவமையாகச் சங்கப் புலவர் இந்த நிகழ்வினைக் கையாண்டுள்ளார்.

"வெவ்வேல் கவுரியர் தொல்முறு கோடி
முழங்கி வரும் பௌவம் இரங்கு மூன்றுறை
வெல் போரி ராமன் அருமறை அவித்த
பல் மூலம் போல
ஒலியவிந் தன்றாவில் அழுங்கல் ஊரே"[2] (1)

"குரங்கு தென் குமரியம் பெருந்துறையில்
பரந்து சென்று.............."[3] (2)

மகாவித்வான் மு. ராகவ ஐயங்கார் ஆராய்ச்சித் தொகுதி இதனைப் போன்று சமணக் காப்பியமான

1). புறநானூற்றுப் பாடல் – 378
2) அகநானூறு பாடல் எண். 70
3) மணிமேகலை 5133 – 38

சிலப்பதிகாரத்தில் இராமன் இல்லாத அயோத்தி மாநகரம் என்ற உவமை ஆளப்பட்டுள்ளது என்பதனை எடுத்துக்காட்டியுள்ளார்.

> "அருந்திறல் பிரிந்த அயோத்தி போல
> பெரும் பெயர் மூதூர் பெரும் பேதுற்றதும்"
> என்பது அந்தத் தொடர்.[1] (3)

மேலும் இந்தச் செய்திகள் ஆதி காவியமாகிய வால்மீகியின் இராமாயணத்திலும் காணப்படாதவையென்று அறியும்பொழுது நமக்கு வியப்பு ஏற்படுகிறது. வால்மீகியின் இராமாயணம் தமிழக மக்களின் வழக்கிற்கு வரு முன்னர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தச் செய்திகள் தமிழகத்தில் பரவியிருந்தன என்பது தெளிவு.

இவ்விதம் இராம கதையின் நாயகனான இராமபிரானைப் பற்றிய செய்திகள் கடைச் சங்க காலத்தை அடுத்த நூற்றாண்டுகளிலும் இடம் பெற்று வந்துள்ளன. கி.பி. ஐந்து. ஆறாவது நூற்றாண்டில் பௌத்த இலக்கியமான மணிமேகலையில் இலங்கை செல்வதற்கு இராமனது வானரப் படைகள் கற்களைக் கொண்டு கடலில் அணைகட்டியமைத்தது குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விதம் இராம சரித்திரத்தில் இறுதிக் களமாகிய யுத்த காண்டத்தில் இராமபிரான் இலங்கைப் படையெடுப்பிற்குக் கடலடைத்து அணைக்கட்டியது. இலங்கையில் இராவண சம்ஹாரத்தை முடித்து தாயகம் திரும்பிய வழியில் இராமேஸ்வரம் கடற்கரையில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து. மகாதேவரை மனம் ஒன்றி சிதாப்பிராட்டியுடன் வழிபட்டது ஆகிய இராமேசுவரம் பகுதி நிகழ்ச்சிகளும் தமிழ் இலக்கியங்களில் இடம் பிடித்துள்ளன. சைவ. வைணவர் ஆகிய இரு பிரிவுப் புலவர் பெருமக்களது படைப்புக்களிலும் இந்த நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டுள்ளன.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞானசம்பந்தர். அப்பர் ஆகியோரது தேவாரப் பதிகங்களில்

"கடலிடை மலைகள் தம்மாலடைத்து மால் கருமமுற்றி
திடலிடைச் செய்த கோவில் திரு இராமேச்சரத்தை"

"தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமுகன்
பூவியலும் முடிபொன்று வித்த பழி போயற
வேவியனுந் சிலை யண்ணல் செய்த கோவில்" எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆழ்வார் பெருமக்கள் தங்களது பக்திச் சுவைமிக்க பாசுரங்களிலும் இராமேசுவரத்துக் கடலடைத்து இலங்கை சென்று பிராட்டியை மீட்டதைப் பாராட்டிப் பாடியுள்ளனர்.

பெரியாழ்வாரது பாசுரம்

"குரங்கு இனத்தாலே குரைகடல் தன்னை
நெருக்கி அணைகட்டி நீள் நீர் இலங்கை
அரக்கர் அவிய அமுகணையாலே
நெருக்கிய கைகளால் ................." என்றும்

"சிலையால் மராமரம் எய்த தேவனைச் சிக்கென நாடுதிரேல் தலையால் குரங்கினம் தாங்கிச் சென்று தடவரை கொண்டு அடைப்ப அலைஆல் கடற்கரை வீற்றிருந் தாணை..........." என்றும் குறித்துள்ளார். [1] அவரது அருமை மகளும் கோதை நாச்சியாருமாகிய ஆண்டாள்.

"சேதுபந்தம் திருத்தினாய் எங்கள்
சிற்றில் வந்து சிதையேல்............ என்று பாடியுள்ளார். [2]

மற்றும் பதினொன்றாம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியரால் புனையப்பெற்ற கந்த புராணத்தில் இராமேசுவரத்து கந்தமாதனம் குறிப்பிடப்படுகிறது. முருகனது

1) பெரியாழ்வார்
2) கோதை நாச்சியார்

தானைத் தலைவர் வீரபாகு கந்தமாதனத்தில் இருந்த சூரபத்மனிடம் தூது சென்றதாகப் பாடப்பெற்றுள்ளது. பதின்மூன்றாம் நூற்றாண்டு இலக்கியமான வில்லிபுத்தூராரது பாரதத்தில் பாரதப்போர் முடிந்த பிறகு அர்ச்சுணன் தீர்த்த தலயாத்திரையாகச் சேதுவிற்கு வந்ததாக மிகுந்த கற்பனை நயத்துடன்

"......... வாய்த்த திரு துணைவரோடும்
சென்ற வழி இன்றளவும் துளவம் நாறும்
சேது தரிசனம் செய்தான்" எனப் பாடியுள்ளார்.

இவ்விதம் சேதுவையும், இராமேசுவரத்தையும் தொடர்பு படுத்தும் செய்திகளை இங்கும் அங்குமாகப் பல இலக்கியங்களில் குறிப்பிட்டு வந்த புலவர்கள் நாளடைவில் இராம சரிதையை முழுமையாகப் பெரிய, சிறிய காவியங்களாகவும் புனைந்து இருப்பதைக் காண முடிகிறது. இதற்கு, வால்மீகியின் வடமொழி இராமாயணம் காலப்போக்கில் தமிழகத்தில் பரவலாகப் பயிலப்பட்டு வந்தது சிறப்பான காரணமாக அமைதல் வேண்டும். சொல் வளத்திலும், கற்பனை வளத்திலும் மிக்குயர்ந்து நின்ற கவிச்சக்கரவர்த்தி கம்பர், அப்பொழுது தமிழில் பாரகாவியங் களாகக் கருதப்பட்ட ஸ்ரீ புராணத்திற்கும், பெரிய புராணத்திற்கும் இணையாகவும் அவைகளை விடச் சிறப்பாகவும் இராமாவதாரத்தைப் பாடினார். கவிநயமும், கற்பனை உயர்வும் விஞ்சி நிற்கும் இந்தக் கருத்துக் கருவூலத்தை மிஞ்சும் இலக்கியம் எதுவும் இதுவரை தமிழில் புனையப்படவில்லை என்பது வெள்ளிடை.

பதினைந்தாம் நூற்றாண்டினரான துளாவூர் திருமடத்து, நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் இராமேசு வரத்துப் பெருமைச் சுவடாக சேதுபுராணத்தை இயற்றினார். (நகரத்தார் பெண்களுக்கு உபதேசம் செய்யும் மடாதிபதியின் மடம் குன்னக்குடிக்கு அருகில் உள்ளது.) தலம், தீர்த்தம், மூர்த்தி

என்ற முப்பெரும் இலக்குகளை முழுவதுமாக விவரிக்கும் நூலாக உள்ளது. அடுத்துப் பதினாறாம் நூற்றாண்டில் இராமேசுவரத்தில் வாழ்ந்த பேரறிஞர் கயாதரர் இராமேசுவர இறைவர் மீது கோவையொன்று பாடினார். பதினேழாம் நூற்றாண்டில் தாயுமானவ அடிகள் இராமேசுவரத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் மீது மலைவளர் காதலி பதிகம் பாடினார். இவரைத் தொடர்ந்து தில்லையாடியில் பிறந்த சீர்காழி அருணாசலக் கவிராயர் எனப் புகழப்பட்ட முத்தமிழ்க் கவிஞர் இராம சரிதம் முழுவதையும் இராம நாடகக் கீர்த்தனைகளாகப் பாடினார். 17ம் நூற்றாண்டில் மதுரை சொக்கநாதப் புலவர் இராமநாதசுவாமியின் பெருமையைத் தேவை உலாவாகப் புனைந்து மகிழ்ந்தார்.

சென்ற நூற்றாண்டில் சேற்றூர் மு. ரா. சுப்பிரமணியக் கவிராயர் இராமேசுவரத்து அம்பிகைபர்வதனர்த்தினியின் மீது பிள்ளைத் தமிழ் ஒன்றைப் பயந்தார். தேவகோட்டை அட்டாவதானி சுப்பிரமணியன் செட்டியார் தேவை பிள்ளைத் தமிழ் என்ற நூலையும் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி பதிகம் ஒன்றையும் இராமநாதசுவாமி மீது இயற்றினார்கள்.

## ஆனந்த இராமாயணம்

இந்த நூல் வடமொழியில் இயற்றப்பட்டு உள்ளது. இதன் காலம் இயற்றிய புலவர் போன்ற விவரங்கள் அறியத்தக்கதாக இல்லை. இந்த நூல் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தினரால் தமிழாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பணியினை மேற்கொண்டவர் வரகவி. அ. சுப்பிரமணிய பாரதி என்பவர். பதிப்புரையில் இந்த நூல் ஆதி இராமாயண கர்த்தாவான வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் வால்மீகியின் இராமாயண காவியத்தின் கதை அமைப்பு, நிகழ்ச்சிகள் ஆகியன முற்றிலும் வேறுபட்டனவாக உள்ளன. இந்த இலக்கியத்தின் எந்தப் பகுதியிலும் ஸ்ரீ ராமபிரான் இராவண சம்ஹாரத்திற்குப் பின்னர் சீதாப் பிராட்டியுடன் இராமேசுவரம் வந்ததாகவோ அல்லது அந்தக் கடற்கரையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்ததாகவோ காணப்படவில்லை. மேலும் ஸ்ரீ ராம பிராமன் வானரச் சேனையுடன் கடலில் சேதுவை அமைப்பதற்கு முன்னர் கடற்கரையில் மகாதேவரை வழிபட்டு தமது முயற்சிக்கு அருள்பாலிக்க வேண்டிக் கொண்டதாக மட்டும் இதில் பாடப்பட்டுள்ளது.

## அத்யந்த இராமாயணம்

வடமொழியில் இயற்றப்பட்ட இந்த நூலும் சென்னையைச் சேர்ந்த ஹரினி என்பவர் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். இந்த நூலும் இராமாயணம் எனக் குறிப்பிடப்பட்டாலும் மேலே குறிப்பிட்ட ஆனந்த இராமாயணம் போன்று வால்மீகியின் இராமாயண காவியத்திற்கு முற்றிலும் வேறுபட்டதாகப் பாடப்பெற்றுள்ளது. இலங்கையிலிருந்து சீதையுடன் அயோத்தி திரும்பிய ஸ்ரீ ராம

பிரான் சீதாப்பிராட்டியாருடன் பரத கண்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று புனித தீர்த்தங்களில் நீராடி எழுந்த விபரங்களும் முனிவர்களது தவச் சாலைகளுக்கு அதிதிகளாக சென்று விருந்துகளில் கலந்து கொண்ட விவரங்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ ராம பிரானது இராமேஸ்வர வருகையையோ அல்லது அங்கு மேற்கொண்ட சிவலிங்க பிரதிட்டையையோ இந்த நூலில் குறிப்பிடப்படவில்லை.

காலவாரியாக இராமேஸ்வரம் பற்றிய இந்த இலக்கியங்கள் இங்கு குறிப்பிடப்பட்ட பொழுதும் இராமேசுவரத்தையும் இராமசரிதம் பற்றியும் பல தமிழ் வடிவங்கள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன என்பதை கீழ்க்கண்ட நூல்களின் பட்டியலில் இருந்து அறியலாம்.

| | | |
|---|---|---|
| 1. | இராமாயணம் உத்தரகாண்டம் | ஒட்டக்கூத்தர் |
| 2. | ஜைன இராமாயணம் | – |
| 3. | இராமாயண வெண்பா | – |
| 4. | காகுத்தன் கதை | – |
| 5. | தந்தை இராமாயணம் | – |
| 6. | அமிர்த இராமாயணம் | – |
| 7. | குயில் இராமாயணம் | – |
| 8. | இராமாயண சூடாமணி | – |
| 9. | இராமாயண அகவல் | நாராயணசாமி ஐயர் |
| 10. | பாலர் இராமாயணம் | ஐயாச்சாமி |
| 11. | காகுத்தன் கதை | குண ஆதித்தன் |
| 12. | இராமாயணம் | மதுரகவி சீனிவாசயங்கார் |
| 13. | இராமநாத திருப்பதிகம் | வடலூர் வள்ளலார் |
| 14. | இராமகாவியம் | இராமசாமி ஐயர் |
| 15. | இராமாயணத் திருப்புகழ் | அரங்கசாமி செட்டியார் |
| 16. | இலங்கைப் பரணி | நா. கனக இராஜ ஐயர் |
| 17. | இராமாயணக் கீர்த்தனைகள் | வேம்பு அம்மாள் |

| | | |
|---|---|---|
| 18. | இராமாயணக் கிர்த்தனைகள் | முத்துச்சாமிக் கவிராயர் |
| 19. | இராமாயணக் கிர்த்தனைகள் | ராஜசேகர முதலியார் |
| 20. | இராமோதண்டம் | குமாரசாமிப்புலவர் |
| 21. | இராமாயணச் சிந்து | வைத்தியலிங்க ரெட்டியார் |
| 22. | இராமாயணக் கப்பல் சிந்து | திருமலைச்சாமி ஐயங்கார் |
| 23. | இராமாயணக் கும்மி | இராமசாமிக் கவிராயர் |
| 24. | இராமாயணக் கும்மி | வெங்கட்ராம ஐயர் |
| 25. | இராவணன் கும்மி | முனியசாமி முதலியார் |
| 26. | இராமாயணக் கும்மி | அழகிய சொக்கநாதபிள்ளை |
| 27. | இராமாயணக் கும்மி | முருகதாசசாமி |
| 28. | இராமாயணக் கும்மி | சடகோப ஐயங்கார் |
| 29. | இராமர்சிங்காரச் சிந்து | தியாகப்பதாசர் |
| 30. | இராமாயண ஏலப்பாட்டு | சீனிவாச ஐயங்கார் |
| 31. | இராமாயணக் காவடிச்சிந்து | நாராயணசாமிபிள்ளை |
| 32. | இராமர் தாலாட்டு | இராமலிங்கம்பிள்ளை |
| 33. | இராமர் வனவாசம் | இராமலிங்கம்பிள்ளை |
| 34. | இராமர் தாலாட்டு | நாராயணசாமிபிள்ளை |
| 35. | சங்கிரக இராமாயணம் | சுவடிகள் |
| 36. | இராமவதாரதி காலநிர்ணயம் | சுவடிகள் |
| 37. | இராமாயணத் திருப்புகழ் | சுவடிகள் |
| 38. | தசரத இராம சதகம் | சுவடிகள் |
| 39. | கோதண்டராம சதகம் | சுவடிகள் |
| 40. | அனுமார்பிள்ளைத் தமிழ் | சுவடிகள் |
| 41. | தசரதராம சதகம் | சுவடிகள் |
| 42. | ஸ்ரீ இராமர் திருவடிமாலை | மகாவித்வான் இரா. இராகவ ஐயங்கார் |
| 43. | ஸ்ரீ இராமர் கௌத்துபம் | – |
| 44. | உத்ர ராமாயணக் கிர்த்தனம் | அனந்தபாரதி |

தமிழில் சென்ற நூற்றாண்டில் நாடக வடிவிலும் இராமாயணம் வெளிவந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| 1. | உத்தரராம சரிதம் | (கி.பி. 1878) |
| 2. | சீதாகல்யாணம் | (கி.பி. 1889) |
| 3. | பாதுகா பட்டாபிஷேகம் | (கி.பி. 1889) |
| 4. | சேதுயாத்திரை நாடகம் | சிங்கவனத்தார் (பாரதி) |
| 5. | இராவண சம்ஹாரம் | (கி.பி. 1899) |
| 6. | சம்பூர்ண இராமாயணம் | நாகை சண்முகம்பிள்ளை |
| 7. | சதமுகராவணன் சண்டை | சிங்கவனத்தார் (பாரதி) |

இந்த நாடகங்களைத் தெருக் கூத்துக்களாகவும், மக்கள் கலைஞர் பலர் இன்னும் சோழ மண்டலத்திலும், தொண்டை மண்டலத்திலும் தொடர்ந்து நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர இராமாயணம் பற்றிய உரைநடை நூல்களும் மிகுதியாக வந்துள்ளன. மற்றும் இராமாயணக் கதையைப் பாமர மக்களிடையே பக்திச் சிரத்தையுடன் சொற்பொழிவுகள் மூலம் பரப்பும் பணியைப் பல தமிழ்ப்புலவர்கள் செய்து வந்த செய்திகளும் உள்ளன. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இராமநாதபுரம் சேதுபதி மன்னர் முத்துவிசய ரெகுநாதசேதுபதி அவையில் மேலச் செல்வனூர் சாந்துப் புலவர் என்பவர் இராமாயணப் பிரசங்கத்தை மிகச் சிறப்பாக மேற்கொண்டதற்காக அவருக்கு பொன்னெட்டி மாலை பரிசு வழங்கியதுடன் அன்று முதல் அந்தப் புலவர் பொன்னெட்டியாபிள்ளை என்றும் "பொன்னெட்டி மாலை சர்க்கரைப் புலவர்" என்றும் பெயர் பெற்றார் என்று தெரிய வருகிறது.[1]

1) கந்தசாமி டாக்டர் எஸ். சேதுபதிகளின் செந்தமிழ்ப்பணி 1976 ஆய்வுரை அச்சில் வராதது.

இந்தப் புலவர் திருப்புல்லாணி இராமசாமி திருக்கோயிலில் பத்து நாட்கள் தொடர்ந்து இராமாயணச் சொற்பொழிவினைச் சிறப்பாக நடத்தி முடித்ததற்காகச் சேதுபதி மன்னர் இந்தப் புலவரது புலமையையும் பிரசங்கத்திறமையையும் பாராட்டி கி.பி. 1711–ல் திருவாடானை வட்டத்தில் உள்ள உளக்குடி, கோடாகுடி என்ற இரு ஊர்களைச் சர்வமானியமாக வழங்கினார் என்பது செப்பேட்டுச் செய்தி.[1] இவரது வழியினராக தமிழ்ப் புலவர்களும் இந்தத் தமிழ்ப் பணியைத் தொடர்ந்து செய்து சேதுபதி மன்னர்களது தண்ணளிக் குரியவர்களாக விளங்கினர். சேதுபதி மன்னரைப் பின்பற்றியவர்களாகச் சேதுநாட்டுப் பெருங்குடி மக்களும் இராமாயணப் பிரசங்கிகளுக்கு ஏற்ற மரியாதைகளைச் செய்து அவர்களது பணியினை ஊக்குவித்தனர் என்பதற்குத் திருவாடானைத் திருக்கோவில் ஆவணம் ஒன்று தெரிவிக்கிறது.

திருவாடானை ஆதி ரெத்தினேசுவரர் திருக்கோவிலில் செய்த இராமாயணப் பிரசங்கத்திற்காகச் சேது சமஸ்தான வடக்கு வட்டகையில் ஐந்து தாலுகாவில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் நன்செய், புன்செய் விளைநிலத்துக்கு மகிமை, மாத்தாகக் குறுணி நெல் விகிதம் சந்திராதித் தவரை தலைமை அரசருக்கும் குடிமக்களுக்கும் பொதுவாகக் கொடுப்பதாக அஞ்சுகோட்டை முதலான நாட்டுப் பிரபுக்களால் பட்டயம் கொடுக்கப்பட்டது. சாலிவாகன சகாப்தம் விபவ ஆண்டு சித்திரை மாதம் 4ம் தேதி கி.பி.1735 என்பது தான் அந்த ஆவணத்தின் சுருக்கம்.

இராமாயணம் பற்றிய நூல்கள் வழியும், இராமாயணச் சொற்பொழிவாளர்களது சொற்பொழிவுகளினாலும் இராம சரித்திரமும், இராமேஸ்வர சேதுபந்தனம், இராமலிங்கப் பிரதிஷ்டை ஆகியவை மக்களிடையே மிகவும் பிரசித்தமாயின என்பது வெள்ளிடை. இத்தகைய பணி இந்தக் காலக் கட்டத்தில்

1) கமால் டாக்டர் எஸ்.எம். சேதுபதி மன்னர் செப்பேடுகள் – 1994

தமிழகத்தில் மட்டுமல்லாமல் தமிழகத்தை அடுத்துள்ள ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய மாநிலங்களிலும் கடந்த ஏழட்டு நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வந்து இருப்பதை அந்தந்த மொழிகளில் படைக்கப்பட்டுள்ள பல இலக்கியங்களிலிருந்து எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. இராம சரிதம் பற்றிய தெலுங்கு, கன்னட மலையாள நூல்களின் பட்டியல் தனியாகத் கொடுக்கப்பட்டுள்ளது.

தெலுங்கு மொழியில்

| | | |
|---|---|---|
| 1. | ராமாயணம் | சிந்தன்னா (14 வது) |
| 2. | ராகவாய்யுதம் | நன்னையா (14 வது) |
| 3. | ரங்கநாதராமாயணம் | கோணபுத்தரெட்டி |
| 4. | பாஸ்கர ராமாயணம் | -- |
| 5. | ஆனந்த ராமாயணம் | -- |
| 6. | அத்யாத்ம ராமாயணம் | -- |
| 7. | ராமாயணம் | -- |
| 8. | ராமாயணம் | கொரவி. சத்யநாராயண |
| 9. | சகல வர்ணணா பூர்ண ராமாயணம் | அனந்த கனி |
| 10. | ராமாயணம் | தாளபாக்க அன்னமாச்சார்யா (15வது நூல்) |
| 11. | ராமாப்யுதயுமு | ராமபத்ரகவி (16வது நூல்) |
| 12. | ராமாயணம் | பெண்கவி மொள்ளா (16வது நூல்) |
| 13. | ராமாயணம் | கட்டவரதராஜு (17வது நூல்) |
| 14. | ராமாயணம் | அய்யாராஜுராமபத்ருமு (16வது நூல்) |
| 15. | அச்சதெலுகு இராமாயணம் | குச்சி மஞ்சி திம்மகவி (17வது நூல்) |
| 16. | ராமாயணம் | தஞ்சை மன்னர் ரகுநாதநாயக்கர் |
| 17. | ராமாயணம் | அனந்த ராஜு கண்ணையா |
| 18. | ராமாயணம் | மிக்கினி மல்லிகார் ஜுனமு |
| 19. | ராமாயணம் | பேல ரகோஜ் (18வது நூல்) |
| 20. | சதகண்டராமாயணம் | |
| 21. | அற்புத ராமாயணம் | |
| 22. | விசித்திர ராமாயணம் | |
| 23. | சிதாராம சரித்திரம் | மந்திரி பிரதம சூர்யம் |
| 24. | ராமாயணம் | பிரகாச கவி (19வது நூல்) |

25. ராகவ பாண்டகாவியம் பிங்கனி சூர்னா (19வது நூல்)
26. சிவராமாயயுதயம் ரபாதுரி பெத்தராம மத்தயா
27. ராகவ யாதவ பாண்டவயம்
நெல்லூரி வீரராகவாச்சாரி
28. தாசரதிசதகம் பத்ராசலம் ராமதாசா
29. பிரச்சனராகவ சதகம் வங்கு முட்டு தரங்கவி
30. ஜானகி சதகம்
31. ஜனகி வம்சம்
32. ஒண்டி மெட்ட ரகுவீரசதகம்
33. ரகுபதி சதகம்
34. ரகு புங்கவ சதகம்
35. ரகு நாயக சதகம்
36. ரகுராம சதகம்
37. ராகவ சதகம்
38. ராமச்சந்திர சரித்திரசதகம்
39. ராமரகேஷா சதகம்
40. ராமச்சந்திரபிரபுசதகம்
41. ராமதாரகசதகம்
42. ராமசதகம்
43. தர்மபுரிராமாயணம் சேஷாபதாஸ்
44. ஜானகி கல்யாணம் கிருமுரி விஜயராகவநாயக்கர்
45. சேது மகாத்யமு
46. இராமேசுவர மகாத்யமு
47. இராமேசுவர விஜயமு
48. இராமலிங்கேஸ்வர சதகமு
49. விருத்தாந்தமு இராமேசுவர
ஷேத்ர மகாத்யமு
50. இராமாயண கிர்த்தனை
51. வஷெஷ்ட இராமாயணம்

**கன்னட மொழியில்**

| | | |
|---|---|---|
| 1. | பம்ப இராமாயணம் | |
| 2. | குமுதேந்து இராமாயணம் | (13வது நூற்றாண்டு) |
| 3. | ராமகதாவதார | தேச சந்திரா (13வது நூற்றாண்டு) |
| 4. | தொரவே இராமாயணம் | குமாரவால்மீகி தொரவே (16வது நூற்றாண்டு) |
| 5. | இராமாயணம் | லட்சுமணன் |
| 6. | இராமாயணம் | சாபவர் |
| 7. | இராமாயணம் | சுகுமார் (17வது நூற்றாண்டு) |
| 8. | உத்தர ராமாயணம் | திருமால் வைத்யா (17வது நூற்றாண்டு) |
| 9. | உத்தர ராமாயணம் | யோகேந்திரா (17வது நூற்றாண்டு) |
| 10. | சிதாபரித்தியாகம் | லக்ஷ்மி மீசன் (17வது நூற்றாண்டு) |
| 11. | ராமச்சந்திர சரிதே | சந்திரசேகர் (17வது நூற்றாண்டு) |
| 12. | ராமாப்யுதய | திம்மாத்யா (18வது நூற்றாண்டு) |
| 13. | ராமச்சந்திர சரிதா | சத்மநாபா (10வது நூற்றாண்டு) |
| 14. | ஆனந்த ராமாயணம் | திம்மராயா (18வது நூற்றாண்டு) |
| 15. | ஸ்ரீ ராமஸ்வத மேகம் | |
| 16. | உத்தர ராம சரிதம் | பசவப்ப சாஸ்திரி |
| 17. | உத்தர ராம சரிதம் | முப்பாகிலு |
| 18. | உத்தர ராம சரிதம் | தொண்டு நரசிம்ம |
| 19. | ஸ்ரீ ராமசரிதம் | சோலை ராமச்சந்திரா |
| 20. | ஸ்ரீராம பட்டாபிஷேகம் | நந்தாரிகை லக்ஷ்மி நரசப்பா |

## மலையாள மொழியில்

1. உத்தர ராம சங்கிரஹம் (14வது நூற்றாண்டு)
2. இராமாயண சம்சேஷபம்
3. இராம சரிதம்
4. இராம கதாப்பாட்டு அய்யாப்பிள்ளை ஆசான் (15வது நூற்றாண்டு)
5. இராமாயணச் சம்பு பணம் நம்பூத்ரி (16வது நூற்றாண்டு)
6. கண்ணாசராமாயணம் எழுத்தச்சன்
7. அத்யாத்ம ராமாயணம் எழுத்தச்சன்
8. உத்தர ராமாயணம்
9. ஸ்ரீ இராமேஸ்வரம் கிளிப்பாட்டு
10. இராமாயண கிளிப்பாட்டு
11. புத்திர சாமேஷ்டி கிளிப்பாட்டு
12. உத்ர ராமாயண கத்யம்
13. இராமாயக் கிர்த்தனை
14. இராமாயண விருத்தம்
15. சேதுபந்தனம் பாட்டு

## கதகளி (நடனம்)

16. ராமாயணம் ராமவர்மா
17. ராமன் ஆட்டம் கொட்டாரக்கரா தம்பிரான்
சண்முகராமாயணம் கடத்தநாடு தம்பிரான்

## துள்ளல்

18. ராகவியம் மகாகாவ்யம்குஞ்சன் நம்பி
19. ஸீதாராகவ நாடகம்
20. யங்கா மந்தனம்
21. ராவன வதம்

| | | |
|---|---|---|
| 22. | பாதாள இராமாயணம் | |
| 23. | ராமாயண சதகம் | தேவரா ஜபட்டன் |
| 24. | சுந்தரகாண்டம் | கொங்கிராமவர்ம |
| 25. | ராகவாவிஜயம் | கிளிமாவர் கோவிந்ததம்பிரான் |
| 26. | உத்தரராம சரிதம் | காத்துக்குட்டி மன்றாடியார் |
| 27. | ஜானகி பரிணயம் | காத்துக்குட்டி மன்றாடியார் |
| 28. | ரகுவீர விஜயம் | வடக்கூர் ராஜா |
| 29. | ராகவாப்புதயம் | வடக்கூர் ராஜா |
| 30. | ராமச்சந்திரா | அழகத்துபத்மனாத குரூப் (20வது நூற்றாண்டு) |
| 31. | இராமாயணம் | மகாகவி வள்ளத்தோள் (20வது நூற்றாண்டு) |
| 32. | கொச்சுசிதா | மகாகவி வள்ளத்தோள் |

# 3. வரலாற்றில் இராமேஸ்வரம்

இராமேஸ்வரம் பற்றிய தொன்மையான செய்திகள் வரலாற்றில் காணப்படவில்லை. இராமேஸ்வரம் பகுதி பாண்டியர், சோழர்கள், சிங்களவர், விஜய நகரமன்னர், மதுரை நாயக்கர்கள், மறவர் சீமை அதிபதிகளான சேதுபதிகள் ஆகிய பல்வேறு அரசுகளின் ஆட்சிப் பகுதியாக இருந்து வந்துள்ளது என்பதை இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் செப்பேட்டு ஆவணங்களில் இருந்து அறிய முடிகிறது.

இராமேஸ்வரம் அமைந்துள்ள இராமேஸ்வரம் தீவு முதலில் மதுரை பாண்டிய மன்னர்களது ஆட்சிப் பகுதிகளாக இருந்தாலும் கி.பி.பத்தாவது நூற்றாண்டில் பாண்டிய மண்டலத்தைக் கைப்பற்றிய பராந்தக சோழன் இராமேஸ்வரம் திருக்கோவிலில் துலாபாரம் நிகழ்த்தி அவனது நிறைக்குரிய பொன்னைக் கோவிலுக்கும், அந்தணர்களுக்கும் பகிர்ந்தளித்தான் என்பது அவனது கி.பி.932ம் ஆண்டு வேளஞ்சேரி செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[1]

இராமேஸ்வரம் பற்றிய வரலாற்றில் கிடைக்கும் முதல் செய்தியாக இராமேஸ்வரம் திருக்கோவிலின் தொன்மையான செப்புத் திருமேனிகள் பத்தாம் நூற்றாண்டினவாக இருப்பது இங்குச் சோழர் செல்வாக்கு ஏற்பட்டதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது என்று குறிப்பிடப் படுவதைச் சுட்டலாம்.[2]

---

1. Nagasamy Dr. R. Valancheri Copper Flate
2. Nagasamy Dr. R. South Indian Studies (1972) Part - I I

அடுத்த செய்தி பிற்காலப் பாண்டியரது ஆட்சிக் காலத்தியது. அண்மையில இராமநாதபுரம் மாவட்டம். பரமக்குடி வட்டம், சதுர்வேதி மங்கலத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள கோனேரின்மை கொண்டான் என்ற பாண்டியனது இருபத்து இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கி.பி.1216–43 வரை மதுரை மண்டலத்தை ஆட்சி செய்த தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திய மாவீரன் இவனது முழுப் பெயர் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பது "பூ மடந்தையும், ஜெயமடந்தையும் புனர" என்று தொடரப் பெறும் மெய்க்கிர்த்திக்குரியவன்.

மலை மண்டலத்தைச் சேர்ந்த வீரநாராயணன் என்ற அந்தணன் கோடி நாட்டு இராமேஸ்வரத்தில் நடத்திய சுந்தரபாண்டிய மடத்திற்கு அக்கிரமேசி சதுர்வேதி மங்கலத்தில் 12 வேலி விளை நிலத்தைத் தானமாகப் பெற்றதாகும். ஆனால் இந்தச் செய்திக்கு முன்னதாகத் தமிழக வரலாறும் இலங்கை நாட்டு வரலாறும் ஒரு சேர உறுதி செய்கின்ற நிகழ்ச்சி ஒன்று உள்ளது.

கி.பி. 1168–இல் மதுரையைக் கைப்பற்றிப் பாண்டியப் பேரரசனாவதற்கு குலசேகரன் முயன்றான். இதனை அறிந்த மதுரை மன்னன் பராக்கிரம பாண்டியன் இலங்கை மன்னன் பராக்கிரம பாகுவிடம் உதவி கோரினான். இலங்கை உதவி கிடைப்பதற்கு முன்னர் குலசேகரன் பராக்கிரம பாண்டியனைக் கொன்று மதுரைக்கு அதிபதியானான். அத்துடன் பராக்கிரமனது மகன் வீரபண்டியனுக்கு உதவ வருகின்ற இலங்கைப் படைகளை எதிர்கொண்டு போரிடுவதற்கு இராமேஸ்வரம் தீவிலும் கிழக்குக் கடற்கரையிலும் தக்க முன் நடவடிக்கைகள் எடுத்தான்.

கி.பி.1169 இளவேனில் காலத்தில் இலங்கை மன்னர் பராக்கிரமபாகுவின் பெரும்படை நூற்றுக்கணக்கான

படகுகளில் இராமேஸ்வரம் தீவில் வடபகுதியில் கரை இறங்கின. இலங்காபுர தண்டநாயகன் என்ற தளபதியின தலைமையில் குலசேகர பாண்டியனது எதிர்ப்புகளை நிர்மூலமாக்கிவிட்டு இலங்கைப் படைகள் முன்னேறி இராமேஸ்வரத்தையும் பின்னர் பாம்பனையடுத்த குந்துகாலையும் கைப்பற்றின. பின்னர் வடலி (வேதாளை), எழுகோட்டை, இடகழிசாரம், பராக்கிரம பட்டிணம் என்று இராமேஸ்வரம் தீவின் மேற்குக் கரையையடுத்த கடல் துறைகளிலும் பாண்டியனது போர்ப்படைகள் படுதோல்வியடைந்தன.[1] குறிப்பாகப் பாண்டியனது சிறந்த தளபதிகளான (1) வடவாலத் திருக்கை நாடாள்வார் (2) குண்டைய முத்தரயர் (3) அஞ்சுகோட்டை நாடாள்வார் (4) வல்லவராயர் (5) நரசிம்மத்தேவர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.[2] குலசேகரனும், வீரபாண்டியனும் மாறி மாறிப் பாண்டிய நாட்டுப் பேரரசர்களானார்கள் : பாண்டிய நாட்டில் பலவிதமான குழப்பங்கள். இராமேஸ்வரம் தீவு இருபது ஆண்டுகள் கி.பி.1195 வரை இலங்கை மன்னரது ஆக்கிரமிப்பில் இருந்தது.

வரலாற்றில் இராமேஸ்வரம் முதன் முதலாகக் குறிப்பிடப் படுவது ராஷ்டிர கூட மன்னனது செப்பேட்டிலாகும். கி.பி. 910ல் ராஷ்டிரகூட மன்னரான மூன்றாம் கிருஷ்ணன் என்பவன் சோழர்களையும் பின்னர் இலங்கை மன்னனையும், வென்றதன் நினைவாகச் சிலகாலம் இராமேஸ்வரத்தில் தங்கி இருந்தான். அப்பொழுது, அங்குச் சேது மூலத்தில் தனது வெற்றியைக் குறிக்க ஜெயஸ்தம்பம் ஒன்றை நிர்மானித்தான் என்று, அவனது ஹோல்காப்பூர் செப்பேடு குறித்துள்ளது.

இலங்கையில் பராக்கிரம பாகுவை அடுத்துக் கி.பி. 1187ல் அரியணையேறிய நிஸ்ஸங்க மல்லன் சேனைகள் தமிழ்நாட்டில்

1. K.A. Nilkanta Shastry - History of Pandiya Kingdom
2. குடந்தை N. சேதுராமன் - பாண்டியர் வரலாறு - பக்கம்

முன்னேறிச் சென்றபொழுது. அவர் இராமேஸ்வரத்தில் தங்கி இருந்தார். அப்பொழுது அவர் நிஸ்ஸங்கேசுவரருக்கு ஒரு கோயில் எடுப்பித்தார் என இராமேஸ்வரம் திருக்கோயில் கொடிக்கம்பத்தருகிலுள்ள கல்வெட்டும். இலங்கை தம்போலா என்ற இடத்தில் உள்ள கல்வெட்டும் தெரிவிக்கின்றன. இவை இரண்டும் பாலி மொழியில் வரையப் பெற்றவை.

இராமேஸ்வரத்தைக் குறிப்பிடுகின்ற அடுத்த வரலாற்று ஏடு பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தது. மதுரைப் பாண்டிய இளவல்களின் பதவிப் போட்டியில் தலையிடுவதற்காகக் கன்னட நாட்டுத் துவார சமுத்திரத்தி லிருந்து வரவழைக்கப்பட்ட தில்லி மன்னரது தளபதி மாலிக்காபூர். மதுரையைக் கொள்ளையிட்டவுடன் அக்டோபர் 1311–ல் இராமேஸ்வரத்திலும் கோயிலில் உள்ள விலை மதிப்பு மிக்க அணிமணிகளைக் கொள்ளையிடுவதற்காக இராமேஸ் வரத்திற்கும் வந்தான் என்பது வரலாற்றுச் செய்தி. இந்தக் கொள்ளைக் காரனையடுத்துக் கி.பி.1318–ல் இந்தப் பகுதிக்கு வந்த இன்னொரு தில்லி தளபதி குஸ்ருகானும் இராமேஸ்வரம் வரை வந்து திரும்பினான். திரு.எஸ்.வெங்கட்டரமணய்யா போன்ற சில வரலாற்று ஆசிரியர்கள் கி.பி.1311 அக்டோபரில் மதுரை வந்த தளபதி மாலிக்காபூர் இராமேஸ்வரம் செல்லவில்லை என்ற கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய முரண்பாடாக கருத்துக்கு ஆதாரம் பாரசீக நாட்டு ஆசிரியர்கள் வஸ்ஸாபும். பர்னியும் வரைந்துள்ள தெளிவற்ற குறிப்புகள் தாம். இந்தக் கட்டத்தில் தமது நாட்டு வரலாற்று ஆசிரியரான அமீர்குஸ்ரு. எல்பிஸ்டன் குறிப்புகளைத் தங்களது ஆய்விற்கு திரு. வெங்கடரமணய்யர் போன்றோர் ஏன் எடுத்துக் கொள்ளவில்லையென்பது புரியவில்லை. மேலும் இந்த முரண்பாடுகளைக் கீழ்க்கண்ட செய்திகள் தெளிவு படுத்தும் எனக் கருதப்படுகிறது.

1. மாலிக்காபூர் மதுரை வந்தபொழுது அங்கிருந்த பாண்டியன் நகரை விட்டே ஓடிவிட்டான். ஏமாற்றமடைந்த அந்தக் கொள்ளைக்காரன் மதுரையில் கோயிலைக் கொள்ளையிட்டு அணிமணிகளையும் அங்கிருந்த யானை களையும் கைப்பற்றிக் கொண்ட பிறகு அடுத்த பத்து நாள்களில் தில்லி திரும்பினான். மதுரை வரும் வழியில் ஸ்ரீரங்கம் – சிதம்பரம் கோயில்களைக் கொள்ளையிட்டவன். இந்தியா முழுவதும் மிகப்பிரசித்தம் பெற்ற இராமேஸ்வரம் கோயில் பற்றித் தெரிந்திருக்க மாட்டானா? மதுரையில் இருந்து எண்பது கல் தொலைவில் உள்ள இராமேஸ்வரத்திற்குச் செல்லாமல் பத்து நாட்கள் மதுரையில் ஓய்வு எடுத்துக் கொண்டவனாகப் பொழுது போக்கி இருப்பானா என்பது சிந்திக்க வேண்டிய செய்திகள்.

2) இராமேஸ்வரம் படையெடுப்பின் பொழுது அங்கு ஒரு தொழுகைப் பள்ளியை அமைத்தான் என்பது வரலாறு. இதே பள்ளியை கி.பி. 1318–ல் படையெடுத்து வந்த தில்லி தளபதி குஸ்ரூகான் பழுதுபார்த்தான் என்ற செய்தியும் உள்ளது.[1]

3) இவைகளுக்கெல்லாம் மேலாக இராமேஸ்வரத்தில் செப்டம்பர் 1994ல் நடைபெற்ற தமிழகத் தொல்லியல் ஆய்வுக் கழகத்தில் ஐந்தாவது கருத்தரங்குகளில் கலந்து கொண்ட இராமேஸ்வரம் நகரப் பேரூராட்சியின் முன்னாள் தலைவரும் ஆந்திரநாட்டு மக்களுக்குப் புரோகிதராகவும் இருந்த கோடூர் எஸ். ராஜகோபால் சாஸ்திரி வெளியிட்ட தகவல்.

"இராமேஸ்வரத்தில் பல நூற்றாண்டுகளாக முஸ்லீம் களுக்கும் முஸ்லீம் அல்லாதவர்களுக்கும் இடையில் குறிப்பாகப் பிராமணர்களிடம் நல்லநேச உறவுகள் தொடர்ந்து நீடித்து வருவதற்கு முக்கியமான காரணம் ஒன்று உள்ளது. அதாவது தில்லி தளபதி மாலிக்காபூரின் மதுரைக் கோயில் கொள்ளையையடுத்து இராமேஸ்வரம் கோயிலையும் கொள்ளையிட வந்தால் என்ன செய்வது என இராமேஸ்வரம் கோயில் அர்ச்சகர்கள் பயந்து குழப்பமடைந்த நிலையில்

அப்பொழுது இராமேஸ்வரத்து மரைக்காயர் சிலர் அவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் இராமேஸவரம் கோயில் திருமேனிகளையும் திருவாபரணங்களையும் குருக்களையும் தங்களது மரக்கலங்களில் ஏற்றிச் சென்று பக்கத்திலுள்ள திவு ஒன்றில் பத்திரமாக வைத்திருந்து. மாலிக்காபூர் இராமேஸ்வரத்திலிருந்து திரும்பிய செய்தி கிடைத்த பிறகு அவைகளையும். குருக்களையும், இராமேஸ்வரத்தில் பத்திரமாகச் சேர்ப்பித்தார்கள்".

இந்த செவிவழிச் செய்தியும் மாலிக்காபூரின் படையெடுப்பை உறுதிசெய்கின்றன. மாலிக்காபூர் மதுரை வருவதை அறிந்து மதுரை மன்னன் நகரை விட்டே ஒடி விட்டான். அவன் விட்டுச் சென்ற அணி மணிகளையும் கோயில் திரவியங்களையும் கைப்பற்றிய பிறகு அடுத்த பத்து நாள்கள் மதுரையில் ஓய்வு எடுத்துக் கொண்டு தங்கினாரா என்ற வினாவிற்கு எதிர்மறை விடையாக இராமேஸ்வரம் படையெடுப்பு அமைகிறது.

இந்தச் செய்திகள் பாண்டிய நாட்டில் உறுதியற்ற அரசியல் சூழ்நிலையைக் குறிப்பிடுவனவாகும். அடுத்துப் பதினைந்து பதினாறாவது நூற்றாண்டுகளில் இங்கு ஆந்திர நாட்டு விஜயநகரப் பேரரசின் பிடி வலுவுடன் இருந்ததால், இராமேஸ்வரத்திற்குத் தென்னாட்டு மகா மண்டலேஸ்வரர் களும் விஜயநகரப் பேரரசருமே தலயாத்திரை மேற்கொண்ட செய்திகள் வரலாற்றில் பதிவு பெற்றுள்ளன.

பேரரசர் ஹரிஹரரின் (கி.பி. 1377 – 1404) தென்னாட்டு ஆளுநரான முதலாவது விருபாட்சா இராமேஸ்வரம் வந்தார். இராமநாதசுவாமி திருமுன்னர் துலாபாரம் நிகழ்த்திப் பொன்னை ஈந்தார். இவரையடுத்து விஜயநகர ஆளுநர் கோப்ப திப்பா என்பவர் கி.பி. 1408–ல் இராமேஸ்வரம் தரிசனத்தை முடித்தார். கி.பி. 1497–ல் பேரரசர் நரசிம்மர் இராமேஸ்வரம்

திருக்கோவிலுக்கு யாத்திரையாக வந்து பதினாறு தர்மங்களையும் செய்தார். கி.பி. 1517ல் பேரரசர் கிருஷ்ணதேவராயர் இராமேஸ்வரம் தலயாத்திரை மேற்கொண்டு இராமசேதுவில் மூன்று நாள்கள் தங்கியிருந்து முப்பத்து இரண்டு அறங்களையும் தமது இரு துணைவியாருடன் நிறைவேற்றி மகிழ்ந்தார்.

தென்னகத்து மகாமண்டலேசுவரரான சாளுவ திம்மா கி.பி.1532–ல் இராமேஸ்வரத்திற்கு வருகை தந்தார். இன்னொரு மகாமண்டலேசுவரரான சாளுவ நரசிம்மர் என்பவர் கி.பி.1483–ல் இங்குத் தலயாத்திரையாக வந்தார்.

இவர்களையடுத்து ஆன்மீகப்பயணமாக இராமேஸ்வரத்திற்கு வருகை மேற்கொண்டவர்கள் வருமாறு.

கி.பி. 1659 தஞ்சாவூர் மன்னர் விஜயரெகுநாத நாயக்கர் இராமேஸ்வரத்தில் ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம் ஆகிய தர்மங்களைச் செய்தார்.

கி.பி. 1677 மகாராஷ்டிர மன்னர் சிவாஜி.
கி.பி. 1759 தஞ்சை மன்னர் பிரதாப சிம்மன்
கி.பி. 1779 தஞ்சை மன்னர் துல்ஜாஜி
கி.பி. 1792 திருவாங்கூர் மன்னர்
கி.பி. 1795 பாஞ்சாலாங்குறிச்சி பாளையக்காரர் கட்ட பொம்மு நாயக்கர்
கி.பி. 1795 தஞ்சை மன்னர் சரபோஜி. II
கி.பி. 1795 சென்னை கோட்டையிலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனி ஆளுநர் ஹோபர்ட்.
கி.பி. 1802 ஆந்திர நாட்டு சிந்தபள்ளி ஜமின்தார்
கி.பி. 1804 இங்கிலாந்து நாட்டு ஜார்ஜ் வாலன்டைன் பிரபு
கி.பி. 1808 மைசூர் நாட்டு திவான் பூர்ணையாவும் அவரது மக்களும்

கி.பி. 1822 தஞ்சை மன்னர் இரண்டாவது சரபோஜி.

கி.பி. 1894 தார் சமஸ்தான ராணி

கி.பி. 1893 சுவாமி விவேகானந்தர்

கி.பி. 1894 சிருங்கேரி பீடாதிபதி சுவாமி அபிநவ நரசிம்ம பாரதி

கி.பி. 1897 சுவாமி விவேகானந்தர்

கி.பி. 1898 மைசூர் மன்னர்

கி.பி. 1911 இராமகிருஷ்ண பரமஹம்சரது மனைவி
சாரதாதேவி


# இயல் - III

## 1) இராமேஸ்வரம் திருக்கோவில் அமைப்பு

பல நூற்றாண்டுகளாகப் பக்தி உணர்வும் இராமாயணக்காப்பியத்தின் தாக்கமும் பெற்ற இந்திய மக்கள் நேரில் வந்து இராமநாத சுவாமியைத் தரிசித்து மன நிறைவும் மகிழ்ச்சியும் அளிக்கத் தக்கதாக இராமேஸ்வரம் திருக்கோவில் அமைந்துள்ளது. கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள இந்தக் கோவில் பிற்காலத்தில் மறவர் சீமை மன்னர்களால் மிகவும் உயர்வாக மதித்துப் போற்றப்பட்டு வந்துள்ளது. தேவார காலத்தில் சின்னஞ் சிறு கற்றளியாக அமைந்திருந்து இன்று பிரம்மாண்டமான கட்டுமானங்களைக் கொண்டதாக ஏறத்தாழ 15 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்து காணப்படுகிறது. மக்களது ஆன்மீகச் செழுமையை அறிவுறுத்துவ தாகவும் இருந்து வருகிறது.

இந்த ஊரின் கடற்கரையில் சீதாப்பிராட்டியினால் கடற்கரை மணலைக் கொண்டு அமைத்த சிவலிங்கம் ஸ்ரீ ராம பிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பது இந்தத் தலத்தின் ஐதிகமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் இந்தக் கோவில் அமைந்துள்ள சுவாமி அம்பாள் சன்னதிகளுக்கு கிழக்கே சுமார் 100 கஜம் தொலைவில் கடல் கடந்த காலங்களில் பின்னோக்கி சென்றிருக்கிறது. இந்த நிகழ்ச்சி இராமேஸ்வரத்திற்கு மட்டுமல்லாமல் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள பல ஊர்களுக்கும் பொருந்தும். எடுத்துக்காட்டாக வடக்கே மாமல்லபுரத்திலிருந்து தெற்கே இராமேஸ்வரம் வரை அமைந்துள்ள

கிழக்குக் கடற்கரையை ஆய்வு செய்தால் கடந்த ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக கடல்நீர் நிலத்தில் புகுந்து நிலை கொண்டிருப்பது தெரிய வரும். சிற்பக் கலையின் சிறந்த கட்டுமான அமைப்பிற்கு எடுத்துக்காட்டாக அமைந்து காணப்படும் மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலைக் கடல் அலைகள் இன்னும் சூழ்ந்து கொண்டு சிதைத்து வருகின்றன. இன்னும் சற்று தெற்கே வந்தோமானால் சோழப் பேரரசின் சிறந்த துறைமுகமாக விளங்கிய நாகப்பட்டணம் நகருக்குள் ஏறத்தாழ 2 கல் தொலைவிற்கு கடல் உள்நோக்கி வந்திருப்பதும். துறைமுகப் பகுதி மேடிட்டுச் சாதாரணக் குளப்பரப்பு போல காணப்படுகிறது. அதனை அடுத்த தரங்கம்பாடியில் கடற்கரைக் கோயிலான மாசிலாமணி ஈஸ்வரரது திருக்கோவிலின் கருவறையைக் கடல் அலைகள் சூழ்ந்து சிதைத்துக் கொண்டிருக் கின்றன. இன்னும் தெற்கே சங்க காலத்தின் முட்டாச் சிறப்பின் பட்டிணமாக விளங்கிய பூம்புகார் கடலினால் அழிக்கப்பட்டு இன்று ஒரு சிறு மீனவர் கிராமமாக மாறியுள்ளது. இதே அவல நிலைதான் இன்னும் தெற்கேயுள்ள அதிவீரராமன்பட்டினம், தொண்டி, தேவிபட்டினம் ஆகிய பேரூர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்தக் கடற்கரை தொண்டியிலிருந்து தெற்கே தூத்துக்குடி வரையிலான பகுதிக்குக் கிழக்கே எதிர்க்கரையில் வடக்குத் தெற்காக சுமார் 200 கல் தொலைவு நீளமாக அமைந்துள்ள இலங்கை நாடு மேலே சொன்ன துறைமுகங்களுக்கு அழிமானம் ஏற்படாமல் இயற்கையான தடைச் சுவராக இருந்து காத்து வருகிறது । இராமேஸ்வரத்திற்கும் இந்த உண்மை பொருந்து வதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக 23.12.1964–ம் தேதி இரவு ஏற்பட்ட புயலையும். மழையையும் குறிப்பிடலாம். இலங்கை நாட்டிற்கு கிழக்கே வங்கக் கடலிலிருந்து எழுந்த இந்தப் புயல் இராமேஸ்வரத்தில் பெரும் சேதத்தை ஏற்படுத்தாமல் விட்டுச் சென்றது ஆகும். இயற்கையிலேயே இவ்வித பாதுகாப்பினால் இராமேஸ்வரம் நகரும். திருக்கோவிலும் இயல்பான நிலையில் இருந்து வந்துள்ளன




இராமேஸ்வரம் திருக்கோயிலின் தரைப்படம்

இதுவரை இராமேஸ்வரம் திருக்கோவில் பற்றிய புராண, இலக்கிய, வரலாற்றுச் செய்திகளைப் பார்த்தோம். இப்பொழுது அந்தக் கோயிலின் பெருமைக்கும் பழமைக்கும் உரியதாக உள்ள கட்டுமானங்களையும் அவைகளில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் தெய்வத் திருமேனிகளைப் பற்றியும் பார்க்கலாம். இராமேஸ்வரத் திருக்கோவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இராமேஸ்வரம் கோயிலின் அமைப்பு பற்றிய தரைப்படம் நாமும் ஏனைய பக்தர்களைப் போல அக்னி தீர்த்தக் கரையிலிருந்து மேற்கே சென்று இராமேஸ்வரம் கோயிலின் முகப்பு மண்டபத்தைக் கடந்து சுவாமி சன்னதிக்கு நேரேயுள்ள நுழைவு வாயிலின் வழியாக உள்ளே செல்கிறோம். அப்பொழுது நமது கண்களில் முதலில் படுவது வலது புறத்தில் அமைந்துள்ள அனுமார் ஆலயம் ஆகும். இங்குள்ள மூலவர் தெற்கு நோக்கியவாறு நிற்கின்றார். இதனையடுத்து அனுப்பு மண்டபம் வழியாக சன்னதி நோக்கிச் செல்லும் பொழுது இடையில் உயர்ந்த கொடிமரம் நிற்கின்றது. அங்குச்சுதையினாலான பெரிய நந்தியின் சிலை உள்ளது. இதற்கு இருபுறமும் தூண்களில் மதுரை ஆளுநராக இருந்த விசுவநாத நாயக்கர், அவரது மகன் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியவர்களது சிலைகள் சுவாமியை சேவித்த நிலையில் உள்ளன. இதனையடுத்துச் சுவாமி சன்னதிக்கு இருபுறமும் கிழக்கு நோக்கியவாறு மூத்த பிள்ளையார் இளைய முருகன் ஆகியோரின் சிறு கோவில்கள் இருக்கின்றன. அடுத்து அமைந்திருப்பது முதற்பிரகாரம். இதன் தென்கிழக்கு மூலையில் சூரியன், உஷா, பிரத்யுஷா, சகஸ்ரலிங்கம் ஆகிய திருவுருவங்களும், தேவார மூவரும், அறுபத்து மூன்று நாயன்மார்களும், மூலவர், உற்சவர் விக்கிரகங்களும் உள்ளன. தொடர்ந்து வலதுபுறம் திரும்பினால், மேற்குப் பிரகாரத்தில் வச்சிரேசுவரர், மனோன்மணி, கந்தன், சங்கரநாராயணன், அர்த்தநாரீஸ்வரர், கங்காளநாதர், சந்திரசேகரர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. பிறகு வடக்குப்

பிரகாரத்தில் இராமர். சிதை. இலக்குமணன். அனுமன். விபீஷணன் முதலிய 11 சிலைகளும். விசாலாட்சி. ஜோதிர்லிங்கம். நடராஜர் ஆகியோர் சன்னதிகள் அமைந்துள்ளன. இதனையடுத்து கிழக்குப் பிரகாரத்தின் வடபுறத்தில் சந்திரன். கிருத்திகை உரோகிணி ஆகிய திருவுருவங்கள் உள்ளன.

இந்தப் பிரகாரத்தின் நடுவில் கருவறை அமைந்து ள்ளது. அதில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராமநாதர் கிழக்கே கடலை நோக்கியவாறு இருக்கிறார். இதன் மேற்குப் புறச் சுற்றில் திருக்கயிலாயக் காட்சி மிக அற்புதமாகப் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் மேலே ஐந்து தலைநாகம் அமைந்துள்ளது. இந்தக் கருவறையின் வடபுறத்தில் காசி விசுவநாதர் சந்நிதி அமைந்திருக்கிறது. இந்த மூர்த்திக்குத்தான் முதலில் பூசை முதலியவை நடைபெறுகிறது. இந்தச் சன்னதியின் தென்புறத்தில் இராமர். சிதை. இலட்சுமணன். அனுமான் ஆகியோரது திருவுருவங்கள் வெகு அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இதில் அனுமனது சிலை இராம பிரானைக் கூப்பிய கரங்களுடன் வணங்கிய நிலையில் இருப்பதாகவும். அவரது கரங்களுக்கு இடையில் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட இரு ஆத்ம லிங்கங்கள் அமைந்திருப்ப தாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து சுக்ரீவனது திருவுருவம். இராமரை வணங்கிய நிலையில் தலை குனிந்து வாய் புதைத்துக் காணப்படுகிறார். இந்த சன்னதியின் எதிரே ஒரு தூணில் சின்னப் பிரதானி கிருஷ்ணய்யங்காரின் உருவம் இருக்கிறது.


இந்த சன்னதிகளைக் கடந்து தென் புறத்திலுள்ள வாயில் வழியாகச் சென்றால் அம்பிகை சந்நிதி உள்ளது. இங்கு அம்பிகையின் பெயர் மலைவளர் காதலி என்றும் பர்வதவர்த்தினி என்றும். வழங்கப்படுகின்றது. இந்த சன்னதிக்குத் தென்கிழக்கு மூலையில் கல்யாண சுந்தரேசர்

உருவம் இடம் பெற்றுள்ளது. அவரது அருகில் வடக்கு நோக்கியவாறு பிரம்மன். திருமால் ஆகியோரது உருவங்களும் நிலைபெற்று உள்ளன. இதனையடுத்து மேற்குப் பிரகாரத்தின் தெற்கு மூலையில் சௌபாக்கிய கணபதியும் சந்தான கணபதியும் எழுந்தருளியுள்ளனர். அதே பிரகாரத்தில் ப்ராமி. மாஹேஸ்வர. கௌமாரி. வைஷ்ணவி. வராகி. மாஹேந்திரி. சாமுண்டி முதலிய சப்த மாதர் உருவங்கள் இருக்கின்றன. தொடர்ந்து வடமேற்கு மூலையில் பள்ளி கொண்ட பெருமாளும். வடக்குப் பிரகாரத்தில் சண்டிகேசுவரியும் வடகிழக்கு மூலையில் பள்ளியறையும் அமைக்கப்பட்டுள்ளது. அம்பாள் சன்னதிக்கு முன்னுள்ள சுக்கிரவார மண்டபத்தில் கிழக்கு நோக்கி அஷ்டலட்சுமி விக்ரகங்கள் இருக்கின்றன. இந்த உருவங்களுக்கு எதிரே தென்புறம் உள்ள எட்டுத் தூண்களில் துவாரபாலகர். சிவதுர்க்கா. மனோன்மணி. வாகிசுவரி. சேதுபதி கடம்பத் தேவர். புவனேஸ்வரி. அன்னபூர்ணா ஆகியோர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மண்டபத்தைக் கடந்து மேற்கு நோக்கிச் சென்றால் அம்பாள் சன்னதியின் இரு பக்கங்களிலும் முறையே விஜயரகுநாத சேதுபதி. முத்திருளப்ப பிள்ளை. முத்து வடுகநாதத் தேவர். பெரிய திருவுடையாத் தேவர். சேதுபதி காத்தத்தேவர். சின்னனத்தேவர். இரகுநாத சேர்வை. இரண்டு துறவிகள். நரசிம்ம அவதாரம் ஆகிய திருவுருவங்கள் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. இரண்டாம் பிரகாரத்தில் கோபுர வாயிலுக்குள் தென்புறம் நோக்கி வல்லப கணபதியின் திருவுருவம் உள்ளது. இங்கிருந்து மூன்றாம் பிரகாரத்திற்குச் செல்லும் வழியில் இந்தப் பிரகாரத்தை அமைத்த திருமலை ரெகுநாத சேதுபதியின் திருவுருவச் சிலை அவரது மகனாகிய ஒரு சிறுவனுடன் காணப்படுகிறது.

இதனையடுத்து மூன்றாம் பிரகாரத்திற்குள் நுழைந்தால் வடமேற்கு மூலையில் இராமர் இராமலிங்கப் பிரதிஷ்டை

செய்யும் காட்சி இருக்கிறது. உலகப் புகழ் பெற்ற இந்த மூன்றாம் பிரகாரம் சுமார் 4000 அடி நீளம் உள்ளதாகவும் உலக எட்டு அதிசயங்களில் ஒன்றாகவும் உள்ளது.



(இராமேஸ்வரம் திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரம்)

இந்த அற்புத கலைப் படைப்பைப் பூசலார் நாயனார் போன்று தமது கருத்திலே காலமெல்லாம் கற்பனை செய்து கி.பி. 1722-இல் இந்தக் கட்டுமானத்திற்கு அடிக்கல் நாட்டியவர் இராமநாதபுரம் மன்னர் முத்துவிஜய ரெகுநாத சேதுபதி (கி.பி. 1713 – 1725) இந்தக் கட்டுமானத்தை கி.பி. 1772-இல் நிறைவு செய்த மன்னர் முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி (கி.பி.1762 – 1795) இந்த இருபெரும் உத்தமர்களது திருவுருவப் படங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.



(முத்து விஜய ரகுநாத சேதுபதி)



(முத்துராமலிங்க
விஜய ரகுநாத சேதுபதி)

முதற் பிரகாரத்தில் அமைந்துள்ள இராமநாத சுவாமியின் கருவறைக்குப் பின்னால் மேற்குப் புறத்தில் சேதுமாதவர் சன்னதி அமைக்கப்பட்டிருக்கிறது. சுவேத என்ற வட சொல்லுக்கு வெண்மை என்று பொருள். இந்தத் திருமேனியின் வெண்மை நிறத்தை ஒட்டி இப்பெயர் ஏற்ப்பட்டதாகச் சொல்லப்படுகிறது மற்றும் இந்தத் திருமேனியை உடைய சிறு கோயில் தனுஷ்கோடியின் தீர்த்தக் கரையில் அமைந்திருந்ததாகவும் ஏற்கனவே ஏற்பட்ட கடல் கோளினால் இந்தச் சிறுகோயில் அழிந்து விட்டதால் அங்கிருந்த இந்த மூர்த்தியை இராமேஸ்வரம் திருக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் இன்னொரு செய்தி மூலம் அறிகிறோம்.

இராமேஸ்வரம் திருக்கோவில் பற்றி ஆங்கில நாட்டுக் கட்டடக்கலை வல்லுநரும், வரலாற்று அறிஞருமான ஜேம்ஸ் பெர்கூசன் என்பவர் வரைந்த குறிப்புகள் இங்கு கொடுக்கப்படுகிறது.

இவர் கி.பி.1875–ல் இராமேஸ்வரம் திருக்கோவிலுக்கு வருகை தந்து இந்தக் கோயிலின் கட்டுமான அமைப்பு, கோபுரங்களின் அமைப்பு, சிலைகள், கல்வெட்டுகள் ஆகியவற்றை விரிவாக ஆராய்ந்து தமது கருத்தினை ஒரு நூலில் பதிவு செய்துள்ளார்.[1]

அந்தப் பகுதியின் தமிழாக்கம் தான் இந்தக் குறிப்புகள். இவைகளில் சேதுபதி மன்னரது ஆட்சிக்காலம், பெயர்கள் முதலியன தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என்றாலும் இவரது குறிப்புகள் இராமேஸ்வரம் திருக்கோயிலின் வரலாற்றை அறிவதற்கு மிகவும் பொருத்தமானவை. அந்தக் குறிப்புகள் வருமாறு :

"................ அழகான மிக நேர்த்தியான கட்டமைப்பும், எந்தக் குறையும் கூற முடியாத மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட திட்டத்துடன் திராவிடக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பெருமை இராமேஸ்வரம் திருக்கோவிலைச் சாரும்.

வேறு எந்தக் கோயிலிலும் காண முடியாத அளவு மிகச் சிறப்பான கட்டடக் கலையை இங்கு மட்டும் தான் காணமுடியும். தஞ்சைக் கோயிலுடன் இந்தத் திருக்கோயிலை ஒப்பிடுகையில் இக்கோயில் பத்து மடங்கு மிகப் பெரியதாக நுணுக்கமாக, அழகான கட்டிடக் கலையுடன் கூடியது : இக்கோயிலின் ஒவ்வொரு பகுதியும், உள்பக்கத் தோற்றத்திலும், வெளிப்பக்கத் தோற்றத்திலும் வெவ்வேறு விதமான உணர்வுகளைத்

1. James Ferguson : History of India and the great eastern architechers - 1876 - Page 382 - 388

தரக்கூடியது. மேற்கு நுழைவு வாசலில் இருந்து கோயிலின் உள்ளே பார்வையாளர் நுழையும் போது நந்தவனத்தின் வலது கோடியில் அமைக்கப்பட்டுள்ள விமானமான சுந்தமானஸ்வர விமானம் காலத்தாலும், கட்டடக் கலையாலும் மாறுபட்ட வடிவம் கொண்டதால். இக்கோயிலும் மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலைப் போல் கடற்கரையில் அமைந்துள்ள மிகப் பெரிய கோயிலாகும். கடற்காற்றால் வெளித்தோற்றம் அரிக்கப்பட்டுள்ளதால் இக்கோயில் எந்தக் காலத்தைச் சார்ந்தது என்று முடிவு செய்ய இயலவில்லை. இருந்த போதிலும் இக்கோயில் 11, 12ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். இவ்விமானத்தின் அளவு 50 அடி உயரமும், 34 அடி அகலமும் இருக்கலாம். மேலும் பக்கத் தோற்றத்தில் பார்த்தால் இது மிகப் பெரிய கோயிலாகும்.

மைய மண்டபத்தின் முன் உள்ள மேடையில் அமைந்துள்ள மிகப் பெரிய நந்தியை வைத்துப் பார்க்கும்போது இக்கோயில் சிவனுக்காக கட்டப்பட்டது என்றும், பெயரை வைத்துப் பார்க்கும் போது ராமபிரானின் பெருமையை வெளிப்படுத்துவதற்காகக் கட்டப்பட்டது என்றும் உணரலாம்.

வெளிப்பிரகாரம் முழுவதும் 20 அடி உயரமுள்ள சுவர்களால் கட்டப்பட்டு நான்கு திசைகளிலும் நான்கு கோபுரங்கள் கட்டப்பட்டு அவை அனைத்தும் கீழ்மட்டத்தில் இருந்து கருங்கற்களால் கட்டப்பட்டவை என்றும் தெரிய வருகிறது. மேலவாசல் கோபுரம் மட்டும் தான் முழுவதும் கட்டுமானம் முடிக்கப்பட்டு சாந்து பூச்சினால் வடிவமைக்கப்பட்ட சிலைகளை உடையதாய், 78 அடி உயரம் கொண்டதாய் இருக்கிறது. வடக்கு மற்றும் தெற்கு வாசல் கோபுரங்கள் மதில் சுவற்றைக் காட்டிலும் சற்று உயரமாய்க் கற்களால் கட்டப்பட்டு சிதிலமடைந்த நிலையில் இருக்கின்றன.

அந்த இரு கோபுரங்களும் கட்டி முடிக்கப்படாமல் சென்ற நூற்றாண்டிலேயே மகாராஷ்டிரர், முகமதியர்கள் மற்றைய வெளிநாட்டவர்களின் படையெடுப்பால் நிலத்தின் பெருமதிப்பை கருத்தில் கொண்டு ஆலயத்தின் புனிதத் தன்மை ஆகியவற்றை சிதைத்துவிட்டனர். ஆலயத்தின் கிழக்குப் பகுதி இருபெரும் வாசல்களைக் கொண்டது. கிழக்குப் பகுதியில் தெற்கில் உள்ள வாசல் பார்வதி கோவிலுக்குச் செல்லும் பாதையாகும். இது நன்கு கட்டி முடிக்கப்பட்டது. பெரிய பாதையுடன் கிழக்கு வாசல் வெளிப்பிரகார மண்டபத்தைக் கட்டிய பெருமை 1640–ல் இரண்டாம் சடைக்கத் தேவர் தளவாய் சேதுபதி அவர்களைச் சாரும். இதன் நீள அளவு 500 அடிக்கு மேல் 600 அடிக்குள் அளவு கொண்டது. இது புனித பீட்டர் ஆலயத்தைவிட நீளமானது. ஆனால் அவை இரு பக்கமும் திறந்த வெளி மண்டபத்துடன் கூடிய 700 அடி நீளமுள்ள நேர்த்தியான பிரகார மண்டபம் ஆகும். இவ்வளவு பெரிய அளவுள்ள மண்டபம் இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாது. இந்த பிரகாரத்தின் இரு புறத்திலும் திறந்த வெளி மண்டபம் அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் வேலைப் பாடுடைய சிற்பங்கள் ஏதும் இல்லை என்றாலும் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருக்கின்றது.

மைய மண்டபத்திற்குச் செல்லும் பாதையில் உள்ள தூண்களில் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சேதுபதி மன்னரது உருவச் சிலையும் அவற்றிற்கு எதிராக அவர்களது அமைச்சர்களின் சிலைகளும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகள் பல ஆண்டுகளாக வர்ணம் பூசப்படாமல் சிதிலமடைந்து இருக்கின்றன. மண்டபச் சுவர்கள் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், வர்ணங்களால் சுண்ணாம்பு சேர்த்து மேல் வண்ணம் பலமுறை அடுத்தடுத்து பூசப்பட்டிருந்ததால் சிற்ப வேலைகள் மூடப்பட்டும் மறைக்கப்பட்டும் இருக்கின்றன. புனிதமான பொருட்கள் மீது பயனற்ற தன்மை வளர்வதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். இங்கு உயர்ந்த வாழ்க்கைத்தரம்


இல்லை. நல்ல முன்னேற்றமான எண்ணங்கள் இல்லை. ஆச்சாரமான பழக்கவழக்கங்கள் அபச்சாரப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

மைசூர் மாநிலத்தில் உள்ள ஹளெபீடு ஆலயத்தின் கலை நுணுக்கத்தைவிடக் குறைவாக இருந்தாலும், அதன் சுற்றளவு 700 அடிதான். ஆனால் இராமேஸ்வரம் கோயிலில் சுற்றளவோ 4000 அடிக்கு மேலும் இருபுறமும் வளைவடிவாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரகார அமைப்பின் பின்னால் உள்ள தொழிலாளர்களின் உழைப்பு, பொறுப்பு, கலைநுணுக்கம் ஆகியவை இந்தியாவில் உள்ள மற்ற எல்லாக் கோயில்களைக் காட்டிலும் மிகச் சிறந்தது. இப்படிப்பட்ட கோயில்கள் ஒரு சிலவே உள்ளன.

இக்கோவில் சிதிலம் அடைந்துள்ள கல்வெட்டுக்களைக் (50 ஆண்டுகளுக்கு முற்பட்டவை) கொண்டு ஆலயத்தின் முழு வரலாற்றையும் அறிந்து கொள்ள இயலும். மத்திய கருவறையானது கடுமையான சுண்ணாம்புக்கல் கொண்டு 15-ம் நூற்றாண்டைச் சேர்ந்த உடையான் சேதுபதி என்பவரால் கட்டப்பட்ட பெருமை உடையது. மேற்குக் கோபுரமும், அதைச் சார்ந்த திருமதில்களும், 17ம் நூற்றாண்டைச் சார்ந்த சடைக்கத் தேவர் உடையான் என்பவருக்கு பெருமை சேர்க்கக் கூடியவை.

முதற்பிரகாரமானது 190 அடி அகலமும் 307 அடி நீளமும் கொண்டதாலும் இதற்கு அடுத்ததாக உள்ள விமானங்கள், பிரகாரம், மதில் சுவர்கள், அதற்குட்பட்ட கருவறைகள் ஆகியவை சேது மன்னர்களின் பெருமை 17-ம் நூற்றாண்டில் மிகச் சீர் பெற்று ஓங்கி இருந்தபோது மன்னர் திருமலை நாயக்கரால் மதுரை கோபுரக் கட்டிடக் கலைக்கு இணையாக கட்டப்பட்டதாகும். இரண்டாம் பிரகாரமானது 1658-ல் மன்னர் திருமலை ரெகுநாத சேதுபதியால் தெற்குப் பகுதி பாதி பூர்த்தி செய்யப்பட்டது. முத்து விஜய ரெகுநாதத்

தேவர் (கி.பி 1712 – 1725) அவரது தகப்பனார் கடம்பத்தேவர் ஆகியோர் அம்மன் சன்னதியில் முன்புறமுள்ள மண்டபத்தையும், சில சிறிய தேவையான கட்டடங்களையும் கட்டினர். கி.பி.1742ல் முத்து விஜய ரெகுநாத சேதுபதி மூன்றாம் பிரகார வேலையைத் துவங்கினார். மையக் கருவறைகள் 15, 16–ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. மொத்தக் கோவிலின் கட்டுமானமும் முடிவுற 170 ஆண்டுகள் ஆனது. 18–ம் நூற்றாண்டின் இறுதியில் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி ஆட்சிக்காலத்தில் முடிவுற்றது. இந்துக்களின் மிக முக்கியமான புனிதத்தலமான இக்கோயில் இராமநாதபுர அரசர்களுக்குச் சொந்தமான சிறந்த வழிபாட்டுத் தலமாகும்.



(இராமேஸ்வரம் திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரம்)

## 2. மன்னர்கள் திருப்பணிகளும் அறக்கொடைகளும்

இதுவரை இராமேஸ்வரத்தின் புனிதத்தைப் போற்றி இராமநாத சுவாமியை தரிசித்துச் சென்றவர்களையும். இராமநாத சுவாமியின் மீது இயற்றப்பட்ட பலமொழி இலக்கியங்களைப் பற்றியும். இந்தக் கோயிலின் அமைப்பு பற்றிய விவரங்களைப் பார்த்தோம்.

இப்பொழுது அத்தகைய ஏற்றமான நிலைக்கு இந்த ஆலயத்தை உயர்த்தி இந்த ஆலயத்தின் அன்றாட பூஜை. ஆண்டு விழாக்கள். பராமரிப்பு ஆகியவைகளை வழிவழியாக ஆன்மீகத் தொண்டுள்ளத்துடன் தொடர்ந்து பேணி வந்த இராமேஸ்வரம் அதிபதிகளைப் (சேதுபதிகளை) பற்றிப் பார்ப்போம்.

**சேதுபதி மன்னர்களது கட்டுமானத் திருப்பணிகள்**

இராமேஸ்வரம் திருக்கோயில் அனைந்திந்திய அளவில் தொன்மையும் சிறப்புமிக்க ஆலயமாக இன்று கருதப்பட்டு வருகிறது. நான்கு புறங்களும் கடல் நீரினால் சூழப்பட்ட இராமேஸ்வரம் தீவில் இத்தகைய இணையற்ற இறை இல்லத்தை ஏற்படுத்திக் காலமெல்லாம் அருள்மிகு இராமநாதசுவாமிக்கு அடுத்தபடியாக பக்தர்களது உள்ளங்களில் இடம் பெற்று வாழ்த்துப் பெறுபவர்கள் இந்த சேதுநாட்டின் அதிபதிகளான சேது மன்னர்கள் ஆவர்.

கிபி. 7 ஆம் நூற்றாண்டில் ஞான சம்பந்தரும். திருநாவுக்கரசரும் இங்கு வருகை தந்து இறைவனை தேவார

திருப்பதிகங்களில் ஏற்றிப் போற்றிய பொழுது இந்த இறை இல்லம் ஒரு சிறு கற்றளியாக இருந்தது எனத் தெரிகிறது. ஆனால் சேது மன்னர்கள் இங்கு தங்களது கட்டுமானத் திருப்பணியை முதன் முதலில் தொடங்கியதை கிபி. 1414. 1434 ஆம் வருடத்திய சேது மன்னர்களது கட்டுமானங்களைக் குறிப்பிடுகின்றன.

சின்ன உடையான் சேதுபதி என்பவரும் அடுத்து உடையான் சேதுபதி என்பவரும் இந்தத் திருக்கோயிலின் மேலக் கோபுரத்தையும் திருச்சுற்று மதிலையும் கட்டி முடித்தனர் என்பதே அந்தக் கல்வெட்டுச் செய்திகளின் அடக்கம் ஆகும். தொடர்ந்து கி.பி. 1622க்கும் 1630 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்த கூத்தன் சேதுபதி இராமேஸ்வரம் கோயிலின் கருவறையை ஒட்டிய மகாமண்டபத்தையும். அதனை அடுத்து முதலாவது பிரகாரத்தையும் நிர்மாணித்தார்.

இந்தத் திருப்பணிகளை உறுதிப்படுத்தும் இந்த மன்னரது கிபி. 1623 ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு முதலாவது பிரகாரத்தின் மேற்குச் சுவற்றில் அமைந்துள்ளது. இந்த மன்னரை அடுத்து சேதுநாட்டின் அரியணையில் அமர்ந்த இரண்டாவது சடைக்கன் என்ற தளவாய் சேதுபதி இந்தக் கோயிலின் நுழைவாயிலில் இராஜகோபுரம் இல்லாத குறையை நீக்க அங்கு எழுநிலை கோபுரம் ஒன்றை அமைக்க அடிக்கல் நாட்டினார். ஆனால் கிபி 1639ல் சேதுநாட்டின் மீது மிகப்பெரிய படையெடுப்பை மேற்கொண்ட மதுரை திருமலை நாயக்க மன்னரது பேராசையினால் தடைப்பட்டது. கிபி 1645 முதல் கிபி 1676 வரை சேதுபதி மன்னராக இருந்த ரெகுனாத திருமலை சேதுபதி இந்தக் கோயிலின் இரண்டாவது பிரகாரத்தையும் மைய மண்டபத்தையும் நிர்மாணித்து முடித்தார். இந்தப் பணிகளை தொடர்ந்து கண்காணிப்பதற் காக இந்த மன்னர் இராமேஸ்வரம் நகரில் பலகாலம் தங்கி இருந்தார். அவரது மாளிகையாக இருந்த இந்தக் கட்டுமானம்

இன்று அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியாக இருந்து வருகிறது.

இந்த மன்னரை அடுத்து கிபி 1713 இல் சேதுபதி மன்னரான திருவுடையாத் தேவர் என்ற முத்துவிஜய ரெகுனாத சேதுபதி இராமேஸ்வரம் திருக்கோயிலின் மூன்றாம் பிரகார கட்டுமானத்தைத் தொடக்கியவர் ஆவார். இதே மன்னர் அம்மன் சன்னதிக்கு எதிரேயுள்ள அணுக்க மண்டபத்தையும் நிர்மாணித்தார். இவரது ஆட்சிக் காலம் கிபி 1725 இல் முடிவுற்றதால் இந்த உலகப் புகழ் பெற்ற பிரகாரம் சுமார் 45 ஆண்டுகளுக்குப் பிறகு கிபி. 1772-ல் முத்து இராமலிங்க விஜய ரெகுனாத சேதுபதி என்பவரால் நிறைவு செய்யப்பட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில். கி.பி. 1728 முதல் கி.பி.1735 வரை மன்னராக இருந்த குமார முத்துவிஜய ரெகுனாத சேதுபதி மூன்றாவது பிரகாரத்தின் வடக்கு - கிழக்கு மூலைகள் சந்திக்கின்ற இடத்தில் தில்லைக் கூத்தரான நடராஜ பெருமானுக்கு சபாபதி கோயில் என்ற அமைப்பினை நிர்மாணித்தார்.

இவ்விதம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கட்டுமானங் களைத் தவிர இன்னும் கோயிலின் மையப் பகுதியில் உள்ள சேது மாதவத் திர்த்தம் தெப்பக்குளம் போன்ற பல அமைப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை இராமேஸ்வரம் திருக்கோயிலினை நூற்றாண்டு -கள் தோறும் சேதுபதி மன்னர்கள் வழி வழியாக கட்டுமானங்கள். நித்திய கட்டளைகள். ஆண்டு விழாக்கள் என்பன போன்ற பல திருப்பணிகளுக்குத் தங்களது பொருளையும். பொன்னான நேரத்தையும் செலவு செய்து வரலாற்றில் பொன்றாத புகழிடத்தைப் பெற்றுள்ளனர். தொடர்ந்து இறை உணர்வுடன் இந்தக் கோயில் திருப்பணிகளில்

ஈடுபட்டுத் தங்களது பொருளை இறை பணியில் ஈடுபடுத்தி திருக்கோயிலின் புகழுக்குப் பெருமை சேர்த்த சிலரையும் இங்குத் தெரிந்து கொள்வது பொருத்தமானதாக இருக்கும்.

### சாளுக்கிய மன்னரது திருப்பணி

கி.பி. 10–ம் நூற்றாண்டில் இந்தப் பகுதிக்கு வருகை தந்த சாளுக்கிய மன்னனான மூன்றாவது கிருஷ்ணன் என்பவர் தமது திக் விஜயத்தின் நினைவாக சேது மூலத்தில் (தனுஷ்கோடியில்) ஒரு வெற்றித் தூணையும். இராமேஸ்வரம் கோயில் வளாகத்தில் கண்ட மார்த்தாண்ட ஈஸ்வரருக்கு ஒரு கோயிலும் அமைத்ததாக அவரது ஹோல்காபூர் கல்வெட்டில் இருந்து தெரிய வருகிறது. ஆனால் அத்தகைய கோயிலின் சின்னம் எதுவும் இப்பொழுது காணத்தக்கதாக இல்லை.

### நாகூர் கோமுட்டி வணிகரது திருப்பணி

அடுத்து நமக்கு கிடைக்கும் தகவல் கி.பி.15ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாகூரைச் சார்ந்த கோமுட்டி வணிகர் ஒருவர் இராமேஸ்வரம் திருக்கோயிலின் மேற்கு கோபுர வாசலையும். திருச்சுற்று மதிலையும் அமைப்பதற்கு உடையான் கூத்தன் சேதுபதிக்கு உதவினார் என்பது கல்வெட்டுச் செய்தியாகும். இத்தகு திருப்பணிகளில் மதுரையில் மகாமண்டல சுவராகவும் விஜயநகர பேரரசின் பிரதிநிதி ஆகவும் மதுரையில் ஆட்சி புரிந்த விஸ்வநாத நாயக்கரும் இங்கு சில திருப்பணிகளை மேற்கொண்டு இருக்க வேண்டும் என நம்பப்பட்டு வருகிறது. அவைகளைப் பற்றிய விவரங்கள் நமக்கு கிடைக்கப் பெறவில்லை. ஆயினும் அவரது திருவுருவச் சிலை சுவாமி சன்னதியில் நிறுவப்பட்டுள்ளது என்பது இதனை உறுதிப்படுத்துகிறது. கடந்த கால வரலாற்று ஏடுகளில் இராமேஸ்வரம் திருக்கோயிலின் திருப்பணிகளில் ஈடுபட்டுள்ள இவர்களைத் தவிர வேறு செய்திகள் எதுவும் கிடைக்கப்

பெறவில்லை என்றாலும் இந்தக் கோயிலில் உள்ள ஸ்படிக லிங்கம். கண்ணைப்பறிக்கும் கலைநயமான பெரிய நந்தி உருவம். நாகப்பாம்புகளின் வடிவங்களும் பொறிக்கப்பட்ட வெண்கல ஆலய மணி ஆகிய சில அரிய பொருள்களிலிருந்து இறையுணர்வு கொண்ட வேறு சில மக்களும் இந்தக் கோயிலின் திருப்பணிகளில் பங்கு பெற்றிருக்க வேண்டும் என்பது துணிவு.

**விஜய நகர மன்னர் : மண்டலேசுவரர் திருப்பணி**

கி.பி.1378 வரை நீடித்த மதுரை சுல்தான்களின் ஆட்சியினை நிலை குலையச் செய்த வடுகர்களது ஆட்சி மதுரையில் கி.பி.1736 வரை தொடர்ந்து வந்தது. இந்தக் காலத்தில் அவர்கள் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்துள்ளதைக் கல்வெட்டுச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

1) கி.பி.1400 வரை மதுரை மண்டலேசுவரரான இரண்டாம் அரிகரரின் மகன் விருப்பண்ணவுடையார் இராமேஸ்வரம் திருக்கோயிலில் துலாபாரம் நடத்தி அவரது எடைக்கு நிகராக வைக்கப்பட்ட பொன்னை சுவாமிக்குத் தானம் அளித்தார்.[1]

2) மகா மண்டலேசுவரர் கோப்பதிப்பா இராமேஸ்வரம் திருக்கோயில் அம்மன் சன்னதியிலுள்ள கொடிக்கம்பத்தை தாமிரத் தகட்டினால் போர்த்தினார் என்பதை கி.பி. 1468 ஆம் ஆண்டு தமிழ் கிரந்த கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது.[2]

3) விஜய நகர மன்னர் கிருஷ்ண தேவராயர் கி.பி.1523ல் இராமேஸ்வரத்திற்கும் இராமசேதுவிற்கும் வருகை தந்து புனித நீராடித் திருக்கோயிலில் மூன்று துலாபாரங்களை நடத்தியும்

---

1) Ephicrapia India VIII, Pages 298 - 302
2) ARE 89/1905

அம்மனுக்கு நவரத்தினங்கள் பதித்த ஆபரணங்களையும் தானமாக வழங்கினார்.[1]

4) மற்றொரு மண்டலேசுவரரான நரச நாயக்கர் இராமேஸ்வரம் திருக்கோயிலில் சோடச மகா தானங்களைச் செய்தார் என்ற செய்திகளை கி.பி.1528 உதயம் பாக்கம் செப்பேடு மூலம் தெரிய வருகிறது.[2]

5) மண்டலேசுவரர் அச்சுதராய தும்மிச்சி நாயக்கர் கி.பி.1539ல் மும்முடிச்சாத்தனான சேதுக்கு வாய்த்த நல்லூரை இராமேஸ்வரம் திருக்கோயிலுக்குத் தானம் வழங்கியதை கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கிறது.[3]

6) தஞ்சை மன்னரான அச்சுத நாயக்கர் கி.பி.1595ல் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு பரையாளத்தூர், சோழதேயபுரம், இராமநாத நல்லூர், சட்டம்பட்டி ஆகிய ஊர்களைத் தானம் வழங்கியதைச் செப்பேட்டுச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.[4]

7) மதுரை மன்னர் முத்து வீரப்ப நாயக்கர் கி.பி.1581ல் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு 700 பொன் வழங்கியதை மற்றொரு கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கிறது.[5]

8) அதே மன்னர் சில நிலங்களை கி.பி.1582ல் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்குத் தானமாக அளித்ததைத் கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கிறது.[6]

---

1) Ibid P-179 Fn
2) EI., XIV, (1917 - 18) Page - 174
3) ARE 198 / 1943 - 44
4) தஞ்சை சரஸ்வதி மஹால் செப்பேடுகள்
5) ARE 340 / 1918
6) ARE 97 / 1903

## இலங்கை நாட்டு மன்னரது திருப்பணி

கி.பி. 12ம் நூற்றாண்டில் தமிழகத்தில் நிலவிய அரசியல் பூசல்கள் பாண்டிய அரசின் அரசு கட்டிலுக்கு ஏற்பட்ட போட்டி ஆகியவைகளினால் கி.பி. 1169–ல் இலங்கைப் படைகள் முதன் முதலாக இராமேஸ்வரம் தீவில் கரை இறங்கின. தொடர்ந்து மேற்கேயும், வடகிழக்கேயும் நடைபெற்ற பல போர்களில் பாண்டியரது இளவல் வீரபாண்டியனுக்காகப் போரிட்டார். இந்தப் படைகள் சோழ நாட்டின் தென் பகுதியான பொன்னமராவதி வரையும், பாண்டிய நாட்டின் தென் பகுதியான எதிர்க்கோட்டை வரையிலும் பரவி நின்ற வரலாற்றை மகாவம்சம் என்ற இலங்கை வரலாற்று நூல் விவரிக்கின்றது. சுருக்கமாகச் சொல்லப் போனால் இராமேஸ்வரம் தீவு முழுவதும் கி.பி.1169 முதல் கி.பி. 1189 வரை இலங்கை மன்னரது ஆக்கிரமிப்பில் இருந்து வந்தது.

இந்தக் காலக்கட்டத்தில் இலங்கை மன்னரான பராக்கிரம பாகுவின் மருகரும், கலிங்க நாட்டின் இளவரசனுமான நிசங்கமல்லன் சில காலம் இராமேஸ்வரத்தில் தங்கி இருந்தார். அப்பொழுது இன்றைய இராமேஸ்வரம் கோயில் வளாகத்தில் நிச்சங்கேசுரவருக்கு ஒரு கோயில் எழுப்பித்ததாக இலங்கை நாட்டின் தம்போலா என்ற இடத்தில் உள்ள சிங்கள மொழிக் கல்வெட்டும் இராமேஸ்வரம் திருக்கோயிலின் கொடிமரத்தின் அடியில் பொறிக்கப்பட்டுள்ள பாலி மொழிக் கல்வெட்டும் தெரிவிக்கின்றன. இந்தக் கட்டுமானமும் இன்று இல்லை.

## திருவிதாங்கூர் மன்னர் திருப்பணி

கி.பி. 1792–இல் இராமேஸ்வரத்திற்குச் சேதுயாத்திரையாக வந்த திருவிதாங்கூர் மன்னர் சில நாட்கள் இராமேஸ்வரத்தில் தங்கியிருந்த பொழுது பயணிகளது பயன்பாட்டிற்காக இராமேஸ்வரத்தில் அன்னசத்திரம் ஒன்றினை அமைத்துச்

செயல்பட ஆவன செய்தார். இந்தக் கட்டுமானம் இன்றைய இராமேஸ்வரம் நகரின் நடுத்தெருவின் மேற்குக் கோடியும் வர்த்தகன் வீதியின் வடக்குக் கோடியும் சந்திக்கும் இடத்தில் அமைக்கப்பட்டு மலையாள சத்திரம் எனப் பலவருடங்கள் அழைக்கப்பட்டு வந்தது. தற்பொழுது இந்தக் கட்டுமானம் அங்கு இல்லை.

இதே மன்னர் இராமநாத சுவாமியின் காலை பூஜை சிறப்பாக நடைபெறுவதற்காகச் சந்தி ஒன்றையும் ஏற்படுத்தி னார். இன்றும் அந்த சிறப்பு வழிபாடு உதய மார்த்தாண்ட சந்தி என்ற பெயரில் நடைபெற்று வருகிறது.

## 3) நகராத்தார்கள் திருப்பணிகள்

பிந்தைய காலங்களில் அதாவது கி.பி.18. 19–ம் நூற்றாண்டுகளில் சேது நாட்டுக் குடிகளான நகரத்தார்கள் என வழங்கப்பெறும் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் இந்தக் கோவில் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பல செய்திகள் கிடைத்துள்ளன.

சேது நாட்டின் வட பகுதியான புறமலை நாடு. அதளையூர் நாடு. சூரக்குடி நாடு. கா நாடு. கோ நாடு. பூங்குன்ற நாடு. இரணியூர் நாடு. கல்வாசல் நாடு. பாலைநாடு ஆகிய பகுதிகளில் குடியிருந்து வந்த தொன்மைக் குடிகளான வணிகர்கள். செட்டியார்கள் என அழைக்கப்பட்டு வந்தனர் இவர்கள் சங்க காலத்தில் சோழ நாட்டின் முட்டாக் சிறப்புடன் விளங்கிய காவிரிப் பூம்பட்டணத்தின் குடிகளாக இருந்து அங்கு ஏற்பட்ட கடல்கோளினால் குடிபெயர்ந்து சோழ நாட்டின் தென்பகுதியான சேது நாட்டில் கி.பி. 4 அல்லது 5–ம் நூற்றாண்டுகளில் குடியேறியவர்களாகக் கருதப்படுகின்றனர் இவர்களில் இன்றைய திருப்பத்தூர் வட்டத்தின் வடகிழக்கே உள்ள இளையாத்த குடியில் முதலில் தங்கியிருந்து பின்னர் பல திட்டுகளிலும் ஒன்பது பிரிவினராகப் பிரிந்து சென்று ஆங்காங்கு கோவில்களையும். குளங்களையும் அமைத்துக் காடு திருத்திக் கழனிகள் செய்து வீடு அமைத்து வாணிகத்தில் வளர்ந்தோங்கி வாழ்ந்தனர். அந்தப் பிரிவினர் பிள்ளையார் பட்டி. வைரவன் பட்டி. மாத்தூர். சூரைக்குடி. வேலங்குடி நேமம். இலுப்பக்குடி. இளையாத்தக்குடி. இரணியூர் ஆகிய ஊர்களில் அமைத்த திருக்கோவில்களை முதன்மையாகச்

கொண்டு தங்களது குடிவழிகளைக் கணக்கிட்டு உறவு கொண்டு வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்தின் பல ஊர்களில் வணிகத்தில் ஈடுபட்டுள்ள குழுக்கள் தங்களது பெயர் விகுதிகளாகச் செட்டி என்ற அடைமொழியைத் தாங்கி வருபவர்கள் என்று, தங்களை வேற்றுமைப்படுத்தி இனங்காட்டுவதற்காக இந்த மக்கள் பொதுவாகத் தங்களை நகரத்தார் என அழைத்து வருகின்றனர். நகரம் அல்லது நிகமம் என்ற வேர்ச்சொல்லியிருந்து இந்த வழக்கு ஏற்பட்டு இருத்தல் வேண்டும். கி.பி.10, 12-ம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் நகரத்தோம் என்ற சொல் பயின்று வருவதால் இவர்கள் அந்த பிரிவினரின் வழியினர் என்பது பொருத்தமாக உள்ளது.

தொடக்கத்தில், குறிப்பாக ஆங்கிலேயரது ஆட்சி இந்தியாவிலும், அண்மையில் உள்ள பர்மா, மலேசியாவிலும், கி.பி.18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்டதோடு ஆங்கிலேயர் மேற்கொண்ட பல படையெடுப்புகளுக்குத் தேவையான அரிசி முதலிய உணவு வகைகளையும், பெருமளவில் வழங்கிய ஒப்பந்தக்காரர்களாகச் செயல்பட்டு பெரும் பொருள் ஈட்டியதுடன், பர்மா மலேசியா நாடுகளில் வட்டிக் கடைகள் அமைத்துச் சிறு விவசாயிகளுக்கு முன்பணம் வழங்கிப் பெருத்த ஆதாயம் சம்பாதித்தனர். இத்தகைய வட்டி ஆதாயங்களைக் கொண்டு அவர்களது குடியிருப்புகளில் மிகச் சிறப்பான வகையில் அழகிய மாட மாளிகைகளை அமைத்து வாழ்ந்து வந்ததுடன் இறை உணர்வும், தர்ம சிந்தையும், மிக்கவர்களாகப் பல அறப்பணிகளையும் மேற்கொண்டு வந்தனர். அவர்களில் ஒரு பகுதியினர் இராமேஸ்வரத்தில் பல திருப்பணிகளை இயற்றியுள்ளனர்.


இராமேஸ்வரம் திருக்கோயிலின் முதலாவது பிரகாரம் எப்பொழுது யாரால் அமைக்கப்பட்டது என்ற தெளிவான விவரங்கள் கோயில் ஒழுகு கிடைக்கப்பெறவில்லை என்றாலும், கி.பி.1622 – 1630 வரை சேதுநாட்டின் அதிபதியாக விளங்கிய

கூத்தன் சேதுபதியினால் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என நம்பப்படுகிறது. இந்தத் திருக்கோவில் கட்டுமானங்கள் கால நீட்சியாலும். கடலிலிருந்து வீசுகின்ற உப்பங் காற்றினாலும் சிதிலமடைந்து வந்துள்ளன. முதலாவது பிரகாரமும். மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்ததால் இங்கே தங்களது திருப்பணிகளை நகரத்தார்கள் தொடங்கினார்கள். இந்தத் திருப்பணியை முன்னின்று நடத்தியவர்கள் தேவகோட்டை ஜமீன்தார் என வழங்கப்பட்டு வந்த தேவகோட்டை க.அழ.அரு.ஏ.எல்.ஏ.ஆர். குடும்பத்தினர் ஆவர். 19–ம் நூற்றாண்டில் தேவகோட்டை நகரத்தார்களில் செல்வபலத்திலும். சிவ பக்தியிலும் சிறந்து விளங்கியவர்கள் இந்தக் குடும்பத்தினர். அப்போது சேது நாட்டின் மன்னராயிருந்த இளைஞர் பாஸ்கர சேதுபதிக்கும் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த இராமசாமி செட்டியாருக்கும் ஏற்பட்ட அசாதாரண தொடர்புகள் நாளடைவில் மிகச் சிறந்த நட்பிற்கு இலக்கணமாகவும் அமைந்துவிட்டது. மிகச் சிறந்த வள்ளலாக விளங்கிய பாஸ்கர சேதுபதி மன்னருக்குப் பொருளாதாரத் தட்டுப்பாடுகள் ஏற்படும் பொழுதெல்லாம் சென்னை பவளக்காரத் தெருவில் இருந்த இராமசாமி செட்டியாரது வணிக நிலையம் கைகொடுத்து வந்தது. மேலும் இந்தத் தொடர்புகள் நன்கு வலுப்பெற்ற குடும்ப உறவுகளாக மாறின. மன்னரது கி.பி.1893–ம் ஆண்டு நாட் குறிப்புகளில் இராமசாமி செட்டியார் அவர்களைப் பற்றியும். அவரது மாளிகையில் நடைபெற்ற பியானோ இசை நிகழ்ச்சி ஒன்றையும் மன்னர் அவர்கள் குறிப்பிட்டு வரைந்துள்ளார்.

மேலும் இராமநாதபுரம் சீமையின் வடகிழக்குப் பகுதியான இறவிசேரி மாகாணத்தை இராமநாதபுரம் சமஸ்தானத்தின் குத்தகைதாரராக சில காலம் செட்டியார் அவர்கள் நிர்வகித்து வந்ததால் நகரத்தார்களுக்கிடையே அவர்களுக்கு ஜமீன்தார் என்ற பட்டம் கிடைக்கப் பெற்றது. பிற் காலத்தில் கானாடு காத்தான் மற்றும் நான்கு ஊர்களைக்

கொண்ட செட்டி நாட்டிற்கு அண்ணாமலைச் செட்டியார். செட்டிநாடு அரசர் எனவும். அவரது உறவினரான பெத்தாட்சி செட்டியார் மருங்காபுரி ஜமீன்தார் என வழங்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் கோயில் திருப்பணிக்கு அன்றைய நகரத்தார் மக்கள் அன்புடன் அளித்த 5 லட்சம் ரூபாய்களுடன் தேவகோட்டை ஜமீன்தார் இராமசாமி செட்டியார் தமது சொந்த நன்கொடை தொகையான ரூ.2/– லட்சத்தையும் சேர்ந்து இந்தத் திருப்பணிகளுக்கு செலவழிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்தக் கோயிலில் முதலாவது பிரகாரம் கருங்கல் தூண்களுடன் செம்மை செய்யப்பட்டு அம்பாள் சன்னதி மண்டபமும் அழகுற அமைக்கப்பட்டது. இன்னும் தளவாய் சடைக்கன் சேதுபதி மன்னரால் தொடங்கப் பெற்று ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளாக நிறைவு செய்யப்படாமல் இருந்த திருக்கோயிலின் கிழக்கே உள்ள இராஜ கோபுரத்தின் மேற்பகுதியும். திருப்பணி செய்யப்பட்டது.



மேலே கண்ட இராமேஸ்வரம் திருக்கோயிலின் கிழக்கே உள்ள இராஜகோபுரம் ஏறத்தாழ 300 ஆண்டுகளாக நிறைவு பெறாமல் இருந்ததை நிறைவு செய்து திருக்கோயிலின் முதலாவது குடமுழுக்கினை செய்து முடித்த வரலாற்று நாயகர்கள்



மன்னர் பாஸ்கர சேதுபதி



தேவகோட்டை ஜமீன்தார் இராமசாமி செட்டியார்

மேலும் ஏ.எல்.ஏ.ஆர். குடும்பத்தினரும் ஏ.எல்.ஏ.ஆர்.பி. குடும்பத்தினரும் ஓ.ஆர்.எம்.எம்.எஸ். குடும்பத்தினரும் இந்தத் திருப்பணிகளில் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இயல்பாகவே இறை உணர்வு மிக்கவர்களாக இந்த நகரத்தார்கள் காசி முதல் கன்னியாகுமரி வரையாக திருத்தலங்களில் ஆன்மீக உள்ளம் படைத்த மக்களுக்காகத் தங்கும் விடுதிகளையும் அன்ன சத்திரங்களையும் தொடர்ந்து நடத்தி வருவது போன்று இராமேஸ்வரம் தளத்திலும் அடுத்துள்ள தனுஷ்கோடியிலும் அன்னசத்திரங்களை நிறுவி நடத்தி வருகின்றனர். இவை தவிர நகரத்தார்களின் இராமேஸ்வரம் கோயில் திருப்பணிகளாகக் கீழ்க்கண்டவை களையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

### 1) துவாதசி நாள் அன்னதானம்

பிரதி மாதமும், துவாதசி நாள் அன்று கோட்டையூர், வெ.சி.அ.ராம குடும்பத்தினரும் கீழப்பூங்குடி கூ.க.வயி. குடும்பத்தாரும் அன்னதானம் செய்து வருகின்றனர்.

### 2) நந்தவனத் திருப்பணி

இராமேஸ்வரம் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இராமநாத சுவாமி பர்வத வர்த்தினி அம்பாள் ஆகியோரது அன்றாடபூஜைகளுக்கும் விழாக்களுக்கும் உரிய மலர்களை வழங்குவதற்காக நகரத்தார்கள் இங்கு மூன்று நந்தவனங்களை ஏற்படுத்திப் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். முதலாவது நந்தவனம் இராமேஸ்வரம் கிழக்குத் தெருவில் கொத்தமங்கலம் பா.சி.கா. குடும்பத்தாரும், தெற்குத் தெருவில் உள்ள நந்தவனம் கொத்தமங்கலம் சி.வி.சி. சின்னக் கருப்பச் செட்டியார் குடும்பத்தாரும் நிர்வகித்து வருகின்றனர். மூன்றாவது பெரிய நந்தவனம் வடக்குத் தெருவில் சோழபுரம் [illegible] அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் குடும்பத்தா

ரால் நிர்வகித்து வரப்படுகிறது. சுமார் ஆறு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இந்த நந்தவனத்தில் பூத்துக் குலுங்கும் புதிய மலர்கள் சுவாமிக்கும், அம்பாளுக்கும் பயன்படுவதுடன், திருக்கோயிலின் நடுப்பகுதியில் உள்ள சேதுமாதவப் பெருமாள் ஆலயத்திற்கும் சாயரட்சைப் பூசைக்கு பெரிய மாலையும், வட மேற்கே உள்ள அனுமன் ஆலயத்திற்கு சேதுமாதவருக்கு ஒவ்வொரு நாளும் மூன்று காலங்களுக்கு துளசி மாலையும், இந்த நந்தவன மலர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றும் திருவிழாக் காலங்களில் உற்சவ மூர்த்திகளின் அலங்காரத்திற்கும், இந்த நந்தவனத்தின் மலர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் திருப்பணிகள் செவ்வனே நடைபெறுவதற்காக ஆறு ஊழியர்கள் பணியில் அமர்த்தப்பட்டு உள்ளனர். இந்த ஊழியங்களைப் பல நூற்றாண்டு காலமாக தொடர்ந்து செய்து வருகின்ற நகரத்தார்களின் இந்தப் பணியை ஆன்மீக உலகம் போற்றாமல் இருக்க முடியாது.

# திருவிழாக்களும் நகரத்தார்களும்

இராமேஸ்வரம் திருக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடி, தை, மாசி மாதங்களில் சிறப்பான முறையில் திருவிழாக்கள் பல ஆண்டுகளாக நடைபெறுவதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இந்த விழாக்களின் போது நகரத்தார்களின் இதயப் பூர்வமான தொண்டும் நடைபெற்று வருவதையும் இங்குக் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். ஆடித் திருவிழாவின் போது வெள்ளி ரத மண்டகப் படியை கண்டனூர் எஸ்.என்.வி.ஆர்.எஸ். வீரப்ப செட்டியார் குடும்பத்தார் பெரும் பொருட் செலவில் நடத்தி வருகிறார்கள். ஆடித்திருவிழாவின் போது கண்டனூர் அ.பெ.சி.த.நா. ராமநாதன் செட்டியார் குடும்பத்தாரும் சிறப்பான நிகழ்ச்சிகளை மேற்கொண்டு நடத்துகிறார்கள். ஒவ்வொரு நாளும் திருக்கோயிலில் இறைவன் இறைவிக்குக் கங்காபிஷேகம் நடைபெறுவதற்கு இராமநாதன் செட்டியார் குடும்பத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

மாசி மாதத்தில் மகா சிவராத்திரி விழா இராமேஸ்வரம் திருக்கோவிலில் மிகவும் சிறப்பானதாக நடைபெறுகின்றது. இந்த விழாவினைக் கண்டு களிக்க வட மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் இங்கு வருகின்றனர். இந்த விழாவின் சிறப்பு அம்சங்களாக ருத்ரா அபிஷேகம், சகஸ்ர நாம அர்ச்சனை, பஞ்சாமிர்த அபிஷேகம், உப அபிஷேகம் ஆகியன நடைபெற்று வருகின்றன. இந்தத் திருத்தொண்டினைக் கோட்டையூர் அ.க.அ.சித.வெ.சித. அழகப்பன் செட்டியார் குடும்பத்தினர் சிறப்பாகச் செய்து வருகின்றனர். சுவாமிக்கு

நடைபெறும் விபூதி அபிஷேகத்தைத் தேவகோட்டை அழ.அரு. குடும்பத்தார் மேற்கொண்டு நடத்தி வருகின்றனர்.

### சதாவிருத்திப் பணி

இந்தப் பணியினை நூறு ஆண்டுகளுக்கு மேலாகச் கண்டனூர் சி.ராம சொக்கலிங்க செட்டியார் குடும்பத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பணிக்கு இராமதீர்த்தத்திற்கு அருகில் சுமார் ஏழு ஏக்கர் நிலத்தில் இதற்கான கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இராம தீர்த்தத்திற்கு சுவாமி எழுந்தருளும்போது வருகின்ற வேத பாராயணிகளுக்கும், நகரத்தார்களுக்கும் இந்தச் சத்திரத்தில் அன்னம் பாலிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும் பிற நாட்களில் இராமேஸ்வரம் வருகின்ற வடநாட்டு சன்னியாசிகளுக்குப் போதுமான கோதுமை, நெய், மிளகாய், உப்பு முதலானவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

இத்தகைய சீரிய திருப்பணிகளால் செட்டிநாட்டு நகரத்தார்கள் தங்கள் பாரம்பரியப் பண்பான பக்திக்கும், இறைத் தொண்டிற்கும் ஏற்ற எடுத்துக்காட்டுகளாக விளங்கி வருகின்றனர். இரண்டாவது உலகப் போரின் அழிவினால் நமது நாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில், நகரத்தார் சமூகத்தினரிடையே வாழ்க்கை நிலைகளில் பயங்கரமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ள பொழுதிலும் இம் மக்கள் தங்களது உயிருக்கு உறுதுணையாக அமையும் ஆன்மீகத் தொண்டுகளைச் சிறப்பாகத் தொடர்ந்து வருவது பாராட்டிற் குரியது ஆகும்.

# இயல் - III

# கோயில் நடைமுறைகள்

## 1) தினசரி நடைமுறைகள்

இராமேசுவரம் திருக்கோயிலில் நாள்தோறும் வைகறையில் இருந்து நடுநிசி வரை, பூஜை, அபிஷேகம், நைவேத்தியம், தீபம், தூபம், எனப்பல வகைப்பட்ட சடங்குகள் ஆகம முறைப்படி நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக இந்தக் கோவிலில் இந்த சேவைகளில் ஈடுபட்டு இருப்பவர்கள் மராட்டா குருக்கள் என வழங்கப்படும் மகாராஷ்ட்ரா பிராமணர்கள் ஸ்தானிகம், பூஜை, பரிசாரகம் என்ற முதன்மையான மூன்று சேவைகளில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவர்கள் தாம். இந்தக் குருக்கள் மார்களது கோயில் நடைமுறைகள் வடமாநிலங்களில் உள்ள கோவில்களில் அனுசரிக்கப்படு பவைகளில் இருந்து வேறானதாக இருந்து வருகின்றன. பொதுவாகத் திருக்கோயிலில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகளை அங்கு பணியாற்றும் பணியாளர்கள் குறித்து வைத்து வந்தனர். இதனைக் கொண்டு கோவில் பற்றிய அனைத்து விபரங்களையும் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு இருந்தது. இந்தப் பதிவுப் புத்தகம் ஒழுகு அல்லது ஒழுகுக் கணக்கு என அழைக்கப்பட்டு வந்தது. தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் உள்ள புராதான கோயில்களான காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் கைலாசநாதர், திருக்கோயில், சிதம்பரம் நடராஜ பெருமாள் ஆலயம், ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர் திருக்கோவில்

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் ஆகிய ஆலயங்களில் இந்த ஒழுகுகள் பல நூற்றாண்டுகளாக பராமரிக்கப்பட்டு வந்தன. இந்த ஒழுகுக் கணக்குகள் சேதுபதி மன்னர்களது ஆட்சியில் அமைந்த இராமேஸ்வரம், திருப்புல்லாணி, திருஉத்திரகோசமங்கை, திருவாடானை திருக்கோஷ்ட்டியூர், காளையார்கோவில், திருக்கொடுங்குன்றம், ஆகிய ஆலயங்களிலும் கி.பி.19ம் நூற்றாண்டு வரை பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால் அவைகளில் ஒன்று கூட இன்று நமக்கு கிடைப்பதாக இல்லை.

இராமேஸ்வரம் திருக்கோயிலைப் பொறுத்த மட்டில் இந்த ஒழுகு கிடைப்பதற்கு அரிதாகிவிட்டதால் இந்தக் கோயிலின் பூசனை விழாக்களை கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மற்றும் சில ஆவணங்கள் ஆகியவைகளைக் கொண்டு இங்கு தொகுக்கப் பட்டுள்ளது.

சுமார் நூறாண்டுகளுக்கு முன்னர் இந்தக் கோவிலில் வைகறையில் தொடங்கி நடைபெற்ற ஒருநாள் நிகழ்ச்சி விவரங்களைக் கொண்ட ஆவணம் ஒன்று கூறுகிறது.[1]

இதன் சுருக்கத்தை இப்பொழுது பார்ப்போம். காலை விடியல் தொடங்கும் நாலரை மணி அளவில் பண்டாரம் ஒருவர் அனுமார் ஆலயத்தின் கிழக்கு முகப்பிற்கு வந்து மூன்று முறை சங்கை ஊதுகிறார். பிறகு அங்கிருந்து கிழக்கு வாசலுக்கும் மேற்கு வாசலுக்கும் சென்று தொடர்ந்து சேகண்டியை ஒலிக்கிறார். சில சமயங்களில் ஆலயத்திற்கு வெளியிலும் கடற்கரைக்கு சென்று வருவதும் உண்டு. அப்பொழுது மேளக்காரர்கள், இசைக் குழுவினர் வருகின்றனர். நகரா, தவில், நாதசுரம், ஒத்து, கைத்தாளம், எக்காளம் ஆகியவைகளை அனுமார் கோவில் சன்னதியில் இசைக்கின்றனர். கோயில் ஸ்தானிகர், பட்டர் குருக்கள், சதிர்க்காரி (முறைகாரி) கோயில் சிப்பந்திகள் ஆகியோர்களும்

வந்து சேருகின்றனர். பிராமணப் பெண்களைப் போன்று சேலையுடுத்தி கழுத்தில் ருத்திராட்ச மாலை அணிந்து. நீராடிய கூந்தலை வாராமல் சேர்ந்து முடித்த கொண்டையுடன் அந்த சதிர்க்காரி காணப்படுகிறாள். அனைவரும் கோயில் கதவுகள். அறைக்கதவுகள். சமையலறைக் கதவுகள். கிட்டங்கிக் கதவுகள் அனைத்தையும் திறந்து வைக்கின்றனர்.

அன்றைய ஒருநாள் செலவிற்குக் கிட்டங்கிகளில் இருந்து நூற்று எண்பது படி அரிசி அளந்து கொடுக்கப்படுகிறது. இதில் நாற்பது படி அரிசி கோயில் பணியாளர்களுக்கு. நூற்றி நாற்பது படி அரிசி கோயில் அமுது செய்வதற்காக கோயில் பணியாளர்களது கடமைகளைச் செய்வதற்கு தனித்தனியாய் அல்லது குழுமமாக பல பணிகளுக்குப் பிரித்து விடப்படுகின்றனர். கோயில் பூஜை செய்ய குருக்கள் அவருக்கு உதவ சடாச்சாரியார் வெள்ளிக் குடத்தில் திருமஞ்சனம் எடுத்து வந்து கொடுக்கவும் நைவேத்தியங்களை எடுத்து வருவதற்கும். உபையார். ஒவ்வொரு பூஜையின் முடிவிலும் இறைவனிடம் மன்னிப்புக் கோரும் மந்திரங்களைச் சொல்லும் மந்திர புருஷர். ஆகமசாஸ்திரப்படி சம்புரோக்ஷனம் செய்யும் ஆகம பட்டர். உற்சவ மூர்த்திகளை எடுத்துச் செல்லும் போது வேதம் முழங்கும் வேதபாராயணபட்டர். திபாராதனைகளுக்கு திருமேனி எடுத்துச் செல்லும் பொழுதும் வெள்ளித் தடியுடன் செல்லவும். இரவில் பள்ளியறைக்குச் சுவாமியைக் கொண்டு செல்லும்பொழுதும் கட்டியம் கூறும் கட்டியக்காரர். பல்லக்குகளை கோயிலுக்குள் எடுத்துச் செல்லும் சிர்பாதம் தாங்கிகள் கோயிலுக்கு வெளியே பல்லக்கை எடுத்துச் செல்லும் சிவிகையர். அறைவாசலில் இருந்து. பால். தயிர் ஆகியவைகளைக் கொண்டு வந்து கொடுக்கும் திபங்களை ஏற்றிக் குருக்களிடம் பூஜையின் பொழுது கொடுக்கும் பெரிய முறைக்காரர். ஏனைய கோவில் சிப்பந்திகளைக் கண்காணிக்கும் கோயில் கண்காணிப்பாளர். மடப்பள்ளியில்

நைவேத்தியங்கள் திருவமுது தயாரிக்கப்பட்டவுடன் கோயில் மகாமண்டபம் திறக்கப்படுகிறது.

பூஜகர், பட்டர், ஸ்தானிகர், தர்மகர்த்தா, இசைக் குழுவினர், ஆகியோர் அம்மன் ஆலயத்தின் மகாமண்டபத்திற்குள் செல்கின்றனர். கதவு திறக்கப்படுகிறது. பள்ளியறையில் தூடம் கொளுத்தித் திபத்தை ஏற்றுகிறார். பஞ்ச சயனக்கட்டிலில் கண்வளரும் தெய்வத் திருமேனிக்குப் பள்ளி எழுச்சி செய்கிறார் ஸ்தானிகர்.

அவர்கள் அந்த சுவாமியின் மேனியை சிறிய கட்டிலில் வைத்து தெற்கு வாசல் வழி வெளியே எடுத்து வருகின்றனர். நாதசுவரக் கோஷ்டியும், சதிர்க்காரிகளும் முன்செல்ல, வெள்ளித் தண்டங்களைப் பிடித்த காவலர்கள், தி வெட்டிக்காரர்கள், வெள்ளிக்குடை சாமரங்களும் உடன் தொடர இரண்டாவது பிரகாரத்தைச் சுற்றி, மேற்கு முகமாகச் சென்று சுவாமி கருவறைக்குக் கிழக்கே அர்த்த மண்டபத்தில் கர்ப்பக் கிரகத்திற்கும், மகா மண்டபத்திற்கும் இடையே பல்லக்கை இறக்கி வைக்கின்றனர்.

பட்டர், கர்ப்பகிரகத்திற்குள் சென்று லிங்கத்திற்கு அணிவிக்கப்பட்டுள்ள பழைய மாலைகளை (நிர்மாலியம்) அகற்றி அவைகளைப் பின்னால் உள்ள சண்டிகேசுவரருக்கு சாத்திவிட்டு மகாமண்டபத்திற்கு வந்து கிழக்கு நோக்கிய வண்ணம் அமர்ந்து சங்கல்பம் செய்து கொள்ளுகிறார். வலது கை நான்காவது விரலில் தர்ப்பையைப் பவித்ரமாகச் சுற்றிக் கொண்டும், மூன்றாவது நான்காவது விரல்களிலும் கட்டை விரலினாலும், மூக்கைப் பிடித்து பிராணாயமம் செய்கிறார். பிறகு வலது காதில் கையை வைத்து மந்திரம் சொல்கிறார்.

பின்னர், அவர் புன்யாவசனம் செய்கிறார். சடாச்சாரியார் வேதமந்திரங்களைச் சொல்கிறார். முதல் பிரகாரத்தில் உள்ள கிணற்றில் இருந்து ஸ்தானிகர் எடுத்து

வந்த கோடி திர்த்தத்தில் நனைந்த சந்தனத்தை பட்டர் லிங்கத்தின் மீதும் பீடத்திலும் தேய்த்துக் கோடி திர்த்தத்தைக் கொட்டி நீராட்டுகிறார். அடுத்து பல்வேறு புனித திர்த்தங்களும் நீராட்டிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஸ்தானிகர் அர்த்த மண்டபத்து திரையை இறக்கி. கருவறையை மறைத்த பிறகு. ஒரு தூய்மையான துணியைப் பட்டரிடம் கொடுக்கிறார். அதைக் கொண்டு அவர் லிங்கத்தை ஈரம் போகத் துடைக்கிறார். பிறகு அந்த லிங்கத்தை வஸ்திரம். உபவஸ்திரம் என்ற இரு துண்டுத் துணிகளால் லிங்கத்தின் முன்னாலும். இடையிலுமாக சுற்றிக் கட்டுகிறார். சந்தனப் பொடி உள்ள பரிக்கலத்தில் இரண்டாவது நான்காவது விரல்களை அமுக்கி எடுத்து அதைக் கொண்டு லிங்கத்தின் முன் பகுதியில் மூன்று சமகோடுகள் ஏற்படும்படி செய்கிறார். அடுத்து அந்தக் கோடுகளுக்கு இடையில் ஒரு திலகமும் வைத்து அதன் மீது ஒரு மலர் மாலையைச் சூட்டி. மூன்று வில்வ இலைகளையும் வைக்கிறார்.

ஆறுமணி அளவில். ஒரு ஸ்தானிகர் நாதசுரம் முழங்க. திருவமுது. அப்பம். கறிகள் ஒரு மனிதர் சாப்பிடுவதற்குக் கூடுதலான அளவில் கொண்டு கருவறை வாசலில் வைக்கிறார். பட்டர் சில மந்திரங்களைச் சொல்லிய பிறகு சில துளி திர்த்தத்தை அவைகளின் மீது தெளிக்கிறார். தரையிலும் மூன்று முறை தெளிக்கிறார். அத்யான பட்டர். வில்வ இலையை கையில் வைத்து அசைத்தவாறு அர்க்கியம். பத்யம் எனச் செய்கிறார். மீண்டும் மூன்று முறை திர்த்தத்தைத் தரையில் தெளித்தவுடன் வாசல் திரை நீக்கப்படுகிறது.

அடுத்து ஒரு ஸ்தானிகர். பட்டர் கையில் ஒரு திபத்தைக் கொடுத்ததும். சூடத்தை அதில் வைத்துக் கொளுத்தி அதனை மேலும் கிழுமாக பிறகு மூன்று முறை லிங்கத்தைச் சுற்றியும் மேலும் கிழுமாக ஒரு தரம் அசைக்கிறார். மற்றுமொரு

தீபத்தையும் முன்போலச் செய்கிறார். இவ்விதம் செய்யும் பொழுது பட்டர் வடக்கு நோக்கியவாறு நிற்கிறார். இறைவனை நைவேத்தியங்களை ஏற்றுக் கொள்ளுமாறு சொல்வதுடன் திருவனந்தல் என்ற இந்த காலை வழிபாடு முடிவடைகிறது.

அடுத்து காலை 7.00 மணிக்குச் சுவாமிக்கு உதயமார்த் தாண்ட சேவை தொடங்குகிறது.

பின்னர் காலை 9.00 மணிக்கு உதயகாலவழிபாடு தொடங்குகிறது. உச்சிக்காலத்தில் உச்சிக்கால பூஜை. மாலையில் சாயரட்சை. இரவு அர்த்த ஜாம பூஜை என ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. அந்தப் பூஜைகள் சுவாமிக்கு மட்டுமல்லாமல் பர்வதவர்த்தினி அம்மன். விசுவநாத விசாலாட்சி அம்மன். அனுமான் ஆகியோரது சந்நிதிகளிலும் நடத்தப் பெறுகின்றன. பொதுவாக வழிபாடுகளில் மாற்றம் இல்லாமல் தொடர்ந்து வருகின்றன.

இந்தப் பூஜைகளுடன் நாள்தோறும் அல்லது சில குறிப்பிட்ட நாட்களில் சிறப்புப் பூஜைகளும் நடத்தப்படுவதற்காக சேதுபதி மன்னர்களும். பிறரும் சில கட்டளைகளை ஏற்படுத்தி உள்ளனர். உடையார் தேவர் கட்டளை. உடையார் கட்டளை. நாயக்கர் கட்டளை. பிரதானி கட்டளை. பிச்சர் கட்டளை என சில கட்டளைகள் இருந்ததை 28.08.1772ம் தேதியிட்ட திருக்கோவில் செப்பேடு ஒன்றில் இருந்து தெரிய வருகிறது.

மைசூர் மன்னர் சுக்கிரவாரக் கட்டளை ஒன்றினையும். திருவாங்கூர் மன்னர் உதயமார்த்தாண்டக்கட்டளையும் ஏற்படுத்தி இருக்கின்றனர். நாள்தோறும் நான்கு சன்னதிகளிலும் சிறப்பான நைவேத்தியம். விளார்பூஜை. உச்சிக்காலபூஜை. சாயரட்சை பூஜை. ருத்திர பஞ்சாங்கம். சித்திரைத் திருநாள். பாலாபிஷேகம் ஆகியவை நடைபெறுவதற்காக திருவாங்கூர் மன்னரது கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டளைகளில் வழக்கமாக

சுவாமிக்கும் அம்பாளுக்கும் படைக்கப்படும் நிவேதனங்களுடன் சிறப்பாக அதிரசமும், முறுக்கு ஆகிய பலகாரங்களும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 2) பிற நடைமுறைகள்

பழமையும், பெருமையும் வாய்ந்த தமிழகத் திருக்கோவில் களில் ஆகம முறைப்படி நாள்தோறும் ஐந்து அல்லது ஆறுகால பூஜைகள் நடைபெறுவது இயல்பு. மற்றும் சிறப்புக் கட்டளைகளும் ஆண்டுத் திருவிழாக்களும் மேற்கொள்ளப்படுகின்றன. சேதுபதி மன்னரது நிர்வாகத்தில் உள்ள திருச்சுழியல், திருஉத்திரகோச மங்கை, திருமருதூர், திருவாடானை, திருப்புல்லாணி, இராமேஸ்வரம் திருக்கோயில்களிலும் இத்தகைய பூஜைகளும், திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. ஆனால் இந்தக் கோயில்கள் அனைத்திலும் நடைபெறும் நடைமுறைகளைப் போல் அல்லாமல் வேறுபட்ட வகையில் இராமேஸ்வரம் திருக்கோவில் நடைமுறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திருக்கோயில் இந்தியத் திருநாட்டின் இதிகாசமான இராமாயணத்துடன் தொடர்புடைய காரணத்தினால் மற்ற கோயில்களுக்கு இல்லாத முறையில் பூஜைகளும், விழாக்களும் இங்கு அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பல நூற்றாண்டுகளாக அவைகள் சிறப்பாக நடைபெற அன்றைய ஆட்சியாளர்களான சேதுபதி மன்னர்கள் உதவினர். இன்று சேதுநாட்டில் சேதுபதிகளது முடியாட்சி இல்லையென்றாலும் அவர்கள் இராமேஸ்வரம் கோயிலுக்கு முற்றூட்டாக வழங்கியுள்ள ஊர்களின் வருவாயில் இருந்து இந்தப் பூஜைகளும், வார, பட்ச, மாத விழாக்களும் ஆண்டுத் திருவிழாக்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இப்பொழுது அந்தப் பூஜை வழிபாடுகளின் விபரங்களைப் பார்ப்போம்.

### 1) வாரவிழா

ஒவ்வொரு வெள்ளிக் கிழமை இரவு மணி 8.00 முதல் 9.00 மணிக்குள் ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாள் தங்கப் பல்லக்கில் அமர்ந்து திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரத்தில் உலாவரும் விழா நடைபெறுகிறது.

### 2) பட்சவிழா

ஸ்ரீ அம்பாளைப் போன்று ஸ்ரீ இராமநாத சுவாமியும் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை பிரதோஷ நாளன்று மாலை 5.00 – 6.00 மணிக்குள் ரிஷபவாகனத்தில் அமர்ந்து மூன்றாம் பிரகாரத்தில் உலாவருதல்.

### 3) மாதவிழா


ஒவ்வொரு மாதமும் மாதக் கார்த்திகையன்று இரவு 8.00 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணியர் வெள்ளிமயில் வாகனத்தில் திருக்கோவிலில் நான்கு ரதவீதிகளிலும் பவனி வருதல். தை மாதம் மகர சங்கராந்தி நாள், தமிழ் வருடப் பிறப்பு நாள், கார்த்திகை மாதம் கார்த்திகை நாள், தை மாதம் பௌர்ணமி நாள் (தெப்பத் திருவிழா) ஆகிய புனித நாட்களில், சுவாமியும் அம்பாளும் தங்க ரிஷபவாகனத்தில் பஞ்சமூர்த்திகள் தொடர திருக்காட்சி கொடுத்தல்.

### 4) ஆண்டு விழா


இராமேசுவரம் திருக்கோயில் விழாக்களில் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மாசி மாத நவராத்திரி விழாவாகும். மாசி மாதம் கிருஷ்ண பட்சம் தொடங்கி அம்மாவாசையன்று இந்த விழா முடிவடைகிறது. ஆங்கில




இராமேஸ்வரம் முன்புறத் திருக்கோபுரம்



இலக்குமண தீர்த்தம்



சேதுமாதவ தீர்த்தம்



மூன்றாம் சுற்றின் உட்புறத்தோற்றம்




இராமர் திருப்பாதக்கோயில்



நேபாள மன்னர் அளித்த
சீனா சிற்பமிகு ஆலயமணி

பஞ்சாங்கத்திற்குச் சரியான காலம் பிப்ரவரி, மார்ச் ஆகும். பன்னிரண்டு நாட்கள் நடைபெறும் இந்தத் பெருவிழாவைக் காண வடமாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் இராமேஸ்வரத்தில் கூடுகின்றனர்.

இந்த விழாவின் முதல் நாளன்று மட்டும் இரவு சுவாமியும் அம்பாளும் பக்தர்களுக்குக் காட்சியளிக்கின்றனர். விழா நாள்களில் இரவிலும் பகலிலும் பலவித வாகனங்களிலும் தங்கப் பல்லக்கிலும் வெள்ளிரதத்திலும் தெய்வீக தரிசனம் தொடர்கிறது. இந்த விழாவின் மூன்றாம் நாள் மட்டும் இறைவனும் இறைவியும் காலையில் கந்தமாதன மண்டகப்படிக்கு முறையே கைலாச வாகனத்திலும், சிம்மவாகனத்திலும் எழுந்தருளிப் போய் இரவு திருக்கோவில் திரும்புகின்றனர்.

## 5) வசந்த விழா

ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டாவதாக நடைபெறும் விழா வசந்தவிழா வைகாசிப் பௌர்ணமியன்று (மே, ஜூன் மாதங்களில்) அடுத்து ஜேஷ்டவார் சுக்ல பௌர்ணமியில் (ஜுன் ஜுலை மாதத்தில்) இராமலிங்க பிரதிஷ்டை விழா இராமபிரான் இராமேசுவரம் கடற்கரையில் சீதாப்பிராட்டியினால் மண்ணால் சிருஷ்டிக்கப்பட்ட இராமலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்ததின் நினைவாக.

அடுத்து ஆஷாட பகுல கிருஷ்ணாஷ்டமியில் (ஜுலை, ஆகஸ்டில்) நடைபெறும் திருக்கல்யாண விழா. இந்த விழா ஏழு நிகழ்ச்சிகளாக நடைபெறுகின்றன. (1) இடப வாகனத்தில் இறைவன் இறைவி எழுந்தருளல் (2) இரதத்தில் உலா வருதல் (3) அம்பாள் தபசு (4) அம்பாள் தங்கப்பல்லக்கில் சயன சேவை (5) திருக்கல்யாணம் (6) ஊஞ்சல் (7) கந்தமாதனமண்டகப்படி

பதினேழு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த விழாவின் பொழுது. தங்கப்பல்லக்கு, தாயலர, வெள்ளி இடபம் தங்கக் கேடயம் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

**6) அர்த்தோதய, மகோதயவிழா**

ஆண்டுதோறும் தை அல்லது மாசி மாதம் அமாவாசை, ஞாயிற்றுக்கிழமை. திருவோண நட்சத்திரமும் வித்யபாதமும் கூடிய நாள் அர்த்தோதயம் எனப்படும். இந்த நாள் மேற்படி நட்சத்திரம். திதி ஆகியவைகளுடன் கூடி வந்தால் இதனை மகோதயம் என அழைக்கப்படுகிறது. இந்த நாளில் இராமேசுவரத்தை அடுத்த தனுஷ்கோடியில் கடலில் நீராடுவது மிகச் சிறந்த புனிதச் செயலாகக் கருதப்படுகிறது. பிதிரர்களது நற்கதிக்கு இந்த நீராடல் பயனுள்ளதாக அமையும் என்பது ஐதிகம்.

ஆண்டுதோறும் இந்தக் கடல் நீராடலில் பங்குகொள்ளும் பக்தர்களுக்கு திருக்காட்சி வழங்க இராமேஸ்வரம் இராமநாதசுவாமி அம்பாள் மற்றும் பஞ்சமூர்த்திகளுடன் தனுக்கோடி சேது தீர்த்தத்திற்கு தங்க இடப வாகனத்தில் எழுந்தருளுகிறார்.

இந்த விழாக்கள் தவிர ஆவணி மாதம் மூல நட்சத்திரத்தன்று ஆவணி மூல விழா சிறப்பாக நடைபெற்று வந்ததை இந்தக் திருக்கோயிலின் செப்பேடுகளில் இருந்து தெரியவருகிறது. குறிப்பாக முத்து விஜயரகுநாத சேதுபதி காலத்தில் இந்த விழா நடத்துவதற்கான அறக்கொடை வழங்கி உதவியதை இந்த செப்பேடு விவரிக்கிறது. ஆனால் என்ன காரணத்தினாலோ இந்த விழா இப்பொழுது நடைபெறுவதில்லை.

மற்றும் இந்த விழாக்கள் அனைத்தும் குறிப்பிட்ட மாதம், நாள் நட்சத்திரத்தில் சிறப்பாக நடைபெறுவதற்குத் தக்க

அறகொடைகளைச் சேதுபதி மன்னர்கள் ஏற்படுத்தி இருப்பதுடன் இந்த விழாக்களின் பொழுது சுவாமி. அம்பாள் மற்றும் பஞ்சமூர்த்திகள் எழுந்தருள உற்சவமூர்த்திகள் அழகான தங்க. வெள்ளி வாகனங்களில் ரதம். தேடகங்களையும் செய்து வழங்கியுள்ளனர்.

மேலும். இந்த விழாக்களின் பொழுது சுவாமி. அம்பாள் ஆகியோருக்கு மட்டும் அணிவிப்பதற்காக தனியாக விலையுயர்ந்த பொன். வைர அணிகலன்களையும் சேதுபதி மன்னர்கள் செய்து வழங்கியுள்ளனர். இந்த அணிமணிகளைத் திருமேனிகளுக்கு சாத்தி அலங்காரம் செய்வதற்கென்றே திருக்கோயில் பணியாளர்களில் அலங்காரப்பட்டர். கைவித்தாரம் என்று அழைக்கப்படும் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அன்றைய நிலையில் தமிழகத்தில் ஸ்ரீரங்கம். திருவாரூர். சிதம்பரம் மற்றும் மதுரையை அடுத்துச் சிறப்பாகவும் தொடர் விழாக்கள் நடைபெறும் தலமாகவும் இராமேஸ்வரம் திருக்கோயில் விளங்கியதால் சேதுபதி மன்னர்கள் அனைவரும் பதினேழாம் நூற்றாண்டு தொடக்கம் முதல் கோயில் விழாக்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு இந்த விழாக்கள் நடைபெற தனியாக ஏற்பாடுகள் செய்ததுடன் இந்த விழாக்கள் மக்களைக் கவரும் வண்ணம் உற்சவமூர்த்திகள். அவைகளுக்கான அணிமணிகள். அலங்காரப் பொருட்கள். பல்லக்குகள். சப்பரம். தேடகம். வாகனங்கள் ஆகியவைகளையும் தேவைப்படும் பொழுது எல்லாம் தேர்ந்த பொற்கொல்லர். மரத்தச்சர் மற்றும் கைவினைஞர்களைக் கொண்டு செய்வித்து இந்த திருக்கோயிலுக்கு வழங்கியுள்ளனர்.

இதனால் சோழப் பேரரசர்கள். பிற்காலப் பாண்டியர் களுக்குப் பிறகு வேலை வாய்ப்பில்லாமல் இருந்த பொற்கொல்லர் களுக்கும். மரத்தச்சு ஆசாரிகளுக்கும் சேதுபதி மன்னர்கள் ஆட்சியில் வேலை வாய்ப்பும் பாரம்பரிய கலைகளை ஊக்குவிப்பதற்கான வாய்ப்பும் கிட்டியது.

மூன்றாம் பிரகாரக் கட்டுமானப் பணியைத் தொடங்கிய வரும் மிகச் சிறந்த சிவத் தொண்டராகவும் விளங்கிய முத்து விசய ரெகுநாத சேதுபதி (கி.பி.1713 – 1725) திருவாரூர் தச்சர்களைக் கொண்டு அழகிய தேர் ஒன்றை அமைக்கச் செய்து திருக்கோவிலுக்கு வழங்கியதுடன் முதன் முறையாக அந்தத்தேர் ஓட்டத்திற்கு வடம் பிடித்து அவரே தொடக்கி வைத்தார் என்ற செய்தி உள்ளது.[1]

இந்த மன்னருக்குப் பின்னர் மிகச்சிறந்த சைவ சித்தாந்தியாகவும். சிவத்தொண்டராகவும் விளங்கிய மன்னர் பாஸ்கர சேதுபதி (கி.பி. 1868 – 1903) சுவாமியும், அம்பாளும் பிரதி வெள்ளிக்கிழமை மாலையில் பவனி வருவதற்கு முழுமையும் வெள்ளியிலான தேர் ஒன்றை செய்வித்து அளித்துள்ளார்.

இவ்விதம் இராமேஸ்வரம் திருக்கோயிலின் சிறப்பிற்குப் பலவகையிலும் தொடர்ந்து சேதுபதி மரபினர் பணியாற்றி இருப்பது வரலாற்றின் என்றும் பொன் ஏடுகளாக விளங்கி வருகின்றன.

## 7) நாள்தோறும் நடைபெறும் சடங்குகள்

| | |
|---|---|
| காலை 5.00 மணி | பள்ளியறை தீபாராதனை |
| காலை 5.30 மணி | ஸ்படிகலிங்க பூஜை |
| காலை 5.45 மணி | திருவனந்தல் |
| காலை 7.00 மணி | விளார் பூஜை |
| காலை 10.00 மணி | காலசந்தி |
| காலை 12.00 மணி | உச்சிகால பூஜை |
| மாலை 6.00 மணி | சாயரட்சை |
| இரவு 9.00 மணி | அர்த்தசாம பூஜை |
| இரவு 9.30 மணி | பள்ளியறை பூஜை |

1) மதுரை சொக்கநாதபுலவர் – தேவை உலா – டாக்டர் உ.வே.சா. அவர்கள் பதிப்பு

## 8) வார விழாக்கள்

1) சுக்ரவார விழா
2) பட்சத் திருவிழா
3) பிரதோஷம்

## 9) மாத விழா

கார்த்திகை

## 10) ஆண்டுத் திருவிழாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சித்திரை மாதம் | – | புத்தாண்டு விழா |
| 2. | வைகாசி மாதம் | – | வசந்த விழா |
| 3. | ஆடி மாதம் | – | அமாவாசை<br>திருக்கல்யாணம் விழா<br>17 நாட்கள் |
| 3. | மாசி மாதம் | – | மகாசிவராத்திரி |
| 4. | ஆனி மாதம் | – | கோதண்டராமசாமி கோயில்<br>விபீடன சரணாகதியும்<br>பட்டாபிஷேகமும், இராமலிங்க<br>பிரதிஷ்டை விழா |
| 5. | புரட்டாசி மாதம் | – | நவராத்திரி விழா |
| 7. | தை மாதம் | – | திருவாதிரை நாளன்று<br>ஆருத்திரா தரிசனம் |

# 3. சிறப்புச் செய்திகள்

நமது நாட்டில் பன்னிரண்டு திருக்கோயில்களில் ஜோதி லிங்கங்கள் அமைந்துள்ளன. தென்னகத்தில் ஆந்திரப் பிரதேசத்திலும் இராமேஸ்வரத்திலும் மட்டும் தான் இத்தகைய ஜோதிர்லிங்கங்கள் உள்ளன. ஏனைய அனைத்தும் விந்தியத்திற்கு வடக்கே உள்ள திருக்கோயில்களில் நிறுவப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் உள்ள ஜோதிலிங்கம் வீடணனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த லிங்கத்தின் பின்புறம் கற்பூர ஆரத்தி காண்பித்தால் முன்புறம் அந்த ஜோதியை விளக்கின் இளஞ்சிவப்பு நிறத்தை அப்படியே காணலாம்.

இந்த லிங்கத்திற்கு நான்குகால பூஜையும் ஒருகால கோடி திர்த்த அபிசேகமும் நடத்தப்படுகிறது.

★★★★

இராமேஸ்வரம் திருக்கோயிலில் உள்ள அதிகார நந்தி வாகனம், விக்கிரகம், உற்சவர் ஆகிய மூன்று சிறப்புக்களையும் பெற்று இருப்பது வேறு கோவில்களில் இல்லாத சிறப்பு. அதிலும் இந்த நந்தி வாகனம் முழுவதும் பொன்னாலானது.

பஞ்ச மூர்த்திகள் புறப்பாட்டின் பொழுது நந்திதேவர், சுவாமிக்குப் புறங்காட்டாமல், சுவாமிக்குப் பின்புறமாக சுவாமியை முன்னோக்கியவாறு செல்வது இங்கு மரபு.

★★★★

திருக்கோயிலின் முதற் பிரகாரத்தில் 144 விக்கிரகங்களும். இரண்டாம் பிரகாரத்தில் 17 விக்கிரகங்களும் பூஜைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இவை தவிர கோயிலில் உள்ள 381 விக்கிரகங்களுக்கும் நாள்தோறும் பூஜை நடத்தப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை இரவு மலைவளர்க் காதலி அம்மன் கொலு முடிந்து தங்கப் பல்லக்கில் மூன்றாம் பிரகாரத்தில் பவனி வரும் பொழுது மேல்கோபுர வாசலுக்கு அன்மையில் மன்னர் முத்துராமலிங்க சேதுபதியின் திருவுருவச் சிலைக்கு பரிவட்டம் சூட்டும்முறை இன்றும் இருந்து வருகிறது.

தாய்லாந்து மன்னர் முடிசூட்டும் பொழுது கங்கை நீரினால் நீராட்டும் சடங்கு ஒன்று அங்கே உள்ளது. இதனைச் செய்பவர்கள் உச்சிக்குடும்பி வைத்துள்ள ஆத்திக மக்கள். இவர்களது முன்னோர்கள் இராமேசுவரத்தில் இருந்து சென்று தாய்லாந்தில் நிலைத்தவர்கள் எனத் தெரிய வருகிறது.

★ ★ ★ ★

இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமிக்கோயில் நிர்மாணித்து முடிந்த பிறகு அங்கு குடமுழுக்கு நடத்தவும் பின்னர் தொடர்ந்து கோயில் வழிபாடுகளை முறையாக நடத்துவதற்கு இராமேசுவரத்து அந்தணர்களை இராமநாதபுரம் சேதுபதி மன்னர் இராமேசுவரத்தில் இருந்து அனுப்பி வைத்ததாகப் பதினாறாவது நூற்றாண்டு இலக்கிய மான கைலாயமாலை தெரிவிக்கிறது.

★ ★ ★ ★

பாரத நாட்டின் மிகுந்த புனிதத் தலங்களாக நான்கு தலங்கள் மட்டும் சதுர்தாம் கருதப்படுகின்றன. அவற்றுள் ஒன்று ராம்நாத் (என்ற இராமேசுவரம்) சைவ வைணவ ஒருமைப்பாட்டுத்தலம். எஞ்சிய மூன்று தலங்களும் வடநாட்டில் அமைந்து இருப்பன. இவை துவாரகநாத். பத்ரிநாத். கேதாரிநாத் என்ற வைணவத் தலங்கள்.

★ ★ ★ ★

சேதுபதி மன்னர்களில் சிறந்த சிவபக்தராகவும் சீரிய சிவநெறித் தொண்டராகவும் விளங்கி, இராமேசுவரம் திருக்கோவிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்த முத்து விஜயரகுநாத சேதுபதியின் நினைவாகச் சேதுபதி ஈஸ்வரர் என்ற பெயரில் சிறுகோயில் ஒன்று இராமேசுவரம் திருக்கோயிலில் உள்ளது. அனுக்க மண்டபத்திற்கு வடமேற்கு மூலையில் இந்தக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

★★★★

இந்தத் திருக்கோயிலின் நிர்மாணம், வழிபாடுகள், விழாக்கள், ஆகியவற்றைக் காலமெல்லாம் சிறப்பாக நடைபெறச் சேதுபதி மன்னர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்பதை ஏற்கனவே கண்டோம். முந்தைய காலத்தில் தமிழக மக்களின் பயனுள்ள பொழுது போக்காகத் திருக்கோயில் விழாக்கள் மட்டும் அமைந்து இருந்ததால் பொது மக்களின் கவனத்தைச் சிறப்பாக ஈர்ப்பதற்குச் சேதுபதி மன்னர்கள் இந்தக் கோயிலின் தெய்வத் திருமேனிகளுக்குப் பலவிதமான பொன், வெள்ளி, மணிகளால் ஆன பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்களைச் செய்து தானமாக வழங்கி இருப்பதுடன் அமையாமல் திருக்கோயில் தொடர்புடைய வேறு சில சாதனைகளையும் செய்துள்ளனர்.

முதலாவதாக திருவிழாக்களில் சுவாமி அம்பாள் மற்றும் பஞ்சமூர்த்திகள் உலா வருவதற்கு ஏற்ற அழகிய பல்லக்குகளைச் (தேடகங்கள்) செய்து கொடுத்துள்ளனர்.

அடுத்து விழாக்களின் பொழுது ஊர்வலத்தின் முன்னே எடுத்துச் செல்வதற்காக அழகிய வேலைப்பாடு அமைந்துள்ள வாகனங்களையும் செய்து அளித்துள்ளனர். இவைகளில் யானை, சிங்கம் போன்ற வாகனங்களுக்குப் பொன்னாலான தகடுகளையும் வேய்ந்துள்ளனர். இவைகள் அனைத்தையும் அந்தக் காலத்தில் கோயில் கலைகளில் சிறப்புடன் விளங்கிய திருவாரூர், தஞ்சை, சுவாமி மலையிலுள்ள தச்சு

ஆசாரிகளையும் பொற்கொல்லர் களையும் கொண்டு செய்வித்து உள்ளனர்.

மூன்றாவதாக ஆண்டுக்கொருமுறையும் வாரத்தில் ஒரு நாளும் சுவாமியும் அம்பாளும் திருக்கோயிலின் நான்குபுற வீதிகளிலும் பவனி வருவதற்காக மரத்தினாலான பெரிய தேரினையும் வெள்ளியிலான சிறிய தேரினையும் செய்வித்து அளித்துள்ளனர்.

★ ★ ★ ★

மேலும் விழாக்காலங்களில் இரவு நேரங்களில் திருக்கோயிலினை அடுத்த பரந்த வெளிகளில் இராமாயணம் கூத்தும் இராமாயணக் கதையை எளிதாக மக்களுக்கு உணர்த்தும் வகையில் எளிய இனிய ஒயில் ஆட்டக்காரர்களின் ஆடலும் நடைபெற்று வந்தன.

இத்தகைய தெய்வத் தொண்டுகளைச் செய்த சேதுபதிகளின் மரபினரைக் காலமெல்லாம் மக்கள் நினைவில் கொள்வர் என்பதில் ஐயமில்லை. இந்தத் திருக்கோயிலில் ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாக்கள் பற்றிய பட்டியலும் வாகனங்கள் பற்றிய பட்டியலும் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4) வாகனங்கள்

திருக்கோயிலில் கீழ்வரும் வாகனங்கள் உள்ளன.

1. கைலாசவாகனம்
2. கமலவாகனம்
3. ஹம்சவாகனம்
4. கருட வாகனம்
5. நந்திகேசுவரர் வாகனம்
6. பூதவாகனம்
7. காமதேனு வாகனம்
8. சுவாமி கேடகம்

9. அம்பாள் கேடகம்
10. கண்டது விருட்ச வாகனம்
11. கிளி வாகனம்
12. சிம்ம வாகனம்
13. சுவாமி ரிஷபவாகனம்
14. அம்பாள் ரிஷப வாகனம்
15. சுவாமி குதிரை வாகனம்
16. அம்பாள் குதிரை வாகனம்
17. சுவாமி யானை வாகனம்
18. அம்பாள் யானை வாகனம்
19. விநாயகர் கேடகம்
20. சுப்ரமணியர் கேடகம்
21. வெள்ளி ரதம்
22. ராமர் உற்சவக் கவசம்

# இயல் - V

## 1) ஆலய நிர்வாகம்

சீரும் சிறப்புமிக்க இராமேஸ்வரம் திருக்கோயில் நிர்வாகம் பற்றித் தொலை நோக்குடன் சிந்தித்துச் செயல்பட்டவர் சேதுபதி மன்னர் சடைக்கன் உடையான் சேதுபதி (கி.பி.1602 – 1622) ஆவார். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகக் கோவில்களில் எங்கும் இல்லாத முறையில் மகாராஷ்டிரப் பிராமணர்கள் 512 பேர்கள் இராமேசுவரம் திருக்கோவிலின் பூஜை (வழிபாடு) ஸ்தானிகம் (கண்காணிப்பு) பரிசாரகம் (திருவமுது படைத்தல்). சுயம்போகம் ஆகிய பணிகளை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் யாருடைய ஆணையின் பேரில் நியமனம் பெற்றனர் என அறியத்தக்க ஆவணம் இல்லை என்றாலும். இந்த இறைப் பணியாளர்களுக்கு அவசியமான வீட்டு வசதிகளை இந்த மன்னர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.[1]

### ஆதினகர்த்தர் நியமனம்

ஆண்டு முழுவதும் சேது யாத்திரையாக வடபுலத்தினின்றும். பயணம் முழுவதும் நடந்தே இராமேசுவரம் திருக்கோவிலுக்கு வருகின்ற நூற்றுக்கணக்கான பயணிகளுக்கு வழியில் ஆறலைக் கள்வர்களால் இழப்பு ஏற்படாத வண்ணம் சேது மார்க்கத்தில் பாதுகாப்புப் பணியினைச் சிறப்பாகச் செய்து இருந்தார்கள் சேதுபதி மன்னர்கள். மதுரை

1) கமால் எஸ்.எம். டாக்டர். சேதுபதி மன்னர் செப்பேடுகள் 1993

நாயக்கமன்னர் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரது ராஜகுரு இராமேஸ்வரம் சென்று சடைக்கன் உடையான் சேதுபதியின் சொந்தப் பாதுகாப்பில் மதுரை திரும்பிய நிகழ்ச்சி இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.[1] மேலும் திருக்கோயிலில் நடைபெறுகின்ற அபிசேகம், நைவேத்தியம், பூஜை ஆகியன சிறப்பாகவும், ஆகம விதிகளின் படியும் நடைபெறுவதற்கும் அவற்றைக் கண்காணிப்பதற்கும் இராமேசுவரம் திருக்கோயிலில் ஆதினகர்த்தர் ஒருவரையும் சேதுபதி மன்னர் நியமனம் செய்தார் எனத் தெரிகிறது.

இராமநாத சுவாமியின் கைங்கரியத்திற்காக நியமனம் பெற்றதால் இவர் சுவாமியின் பெயரால் "இராமநாத பண்டாரம்" என அழைக்கப்பட்டார். இத்தகைய ஆதிகைர்த்தர்கள் தஞ்சை மாவட்டத்தில் அப்பொழுது திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக் கொண்டு இருந்தனர் என்பது நினைவு கூறத்தக்கது.

இத்தகைய திருக்கோயில் அலுவலரது சிறப்பான பணியினைத் தெரிவிக்கக் கூடிய ஆவணங்கள் அருகி மறைந்துவிட்டன. இந்தப் பணியில், தஞ்சைத் தரணியில் உள்ள வேதாரணியத்துத் தமிழ் வேளாள சமூகத்தைச் சேர்ந்த, சைவ இலக்கிய, ஆகமம் கற்ற துறவிகள், பொறுப்பில் இருந்து வந்தனர். திருச்சியில் நாயக்கமன்னர்கள் ஆட்சியின் பொழுது திருமறைக் காட்டு வேளாளர் சமூகத்தினரில் ஆன்மீகத் துறையில் சிறந்து விளங்கிய தாயுமானவ அடிகள் பின்னர் துறவி நிலையில் புகழ் பெற்றதும் இதற்குக் காரணமாக இருக்கலாம். இராமேசுவரம் திருக்கோவில் செப்பேடுகள் சென்னையில் உள்ள அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்கள் ஆகியவற்றிலிருந்து தொகுத்த செய்திகள் வருமாறு.

1) Taylor - Old Historical Manuscripts (1851) Part - II

இராமேசுவரம் இராமநாதப் பண்டாரம் பதவி வகித்தவர்களுக்கு இராமேசுவரம் திருக்கோயிலின் ஒரு பகுதியில் மடம் இருந்து வந்தது. இந்த மடத்திற்கு பிச்சர் மடம் எனப் பெயர் வழங்கப்பட்டது. இதில் குடிகொண்டிருந்த ஆதினகர்த்தர். நாள்தோறும் வைகறையில் இருந்து நடுச்சாமம் வரை திருக்கோயிலில் நடைபெறும் அனைத்துக் கோயில் காரியங்களையும் கண்காணித்து வந்தார். திருக்கோயிலுக்கு இடை இடையே வருகை தந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள். இராமநாத பண்டாரத்தின் பணியினைப் பார்வையிட்டு அவருக்குத் தக்க பரிந்துரைகளையும் வழங்கி வந்தனர்.

இந்தப் பரிந்துரைகளைக் கொண்ட இரு செப்பேடுகள் கிடைத்துள்ளன. ஒன்று கி.பி.1627ம் ஆண்டு கூத்தன் சேதுபதியினது. மற்றொன்று கி.பி. 1647ம் ஆண்டு திருமலை ரகுநாத சேதுபதியினது. இந்த இரு செப்பேடுகளுக்கும் இடையில் இருபது ஆண்டுக்கால இடைவெளி இருந்தாலும் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரை ஒரே பொருள் பற்றியதாகும். இந்தச் செப்பேடுகள் வழங்கப்பட்டதில் கால வேறுபாடு இருந்தாலும். அவைகளை வழங்கிய சேது மன்னர்களது கருத்தில் மாறுபாடு இல்லையென்பதை அவைகளின் வாசகம் அறுதியிட்டுக் குறிப்பிடுவதாக உள்ளது.

இந்தச் செப்பேடுகளில் இருந்து இராமேசுவரம் திருக்கோவிலுக்கு வரக்கூடிய வருவாய்களை இருவகையாகப் பிரித்து வரவு வைத்தனர். முதலாவது கோயில் உள்துறைக் கட்டளை எனப்படும். திருக்கோயில் பயன் பாட்டிற்கெனச் சேதுமன்னர்களும் பிறரும் தானமாக வழங்குகின்ற திரவியங்கள். பூமி முதலியன பொதுவாகக் கோயில் அபிசேகம். பூஜை. நைவேத்தியம். உத்சவம் ஆகியவற்றிக்குப் பயன்படுத்தப்பட்டன. இரண்டாவது. சேதுபதி மன்னர் சிலர் விசேட பூசைகள். கட்டளைகள். உத்சவங்கள் நடத்துவதற்கென

அவ்வப்பொழுது வழங்குகின்ற தானங்கள். சேது மன்னரது அறக்கட்டளையென இது வழங்கப்பட்டது.

இரண்டாவது வகையான கட்டளையில் சேது மன்னர்களது "சொந்தத் திரவியங்கள்" மட்டும் சேர்க்கப்பட்டன. மன்னரது அலுவலர்கள், பாளையக்காரர் போன்றோர் மன்னரது பிரீதியைப் பெறுவதற்காகச் சுவாமிக்கு வழங்குகின்ற பொருட்களைக் கோயில் உள்துறைக் கட்டளையில்தான் சேர்க்க வேண்டும் என்பது சேது மன்னர்களது கண்டிப்பான உத்தரவு. இந்தக் கடுமையான உத்தரவுக்கு மன்னர்கள் கொடுத்துள்ள விபரம் மனதை நெக்குருக வைக்கிறது. "பிறத்தியாரது பாவத் திரவியங்களாக இருக்குமாதல் நம்முடைய கட்டளையில் அவைகளை வாங்கி நடப்பிக்கத் தேவை இல்லை" என்பது.[1]

அதாவது தெய்வீகக் காரியங்களுக்கு தீமையல்லாது ஈட்டப்படும் சொந்த திரவியங்களைத்தான் செலவழிக்க வேண்டுமென்ற கருத்துடையவர்களாக இருந்தனர் அந்த மன்னர்கள்.

மேலும் தமிழ்நாட்டில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லாத முறையில் இந்தக் கோயில் பணிக்கெனக் குறிப்பாகக் கருவறைப் பணிகளுக்கென மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த குருக்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

பதினைந்தாவது நூற்றாண்டு முதல் தான் சேதுபதி மன்னர்களது திருப்பணிகள் இராமேசுவரம் கோயிலில் தொடரப்பட்டுள்ளதாகக் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு முந்தைய கால ஆவணங்கள் எதுவும் இல்லை. ஆனால் ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், சிதம்பரம், காஞ்சிபுரம் போன்ற (பத்தாவது பதினோராவது நூற்றாண்டைச் சேர்ந்த)

1) கமால் டாக்டர் எஸ்.எம்.சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1992). செப்பேடு எண்.6, 11

கோயில்களில் தமிழ் பிராம்மணர்கள் கோயில் பணிகளில் பொறுப்புடையவராக இருக்கும் பொழுது இந்தக் திருக்கோயில் மட்டும் விதிவிலக்காக இருப்பதற்கு வேறு காரணம் இருந்திருக்க வேண்டும்.

இந்தக் கோவில் நிர்வாகப் பணியில் மகாராஷ்டிர குருக்கள் சபையாரும். தமிழ்ப் பிராம்மணருமாக 512 பேர் இருந்து வந்தனர். தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர் என்பது போல. இவர்களது அன்றாடப் பணிகளாவன.

(1) அனுமேசர் பூஜை (2) இராமநாதசுவாமி பூஜை (3) மலைவளர் காதலி அம்மன் பூஜை (4) ஸ்படிகலிங்க பூஜை (5) இராமநாதசுவாமி உற்சவ விக்கிர பூஜை (6) தாண்டேசுவரர் பூஜை (7) தேவை அம்பலவாணர் பூஜை (8) பல்லக்கு நாயகர் பூஜை (9) வெள்ளை துர்க்கை அம்மன் பூஜை (10) பரிவார தேவதைகளுக்கு நைவேத்தியம். திபாராதனை செய்வது (11) திருவாபரணம் சாத்துதல் ஆகியன. குறிப்பிட்ட காலங்களில் இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக இவர்களுக்கு மூன்றுக்கு ஒரு பிரசாதமும். சந்தனம் பத்துக்கு ஒன்றும். தோசை. வடை. பணியாரம் பத்துக்கு ஒன்றும். வெற்றிலை பாக்கு ஏழு நாட்களுக்கு ஒரு நாளும். மாதம் ஒன்றுக்கு ஏழுபடியும் திருவிழாக்காலங்களில் பஞ்சாமிர்தம் செய்து வைப்பதில் ஒரு பணமும் கும்ப தட்சிணையும். கால்படி அபிசேகமும் உண்டியல் வசூலில் சுவாமிக்கு இரண்டு பங்கும் இவர்களுக்கு ஒரு பங்கும் என நிகுதி செய்யப்பட்டு இருந்தது.


இவர்களில் இன்னொரு பிரிவினரான தானத்தார் திருமஞ்சண நீராட்டிற்குத் திர்த்தம் கொண்டு வருதல். தெய்வத்திருமேனிகளுக்குத் திருமஞ்சணம் செய்வித்தல். தூபதிபம். கட்டளைகள் எடுத்துக் கொடுத்தல். சுயம்பாகம் செய்து. நைவேத்யம் முடிந்த பிறகு சன்னதிக்குக் கொண்டு வருதல். பரிவார தேவதைகளுக்கு அபிஷேகம். நைவேத்தியம்

செய்வித்தல். பக்தர்களுக்கு கோடி தீர்த்தம் வழங்குதல் ஆகியன இந்தப் பணிகளுக்காக அவர்களுக்கு நாளொன்றிற்கு பிரசாதம் இருபத்து நான்கு தளிகைச் சாற்றுக் கட்டளை உபயோகத்தில் தலைக்கு ஒரு தளிகைப் பிரசாதமும். இதரப் பணிகளுக்கு மாதம் பதினைந்து பணமும் வழங்கப்பட்டு வந்தது.

மற்றுமொரு வகையினரான தமிழகப் பிராமணர்கள் பூஜைக்குச் சந்தனம் அரைத்துக் கொடுத்தல். திருவிளக்கு பார்த்தல். தளிகை மாற்றல். பல்லக்கு எழுந்தருளப் பண்ணுதல். உற்சவத்திற்குத் தேடகத்தில் சுவாமியை எழுந்தருளச் செய்தல். கட்டியம். அடப்பம். காளாஞ்சி. பெரிய மனிதருக்குப் பிரசாதம் கொடுத்தல். கோடி தீர்த்தம் வழங்குதல் ஆகிய பணிகள் இந்த தமிழ்ப் பிராமண மகாஜனங்களது பணிகளாக இருந்தன.

இவர்களுக்குப் பிரசாதமும். பணமும் கொடுக்கப் பட்டன எனினும் முழுமையான விபரம் கிடைக்கப்பெற வில்லை. இந்த இருவகைப் பணியாளர்களது பணியினைக் கண்காணிக்கும் பொறுப்புடன். அன்றாடம் நடைபெற உள்ள கட்டளைகள். சந்தி. உற்சவம் ஆகியவைகளையும் கண்காணித்துச் சிறப்பாக நிறைவேற்றும் பொறுப்பும் இராமநாதபண்டாரத்தின் கடமையாக இருந்து வந்தது.

மேலும் இராமேசுவரம் திருக்கோயிலுக்கு மின்வசதி இல்லாத முந்தைய காலத்தில் இரவிலும் பகலிலும் ஒளிதருவதற்கென்றே பலவகை விளக்குகள் இருந்தன (1) வெங்கல விளக்கு (2) கட்டுத் தம்புவிளக்கு (3) தட்டு விளக்கு (4) நிலை விளக்கு (5) கம்ப விளக்கு (6) சிறுவிளக்கு (7) தூக்குவிளக்கு என்ற பல வகையான விளக்குகளுக்குத் தேவையான எண்ணெய் இராமேசுவரம் கோயிலில் மொத்தமாகக் கொண்டு வந்து கொடுக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அத்துடன் இந்த விளக்குகளை ஆண்டுக்கு



கோயில் கோபுரமும் சேதுபதி மண்டபமும்



இராமேஸ்வரம் கோயிலுக்கு மூன்றாம் பிரகாரம்
கட்டிய மன்னர் முத்துராமலிங்க
விஜயரகுநாத சேதுபதி (1760–1809)



மன்னர் பாஸ்கர சேதுபதியின் தந்தையார்
துரைராஜா (எ) இரண்டாம் முத்துராலிங்க
சேதுபதி (1841–1873)



இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு
முதலாவது குடமுழுக்கு விழாவினை
1–11–1902ல் நடத்திய மன்னர் பாஸ்கர சேதுபதி

ஒருமுறை புளிவைத்து விளக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.[1]

இவை தவிரத் திருக்கோயிலுக்குச் சர்வமான்யமாக விடப்பட்ட தோப்பு. நிலம். கிராமம் ஆகியவைகளில் பெற வேண்டிய வருவாய்களையும். கண்ணும் கருத்துமாக இருந்து பெற்றுத் திருக்கோயில் கருவூலத்தில் சேர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது இராமநாத பண்டாரத்தின் பணிகளில் முக்கியமானதாக இருந்து வந்தது. மற்றும் சுவாமி சன்னதி. அம்மன் சன்னதி. விசுவநாதர் சன்னதி. உண்டியல்களில் கிடைக்கின்ற ஆதாயம். ருத்ராபிசேகம் பஞ்சாமிர்தம். பட்டு. பருத்தி. பொன். வெள்ளி. பொட்டுகள் ஆகிய உபயங்கள் இராமேசுவரம் சேதுமாகாளி அம்மன். நம்பு நாச்சியம்மன் கோவில்களில் கிடைக்கின்ற உபயங்களும். இராமேசுவரம் திருக்கோயில் வருவாய் இனங்களாகக் கொள்ளப்பட்டன. கடற்கரையில் தோணிகளுக்கு வழங்கப்படுகின்ற கடவுச் சிட்டுப் பணம். பாடிகாவல். தரகன் சுவந்திரம். இராமேசுவரம் கடை வீதியில் விற்பனையாகும் 100 மரக்கால் தானியத்திற்கு ஒரு மரக்காலும். எண்ணெய். தேன். நெய் ஆகியவைகளுக்கு 100 படிக்கு ஒருபடியும். எண்ணிக்கையில் விற்கப்படுகின்ற பொருட்களுக்கு 100–க்கு ஒன்றே முக்காலும். உள்ளூர் வணிகர்களுக்கு 100–க்கு ஒன்றும். நிறுக்கப்பட்ட பொருட்களுக்கு 100–க்கு ஒன்றேகால் பணமும். மகமை பத்துப் பொன்னுக்கு அரைப்பணமும். பாம்பன் துறை வழியாக இராமேசுவரம் வரப்பெறும் நெய்சுமை ஒன்றுக்கு ஒன்றரையே மாகாணிப் பணமும். மேலும் காளை மாடுகளுக்குச் சூலம் போடுதல். அவைகளை அக்கரைக்கு ஏற்றி அனுப்புதல். அரண்மனைப் பட்டியில் உள்ள பயனற்ற பசுக்கள். அனாதைப் பிணங்களின் ஆதாயங்களும். கோயில் வருவாய்களாகக் கொள்ளப்பட்டதாக கி.பி. 1714ம் ஆண்டு செப்பேடு வழி அறிய முடிகிறது.

---

1) கமால் டாக்டர் எஸ்.எம். சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1993) செப்பேடு எண். 37

## கூடுதலான சிறப்பு

இவைகளைக் கடமைப் பற்றுடன் நிறைவேற்றி வைக்கும் இராமநாத பண்டாரத்தின் பணி பக்தர்களிடையே மட்டுமல்லாமல் இராமேசுவரம் ஊர் மக்களிடமும் மதிப்பையும் பாராட்டையும் பெறத்தக்க பதவியாக இருந்தது. இதனை நன்கு உணர்ந்த தளவாய் சேதுபதி என்ற சடைக்கன் சேதுபதி (கி.பி. 1622 – 45) இந்த இராமநாத பண்டாரம் பதவியினைப் பகட்டானதாகவும் அதிகாரம் மிக்க பொறுப்பான பதவியாகவும் செய்து இருந்தார். இராமேசுவரம் திருக்கோயிலின் உயர் அலுவலாக மட்டுமல்லாமல் கடல் சூழ்ந்த சேதுபதிச் சீமையில் தனித்திவாக உள்ள இராமேசுவரம் தீவிற்குச் சேதுபதி மன்னரது ஏகப்பிரதிநிதியாக நியமனம் செய்யப் பட்டிருந்தார்.[1]

கி.பி. 1632–ல் வழங்கப்பட்ட அதிகார மாற்ற ஆவணப்படி "இராமநாத பண்டாரம் அவரவர் செய்த குற்றங்களைப் பரிசிலித்து தண்டனை பண்ணி. விலங்கிடுகின்ற பேரை விலங்கிட்டு. குற்றத்திற்கு அபராதம் வாங்கி நடப்பித்துக் கொள்ளச் சொல்லி கட்டளையிட்டு" என்ற வாசகம் அந்த ஆணையில் இடம் பெற்றுள்ளது.

"இராமநாத சுவாமிக்கு நடக்கிற கிராமத்திலேயிருந்து மணியக்காரர். கணக்குப் பிள்ளைமார். குடியானவர்களையும். கோயிலிலே சஞ்சாரம் பண்ணுகிற தொழிலாளிகளையும். பட்டர் முதலான பேர்களையும்" இந்த அதிகார அமுலுக்குக் கட்டுப்பட்டவர்களாகச் சேதுபதி மன்னர் அறிவித்து இருந்தார்.

சேதுபதி மன்னரது இந்தச் செயல்பாடு இராமநாத பண்டாரத்தின் பதவிக்குப் பெருமை சேர்த்துக் குற்றவியல் வரலாற்றின் சிறப்பான செயலாக விளங்குகிறது. இதன் காரணமாக இராமநாத பண்டாரம் கோவிலுக்கு வெளியேயும்

1) இராமேஸ்வரம் திருக்கோவில் செப்பேடு எண்

பல நல்ல பணிகளை மேற்கொண்டிருந்தார் என்பதை கி.பி.1780. கி.பி.1786-ல் தங்கச்சிமடம் கிராமத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் இருந்து தெரிய வருகிறது.[1]

அங்கே சேதுயாத்திரை பயணிகளுக்காக அமைக்கப் பட்ட தீர்த்தக் கட்ட அமைப்பிற்கும் அங்கு அடக்கம் பெற்றுள்ள இஸ்லாமியத் துறவியின் சமாதியில் கட்டுமானம் அமைக்க உதவியதையும் இந்தக் கல்வெட்டு வாசகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விதம் இராமேசுவரம் திருக்கோயிலின் இராமநாத பண்டாரத்தின் பதவி. ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகள் நீடித்து வரலாறு படைத்தது என்பதைச் சேதுபதி மன்னரது செப்பேடுகளும். தமிழக அரசின் ஆவணக் காப்பகக் கோப்புகளும் தெரிவிக்கின்றன.

## கி.பி. 19வது நூற்றாண்டில்

கி.பி. 19வது நூற்றாண்டில் இந்தப் பணியில் இருந்தவர்களது பணிக்கால நடவடிக்கைகள் அவர்கள் பொறுப்பேற்று இருந்த புனிதப் பணிக்கு இழுக்கை ஏற்படுத்துவதாகவும் அந்தப் பதவியில் இருந்த முன்னவர்களது செயல்பாடுகளுக்கு முரணாகவும் அமைந்து விட்டதை அறியும் பொழுது இந்தப் பண்டார சன்னதியிடம் யாரும் வெறுப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. அரசியல் மாற்றங்களினால் நாட்டிற்கும் மக்களுக்கும் பின்னடைவு ஏற்படும் பொழுது கோயில் பணியாளர்கள் சுயநலமும். பதவி ஆசையும் கொண்டு ஆடம்பரப் பிரீதி மிக்கவர்களாக மாறுவது. பொது வாழ்வு பற்றிய கசப்பான படிப்பினைகளை அறிவுறுத்துவதாக உள்ளது.

தமிழக வரலாற்றில். ஆற்காடு நவாப் என்ற அரசியல் சக்தி. பதினெட்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ந்து

1) ஆவணம் ஆண்டு இதழ் தஞ்சாவூர் பக்கம் எண். 1998

வலுப்பெற்று இந்தத் தமிழ் மண்ணின் பாரம்பரிய ஆட்சியாளராக இருந்த தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மன்னர்களது தன்னரசுத் தன்மையையும் பல தலைமுறைகளாகப் பாளையங்காரர்களாக வாழ்ந்த மக்கள் தலைவர்களது சுவாதினத்தையும் தறித்துச் சுருக்கியது. இந்தச் சூழ்நிலையில் கி.பி.1772-ல் சேதுபதியாக இருந்த இளம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி போரில் தோற்கடிக்கப்பட்டுத் திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் கைதியாக அடைக்கப் பட்டார்.[1]

இதனால் சேதுபதி மன்னரது சிறப்பான கோவிலின் அன்றாட நடைமுறைகள் தடைபட்டு கோயில் கருவறைகள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டன. இந்நிலையில், இராமேசுவரம் திருக்கோயில் குருக்களும், கட்டளை காரியஸ்தர்களும் சென்னை சென்று நவாப்பைப் பேட்டி கண்டனர். கோயில் தரும கர்த்தாவான சேதுபதி மன்னர் சிறையில் இருப்பதால், கோயிலில் பூஜை முதலான நடைமுறைகள் தடைப்பட்டுள்ள அவலத்தை அறிந்த நவாப், கோயில் ஆதினகர்த்தரான இராமநாத பண்டாரத்தின் பொறுப்பில் கோயில் காரியங்களை நடத்திவருமாறு கோயில் குருக்களுக்கு ஆணை பிறப்பித்தார். 28.08.1772 தேதி முதல் இராமநாத பண்டாரம், சேது ராமநாதபண்டாரம் என்ற பெயரில் இராமேஸ்வரம் கோயிலின் வளமையான நடைமுறைகளை கண்காணித்து வந்தார்.[2]

ஆனால் ஜுலை 1781-ல் சேதுபதி மன்னருக்கும் நவாப்பிற்குமிடையே கையெழுத்தான கோட்டைப்பட்டின ஒப்பந்தப்படிச் சிறையில் இருந்த சேதுமன்னர் மீண்டும் இராமநாதபுரம் அதிபதியானார்.[3] மன்னர் இல்லாத இந்த

1) Rajayyan Dr. K. History of Madurai (1972) Page

2) டாக்டர் எஸ்.எம். கமால் சேதுபதி மன்னர் செப்பேடுகள் – 1997

3) டாக்டர் எஸ்.எம். கமால் விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் – 1987

இடைப்பட்ட காலத்தில் (கி.பி.1772 - 81) அப்போது இருந்த இராமநாத பண்டாரம் நாற்பதினாயிரம் பக்கோடா பணத்தை கையாடல் செய்து இருப்பது அறிந்து பண்டாரத்தைப் பணிநீக்கம் செய்து அவருக்குப் பதிலாக ரகுநாத குருக்கள் என்பவரைக் கோயில் நிர்வாகியாக நியமனம் செய்தார்.[1]

அடுத்து மடத்து முறைப்படி நான்கே வயதான சின்ன இராமநாதனை இராமநாத பண்டாரம் என நியமனம் செய்துவிட்டு அன்றைய இராமநாத பண்டாரம் இறந்துவிட்டார். கி.பி.1793ல் சேதுபதி மன்னர் இந்தச் சுவீகாரத்தை அங்கீகரித்ததுடன் பால்ய பண்டாரத்தின் சார்பாக அவரது தந்தை தில்லை நாயகத்தை கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வருமாறு செய்தார். ஆனால் கி.பி.1795ல் ஆற்காடு நவாப்பின் மேலாண்மையைப் புறக்கணித்து, தங்களது படை வலிமையினால், புதிய அரசியல் ஆளவந்தார்களாக மாறிய ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் சேதுபதி மன்னரை பதவி நீக்கம் செய்து திருச்சிராப்பள்ளிச் சிறையில் மீண்டும் அடைத்தனர்.

## கருப்பு ஏடு

மறவர் சீமையில் தொடர்ந்த அரசியல் குழப்பங்கள், மக்கள் கிளர்ச்சிகள் ஆகிய சூழ்நிலைகள் சேது இராமநாத பண்டாரம் சுயநலத்தை வளர்த்துக் கொள்ளவும், கோவில் பதவியைக் சிறுமைப்படுத்துவதற்கும் பயன்பட்டன. திருக்கோயில் பணமும் திருவாபரணங்களும் இராமநாத பண்டாரத்தின் சொந்த சொத்துக்களாயின. குதிரையில் அமர்ந்து மன்னரைப் போல வீதி உலா வந்தார். மடத்திற்குப் பதில் மாளிகையில் தேவதாசிகளுடன் கும்மாளம் கொட்டினார். மதுரை, நெல்லைச் சீமைகளில் இருந்து நாட்டிய நங்கைகள் வரவழைக்கப்பட்டு ஆதினகர்த்தருக்குக் களிப்பூட்டும்

1) Pannelag Price political kinship and the colonial India (1990)

கைங்கரியத்தில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கி.பி. 1816-ல் சின்ன இராமநாதனது காலம் வரை இந்தத் தீச்செயல்கள் நடைபெற்றன. இதற்கிடையில் இராமநாதபுரம் ஜமீன்தார்களாக இருந்த ராணி மங்களேஸ்வரி நாச்சியாரும், இராமசாமி சேதுபதியும் மதுரை சீமைக் கலைக்கடருக்குச் சின்ன ராமநாதனது செயல்பாடுகள், கையாடல், கோயில் கடமைகளை நிறைவேற்றாத நிலை பற்றிப் பல புகார்கள் அனுப்பியும் நிலைமை சீரடையவில்லை. கி.பி.1815-ஆம் வருட வரைவோலை ஒன்றின்படி சின்ன இராமநாத பண்டாரம் ரூ.1,40,000/- வரை இராமேசுவரம் திருக்கோயில் நிதியைக் கையாடல் செய்து கோவிலுக்கு இழப்பு ஏற்படுத்தி இருந்ததாகத் தெரிகிறது.[1]

கோயிலுக்குச் சொந்தமான நகைகள், முத்துமாலைகள் ஆகியவைகளைத் தேவதாசிகளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தது, புதிய பங்களா கட்டியது, புதிய அலங்கார வண்டிகளைச் செய்தது ஆகியவைகளுடன் கோயில் திருவாபரணங்களை ரூ.64,000/-க்கு ஈடு வைத்தது என்பன போன்ற இனங்கள் இந்த இழப்பில் அடங்கும்[2]

இந்தப் பண்டாரத்தை அடுத்து கி.பி.1819இல் பணியேற்ற வெங்கடாசலம் என்பவர் சேது இராமநாத பண்டாரம் எனத் தன்னைப் பிரகடனப் படுத்திக் கொண்டதுடன், இராமநாதபுரம் சேதுபதிகள் இராமேசுவரம் திருக்கோயில் தர்மகர்த்தாக்கள் அல்ல என்று கூறிப் பல வழக்குகளில் வாதாடினார். இவைகளுக்கு ஆதரவாகக் காட்டுவதற்கு ஏற்கனவே திருக்கோயிலில் உள்ள பதினெட்டாவது நூற்றாண்டுச் சிற்பங்களை சிதைத்தும் மன்னர் முத்து விஜயரகுநாத சேதுபதி சிலைகளுக்குத் தாடியும், மீசையும் பொருத்தி உருமாற்றம்

1) Pamela Price G. Kinship and the colonial rule in India (1990)
2) Pamila Price G. Kinship and the colonial rule in India (1990)

செய்தும். திருக்கோயிலில் இருந்த செப்பேடுகளிலும் கல்வெட்டுக்களிலும் அவற்றிற்கு ஏற்றாற்போல திருத்தங்களும் செய்தார்.

கி.பி. 1832–ல் கோயிலில் நிர்வாகம் முறையாக நடைபெற வில்லை. பொறுப்பிலிருந்த சேது இராமநாத பண்டாரம் கோயில் பணத்தைக்கையாடல் செய்திருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டது. இதனை அறிந்த கும்பெனி நிர்வாகம் கோயில் நிர்வாகத்தைச் சேது இராமநாத பண்டாரத்திடமிருந்து பறித்து இராமநாதபுரம் வட்டாட்சியரிடமும் உதவி ஆட்சியரிடமும் ஒப்படைத்தது கி.பி.1835ல் கோயில் நிர்வாகம் மீண்டும் பண்டாரத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் கோயில் சொத்துக்களைக் கையாடல் செய்ததுக்கு எவ்வித பரிகாரமும் ஏற்படவில்லை. தொடர்ந்து இராமநாதபுரம் ஜமீன்தார் பண்டாரத்தின் நியமனம் பற்றிப் பல ஆட்சேபனைகள் செய்த பிறகு இராமநாதபுரம் மன்னருக்கும் பண்டாரத்திற்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. என்றாலும் கி.பி. 1837இல் இராமேஸ்வரம் கோயில் விழா சம்பந்தமான ஊர்வலத்தில் சென்ற பக்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து அதற்குக் காரணமான இராமநாத பண்டாரம் தண்டிக்கப்பட்டார். கி.பி. 1854ல் பண்டாரமும் மரணமுற்றார். அவர் இறப்பதற்கு முன்னர் தன் வாரிசாக சொக்கலிங்கம் பிள்ளை என்பவரை நியமித்தார். இவர் கி.பி. 1857இல் இறக்கும் போது சிதம்பரம் பிள்ளையை நியமித்தார்.

இவரை அடுத்து பண்டாரம் பதவியை ஏற்ற பெரியநாயகம் பிள்ளை. அவரைவிட இன்னும் ஒரு படிமேலே சென்று இவர் தனது பெயரை கி.பி. 1854–க்குப் பிறகு கோயில் சுவரிலும் கொடிமரத்திலும் செதுக்கி வைத்தார். இவைகளினால் வரலாற்றைப் பொய்ப்பித்து விடலாம் என்பது அவர் கண்ட கனவு.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தப் "புரட்சிதரப் பண்டாரங்களை ஆதரித்துக் கோயில் குருக்களும், நயினாக்களும், ஸ்தானிகர்களும், தங்களது தகுதிக்கும் பணிக்கும் இழிவு – ஏற்படுத்துமாறு நடந்து கொண்டது ஆகும். மதுரைச் சீமை கலைக்டர்களாக ரூயிஸ்பீட்டர், விவாஸ், சுல்லிவன் ஆகியோரும் சென்னைக் கோட்டையில் இருந்த கும்பெனித் தலைமையும், வரலாற்றையும், நடைமுறையையும் மறந்து இந்தப் புதிய வரலாறு படைத்த தர்மகர்த்தாக்களது நடவடிக்கைகளை ஊக்குவிப்புச் செய்யும் வகையில் நடந்து கொண்டனர். அதனால் கம்பெனியார்களது நீதிமன்றத் திர்ப்புரைகளும் நியாயமற்ற முறையில் வெளியிடப்பட்டன. இந்தப் பரங்கிகளது பகல் கொள்ளையும், அதிகார ஆர்ப்பாட்டங்களும் புனித சேது நாட்டில் நடைபெறுவதற்கு அணு அளவு கூட இடம் கொடாது எதிர்த்த மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழிவந்த ஆட்சியாளர்களைப் பழிவாங்கி இழிவு படுத்த வேண்டும் என்பது அவர்களது ஆசை போலும். ஆனால் வாய்மையே வெல்லும் என்ற நியதிக்கேற்ப மன்னர் பாஸ்கர சேதுபதியின் காலத்தில் மதுரை கிழக்கு நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணையொன்றை 16.03.1895ம் தேதி பிறப்பித்தது. அதில் அப்பொழுது இருந்த சாமிநாதபிள்ளை என்ற பண்டாரத்தை நீக்கிவிட்டு மன்னர் பாஸ்கர சேதுபதியினைக் கோயில் அறங்காவலராக அங்கீகரித்து உத்திரவிட்டது.[1]

## புதிய கோயில் நிர்வாகி

இதனால் இராமேசுவரம் திருக்கோயில் ஆதினகர்த்தர் பதவிக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. பவித்திரமான தெய்வீகப் பணிக்கெனக் கி.பி. 1604–ல் சடைக்கன் உடையான் சேதுபதியால் ஏற்படுத்தப்பட்ட சைவ பண்டாரத்தின் வழியினர் இராமேசுவரம் திருக்கோயிலின்

1) கமால் டாக்டர் எஸ்.எம். – மன்னர் பாஸ்கர சேதுபதி

பெருமைக்கும் கோயிலின் சொத்துக்களுக்கும் ஏற்படுத்திய இழப்பும், களங்கமும் வரலாற்றில் அகற்ற முடியாத கரும்புள்ளிக் கறையாக நிரந்தரமாக நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

மிகச் சிறந்த சைவ சித்தாந்தியும் இந்து சமய சாத்திரங்களில் முழுமையாக தோய்ந்து நின்ற இளம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள் இந்தத் திருக்கோயிலின் நடைமுறைகளில் பழமையுடன் புதுமையும் பொலிந்து ஆகமச் சிறப்பை வெளிப்படுத்தும் வண்ணம் திகழப்பாடுபட்டார். பூசனைகளும், விழாக்களும் ஆகம நெறிகளின் படி நடைபெற வேண்டும் என்பது அவரது உறுதியான கருத்து கோயில் தர்மகர்த்தா என்ற முறையில் மன்னர் அவர்கள் இராமேஸ்வரம் இராம மந்திரத்தில் தங்கியிருக்கும் பொழுதெல்லாம் அர்த்த ஜாம பூஜைகளில் கலந்து கொண்டு களிப்பு எய்தியதுடன் பூஜையின் முடிவில் சுவாமியைச் சப்பரத்தில் அமர்த்தி வைத்துப் பள்ளி அறைக்கு எடுத்துச் செல்லும் பொழுது மன்னர் அவர்கள் இந்தக் கோயிலின் பணியாட்களைப் போன்று தி வெட்டிச் சுழுந்தை ஏந்தியவாறு பய பக்தியுடன் சுவாமிக்கு வழிகாட்டிச் செல்லும் பணியை மேற்கொண்டிருந்தார். "இறைத் தொண்டில் மன்னரும் மற்றவரும் சமமானவர்கள் தானே"[1]

ஆண்டு தோறும் மகோதைய நாளன்று தனுஷ் கோடியில் பிதிரர்களுக்காக கடலில் நீராடி முடித்த பக்த கோடிகள் பதினைந்து கல் தொலைவில் நடந்து வந்து இராமேஸ்வரம் திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்யும் வழக்கம் இருந்து வந்தது. இதனால் பக்தர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாட்டினை அகற்றும் நோக்கத்துடன் மன்னர் அவர்கள் தை, அமாவாசை மகோதைய நாளன்று சுவாமியும், அம்பாளும், தனுஷ்கோடி தீர்த்தக்கரைக்கு எழுந்தருளி இறை

1) கமால் டாக்டர் எஸ்.எம். மன்னர் பாஸ்கர சேதுபதி

அடியார்களுக்குத் தரிசனம் அளிக்கும் ஏற்பாட்டினைச் செய்தார். அன்றைய கோயில் நடைமுறைகளுக்கு இந்த நிகழ்ச்சி புதுமையானதாக இருந்தாலும் பக்தர்களது நலன் கருதிப் புகுத்தப்பட்ட நிகழ்ச்சியாகும் இது. இன்னும் மன்னர் அவர்கள் திருக்கோயிலின் அன்றாட நடைமுறைகளில் புகுத்திய பல மாறுதல்கள் கோயில் பணியாளர்களான பூஜகர்கள், ஸ்தானிகர்கள், நயினாக்கள், போன்றவர்களுக்கு மிகுந்த வெறுப்பையும், எரிச்சலையும், ஏற்படுத்தின. மன்னரது நிர்வாகத்திற்கு முன் இருந்த பண்டாரங்களின் நிர்வாகத்தில் எவ்வித கட்டுப்பாடும் கண்காணிப்புமின்றி பொழுது போக்காக இயங்கி வந்த இந்தப் பணியாளர்கள் மன்னருக்கு எளிதாகக் கலகக்கொடி தூக்கினர்.

இந்து சமூகத்தின் மிகவும் பிற்படுத்தப்பட்ட குலத்தினரான – மறவர் இனத்தைச் சார்ந்த – மன்னர் பாஸ்கர சேதுபதி திருக்கோயிலின் தர்ம கர்த்தாவாக இருப்பதற்கு தகுதியற்றவர் என்பது தான் அவர்களது முதலும் முடிவுமான ஆட்சேபனை ஆகும். கி.பி. 19ம் நூற்றாண்டின் இறுதியில் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்ட பார்ப்பனர்கள் பிறப்பால் உயர்த்தவர்கள் என்ற வெறியினால் இயங்கி வந்தனர் என்பதை இந்த நிகழ்ச்சி கோடிட்டுக் காட்டுகிறது.

கி.பி. 19ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின் பொழுது இந்தச் சனாதனிகள் தாங்கள் உயர் குலத்தவர் என துரைத்தனத்தாரிடம் பல சலுகைகளைப் பெற்று வந்ததால் அவர்களது சாதி வெறி, மன்னர் பாஸ்கர சேதுபதியையும் மிகவும் தாழ்ந்தவராக கருதும் அளவிற்கு சென்று விட்டனர். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் சேதுபதிகளின் கருணையால் இராமேஸ்வரம் திருக்கோயிலில் முக்கியப் பணிகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டவர்கள் என்ற வரலாற்றையும் மறந்து பாஸ்கர சேதுபதியை எதிர்ப்பதற்குக் கச்சை கட்டிக் கொண்டு நின்றனர்.

அவர்களுக்கு மன்னர் மீது ஒரு அருவறுப்பு. காரணம் அவர்கள் படித்திருந்த இந்து சமய சாத்திரங்களில் மன்னர் ஆழ்ந்த அறிவுடையவராக விளங்கினார். அடுத்து அவர்கள் மன்னர் மீது தொடுத்த எதிர்ப்புக்கணை, மன்னர் பிராமணர் அல்லாத இந்து மறவராக இருப்பதும் அவர் புலால் உண்ணும் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதும் ஆகும். இதனால் திருக்கோயிலின் திருஆபரணங்களைக் கூட அவர் தொடக்கூடாது என்பதும் அவர்களது வாதம் ஆகும். ஆனால் அதே சமயத்தில் தமது பதவிக்கும் திருக்கோயிலின் புனிதத்திற்கும் திராத களங்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பண்டார சன்னதியின் மீது அவர்களது பார்வை பதியவில்லை. தமக்குள்ள பல பிரச்சினைகளுக்கு இடையில் இந்த மராட்டிய பிராமணர்களுடனான ஊமைப் போரைத் தொடர்ந்து கொண்டு மன நிம்மதியை இழப்பதற்கு மன்னர் தயாராக இல்லை. இதனால் மனமுடைந்த பாஸ்கர சேதுபதி மன்னர் தமது ஆறு ஆண்டுகால கோயில் பணிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முறையில் அவரது தர்ம கர்த்தா பணியினை ராஜினாமா செய்தார்.

அப்பொழுது இராமேஸ்வரம் திருக்கோயிலின் திருப்பணிகளில் ஈடுபட்டிருந்த தேவகோட்டை ஜமீன்தாரும், மன்னரது மிக நெருங்கிய நண்பருமான கே.ஏ.எல்.ஏ.ஆர். இராமசாமி செட்டியார் அவர்களை அரசாங்கம், இராமேஸ்வரம் திருக்கோயிலின் மேனேஜராக 25.01.1901–ல் நியமனம் செய்தது.

தொடர்ந்து சென்னையைச் சார்ந்த சனாதனச் செல்வர் பி.எஸ்.சிவசுவாமி ஐயர் என்பவர் மதுரையில் உள்ள இராமநாதபுரம் ஜில்லா சப்கோர்ட்டில் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கான திட்டம் ஒன்றை தயாரித்தும் அதனை நிறைவேற்றி வைப்பதற்கான நிரந்தர அமைப்பில் தர்ம கர்த்தாக்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற

முறைப்பாட்டினை அந்த நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்தார். அப்பொழுது தமிழகத்தில் இந்து சமய அறநிலைய சட்டம் அமுலில் இல்லாத காரணத்தால் இத்தகைய தொரு திட்டத்தை நீதிமன்றம் தயாரித்து அமுலுக்கு கொண்டு வர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

இதன் காரணமாக கி.பி.1913–ல் இராமநாதபுரம் ஜில்லா சப்கோர்ட் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கென நடைமுறைத் திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளித்ததோடு கோயில் நிர்வாகத்தை நடத்துவதற்கான குழுவினரான இராமநாதபுரம் சேதுபதி மன்னரையும் தேவகோட்டை ஜமீன்தார் இராமசாமி செட்டியார் அவர்களையும் நிரந்தர டிரஸ்டிகளாக நியமித்தது. இந்தக் குழு மிகச் சிறப்பாக இயங்கி வந்ததுடன் இராமேஸ்வரம் திருக்கோயிலின் இரண்டாவது குடமுழுக்கு விழாவினையும் 6.2.1925–ல் மிகச் சிறப்பாக நிறைவேற்றி வைத்தது.

அடுத்து 1922–ல் இந்து சமய அறநிலையச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அரசியல் சூழ்நிலையின் காரணமாக இந்தக் கோயிலின் நிர்வாகக்குழுவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஜனநாயக முறையிலான மக்கள் பிரதிநிதிக்கும், பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் குழுவின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுக் குழுவும், பெருக்கமுற்றது. தொடர்ந்து பல மாறுதல்கள் ஆலய நிர்வாகம் இந்து சமய அறநிலையத் துறை அலுவலரது நேரடியான மேற்பார்வையில் நடைபெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

---

1) கமால் டாகடர் எஸ்.எம். – சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1990)

# 2. கோயில் வருவாய்

இராமேசுவரத்தில் கோயில் கொண்டுள்ள இறைவனது தொண்டராக, இறைப் பணியாளராக இராமநாத சுவாமியின் காரிய துவந்தரராகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட சேதுபதி மன்னர்கள், இந்தத் திருக்கோயிலின் அனைத்துச் சிறப்புகளுக்கும் துணையாக இருந்து வந்தார்கள் என்பது வரலாறு. கி.பி. 1169-ல் இலங்கையர் பாண்டிய நாட்டில் படையெடுத்த பொழுது ஒரு சிறு கட்டுமானக் கருவறையுடன் இருந்த கோயில் இன்று கிழமேல் 860 அடிக்கு தென்வடல் 660 அடி என்ற அளவில் செவ்வக வடிவில் விரிவு பெற்று மூன்று நீண்ட பரந்த பிரகாரங்களையும், மூன்று விசாலமான சன்னதிகளையும் பல சிறு கோயில்களையும் கொண்டதாகப் பரந்து விரிந்து வளர்ந்து இருப்பதற்குச் சேதுபதி மன்னர்களது தளராத உழைப்பு, திருப்பணிகள் ஆகியவையே காரணங்களாகும்.

இத்தகைய கோயிலில் ஆகம முறைப்படி ஆறுகால பூஜைகளும், சந்திகளும், கட்டளைகளும், உத்சவங்களும் முறைப்படி ஒழுங்காக நிறைவேற்றத் தக்க பொருள் வசதி வேண்டும் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆதலால் சேதுபதி மன்னர்கள், இந்தச் செலவுகளுக்கு உடலாகப் பயன்படும் வண்ணம் எழுபத்து இரண்டு ஊர்களை (நமக்குக் கிடைத்த செய்திகளின்படி) இராமநாதபுரம், சிவகெங்கை, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலிச் சீமைகளில் பல்வேறு சமயங்களில் இந்தக் கோயிலுக்குச் சர்வமான்யமாக வழங்கியிருக்கின்றனர். இந்தக் கிராமங்களில் இருந்து

ஆண்டுதோறும். அறுவடையின் பொழுது மகசூலில் இருந்து குடிகள் மன்னருக்கு இருக்கும் பங்கு தானியம் முழுவதும் இந்தத் திருக்கோயிலுக்குச் சேர்ந்து விடும். மேலும். இந்தத் கிராமங்களில் உள்ள பள்ளு. பறை மற்றும் குடிகள் அனைத்தும் மன்னருக்குச் செலுத்தி வந்த பல்வேறு வகையான பட்டடைகளும் திருக்கோயில் வருவாயாக அமைந்தன.

**அவையாவன**

கொடிக்கால்வரி. தட்டுவரி. பாசிவரி. புகையிலைவரி. வேண்டுகோள்வரி. பழவரி. கோசாலைவரி. நன்மாட்டுவரி. மானோம்புக் கிடாய்வரி. மகாநவமிக் கிடாய்வரி. தச்சர்வரி. சாணார்வரி. கலவாழம். பனங்கடமை. திருக்கைவரி. செக்குவரி. மனைவரி. கூரைவரி. மேலும் அம்பலம். காடு காவல். இடைகுடி வரி. கிதாரிவரி. துலுக்கர் தறிக்கடமை. கடைவரி. பறைவரி. முள்ளுவரி. காணிக்கை வரி. சுங்கம். மகமை என்ற கடமைகளும் அரசுக்குரியனவாக இருந்தன. திருக்கோயிலுக்குச் சர்வமானியமான சேதுமன்னர்களால் வழங்கப்பட்ட ஊர்களில் இருந்து தண்டல் செய்யப்பட்ட இந்த வரிப்பாடுகளும். திருக்கோயில் வருவாய்களாயின. இந்த வருவாய்கள் தாம் திருக்கோயிலின் பிரதான நிலையான வருவாய்கள் எனலாம்.

மற்றும் மேலே குறிப்பிட்டபடி. கோயில் உண்டியல்களில் வரப்பெறும் பணம். காணிக்கை ஆகியவைகளும். தோணித் துறைகளில் வழங்கப்படும் கடவுச் சீட்டுக்களின் பேரில் கிடைக்கும் கட்டணமும். கடை வீதிகளில் வசூலிக்கப்படும் மகமை. அள்ளுத் திர்வை ஆகியவைகளும் திருக்கோயிலுக்கான வருவாய்களாக அப்பொழுது இருந்தன.

## 3) சேதுப்பாதையில் அன்னதானம்

மறவர் சிமையின் மன்னர்களான சேதுபதிகள், இணையற்ற இராமேஸ்வரம் திருக்கோயிலின் ஏற்றத்திற்கும் எழில் தோற்றத்திற்கும் எந்த அளவு தங்களையும் தங்களது ஆட்சியையும் அர்ப்பணித்து வந்துள்ளனர் என்பதை முன்னர் பார்த்தோம். இராமேஸ்வரம் திருக்கோயில் பற்றிய செய்திகள் பாரத நாடு முழுவதும் மெதுவாக பரவி வந்ததால் மக்கள் இதிகாச கால எச்சமாக விளங்கும் சேது அணையையும் இராமேஸ்வரம் திருக்கோயிலையும் நேரில் சென்று தரிசித்து இறையருளைப் பெற வேண்டும் என்ற உந்துதலும் நாளுக்கு நாள் வலுத்து வளர்ந்து வந்தது.

தொடக்கத்தில் கொங்கணம், கன்னடம், ஆந்திரம், மஹாராஷ்டிரம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த பக்த கோடிகள் இராமேஸ்வரத்திற்கு வருகை தரத் தொடங்கினர். இந்தப் புனிதப் பயணிகளின் போக்குவரத்து சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு விந்திய மலையையும், இராஜபுதன பாலைவனத்தையும் தாண்டிக் காஷ்மீர், நேபாளம், வங்கம், கலிங்கம் ஆகிய மாநிலங்களில் இருந்தும் பெருமளவிலான பக்தர்கள் ஆண்டுதோறும் இராமேஸ்வர சேது யாத்திரை மேற்கொள்ளத் தொடங்கினர்.

மழையிலும் பனியிலும் நனைந்து வெய்யிலில் உலர்ந்து உடலும் உள்ளமும் வாடியவர்களாக வருடத்தின் பல மாதங்கள் கால்நடையாகவே இராமேஸ்வரம் வந்து சேர்வதை அறிந்த சேதுபதி மன்னர்கள் அந்தப் பயணிகளது நடைப் பயணத்தின்

போது உதவுவதற்காக – குறிப்பாக உண்ணும் உணவு, பருகும் நீரும், இளைப்பாறுவதற்கு இடமும் வழங்கும் பணிகளில் மிகுந்த அக்கறை கொண்டனர். இதன் காரணமாகச் சேதுநாட்டின் வடக்கு எல்லையான கோட்டைப் பட்டினத்தில் இருந்து தெற்கே தனுஷ்கோடி வரையிலான நெடுந்தொலைவில் பல அன்னசத்திரங்களை ஏற்படுத்தினர். இராமநாதபுரம் சமஸ்தான மேனுயுவலின்படித் திருமலை இரகுநாத சேதுபதி (கி.பி.1640 – 76) ஆட்சிக் காலம் முதல் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் (கி.பி.1762 – 95) காலம் வரையிலான ஆட்சிக் காலத்தில் 47 அன்னசத்திரங்கள் ஏற்படுத்தி சேதுயாத்திரை மேற்கொண்டுள்ள பயணிகளுக்கு குடிநீரும் உணவும் உறையுளும் மூன்று நாட்கள் வரை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்தனர். அந்த அன்ன சத்திரங்களின் பணி தொய்வில்லாமல் தொடர்வதற்காகச் சேதுபதி மன்னர்கள் பல கிராமங்களை இந்த அன்ன சத்திர பணிக்காகச் சர்வ மானியமாக வழங்கி வந்துள்ளனர். சம்பந்தப்பட்ட கிராமங்களிலிருந்து ஆண்டுதோறும் சேது மன்னருக்குக் கிடைத்து வந்த அனைத்து வகையான அரசு இறைகளும் வரிப்பாடுகளும் திர்வைகளும். இந்த சத்திரங்களுக்கு உரியனவாகச் செய்யப்பட்டன. இவ்விதம் சேது மன்னர்கள் அன்னதானப் பணிக்கென ஏற்படுத்திய அன்ன சத்திரங்களும் அவைகளுக்காகச் சர்வ மான்யமாக வழங்கப் பெற்ற கிராமங்களும் பட்டியலிட்டுத் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அன்னசத்திரங்கள் – அமைந்த அவைகளுக்கு வழங்கப்பட்ட
ர்வ ஊர்கள்கள் மானிய கிராமங்கள்

| அன்னசத்திரங்கள் | மானிய கிராமங்கள் |
| --- | --- |
| 1) செல்ல பூபால சத்திரம் இராமநாதபுரம் | 1. வெள்ள மரிச்சுகட்டி<br>2. கொடிக்குளம் |
| 2) வெள்ளையன் சேர்வை சத்திரம் திருப்புல்லாணி | 1. காஞ்சிரங்குடி |
| 3) ஆத்தங்கரை சத்திரம் | 1. நகரி காத்தான் |
| 4) பிள்ளைமடம் சத்திரம் | 1. சாத்தக் கோன் வலசை |
| 5) தோணித்துறை சத்திரம் மண்டபம் | 1. அத்தியூத்து |
| 6) கஜானா வெங்கட் ராவ் சத்திரம். | 1. திருப்புல்லாணி |
| 7) கோதண்ட ராம சத்திரம் | 1. பந்தப்பனேந்தல்<br>2. கடுக்காய் வலசை |
| 8) புருசோத்தம பண்டித சத்திரம் திருப்புல்லாணி | 1. கழுநீர் மங்கலம் |
| 9) தனுஸ்கோடி சத்திரம் | 1. ஆலங்குளம்<br>2. போத்த நதி |
| 10) தேவிப்பட்டினம் சத்திரம் | 1. தென் பொதுவக்குடி<br>2. அடந்தனக் கோட்டை<br>3. சிலுக்குவார்பட்டி |
| 11) அலங்கானூர் சத்திரம் | 1. கிழத்திசேரி |
| 12) உப்பூர் சத்திரம் | 1. சித்தூர் வாடி |
| 13) முத்துராமலிங்க பட்டின சத்திரம் | 1 முத்துராமலிங்கபட்டினம்<br>2. இளையாதான் வயல்<br>3. காடன் குடி |
| 14) முடுக்கன்குளம் சத்திரம் | 1. தோப்பூர்<br>2. களுவன்சேரி<br>3. மறக்குளம்<br>4. ஆலங்குளம் |

| | |
|---|---|
| | 5. சொக்கம்பட்டி |
| | 6. இலுப்பைக்குளம் |
| | 7. பனைக்குளம் |
| | 8. குறிஞ்சிக்குளம் |
| 15)வேலாயுத சத்திரம் பரமக்குடி | 1. வேலாயுதபுரம் |
| | 2. மிதிலைக்குளம் |
| | 3. இலுப்பக்குளம் |
| | 4. கிளியனேந்தல் |
| | 5. சிறுமிதிலைக்குளம் |
| | 6. வலையனேந்தல் |
| 16)பிடாரிசேரி சத்திரம் | 1. திருச்சுழி |
| 17)என்மணம் கொண்டான் சத்திரம் | 1. என் மணம் கொண்டான் |
| 18)புதுமடம் சத்திரம் | 1. புதுமடம் |
| 19)குடியூர் சத்திரம் | 1. கணபதியேந்தல் |
| 20) சாமிநாதமணியக்காரன் சத்திரன் மண்டபம் | 1. துரத்தியேந்தல் |
| 21) தனுஷ்கோடி சத்திரம் | 1. களத்தூர் |
| 22)நாகநாத சமுத்திர சத்திரம் | 1. இராமநாத ஓடை |
| 23)கடுகுச் சந்தை சத்திரம் | 1. கடுகுச்சந்தை |
| 24) அலங்கானூர் சத்திரம் | 1. கழுவன் சேரி |
| | 2. அலங்கானூர் |
| 25)சாமிநாத மணியக்காரன் சத்திரம் | 1. தெளிச்சாத்த நல்லூர் |
| 26) முத்துராமலிங்கபட்டினச் சத்திரம் | 1. வெட்டுக்குளம் |
| | 2. முத்துராமலிங்கபட்டினம் |
| | 3. பிரம்பு வயல் |
| | 4. மருதவயல் |
| 27) கோட்டைப்பட்டின சத்திரம் | 1. கொடிக்குளம் |
| 28) மல்லான் கிணறு சத்திரம் | 1. திருச்சுழி |
| | 2. அத்திக்குளம் |

| | |
|---|---|
| | 3. வலயபட்டி |
| 29) ராஜகோபாலன் சத்திரம் | 1. வயலூா |
| 30) முகுந்தராவ் சத்திரம் தேவிப்பட்டினம் | 1. தேவிப்பட்டினம்<br>2. காரேந்தல்<br>3. வெண்குளம் |
| 31) தனுஷ்கோடி சத்திரம் | 1. போத்த நதி |
| 32) மலையாளம் சத்திரம் | 1. திருப்புல்லாணி |
| 33) வேதாளை சத்திரம் | 1. அனிச்சகுடி |
| 34) பாம்பன் சத்திரம் | 1. மானகுடி |
| 35) அக்காள் மடம் சத்திரம் | 1. தேவூர் |
| 36) மேலக் கோபுர வாசல் சத்திரம் இராமேஸ்வரம் | 1. சித்தார்கோட்டை |
| 37) நந்த கோபாலன் சத்திரம் இராமேஸ்வரம் | 1. குமரியேந்தல் |
| 38) இராமேஸ்வர சத்திரம் | 1. குளுவன் குடி |
| 39) நாகப்பன் செட்டி சத்திரம் | 1. பெத்தனேந்தல் |
| 40) சுந்தர தாஸ் சத்திரம் திருப்பாலைக்குடி | 1. கோட்டையூர் கோட்டை<br>2. திருப்பாலைக்குடி |
| 41) தோணித்துறை சத்திரம் மண்டபம் | 1. அத்தியூத்து |
| 42) அம்பட்டமடம் சத்திரம் இராமேஸ்வரம் | 1. அரியகுடி |
| 43) போகலூர் சத்திரம் | 1. சத்திரக்குடி |
| 44) நீலகண்டிச் சத்திரம் | 1. அருவாகுடி |
| 45) முத்துவீராயி சத்திரம் இராமநாதபுரம். | 1. மஞ்சக்குளம்<br>2. கடம்பூர்<br>3. சிறுவயல்<br>4. கிழப்பனையூர் |
| 46) இதம்பாடல் சத்திரம் | 1. இதம்பாடல் |
| 47) அழகர் மலைச்சத்திரம் | 1. ஆய்க்குடி<br>2. சுந்தனாவூர் |

இந்த சத்திரங்களின் செயற்பாடு கி.பி. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நீடித்தது என்பதை இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்கள் தெரிவிக்கின்றன. கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சென்னையிலிருந்து மதுரைக்கும் பின்னர் மதுரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கும் ரயில் பாதைகள் அமைக்கப்பட்டதால் வடக்கே இருந்து வரும் சேதுப்பயணிகள் இராமேஸ்வரத்திற்கு நடை பயணமாக வருவது முற்றாக நின்றுவிட்டது. ஆதலினால் இந்த அன்ன சத்திரங்களின் தேவையும் பயணிகளுக்குத் தேவையற்றதாகி விட்டது.

இத்தகைய சூழ்நிலையின் காரணமாக இந்த சத்திரங்கள் கவனிப் பாரற்றுத் தாயற்ற குழந்தையைப் போல் ஆங்காங்கு பராமரிப்பு இல்லாத நிலையில் பயனற்ற கட்டடங்களாக மாறிவிட்டன. கி.பி. 1803ஆம் ஆண்டு முதல் சேது சமஸ்தானப் பரப்பு ஆங்கிலேயரின் நேரடிப் பொறுப்பில் கொண்டு வரப்பட்டதால் இந்த சத்திரங்களைப் பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை. அதனால் அவைகள் காலத்தின் கொடுமையினால் அழிந்து சிதைந்து விட்டன. இந்த சத்திரங்களில் தேவிபட்டினம். ஆற்றங்கரை. இராமேஸ்வரம் (மேல ரத வீதி) சத்திரங்கள் மட்டும் பழமையின் எச்சமாக நல்ல நிலையில் அமைந்து இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. என்றாலும் இந்த அன்ன சத்திரங்களின் பணி தடைபெற்று விட்டாலும் இராமேஸ்வரத்திற்கு யாத்திரையாக வருகின்ற பல மாநிலத்தவரும். பல சாதியினரும் சுவாமி தரிசனம் செய்து வசதியாகத் தங்கிச் செல்வதற்காக தர்ம சிந்தனையுள்ள பலர் தர்மசாலாக்களை இராமேஸ்வரம் நகரில் ஏற்படுத்தியுள்ளனர். அவைகளின் பட்டியல் வருமாறு.

1) மகாபீர் தர்மசாலா – இராமேஸ்வரம் இரயில் நிலையம் அருகில்

2) தூத்வாலா தர்மசாலா என்ற நேபாளிசத்திரம் திட்டைகுடியி லிருந்து கந்தமாதனம் செல்லும் வழியில்

3) தஞ்சாவூர் மஹாராஜா சத்திரம் - இராமேஸ்வரம் மேலத்தெரு

4) கண்டனூர் சி.ராம.சொ இராமநாதன் செட்டியார் - தெற்குரத வீதி

5) ஆரிய வைசிய சத்திரம் - மேலத்தெரு

6) பென்சிலால் அபீர்சந்த் தர்மசாலா - மேலத்தெரு

7) பகவான்தாஸ் பாக்லா சத்திரம் - திட்டைகுடி

(எ) இராஜஸ்தான் சத்திரம்

8) ஜம்மு சத்திரம் - நடுத்தெரு

9) வெங்கட்டராயர் சத்திரம் - மேலரதவீதி

10) உடுப்பி நரசிம்மராவ் சத்திரம் - வடக்குரத வீதி

11) குஜராத்தி சத்திரம் - கிழக்குத்தெரு

12) காசிமடம் திருப்பனந்தாள் சத்திரம் - நடுத்தெரு

13) யாழ்ப்பாணத்தார் சத்திரம் - வடக்கு ரதவீதி

14) மதுரை வி.எஸ்.கே. முத்துராமய்யர் சத்திரம் என்ற சௌராஷ்டிரர் சத்திரம் - கீழரதவீதி

15) குசல்வா சத்திரம் - தெற்கு ரத வீதி

16) அகல்யா பாய் சத்திரம் - கீழசன்னதி தெரு

17) பாங்கூர் சத்திரம் - தெற்கு ரத வீதி

18) நகரத்தார் விடுதி - தெற்கு ரத வீதி

19) ராம்குமார் சத்திரம் - மேல ரதவீதி

20) பரமக்குடி அய்யாசாமி செட்டியார் சத்திரம் - மேலரதவீதி

21) நாடார்கள் சத்திரம் - புதுத்தெரு

22) சித்திர காந்தையா தூர்வாசலு சத்திரம் (ஆந்திரா) - வர்த்தகர் தெரு

23) அரங்கையா செட்டியார் சத்திரம் - வர்த்தகர் தெரு

24) பெஜவாடா சுண்டூர் வெங்கிட்ட ரெட்டி சத்திரம் - வர்த்தகர் தெரு

25) சேட் மாணிக்செண்ட் கோரன்தாஸ் ஆமதாபாத் தர்மசாலை

– மேலத் தெரு

26) காலா பாடி சாமளா அம்மாள் சத்திரம் – மேலத்தெரு

27) இராஜசிவபக்ஸ் பாக்லா சத்திரம் – மேலத்தெரு

28) மிர்சாபூர்பிண்ணானி சத்திரம் – நடுத்தெரு

29) முகுந்தராயர் சத்திரம் – மேல ரத வீதி

30) கன்னடியர் சத்திரம் – ஜங்கமவடி – நடுத்தெரு

இயல் - VI

# 1. கல்லிலும் செம்பிலும்

முந்தைய காலங்களில் திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு துறைகளில் மக்களது தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனங்களாகவும் இருந்து வந்துள்ளன. குறிப்பாக ஊர்ச்சபை கூடுமிடமாக. தமிழ்மொழி பயிற்றுவிக்கும் பள்ளியாக. சிற்பம். ஓவியம் ஆகிய கலைகளில் பயிற்சிக் கூடமாக. கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெறும் அரங்காகப் பயன்பட்டு வந்துள்ளன. ஆதலால் திருக்கோயில் கருவறைச் சுவர்கள். அதிட்டான நுழைவு வாயில். கொடிமரம் போன்ற இடங்களில் திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட அறக்கொடைகள். மகாசபையின் தீர்ப்பாணை. மன்னரது மெய்க்கீர்த்தி போன்ற செய்திகள் கல்வெட்டுக்களாகப் பொறித்து வைக்கப்பட்டுள்ளன.

இதனால் திருக்கோயில் அமைந்துள்ள ஊர். அந்தப்பகுதி பற்றிய வரலாறுகளைத் தொகுப்பதற்கு இந்தக் கல்வெட்டுகள் மிகவும் பயனுள்ளவையாக உள்ளன. ஆனால் இராமேசுவரம் திருக்கோயிலைப் பொறுத்தவரையில் ஒரு சிறிது மாற்றமாகவுள்ளது. ஏறத்தாழப் பன்னிரண்டு நூற்றாண்டுக் காலப் பழமையுடையதாக இந்தத் திருக்கோயில் இருப்பதால் பாண்டிய. சோழ. நாயக்க. சேதுபதி மன்னர்களது அறக்கொடைகள் மற்றும் இராமேசுவரம் தீவுப் பகுதி பற்றிய செய்திகள் பல இடங்களில் பதிவு செய்து இருத்தல் வேண்டும். ஆனால் தற்போது அங்கு உள்ள கல்வெட்டுக்கள் மிகவும்

சொற்பமாக விரல்விட்டு எண்ணும் அளவிற்குக் குறைவாக உள்ளன.

இத்தகைய அவல நிலைக்கு இரண்டு காரணங்கள் ஆதாரமாக அமைந்து இருக்கின்றன. முதலாவதாக இராமேசுவரம் திருக்கோயில் வங்கக் கடலின் கடற்கரைக்கு அண்மையில் அமைந்து இருப்பதால், கடலில் இருந்து நாள்தோறும் வீசுகின்ற கடுமையான உப்புத் தன்மை நிறைந்த காற்று இந்தக் கல்வெட்டுக்களைப் பல நூற்றாண்டுக்காலமாக தனது அமிலத்தன்மையினால் அழித்து வந்துள்ளது. இந்த அழிமானத்திலிருந்து இந்தக் கல்வெட்டுக்களை காத்துவர ஆலய நிர்வாகத்தினர் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. கல்வெட்டுகள் வரலாற்றிற்கு எவ்வளவு முக்கியம் என்ற வரலாற்று உணர்வு இந்தக் கோயிலின் தக்கார்கள், அலுவலர்கள் ஆகியோரிடம் இல்லாததே இப்பெருங்குறை. இதே கடற்கரைப் பகுதியில் உள்ள திருப்புல்லாணி ஆதிஜகன்நாத பெருமாள் ஆலயத்திலும் திருஉத்திரகோசமங்கை சமஸ்த்தான சத்திரத்திலும் உள்ள கற்சிலைகள் இந்த உப்பங்காற்றினால் அழிக்கப்பட்டு உருவத்தை இனம் கண்டு கொள்ள முடியாமல் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையினர் கி.பி.1881, கி.பி.1903, கி.பி.1905, கி.பி.1913, கி.பி.1915 ஆகிய ஆண்டுகளில் இந்தக் கல்வெட்டுக்களைப் படியெடுத்து வெளியிட்டுள்ளனர். இவை தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், பாலி மொழிகளிலமைந்த கல்வெட்டுக்களாகும். இவைகளில் தொன்மையானது சுவாமியின் கருவறை நுழைவாயிலில் இராஷ்டிர கூட மன்னன் கண்ணதேவன் எனப்படும் மூன்றாம் கிருஷ்ணன் வெட்டுவித்த கி.பி.910ஆம் ஆண்டு கன்னடமொழிக் கல்வெட்டாகும். இதனடையடுத்த பழமையான கல்வெட்டு கோயில் கொடிமரத்தின் கீழ்ப்பகுதியில் சிங்கள மொழியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். இதனை வெட்டுவித்தவன் இலங்கை மன்னன் நிச்சங்க மல்லன். கி.பி. 1169–க்கும் கி.பி.1190–க்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் மதுரைப் பாண்டியர்களிடையே உட்பூசலும் முதலாவது குலோத்துங்க

சோழனது தலையீடுமாக அரசியல் குழப்பத்தில் தொடர்ந்து பாண்டியநாடு ஆழ்ந்து இருந்த பொழுது இராமேசுவரம் திவு சிங்கள மன்னனது ஆக்கிரமிப்பில் இருந்து வந்தது. அங்குத் தங்கி இருந்த நிச்சங்கமல்லன். இராமேசுவரம் திருக்கோயிலில் நடைபெற்ற கலைநிகழ்ச்சி ஒன்றைக் கண்டு களித்ததையும் இராமேசுவரத்தில் "நிச்சங்கேசுவரருக்கு" ஒரு கோயில் எடுப்பித்ததையும் இந்தக் கல்வெட்டு கூறுகிறது.

## 2) கல்வெட்டுச் செய்திகள்

| காலம் | கல்வெட்டுச் செய்தி |
|---|---|
| 1. சகம். ஆண்டு 1545 ருத்ரோத்திரி மாசி 21 தேதி முதல் பிரகார மேற்குச் சுவற்றில் | கூத்தன் உடையான் சேதுபதி நட மாளிகை மண்டபத்தையும் அர்த்த மண்டபத்தையும் திர்மானித்தது. |
| 2. ஏ.ஆர்.ஈ. 89/1905 அம்மன் கோயில் கொடிமரத்தில் இருந்த எழுத்துக்கள் | விஜயநகர திப்பா என்ற திருமலைய்யா (கி.பி.1453) கொடி மரத்துக்குப் பொன் மூலாம் பூசியது. |
| 3. ஏ.ஆர். 90/1903 (வட்டெழுத்தில்) | சுவாமி கோயிலுக்கு அண்மையில் பலிபீடத்தில் சிதைந்த நிலையில். |
| 4. எ.ஆர். 97/1903 ராமலிங்ககேஸ்வர கோயில் தெற்கு மதில் சித்திரபானு ஆண்டு. | மதுரை மன்னன் வீரப்ப நாயக்கரது நிலக்கொடை பற்றியது |
| 5. எ.ஆர். 98/1903 அதே ஆலயத்தின் தெற்கு. மேற்குச் சுவர்களில் | மதுரை வீரப்ப நாயக்கரது கல்வெட்டு |

| | |
|---|---|
| 6. எ.ஆர். 102/1905 அதே ஆலயத்தில் | மதுரை வீரப்ப நாயக்கர் மன்னரது கொடை பற்றியது. |
| 7. ஏ.ஆர். 99/1903 சுகம் 1520 | தெற்குச் சுவரில் ஆடல் மண்டபத்தை இராமநாத முனி அமைத்தது. |
| 8. எ.ஆர். 100/1903 சுகம் 1530 | கோடிதிர்த்த மண்டபம் மேற்குச் சுவற்றில் இராமநாத முனி அந்த மண்டபத்தை அமைத்ததாக. |
| 9. ஏ.ஆர். 101/1903 சுகம் 1545 ருத்ரோத்காரி | முதல் பிரகாரத்தின் தெற்கு மதிலில் முதல் பிரகாரம் அமைக்கப்பட்டதைத் தெரிவிப்பது கூத்தன் சேதுபதி மன்னரது பிரகாரம் நடைபெற்று இருந்த வேலை. |
| 10. எ.ஆர். 102/1903 இராமலிங்கேஸ்வரர் ஆலயத்தின் தெற்குச் சுவரில் சகம் 1530 | மதுரை நாயக்க மன்னர் வீரப்ப நாயக்கரது கல்வெட்டு இராமேசு வரம் ஆலயத்தில் ஒரு சிறு கோயில் அமைந்ததாக. |
| 11. எ.ஆர். 103/1903 | சிதம்பரேஸ்வரா ஆலயத்தின் வடக்கு மதிலில் காளயுத்தி ஆண்டில். முதல் பிரகாரம் நிர்மாணம் பற்றி. |
| 12. எ.ஆர். 104/1903 | அதே ஆலயத்தின் மேற்குச் சுவரில் பாண்டிய மன்னன் வீரபாண்டிய தேவனது சிதைந்த கல்வெட்டு. |

| | |
|---|---|
| 13. எ.ஆர். 105/1903 சகம் 1549 பிரபவ ஆண்டு | கிழக்கோபுர ஆஞ்சநேயர் ஆலயத்தில் இருந்த கல்வெட்டு |
| 14. எ.ஆர். 8/1915 சோபகிருது ஆண்டு பத்ரபாதமாதம் | கன்னடமொழிக் கல்வெட்டு இராமநாதசுவாமிக்கு ரத்னகவசம் வழங்கியது. சாவான்ன தண்ட நாயகர் என்ற தளபதி இராமநாத சுவாமி நுழைவு வாசலில். |
| 15. எ.ஆர். 9/1915 | அதே ஆலயத்தின் இடதுபுறம் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவரது 11–வது ஆட்சி ஆண்டு. சிதைந்த நிலையில். |
| 16. கி.பி. 1733 | குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி குளுவன்குடி கண்மாய் பாசனம். |
| 17. கி.பி. 1745 | துரையூர் சீமை அவனிமங்கலம் கிராமத்தை மேற்படி சீமை செட்டி குளத்தைச் சேர்ந்த லிங்க ரெட்டியர் மகன் வெங்கடாசல ரெட்டியாரவர் –கள் இராமேசுவரத்தில் அன்ன தானம் வழங்குவதற்காக தானம் அளித்ததை இந்தக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. |

# 3) செப்பேட்டுச் செய்திகள்

கல்வெட்டுக்களைப் போல. வரலாற்றிற்கு சான்றாக அமைந்து உதவுபவை பட்டயங்கள் எனச் சொல்லப்படும். ஓலைப்பட்டயங்களும் செப்பேடுகளும். பல்லவர் ஆட்சியில் வழங்கப்பட்ட கூரம் செப்பேடுகளும். மூன்றாம் ராஜசிம்ம பாண்டியன் (கி.பி.900 – கி.பி.920) வழங்கிய சின்னமனூர் செப்பேடும். இராஜேந்திரசோழன் வழங்கிய திருவாலங்காடு செப்பேடும் ஆகியன தமிழக வரலாற்றிற்கு மிகவும் துணை செய்வனவாக உள்ளன. இதனைப் போன்று இராமேசுவரம் திருக்கோயில் சம்பந்தமாக பலசெப்பேடுகள் பெரும்பாலும் சேது மன்னர்கள் வழங்கியவை – இராமேசுவரம் திருக்கோயிலைப் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவும் அரிய சான்றுகளாக விளங்குகின்றன.

இராமேஸ்வரம் திருக்கோயிலின் அன்றாட வழிபாடுகள். ஆண்டுத் திருவிழாக்கள். மற்றும் சிறப்புக் கட்டளைக்களுக்கென சேதுபதி மன்னர்கள் வழங்கியுள்ள அறக்கொடைகளுக்குச் சான்றாக அவர்கள் வழங்கிய பல செப்புப்பட்டயங்கள் உள்ளன. இவைகளைத் தவிர திருக்கோயில் பணியாளர்களாக மராட்டா குருக்கள். தமிழ் ஆரியர் மற்றும் கோயில் திருப்பணியாளர்கள் வழங்கியுள்ள இசைவு முறிகள். ஆலய நிர்வாகம் பற்றிய சேதுபதி மன்னரது ஆணைகள். திருக்கோயில் பணியாளர்களுக்குச் சேதுபதி மன்னர் வழங்கியுள்ள காணி ஆட்சி. உண்மை. தீர்ப்பாணை பற்றிய செப்புப் பட்டயங்களும் உள்ளன.

இந்த ஆவணங்களிலும் பல கல்வெட்டுக்களிலும் மக்களிடம் விழிப்புணர்வு இல்லாத குறையினாலும் பல பட்டயங்கள் மறைந்துவிட்டன. இவைகளில் அப்பொழுது (கி.பி.1884-ல்) கிடைத்த பட்டயங்கள் இருபதை இந்திய அரசியல் தொல்லியல் ஆய்வுத் துறையினர் தொகுத்து வெளியிட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து கி.பி. 1994-இல் வரலாற்று ஆய்வாளர் டாக்டர் S.M.கமால் அவர்கள் 90 பட்டயங்களை தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இராமேசுவரம் செப்பேடுகளில் மிகவும் பழமையானது கி.பி.1587ல் இராமேசுவரம் குருக்கள்மார் சபையார் மதுரை மன்னர் வீரப்பநாயக்கருக்கு வரைந்து கொடுத்த பிடிபாடு பற்றியது. இந்தக் கால கட்டத்தில் இராமேசுவரத்தில் உள்ள மராட்டா குருக்கள் மார் சமூகத்தில் நிலவிய சாதிக்கட்டுப்பாட்டின் கொடுமையையும் இந்தச் செப்பேடு கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது. பெரும்பாலான செப்பேடுகள் சேதுபதி மன்னர்கள் திருக்கோயிலின் வழிபாடு. விழாக்களுக்கு வழங்கிய அறக்கொடைகள் பற்றியன. என்றாலும் சில செப்பேடுகள் சேதுமன்னர் கோயில் நிர்வாகத்திற்கு வழங்கிய வழிகாட்டு முறைகள். கோயிலுக்கு ஏற்படுத்தப்பட்ட வருவாய் இனங்களின் விவரங்கள். கோயிலில் நடைபெற்ற விழாக்கள். கோயிலில் பணியாற்றிய மராட்டா குருக்கள். தமிழ் ஆரியர் ஆகியோர் கோயிலில் மேற்கொண்டு இருந்த பணியை அதற்கு அவர்களுக்கு நிவேதனப்பொருள். சந்தனம். தாம்பூலம் மற்றும் அவர்களுக்கு ஒதுக்கிடு செய்யப்பட்ட பொன் முதலியன கோயிலில் இராமனாத பண்டாரத்திற்குக் கோயில் நிர்வாகம் தவிர சேதுபதி மன்னர்கள் வழங்கியிருந்த அதிகாரங்களைப் பற்றிய செய்திகளையும் இந்தப் பட்டயங்கள் தெரிவிக்கின்றன. சேது நாட்டை கி.பி. 1772-ல் ஆற்காட்டு நவாப் ஆக்கிரமித்து இளம் சேதுபதி மன்னரைத் திருச்சிக் கோட்டைச் சிறையில் அடைத்து வைத்துக் கோயில் வழிபாடுகளை இரண்டு

மாதங்கள் நடைபெறாதிருந்த நிலையில் மக்களது முறையீட்டின் பேரில் கோயில் வழிபாடு நடத்த கோயில் ஆதின கர்த்தர் இராமநாத பண்டாரத்தைச் சேது இராமநாத பண்டாரமாக நியமனம் செய்தது போன்ற செய்திகளும் இந்தச் செப்பேடுகளின் வழி அறிய முடிகிறது.

நமக்குக் கிடைத்துள்ள செப்பேடுகளில் காணப்பெறும் செய்திகள் கிழ்க்கண்டவாறு பட்டியலிட்டுக் கொடுக்கப் பட்டுள்ளன.

| **செப்பேடு வழங்கிய மன்னரும் காலமும்** | **செப்பேட்டுச் செய்திகள்** |
|---|---|
| 1. உடையான் சடைக்கண் சேதுபதி கி.பி. 1607 | இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு ஐந்து கிராமங்கள் தானம் (மும்முடிசாத்தான். பாண்டியர் தியாவஞ்சேரி. வெங்கட்டங் குறிச்சி கோந்தை) |
| 2. உடையான் சடைக்கன் சேதுபதி கி.பி. 1607 | இராமேசுவரம் திருக்கோயிலில் பூஜை ஸ்தானிகம். பரிசாரகம் ஆகிய திருப்பணிகளில். ஈடுபட்டுள்ள அந்தனர்களுக்கு திருக்கோயிலுக்கும் அக்னி திர்த்தக் கரைக்கும் இடைப் பகுதியை வீடுகள் கட்டிக் கொள்ள வழங்கியது. |
| 3. உடையான் சடைக்கன் சேதுபதி கி.பி. 1607 | ஸ்ரீ இராமநாதசுவாமி பர்வத வர்த்தினி உடையவர் கட்டளை |

பூஜைக்கு ஆப்பனூர் நாட்டில்
(1) கருங்குளம்
(2) கள்ளிக்குளம்
(3) கருசங்குளம்
(4) வேலங்குளம்
(5) பொட்டக்குளம்
(6) விடந்தை
(7) கண்ணன் பொதுவானி
(8) முத்தான் (9) சிறுகுளம்
கிராமங்கள் தானம்

4. கூத்தன் சேதுபதி கி.பி.1624 இராமநாத சுவாமி திருக்கோயிலுக்கு மன்னர் கலாபத்தில் ஏழுகல் வைத்து முத்துக்குளிக்கும் உரிமை வழங்குகிறது.

5. கூத்தன் சேதுபதி கி.பி.1631 இராமேசுவரம் இராமநாத சுவாமிக்குப்பட்ட காணிக்கையாக மருதங்க நல்லூர் கிராமம் தானமாக வழங்கப்பட்டது.

6. கூத்தன் சேதுபதி கி.பி. 1632 இராமேசுவரம் இராமநாத சுவாமிக்குபட்ட காணிக்கையாக சேதுகால் என்ற கிராமம் தானமாக வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| 7. ரெகுநாத திருமலை சேதுபதி கி.பி. 1647 | இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமி ஆவணி மூலத்திருவிழாவிற்கு முகிழ்த்தகம் கிராமம் தானம் வழங்கியது. |
| 8. ரெகுநாத திருமலை சேதுபதி கி.பி. 1657 | இராமேசுவரம் திருக்கோயிலுக்குக் காளையார் கோவில் சீமையில் (1) பணிவயல் (2) சூரனேம்பல் (3) கிழச்சூரனேம்பல் (4) மாவூரணி (5) திருப்பந்தி (6) மல்லன் ஊரணி (7) பெரியனேந்தல் ஆகிய கிராமங்கள் தானம் |
| 9. ரெகுநாத திருமலை சேதுபதி கி.பி. 1668 | இராமநாத சுவாமி அறக்கட்டளைக்குச் சென்னிலக்குடி கிராமம். |
| 10. ரெகுநாத திருமலை சேதுபதி கி.பி. 1673 | இராமநாதன் சுவாமி ஆவணி மூலத்திருவிழாவிற்குப் புளியங்குடி. கருமல், குமாரக்குறிச்சி கிராமங்கள் தானம். |
| 11. திருமலை சேதுபதி சேர்வைகாரன் பெருமாள் சேர்வைகாரன் | இராமேசுவரம் திருக்கோயிலுக்கு ஆனந்தூர். பாப்பாகுடியேந்தல் கிராமங்கள் தானம். |

| | |
|---|---|
| 12. ரெகுநாதகிழவன் சேதுபதி கி.பி. 1691 | இராமேசுவரம் அன்னதான மடத்துக்கு நல்லுக்குறிச்சி கிராமம் தானம் வழங்கியது. |
| 13. கிழவன் சேதுபதி மனைவி காதலி நாச்சியார் கி.பி.1693 | இராமேசுவரம் கோயில் அறைக் கட்டளைக்கு மேலச்சித்தை கிராமம் தானம் வழங்கியது. |
| 14. ரெகுநாத கிழவன் சேதுபதி கி.பி. 1697 | இராமநாத சுவாமி திருக்கோவி-லுக்கு ராஜசிங்க மங்கலம் இராமநாதமடை தானம் வழங்கியது. |
| 15. முத்து விஜயரகுநாத சேதுபதி கி.பி. 1716 | இராமேஸ்வரம் திருக்கோயில் சுச்கிரவாரக் கட்டளைக்கு மன்னர் சலாபத்தில் முத்துக் குளிக்கும் உரிமை வழங்கியது. |
| 16. முத்து விஜயரெகுநாத சேதுபதி கி.பி. 1714 | திருக்கோயில் சுக்கிரவாரக் கட்டளை விளத்தூர் ஆய்க்குடி சோழியக்குடி சிறுத்தவயல். கொடிப்பூங்கி சின்னத் தொண்டி சோமனூர். விரியானேந்தல் கிராமங்கள் தானம் வழங்கியது. |
| 17. குமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி கி.பி. 1733 | திருக்கோயில் சபாபதி கட்டளைக்கு குளத்தூர் கிராமம் தானம் வழங்கியது. |

| | |
|---|---|
| 18. முத்து இராமலிங்க விஜயரகுநாத சேதுபதி கி.பி. 1764 | இராமேசுவரம் திருக்கோயில் நிவேதன கட்டளைக்கு நிலமழகிய மங்கலம் கிராமம் தானம் வழங்கியது. |

# 4. செப்புத் திருமேனிகள்

கடந்த ஈராயிரம் ஆண்டுகளில் பாண்டியர்களது ஆட்சியில் கோடி நாடு என வழங்கப்பெற்ற இராமேசுவரம் பகுதி எத்தனையோ ஆட்சியாளர்களது வரலாற்றை வரம்பிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது. பாண்டியர், இராஷ்டிரகூடர், சோழர், சிங்களர் இஸ்லாமியர், நாயக்கர், சேதுபதிகள் எனப் பல்வேறு அரசுகளின் ஆதிக்கம், தாக்கம், செல்வாக்கு ஆகியவைகளின் சுவட்டை இராமேசுவரம் திருக்கோயிலும் அங்கு உள்ள அணிமணிகள், சேமக்கலங்கள், செப்புத் திருமேனிகள், சிற்பங்கள் ஆகியவை பிரதிபலித்துக் கொண்டுள்ளன.

இவைகளில் சிங்களப்படையெடுப்பு (கி.பி. 1169) தில்லித் தளபதிகள் மாலிக் நாயிப் என்ற மாலிக்கபூர் (கி.பி. 1311) குஸ்ராகான் படையெடுப்பு (கி.பி. 1318) திருமலை நாயக்கரது படையெடுப்பு (கி.பி.1639 – 1640) ஆகியவைகளினால் ஏற்பட்ட இழப்புகள் போக எஞ்சிய கலைப்பொருட்கள் மட்டும் இராமேசுவரத்தின் பழமையைப் பறைசாற்றும் கலைப் பெட்டகங்களாக விளங்கி வருகின்றன. இவைகளில் இங்குக் குறிப்பிடப்படுவன சில தொன்மையான செப்புத் திருமேனிகள். இராமேசுவரம் திருக்கோயிலில் இராமர் செப்புத் திருமேனிகள் இருந்து வருவதையும் அவைகளுக்கு நாள்தோறும் முறைப்படி வழிபாடுகள் நடத்தப்படுவதையும் முன்னர்க் குறிப்பிட்டு இருக்கிறோம். அவை அனைத்தும் சேதுநாட்டுச் சிற்பிகளால் பிற்காலத்தில் சேதுபதி மன்னர்கள் ஆட்சியின் பொழுது வடிவமைத்து வார்க்கப்பட்டவை. இவை நீங்கலாக இந்தக்

கோயிலில் உள்ள சிறப்பான ஆறு செப்புத் திருமேனிகள் மட்டும் இங்கு விவரிக்கப்படுகின்றன.

இந்த ஐந்து செப்புத் திருமேனிகள் இராமர், சீதை, இலக்குவன், அனுமன், துர்க்கை ஆகியவர்களது உருவங்களைக் கொண்டவை மற்றொன்று விநாயகரது திருவுருவத் திருமேனி. இந்த ஐந்து செப்புத் திருமேனிகளும் சோழ நாட்டில் கி.பி. பத்தாவது நூற்றாண்டில் வார்க்கப்பட்டவை.

இராமேசுவரத்திற்கு வருகை தந்த முதலாம் பராந்தக சோழ மன்னனால் இந்த செப்புத் திருமேனிகள் வழங்கப்பட்டு இருக்க வேண்டும் என்பது வரலாற்று ஊகம். இந்த மன்னன் கி.பி. 930-ல் இராமேஸ்வரத்தில் துலாபாரதானம் செய்துவிட்டுத் திரும்பிய பிறகு இந்தச் செப்புத் திருமேனிகளைக் சோழநாட்டில் தயாரித்து அன்பளிப்பாக அனுப்பி இருக்க வேண்டும். இராமேசுவரம் திருக்கோயிலில் இத்தகைய சிலைகள் இல்லாத குறையை நிறைவு செய்ததுடன் இராமேஸ்வரத்திற்கும் இராமாயண காவியத்திற்கு முள்ளத் தொடர்பை உறுதிப்படுத்தும் செயலாகவும் இந்த அன்பளிப்பை மேற்கொண்டு இருக்க வேண்டும்.

நான்கு கரங்களும் வலம்புரித் துதிக்கையும் கொண்ட விநாயகப் பெருமான், இராமர், சீதை, இலக்குவன், அனுமன் ஆகிய செப்புத்திருமேனிகள், சோழமன்னர்களது கலைப் பாணியைச் சார்ந்தவை என உறுதிப்படுத்தியதோடு சோழர்கள் ஆட்சியின் கீழிருந்த தொண்டை மண்டலத்தில் வடக்குப் பருத்திக்குடி, பகாயூர் ஆகிய ஊர்களில் கண்டு எடுக்கப்பட்ட இராமர், சீதை, இலக்குவன் சிலைகளை ஒத்தனவாக உள்ளன எனத் தொல்பொருள்துறை இயக்குநரான டாக்டர், நாகசாமி அவர்கள் ஆய்ந்து கூறியுள்ளார்கள்.[1]

1) Dr. R. Nagasamy - South Indian Studies - Part - I I

பரந்த நெற்றி, அகன்ற கண்கள், குழைக்காதுகள், நீண்ட ஒல்லியான கரங்கள், கால்கள் ஆகிய கேசாதி பாதங்கள் போன்றவற்றின் அமைப்பைக் காணும்பொழுது சோழமண்டல ஸ்தபதிகள், கம்பஇராமாயணம் இயற்றப்படுவதற்கு முன்னரே இராமாகாதையை அறிந்து அந்த இலக்கியப் பாத்திரங்களின் படைப்பைச் சிறப்பாக அறிந்து இருந்தனர் என்பதை இந்தச் செப்புச் சிலைகள் தெரிவிக்கின்றன.

இந்தச் செப்புத் திருமேனிகள், மென்மையும் கவர்ச்சியும் மிடுக்கும் நிறைந்து வில்லைப் பற்றிய வீரர்களாகக் காட்சியளிக்கும் இராம இலக்குவர்கள், இடப்புறம் சற்று ஓரத்தில் ஒய்யாரமாகக் காணப்படும் சீதாப்பிராட்டியையும் இந்த இராமேசுவரம் செப்புத் திருமேனிகள் அப்படியே பிரதிபலித்தாலும் இவை காலத்தால் சற்று முன்னதாக அமைந்தவை என்பதை யாரும் மறுக்க முடியாது. மற்றும் மேலே குறிப்பிட்ட துர்க்கை, பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கி.பி.1645 முதல் கி.பி.1676 வரை சேது நாட்டின் ஆட்சி பீடத்தில் இருந்த திருமலை இரகுநாத சேதுபதி மன்னர் ஏனைய சேது மன்னரைப்போல அழுத்தமான சிவபக்தர். இராமேசுவரம் இராமநாதசுவாமியிடமும் திருப்பெருந்துறை ஆவுடையப் பரிடமும் மிகுந்த ஈடுபாடு கொண்டு இருந்தார். கி.பி.1658-ல் அவர் மதுரை மீது படையெடுத்த கன்னடப்படைகளை வெற்றி கொண்டதால், மதுரை திருமலை நாயக்கர் ராஜராஜேஸ்வரியின் பொற்சிலையொன்றை அவருக்குப் பரிசுப் பொருளாக அளித்ததும் அதற்கு இராமநாதபுரம் அரண்மனை வளாகத்தில் கோயில் ஒன்றை அமைத்தார். தொடர்பாக அடுத்து மூன்று கோயில்களை கொற்றவைக்கு சேதுநாட்டில் நிறுவினார். இராஜ துர்க்கைக் கோயில் இராமநாதபுரம் (இராமநாதபுரம் கோட்டைக்கு கிழக்கே). வனசங்கரி அம்மன் கோயில் (இராமநாதபுரம் கோட்டைக்குத் தெற்கே கோட்டைச் சுவரை அடுத்து) மேலச்சிறுபோது

கிராமத்தில் உள்ள மலைவளர் காதலி அம்மன் கோயில் என்பவை அந்த மூன்று கோவில்கள் ஆகும்.

திருமலை ரெகுநாத சேதுபதி மன்னருக்கு முன்னும் பின்னும் இருந்த சேதுபதி மன்னர்களைவிடக் காளியம்மனது மூல மூர்த்தமாகிய கொற்றவையிடம் பக்தி கொண்டு இருந்தவர் இந்த மன்னர் என்பதால், இந்தச் சிலையை அமைத்து வழங்கியவர் திருமலை இரகுநாத சேதுபதி என்பதை உறுதியாக நம்பலாம்.

# இயல் - VII

## இராமேஸ்வரம் நகரைச் சுற்றியுள்ள புனிதத் தலங்கள்

இராமேஸ்வரம் என்ற பெயர் இதிகாசத்தை ஒட்டி எழுந்த பெயராகும். இராமபிரானது ஈஸ்வரனுடைய கோயில் என்பது பொருள். பின்னர் இக்கோயிலையுடைய ஊர் என்ற பொருளில் இராமேசுவரம் என்ற பெயர் வழக்கிற்கு வந்துள்ளது. தேவார காலத்திற்கு முன்னர் இந்தப் பெயர் வழக்கில் இருந்ததாகத் தெரியவில்லை. கடைச்சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெறும் மதுரை. குமரி. உறந்தை. புகார் போன்ற பெயர்களாக அந்த இலக்கியங்களில் இந்த ஊர்ப் பெயரும் இடம் பெறவில்லை. இராமேஸ்வரம் தீவு முழுவதிலும் உள்ள ஒரே ஊராக பல நூற்றாண்டுகளாக இந்த ஊர் இருந்து வந்துள்ளது.

கடந்த சில நூற்றாண்டுகளில் இந்தத் தீவில் இராமேஸ்வரம் கோவிலுக்கு அண்மையிலும். சேய்மையிலும் பல ஊர்கள் எழுந்து உள்ளன. குறிப்பாக இராமேஸ்வரம் தீவின் கிழக்குக் கரைக்கோடியில் தனுஷ்கோடியும். அதற்கு முன்னர்க் கோதண்டராமர் கோயில். நடராஜபுரம். வேர்க்கோடு. விவேகானந்தபுரம். கரையூர் ஆகியனவும் உள்ளன. இன்னும் இந்தக் கிழக்குக் கரையின் வடபகுதியில் சுடுகாட்டுப்பட்டி. ஓலைக்குடா. தர்கா. மாங்குண்டு. பத்தினிக் கோயில் ஆகியனவும் உள்ளன. இராமேஸ்வரத்திற்கு தெற்கே ஆபில் – காபில் தர்கா. நம்புநாயகி கோயிலும். மேற்கே

செம்மாமடம் என்ற செம்மனத் தேவர் மடம், பேய்க்கரும்பு, அரியான்குண்டு, ஏகாந்தராமர் கோயில், தங்கச்சிமடம், அக்காள்மடம், பாம்பன், குந்துகால் ஆகியனவும் இருந்து வருகின்றன. இவைகளில் சில ஊர்கள் மிகவும் புனிதமுடைய தலங்களாக போற்றப்பட்டு வருகின்றன. அவைகளைப் பற்றிய சில விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

### 1) தனுஷ்கோடி

இராமேஸ்வரத்தில் இருந்து கிழக்கே 16 கல் தொலைவில் இந்த ஊர் உள்ளது. இராமபிரான் இலங்கை சென்று மீண்டும் வந்த பொழுது இங்கிருந்து இலங்கையை தொடர்புபடுத்தும் சேது அணையை வேறு யாரும் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக தனது வில்லின் (தனுசு) நுனியைக் (கோடி) கொண்டு உடைத்து அழித்தாக ஐதிகம். இங்கே வங்கக்குடாக் கடலும், வங்க விரிகுடாக் கடலும் ஒருங்கிணைந்து சங்கமம் ஆவதால் இது ஒரு புனித திர்த்தக் கட்டமாகக் கருதப்பட்டு வருகிறது. இந்தக் கடற்கரையின்று காலை நேரத்தில் சூரிய உதயத்தையும், மாலை நேரத்தில் சூரிய அஸ்தமனத்தையும் கண்டு களிக்கலாம். ஆடி, தை அமாவாசை நாள்களில் இங்கு உள்ள கடலில் நீராடி எழுவது பிதிர்களுக்கு ஏற்ற புண்ணியமாகக் கருதப்படுகிறது. இங்குச் சேது மாதவப் பெருமாள் என்ற பெயரில் ஸ்ரீ ராமனுக்கு ஒரு திருக்கோயில் இருந்து கடலில் ஆழ்ந்து விட்டது. இந்தத் தலம் வைணவர்களால் ஏற்றிப் போற்றப்படும் நூற்றி எட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகக் குறிக்கப்படாவிட்டாலும் இந்தத் தலத்தை வைணவர்கள் வெகுவாகக் கொண்டாடி வந்தனர்.

23.4.1964ம் தேதி இரவு ஏற்பட்ட புயலினாலும், கடல் கொந்தளிப்பினாலும் இந்த ஊர் முழுமையாகக் கடலுக்குள் மறைந்துவிட்டது. மிகச் சிறப்பான திர்த்தக் கட்டமாக விளங்கிய சேது திர்த்தமும் கடலால் அழிக்கப்பட்டு விட்டதால்

இராமேஸ்வரத்தில் உள்ள அக்னி தீர்த்தம் இப்போது சேது தீர்த்தமாகக் கருதப்படுகிறது.

### 2) கோதண்டராமர் கோவில்

இந்த ஆலயம் இராமேஸ்வரத்திற்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. பெரும்பாலும் ஆண்டு முழுவதும் உப்பங்கழியினால் சூழப்பட்டு உள்ள இந்தக் கோயிலை அண்மைக் காலத்தில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த தொழிலதிபர் வாங்கூர் அறக்கட்டளையினரால் திருப்பணி செய்யப்பட்டு மிகச் சிறப்பாக இருந்து வருகிறது. இதிகாசமாகிய இராமாயணத்தில் தனது சகோதரரான இராவணனுடன் கருத்து வேற்றுமை கொண்ட வீடணன் இராவணனது அணியிலிருந்து பிரிந்து வந்து இந்த இடத்தில் இராமபிரானிடம் சரண் அடைந்து அடைக்கலம் பெற்றான் என்பது ஐதிகம். இதனைக் குறிக்கும் வகையில் இங்கு ஆயுதபாணியான இராமனது (கோதண்டராமனது) பெயரில் இந்தக் கோயில் அமைக்கப்பட்டு உள்ளது. இந்தக் கோயிலுக்கு ஆண்டுதோறும் மாசி மாதத்தில் இராமேஸ்வரத்திலிருந்து ஸ்ரீ ராமநாதசுவாமி எழுந்தருளிப் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்து வருகிறார்.

### 3) ஆபில் காபில் தர்ஹா

இந்தப் புனித இடம் இராமேஸ்வரம் நகரின் தென்பகுதியில் ரயில் நிலையத்திற்குத் தெற்கே உள்ளது. மனித குலத்தின் ஆதி பிதாவான ஆதம், ஹவ்வா அம்மையாருக்குப் பிறந்த முதல் மக்களான ஆபில், காபில் என்ற சகோதரர்களது அடக்கவிடமாக இந்த இடம் கருதப்படுகிறது. கிழக்கு மேற்காக 40 அடி நீளத்தில் அமைக்கப் பெற்று இங்குக் காணப்படும் இரண்டு சமாதிகள் அந்தச் சகோதரர்களுடையனவாக பல நூற்றாண்டுகளாகக் கருதப்பட்டு வருகின்றன. இந்தச் சகோதரர்களைப் பற்றிய செய்திகள் கிறிஸ்தவ சமய நூலான பைபிளிலும் (பழைய ஏற்பாடு) இஸ்லாமியரது திருமறையான

குர்ஆனிலும் காணப்பட்ட பொழுதிலும் அவர்கள் இங்கே எப்பொழுது அடக்கம் செய்யப்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றாலும் இராமநாதபுரம் சேதுபதி மன்னரான குமார முத்து விஜய இரகுநாத சேதுபதி இந்தப் புனித இடத்தின் திப. தூப. பராமரிப்புச் செலவிற்காக இராமநாதபுரத்தை அடுத்த புதுக்குளம் என்ற கிராமத்தை (எக்கக்குடி) கி.பி. 1744 –இல் சர்வ மானியமாக வழங்கி உள்ளதற்கான செப்புப் பட்டயம் இந்த புனித இடத்தின் நிர்வாகியிடம் இன்றும் உள்ளது.[1]

## 4) ஏகாந்த இராமர் கோயில்

இராமபிரான் தெற்குக் கடலைக் கடந்து இலங்கை செல்வதற்காக தமது வானரப் படைகளுடன் இங்கு ஆலோசனை செய்தார் என்பது ஐதீகம். அகநானூற்றுப் பாடல் ஒன்றும் இதனைச்சுட்டுவதாக உள்ளது என்பர். ஆனால் இந்த நிகழ்ச்சி கம்ப இராமாயணத்தில் குறிக்கப்படவில்லை.


இராமேஸ்வரத்தில் இருந்து மேற்கே பாம்பன் செல்லும் நெடுஞ்சாலை அருகே இந்த சிறுகோயில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் மேற்குப் புறத்தில் மங்கள தீர்த்தமும். வடபுறத்தில் ஒரு அழகிய குட்டையும் நிர்மானிக்கப்பட்டுள்ளன. பழுதடைந்த நிலையில் இருந்த ஆலயத்தை அண்மையில் வடநாட்டு பிரமுகர் ஒருவர் திருப்பணி செய்துள்ளார். கோயிலின் உள்ளே மகா மண்டபமும். அதனை ஒட்டிய கருவறையும் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கருவறையில் அமைந்துள்ள இராமர், இலக்குவன், சிதாபிராட்டி அனுமர் ஆகியோர்களது திருமேனிகள் கல்லில் சிறப்பாக வடிக்கப்பட்டு நாள்தோறும் பூஜை செய்யப் படுகின்றன. இராமரது அருகில் நிற்கும் அனுமன் மிகவும்

---

1) கமால் டாக்டர் எஸ்.எம். – சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1990)

பணிவுடன் இராமனது வார்த்தைகளைக் கைகட்டி வாய்புதைத்துக் கேட்பது போன்ற அமைப்பு மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த சிலைகளின் படம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



இந்த ஆலயத்தின் நுழைவாயிலின் எதிரே அமைந்துள்ள அழகிய பயணிகள் மண்டபம் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. இந்த ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஏகாந்த இராமனைப் பற்றிச் சிறந்த இராம பக்தரும், சிறந்த இசைமேதையுமாகிய ஸ்ரீ தியாக ராஜ சுவாமிகள் தெலுங்கில் இரண்டு கீர்த்தனைகள் பாடியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. என்ன காரணத்தினாலோ இராமேஸ்வரம் தீவில் பல திருப்பணிகளை மேற்கொண்டு இருந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது பார்வையின்றும் இந்தக் கோயில் தப்பியது வியப்பாக உள்ளது.

## 5) தங்கச்சிமடம்

இராமநாதபுரம் சேதுபதி மன்னர் முத்துவிஜயரெகுநாத சேதுபதி (கி.பி.1713 – 1725) மிகச் சிறந்த சிவனடியாராக விளங்கியதால் மண்டபம் தோணித்துறை சத்திரத்திற்கு வந்து சேரும் சேது யாத்திரைப் பயணிகள் பாம்பன் கால்வாயைக் கடந்து இராமேஸ்வரம் வரைசென்று திரும்புவதற்கான சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து இருந்தார். தமது இருபெண்

மக்களான சினி நாச்சியார். லெட்சுமி நாச்சியார் ஆகியோரது கணவரும். மன்னரது மருமகனான தண்டத்தேவர் என்பவரை இராமேஸ்வரம் தீவில் ஆளுநராக நியமித்து இருந்தார். தற்போதைய தங்கச்சிமடம் கிராமத்தில் அவரது மாளிகை அமைந்திருந்தது.

பாம்பனிலிருந்து இராமேஸ்வரம் வரை செல்வதற்கான சாலை வசதி எதுவும் அந்தக் காலத்தில் இல்லாததால் புதிய சாலை ஒன்றை அமைக்க தண்டத்தேவர் இராமேஸ்வரம் யாத்திரை செல்லும் பயணிகளிடம் ஒரு சிறிய தொகையை வரிப்பணமாக வசூலித்தார். இதனைக் கேள்வியுற்ற சேதுபதி மன்னர். தமது ஒப்புதல் இல்லாமல் வரியை வசூலித்ததற்காக அதன் வழி சேது யாத்திரை பயணிகளுக்குத் தொந்தரவு கொடுத்துச் சிவத் துரோகம் செய்துவிட்டார் என முடிவு செய்து தண்டத் தேவருக்கு மரண தண்டனை வழங்கினார். இதை அறிந்த மன்னரது பெண் மக்கள் இருவரும் தங்களது கணவர் தண்டத் தேவரது சிதையில் விழுந்து உடன் கட்டை ஏறி உயிரை மாய்த்துக் கொண்டனர். அவர்கள் உயிர் துறந்த இடம் தீப்பாஞ்சகாணி – இன்றும் தங்கச்சிமடம் அரண்மனை எதிர்ப்புறம் உள்ளது.

காலப்போக்கில் இந்த இரு சகோதரிகளது தியாகத்தை நினைவூட்டும் வண்ணம் தோன்றிய இரு மடங்களும் அக்காள்மடம். தங்கச்சிமடம் என்ற தனித்தனி ஊர்களாக எழுந்துள்ளன. இந்த இரு சகோதரிகளுக்குத் தமக்கையும் சிவகெங்கை மன்னரது மனைவியுமான அகிலாண்டேஸ்வரி நாச்சியார் இந்த இரு மடங்களையும் தோற்றுவித்து இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

## 6) பாம்பன்

இராமேஸ்வரம் தீவின் மேற்குப் பகுதியில் உள்ள ஒரு சிறு துறைமுகம். சேதுபதி மன்னர்களது ஆட்சியில் குறிப்பாக கி.பி. 17. 18ம் நூற்றாண்டுகளில் மிகச் சிறப்பாக விளங்கிய ஊர்.

இராமேஸ்வரம் செல்லும் வழியில் பாம்பன் ஆறு குறுக்கிட்டது போல என ஒரு பழமொழி வழக்கில் உள்ளது. மண்டபம் கடற்கரையிலிருந்து எதிர்க் கரையான பாம்பனுக்கும் இடையில் சுமார் 2 கல் தொலைவில் கடல்நீர் சூழ்ந்து இருப்பது தான் இதற்குக் காரணமாகும்.

பாம்பன் என்ற பெயர் பிற்காலத்தில் போர்ச்சுக்கிசியரால் ஏற்படுத்தப்பட்ட பெயராக கருதப்படுகிறது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இருந்து பெரும் படை ஒன்று இராமேஸ்வரத்தில் கரை இறங்கி முன்னேறிச் சென்றபோது இன்றைய பாம்பனை அடுத்த குத்துக்காலை மட்டும் தான் வரலாறு குறிப்பிடுகிறது. ஆனால் பிற்கால வரலாற்றில் கி.பி. 1640ல் இராமேஸ்வரம் மீது மதுரை திருமலை நாயக்கர் மன்னர் மேற்கொண்ட படையெடுப்பிற்கு ஆதரவாக அவர் போர்ச்சுக்கிசிரியரிடம் ஏற்படுத்திக் கொண்ட ராணுவ உடன்பாடு ஒன்றில் குறித்துள்ளபடி இந்தப் பெயர் பம்பா என வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் கி.பி. 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயரது கோடைக்கால குடியிருப்பாக மாறும்வரை பாம்பன் ஆங்கிலேயருக்கு இதமான கால நிலையை உடைய கோடைகால இருப்பிடமாக இருந்து வந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இங்கு இராமநாதபுரம் சேதுபதி மன்னருக்குக் கோட்டை ஒன்றும் அதனை அடுத்து சேதுப் பயணியரது பயன்பாட்டுக்கென ஒரு சத்திரமும் அமைக்கப்பட்டிருந்தது. அதன் இடிபாடுகள் இன்னும் காணத்தக்கதாக உள்ளன. மன்னர் பாஸ்கர சேதுபதியின் பெருமுயற்சியினால் அமெரிக்க நாட்டு சிகாகோ நகரில் 11.9.1893–இல் கலந்து கொண்ட சுவாமி விவேகானந்தர் தாயகம் திரும்பும் வழியில் இங்குதான் 22.1.1897–இல் கரையிறங்கிய பெருமை இந்தத் துறைமுகத்திற்கு உண்டு.

## 7) கந்தமாதனம்

இது இராமேஸ்வரம் நகருக்கு வடக்கே இரண்டு கல் தொலைவில். அமைந்துள்ள இடம். இயல்பாகவே சற்று உயரமாக அமைந்துள்ள இந்தப் பகுதியில் சுமார் 30 அடி உயரத்தில் பாறைக் கற்களால் அமைக்கப்பட்ட தளத்தின் மீது ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இராமபிரானது திருப்பாதங்கள் எனக் கருதப்படும் புனித இடம் உள்ளது. இந்த மண்டபத்தின் மீது மற்றொரு மண்டபமும் அமைக்கப்பட்டு இருக்கிறது. மேலேயுள்ள இந்த மண்டபத்திலிருந்து இராமேஸ்வரம் தீவினை நான்கு புறமும் தெளிவாகக் காணலாம்.

இந்த இடத்தை வட மாநிலத்தில் இருந்து வருகின்ற பக்தகோடிகள் ஸ்ரீ ராம ஷேருகா எனப் பக்திப் பரவசத்துடன் போற்றி வழிபடுகின்றனர். ஆண்டு தோறும் இராமேஸ்வரம் திருக்கோயிலில் நடைபெறும் வசந்த விழாவின் பொழுது சுவாமியும். அம்பாளும் இரண்டாம் திருநாளன்று இங்கு வந்து பூஜைகளை ஏற்றுத் திரும்புகின்றனர்.

கச்சியப்ப சிவாச்சாரியார் வரைந்த கந்த புராணத்திலும் கி.பி.12ம் நூற்றாண்டு வரலாற்று ஏடுகளிலும் இந்த இடத்தைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. குமரக் கடவுளை எதிர்த்து நின்ற சூரபத்மனை அவனது தளபதியான வீரவாகுத் தேவர் இங்கே சந்தித்தார் என்கிறது கந்தபுராணம். கி.பி. 1169–ல் பராக்கிரம பாண்டியனுக்கு உதவி செய்வதற்காக இலங்கை மன்னர் அனுப்பி வைத்த சிங்களவர் படை இந்தப் பகுதியில் தரையிரங்கியது என்பது வரலாறு.

## 8) அனுமார் கோவில்

இராமேஸ்வரம் திருக்கோவிலுக்கு வடக்குப் புறத்தில் இந்த அனுமார் கோவில் அமைந்துள்ளது. சிவலிங்கப்

பிரதிஷ்டை சம்பந்தமாக காசி சென்று இராமபிரானது ஆத்மலிங்கத்தை அனுமார் எடுத்து வந்ததைக் குறிப்பிடுவதற்காக இந்த சிறிய கோயில் அனுமனுக்கு தனியாக அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆனால் காசி சென்ற அனுமார் உரிய காலத்திற்குள் இராமேஸ்வரத்திற்கு வந்து சேராததால் சிதை செய்த மண்ணாலான லிங்கத்தை இராமேஸ்வரம் கடற்கரையில் இராமன் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்பதும் தாமதமாக அனுமரால் கொண்டு வரப்பட்ட சிவலிங்கம் ஏற்கனவே பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்திற்கு அண்மையிலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பதும் இங்கு ஐதிகம்.

### 9) சீக்கிய மடம்

இராமேஸ்வரம் ரயில் நிலையத்திற்கு தெற்கே அமைந்துள்ள ஆபில் காபில் தர்ஹா என்னும் இஸ்லாமிய தலமும் அடுத்து இராமேஸ்வரம் கரையூரைச் சேர்ந்த கடற்கரையில் கி.பி.16ம் நூற்றாண்டில் பிரான்சிஸ் சேவியர் என்ற கிறிஸ்தவ பாதிரியார் அமைத்த தேவாலயமும் இவைகளுடன் இராமேஸ்வரத்தின் தொன்மையை பகிர்ந்து கொள்வதுதான் இந்த சிக்கிய மடமாகும்.

கி.பி. 1429–ல் பஞ்சாப் மாநிலத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் குருநானக் பிறப்பினால் இந்து சமயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இந்து சமயத்தின் ஜாதிப் பிரிவுக் கொடுமையினால் தம்மைப் போலப் பாதிக்கப்பட்டு வாழ்க்கையை இழந்த ஏழை எளிய மக்களது அவலத்தை உணர்ந்த குருநானக்கின் சிந்தனை வளர்ந்து கொண்டே இருந்தது. இறைவனை வழிபடும் மக்களிடையே காணப்பட்ட மேல் ஜாதி. கீழ் ஜாதி வேறுபாடுகள். தீண்டாமை போன்ற பல சமூகக் கொடுமைகள் அவரது சிந்தனையைப் பல காலம் துளைத்துக் கொண்டு வந்தன. இதன் முடிவாக அவர் ஒரு புதிய

சமயத்தைத் தோற்றுவித்தார். அதுதான் பின்னர் சீக்கிய மதம் என அழைக்கப் பெற்றது.

அதுவரை பெரும்பாலான இந்திய மக்களினால் பின்பற்றப்பட்டு வந்த இந்து மதத்தின் சிறந்த பண்புகளையும் அடுத்து இந்திய மக்களிடையே இடம் பெற்ற இஸ்லாமிய மதத்தின் ஆரவாரமற்ற ஏகதெய்வ கொள்கையையும் கலந்த இணைப்பாக இந்தப் புதிய சீக்கிய மதம் மக்களிடம் இடம் பெற்றது. இந்த சமயத்தைத் தோற்றுவித்த குருநானக் அவர்களது தெய்வீக சிந்தனைகளை கொண்ட கிரந்த் சாகிப் என்ற தொகுப்பு சீக்கிய மக்களது திருமறையாகப் போற்றப்படுகிறது. குருநானக் இந்திய நாட்டைத் தவிர்த்து அரேபியா. இலங்கை போன்ற நாடுகளுக்கும் பயணம் செய்து அங்கு நிலவிய இஸ்லாமிய பௌத்த சமயக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் நன்கு அறிந்திருந்தார்.

குருநானக் அவர்கள் இலங்கை சென்று திரும்பும் வழியில் இராமேஸ்வரத்தில் சிலகாலம் தங்கினார். அந்த இடம் பிற்காலத்தில் அவரது தொண்டர்கள் சிலரால் கல்லினால் அமைக்கப்பட்ட மண்டபமாக இருந்து வருகிறது. குருத்வாரா அல்லது உதாசிமடம் என அழைக்கப்பட்டு வருகிறது. உபாசகர் என்ற பொருளில் சீக்கிய மதத்தில் உதாசி என்று வழக்குப் பெற்றுள்ளது. இராமேஸ்வரத்திற்கு வந்து செல்கின்ற சீக்கிய மக்களின் தங்குமிடமாக இந்த அமைப்பு இருந்து வருகிறது.

### 10) நம்பு நாயகி அம்மன் கோயில்

இராமேஸ்வரம் நகரின் தெற்கே தனுக்கோடி செல்லும் தேசிய நெடுஞ்சாலைக்கு மேற்கே 2 கி.மீ தொலைவில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இராமேஸ்வரம் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள அருள்மிகு பர்வதவர்த்தினி அம்பாளது மற்றொரு முகூர்த்தமாக இங்குள்ள அம்மன் கருதப்படுகிறது. மேலும் இராமேஸ்வரம் நகரின் தெற்கு எல்லையின் காவல்

தெய்வமாக இந்த அம்மன் கருதப்படுகிறது. ஆதலால் பக்தர்கள் இந்த அம்மனிடம் தங்களது அனைத்துக் குறைபாடுகளையும் தெரிவித்துத் தீர்வு காண்பதற்காக இங்கு நாள்தோறும் கூட்டமாக வந்து சேருகின்றனர். உடல் நலிவு நீங்க, பெண் குழந்தைகளின் திருமணம் நடைபெற, அவர்கள் மகப்பேறு எய்த, போன்ற பல வேண்டுதல்களை இந்த அம்மன் நிறைவேற்றி வைப்பதாக மக்கள் நம்புகின்றனர். இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் மாசித் திங்களில் இரண்டு நாட்கள் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

இந்தத் திருக்கோயிலும் இராமேஸ்வரம் பிரதானக் கோயிலுடன் கடந்த முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக உட்பட்டு இருப்பதை இராமநாதபுரம் மன்னர் முத்துவிஜய ரெகுநாத சேதுபதியின் செப்பேடு ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.

### 11) பாம்பன் கடற்பாலம்

இராமேஸ்வரத்தைப் பற்றிய விவரங்களை இந்த நூலில் கொடுக்கும் பொழுது இராமேஸ்வரம் தீவின் மேற்கு கோடியில் உள்ள பாம்பனையும் இந்த ஊருக்கு மேற்கே உள்ள மண்டபம் தோணிக்கரையையும் இணைக்கும் கடல் பாலத்தினை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இராமேஸ்வரம் தீவினை இந்திய நாட்டின் நிலப்பரப்புடன் இணைக்கும் இந்தப் பாலம் பற்றிய செய்திகளை இங்கு பார்ப்போம்.

வரலாற்று ஆவணங்களில் கி.பி. 17ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் பாம்பன் என்ற பெயர் காணப்படவில்லை. மன்னார் வளைகுடாவினை கி.பி. 1525 முதல் கி.பி. 1584 வரையான காலத்தில் ஆக்கிரமித்திருந்த போர்ச்சுகல் நாட்டுப் படையணி பற்றிய ஆவணங்களிலும் இந்தப் பெயர் காணப்படவில்லை. தளவாய் சேதுபதி என்ற இரண்டாவது சடைக்கன் சேதுபதி மீது மதுரை திருமலை நாயக்கர் மிகப் பெரிய படையெடுப்பினைத் தொடர்ந்த பொழுது இராமேஸ்வரம் தீவில் உள்ள அந்த

மன்னரை முறியடிப்பதற்காகத் திருமலை நாயக்கரது தளவாய் போர்ச்சுகல் நாட்டவரது தலைமை இடமான கோவாவிற்குச் சென்றார். அவர்களது படை உதவியைப் பெறுவதற்காகக் கையெழுத்திட்ட உடன்படிக்கையில் பாம்பன் துறைமுகத்தின் பெயர் முதன்முறையாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. பாம்பன் கால்வாய் என அழைக்கப்படும் இந்தக் கடற்பரப்பில் முதன் முதலாக ஒரு பாலத்தினை அமைத்து மதுரைப்படைகள் இராமேஸ்வரம் தீவிற்கு சென்றதை இராமப்பையன் அம்மானை என்ற நாட்டுப்புற இலக்கியம் தெரிவிக்கின்றது. ஆனால் இப்பொழுது உள்ள ரயில்வே - கடல் பாலத்தை அமைத்தவர்கள் ஆங்கில அரசாங்கத்தினர் ஆவர். தென்னிந்திய ரயில்வேயின் பாதையினை மதுரையிலிருந்து கி.பி.1914-இல் இராமேஸ்வரம் தீவிற்கு நீடித்த பொழுது சுமார் 2.7 கி.மீ தொலைவிற்கு கடல்மேல் இந்த ரயில் பாலம் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஸ்வைட்சர் என்ற பொறியாளரால் தொங்கு பாலமாக அமைக்கப்பட்டது.

இந்தக் கடல் வழி மூலமாக தூத்துக்குடியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தோணிகளில் பலவிதமான பொருட்கள் அனுப்பப்பட்டு வந்ததால் அந்த கடல்வழி வணிகத்தை ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியார் மேற்கொண்டிருந்த பொழுது இந்தக் கடல்வழியில் உள்ள பாறைகளை அப்புறப்படுத்தித் தோணிகளின் போக்குவரத்திற்கு ஏற்றவாறு முதலில் கி.பி.1838, 1854-இல் கால்வாயை அமைத்தனர். அந்தக் கால்வாயின் மொத்த நீளம் கிழமேலாக 968 அடி அகலம் 80 அடி ஆழம் 15 அடி இந்தப் பகுதியின் மேல் எவ்வித ஆதாரமுமின்றி தொங்கு பாலமாக இரயில் பாதை அமைக்கப்பட்டது ஒரு விந்தையாகும். (தோணிகளது போக்கு வரத்திற்கு இடர்ப்பாடு இல்லாமல் செய்வதற்கு.)

அந்தக் காலத்தில் கடல் வழியான இந்தத் தொங்கு பாதை அனைத்து இந்தியாவிலும் இல்லாத ஒரு புதுமையான கட்டுமானமாகக் கருதப்பட்டது. ஆனால் அண்மைக் காலத்தில் கல்கத்தா நகருக்கு அருகே ஹீப்ளி என்னும் இடத்தில் 5 கி.மீ தொலைவிற்கு இத்தகைய தொங்குபாலம் கடலில் அமைக்கப்பட்டிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

# இயல் - VIII

# இராமேஸ்வரம் குடிகள்

## 1) மறவர்கள்

இன்றைய இராமேசுவரத்தில், இந்து, இஸ்லாம், கிறிஸ்துவ சமயங்களைச் சேர்ந்தவர்கள் குடிமக்களாக இருந்து வருகின்றனர். ஆனால் மிகத் தொன்மையான காலந்தொட்டு இங்கு மறவர் இன மக்கள்தான் மிகுதியாக இருந்து வந்ததாகத் தெரிகிறது. இங்கு இராமலிங்கப் பிரதிட்டை செய்த இராமபிரான் அயோத்தி திரும்புவதற்கு முன்னர் இங்கிருந்த மறவர் தலைவரைப் புனித சேது அணைக்கு காவலராக (சேதுபதி) நியமித்தார் என்ற செவிவழிச் செய்தி இதனை உறுதி செய்கிறது.

மேலும் இந்தப் பகுதி மட்டுமல்லாமல் எதிர்கரையான இலங்கை யாழ்ப்பாணத்தை ஒட்டிய பகுதிகளிலும் மறவர் இன மக்கள்தான் மிகுந்து இருந்தனர். இதனை உறுதிப்படுத்துவதாக இலங்கையின் வடமேற்குப் பகுதியில் யாழ்ப்பாணத்தைத் தொட்டவாறு கிழக்குப் பகுதியில் வடமளாச்சி (வடமறவர் ஆட்சி) தென்மறாச்சி (தென்மறவர் ஆட்சி) வன்னி (மறவர்) என்ற சொல்லும் மறவரைக் குறிப்பது ஆகும். நெல்லை மாவட்ட சிவகிரியின் முந்தைய பாளையக்காரரும், ஜமீன்தாரருமாக இருந்தவர்கள் வன்னிய மறவர் என்ற பிரிவினர் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்கள் கி.பி. 1639 – 40ல் இராமேசுவரம் தீவில் தளவாய் இரண்டாவது சடைக்கன் சேதுபதிக்கும், மதுரைப் பேரரசர் திருமலை நாயக்கரது தளபதி இராமப்பையன் தலைமையில் வந்த பெரும்படைக்கும் நிகழ்ந்த பெரும்போரில் சேதுபதி மன்னரது அணியில் இவர்கள் போரிட்டனர் என்பது வரலாறு. இந்த மறவர்களது குடியிருப்பு இராமேஸ்வரம் நகரில் மட்டுமல்லாமல் இராமேசுவரத்தின் மேற்கு எல்லையை யொட்டிய பகுதி இப்பொழுது செம்மாமடம் என வழங்க பெறுகிறது. இவர்களில் பிற்காலத்தில் சிறப்புற்று இருந்த செம்மனத்தேவர் என்பதும் அவர் அமைத்த மடம் தான் செம்மனத்தேவர் மடம் "செம்மாமாடம்" நாளடைவில் எனத்திரிந்து வழங்குவது அறியத்தக்கது.

## 2) இஸ்லாமியர்

இராமேசுவரத்தில் இஸ்லாமியர் எப்பொழுது குடியேறி வாழத் தொடங்கினர் என்பதைக் குறிப்பிடும் ஆவணம் எதுவும் இல்லை என்றாலும் மனிதவர்க்கத்தின் ஆதி பிதாவான ஆதாமின் மக்களான ஆபில் காபில் சகோதரர்களது அடக்கவிடம் இராமேஸ்வரத்தில் அமைந்து இருப்பது இவர்கள் இராமேசுவரத்தின் தொன்மைக்குடிகள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. கி.பி.1311–ல் தென்னாட்டில் சூறாவளி கொள்ளை நடத்திய தில்லி தளபதி மாலிக்காபூர் ஸ்ரீ ரங்கம், சிதம்பரம், மதுரை, திருக்கோயில்களின் திரு ஆபரணங்கள் போன்ற விலையுயர்ந்த அணிமணிகளைக் கொள்ளை கொண்ட பிறகு கி.பி.1311, ஏப்ரல் 13ம் தேதிக்கும் ஏப்ரல் 24ம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் மாலிக்காபூரும் அவனது படை வீரர்களும் இராமேசுவரம் வரை சென்று திரும்பினர். இந்த வரலாற்று உண்மையினை இராமேஸ்வரம் தலவரலாறும், வல்லாள இராவண யுத்தம் என்ற கன்னட கதைப் பாடலும் வரலாற்றாசிரியர்களான R.C.மஜீம்தார், A.L. பாஷாம் ஆகியோர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அப்பொழுது மக்களுக்காக இங்கு தொழுகைப் பள்ளி ஒன்றை அமைத்தான்.

அதனை கி.பி. 1318–ல் இங்கு வந்த மற்றொரு தில்லி தளபதி குஸ்ராக்கான் பழுது பார்த்தான் என்பது ஆசிரியர் எல்பின் ஸ்டோன் வழங்கும் வரலாற்றுக்குறிப்புகள்.[1]

இன்னொரு வரலாற்றுச் செய்தியின்படி இங்கு இருந்த இஸ்லாமியர் கடல் தொழிலில் ஈடுபட்டு இருந்தனர் என்பதும் இவர்களது முத்துக்கள் இராமேஸ்வரம் நன்முத்துக்கள் என வழங்கப்பெற்றுக் கேரளக்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள கொல்லம் துறைமுகம் வழியாக மேலைநாடுகளுக்கு அனுப்பப்பட்டன.[2]

இன்றும் இராமேசுவரம் நகரில் "முத்துச்சாவடி" என்ற பகுதி இருந்து வருவதும் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக இங்குள்ள இந்து சமய மக்களுடன் இவர்கள் கலந்து பழகி வாழ்ந்து வருவதுடன் சங்கு. சோவி. அரிய கடல் தரும் பொருள் வாணிபத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். இராமேஸ்வரம் திருக்கோயில் தெப்பத் திருவிழாவிற்கு இவர்கள் தொன்றுதொட்டு படகுகள் கொடுத்து வருவதும் இந்த கைங்கரியத்திற்காக இவர்களுக்கு ஆண்டுதோறும் திருக்கோயிலில் இருந்து வத்திரப்பாடி. முதலிய சம்பாவணைகள் கொடுக்கப் பெறுவதும். பொங்கல், தீபாவளி போன்ற சிறப்பான நாள்களுக்கு கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்பெறுவது போல ஒரு குறிப்பிட்ட மரைக்காயர் குடும்பத்தினருக்கு எண்ணெய். பச்சரிசி. புதுப்பானை போன்ற திருவிழாச்சீர்கள் ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதும் ஆகும்.

1) Elph instone - Denasities of South India.
2) Appadurai Dr. Economical condition of Tamil Nadu (AD 1000 - 1300) - (1930) - Volume II

இவைகளைவிட இன்னுமொரு சிறப்பான செய்தி. கி.பி. 19-ம் நூற்றாண்டில் இராமேசுவரம் சுல்தான் மரைக்காயர் என்பவர் திருக்கோயில் அறங்காவலராக இருந்தார் என்பதும் அவரது பொறுப்பில் கோயில் கருவூலம். திருவாபரணம் ஆகியன இருந்து வந்தன என்பதுமாகும். இவையெல்லாம் பழைய செய்திகளாக இருந்தாலும். இன்றும் இராமேசுவரத்தில் நிலவிவருகின்ற சமரச. சமய நல்லிணக்க சூழலுக்குப் பக்கவேர்களாக இருந்து வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 3) அகம்படியர்

முக்குலத்தோரில் ஒரு பிரிவினரான இந்த மக்கள் பெரும்பாலும் இராமேசுவரம் திருக்கோயிலைச் சார்ந்து வாழ்கின்றார்கள். பூஜை. ஸ்தானிகம். பரிச்சாரகம் ஆகிய பணிகளைத் தவிர்த்து. ஏனைய கோயில் பணிகள் அனைத்திலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். யாத்ரீகர்களுக்குக் கோடி தீர்த்தம். வழங்குதல் பூசைக்கான சீட்டு வழங்குதல். கோயில் பிரசாதம் விற்றல். சன்னதிகளில் பக்தர்கள் போக்குவரத்தைச் சீர்படுத்துதல். வீடுகளில் பயணிகளை தங்க வைத்து வாடகை வசூலித்தல் போன்ற சிறு பணிகள் அனைத்தையும் இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

தெய்வத் திருமேனிகள் வீதி உலா. திருவிழாவிற்கு எழுந்தருளல். மண்டகப்படி ஆராதானைகள் அனைத்திலும் இந்த மக்களது பங்கு மிகுதி. கோயில் பணியாளர்களில் மிகுதியானபேர் இந்த மக்களே. ஒருசிலர் கோயில் யாத்ரீகளுக்குத் தேவையான சங்கு. மணிமாலைகள். உருத்திராட்சம் போன்ற பொருட்களை விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளாகவும் உள்ளனர்.

நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இவர்களது மூதாதையரில் ஒருவரான முத்துவிஜயன் சேர்வை என்பவர்

மிகுந்த உடல் வலிமை பெற்றவராகத் திகழ்ந்தார். ஆனால் வாழ்க்கையில் நலிவு ஏற்பட்டு சிரமப்பட்டுக் கொண்டிருந்த சமயம் போகலூரில் இருந்து கூத்தன் சேதுபதி மன்னர் இராமேசுவரத்திற்கு வந்தார். அவரை நேரில் அணுகி தமது இடர்ப்பாடுகளை எடுத்துச் சொல்ல அவருக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. அவரது வீதிபக்கம் சேதுபதி யானை மீது பவனி வருவதைத் தெரிந்து முத்து விஜயன் சேர்வை கம்பீரமாக நடந்து சென்று கொண்டிருந்த யானையின் அருகில் சென்று அதன் வாலைப்பிடித்து தனது வலிமையனைத்தையும் சேர்த்து இழுத்தார். யானை காலை நகர்த்தி ஒரு அங்குலம் கூட நடக்க முடியாமல் ஸ்தம்பித்து நின்றுவிட்டது.

நிலைமையை அறிந்த மன்னர் சற்றும் பதட்டமோ கோபமோ கொள்ளாமல் சேர்வைக்காரரிடம் பரிவுணர்வுடன் அவரது செயலுக்கு காரணம் யாது என வினவினார். தமது வறிய நிலையை மன்னருக்கு அறிவிக்கவே இந்த நேரடி நடவடிக்கை என்பதைச் சொன்னவுடன், சேர்வைக்காரருக்கு நாள்தோறும் இருவேளை உணவு இலவசமாக கோயிலில் இருந்து வழங்க அந்த இடத்திலேயே மன்னர் உத்திரவிட்டார்.[1] யானை பவனி தொடர்ந்தது. இந்த நிகழ்ச்சி நடைபெற்றது கி.பி. 1628இல் ஆகும்.

## 4) மீனவர்கள்

இங்குள்ள தொன்மையான குடிகளில் இவர்களும் இடம் பெறுகின்றனர். கடலில் மீன்பிடிதொழிலில் ஈடுபட்டவர்கள் கரையர், கடையர், பரவர், படையாட்சி என வழங்கப்பட்டனர். தற்போது இந்தத் தொழில் மேற்கொண்டு இருக்கும் இந்து சமயத்தினர் முத்தரையர் என வழங்கப்படுகின்றனர்.

---

1) சென்னை அருங்காட்சியகத்திலுள்ள கி.பி. 1628 ஆம் ஆண்டு சேதுபதி செப்பேடு

### 5) கிறிஸ்தவர்கள்

இராமேஸ்வரம் தீவில் உள்ள கிறிஸ்தவர்களில் மிகப்பெரும் பாலோர் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவர்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரை தங்கச்சிமடத்திலும் ஓலைக்குடாவிலும் இவர்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால் தற்போது இராமேஸ்வரம் நகரிலும், தீவின் பல பகுதிகளிலும் இவர்களது குடியிருப்புகள் உள்ளன.

வரலாற்று ஆவணங்களின்படி பிரான்சிஸ் சேவியர் என்ற கிறிஸ்த்தவ பாதிரியார் கி.பி. 1543 – 44ம் ஆண்டுகளில் தமது சமயப்பணியைத் தூத்துக்குடியில் தொடங்கிய பிறகுதான் இந்தப் பகுதியில் கிறிஸ்தவ குடியிருப்புகள் எழுந்தன. அவரையடுத்து இத்தாலிய நாட்டு அந்தோணி கிரிமினாலிஸ் என்ற பாதிரியாரும் இந்தப் பகுதியில் சமயப் பணியைத் தொடர்ந்தார். ஆனால் இந்தப் புதிய சமயத் தினருக்கான வழிபாட்டுத் தலங்கள் எழவில்லை. ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு கி.பி.1639ல் இராமநாதபுரம் சேதுபதி மன்னரை அடக்குவதற்காக மதுரைப் பேரரசர் திருமலைநாயக்கர் இராமநாதபுரம் மீது பெரும்படையெடுப்பை மேற்கொண்டார்.

மறவர்களை எளிதில் வெல்ல முடியாது என்ற முடிவிற்கு வந்த திருமலைநாயக்கர் தமது தளபதி இராமப்பையனை கோவாவிற்கு போர்ச்சுக்கீசியர்களிடமிருந்து வெடிமருந்து மற்றும் ஆயுத உதவி பெறுவதற்காக அனுப்பினார். போர்ச்சுக்கீசிய கவர்னருடன் இராமப்பையன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி இராமநாதபுரம் சீமையில் கிறிஸ்தவ சமயத்தை ஏற்க விரும்புகிறவர்களைக் கிறித்தவ பாதிரியார்கள் அவர்களுக்கு ஞானஸ்நானம் அளித்து கிறிஸ்தவர் ஆக்கிக் கொள்ளலாம் என்ற நிபந்தனையின் பேரில் திருமலைநாயக்கருக்கு போர்ச்சுக்கீசியர் ராணுவ உதவிகள் வழங்கினார்.[1] இதனைத் தொடர்ந்து இராமேஸ்வரம் கரையின்

1) Sathya Natha Iyyar - Histry of Madura Nayaks 1924 Page

பகுதியிலும் தங்கச்சிமடம் பாம்பன் பகுதிகளிலும் கிறித்தவ வழிபாட்டுத் தேவலாயங்கள் அமையத் தொடங்கின.

பொதுவாகக் கி.பி. 1964-க்குப் பிறகு தான் இராமேசுவரம் தீவில் கிறிஸ்தவர்களது குடியேற்றம் அதிகரித்துள்ளது. இராமேசுவரத்தைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கும் இரால் மீன்கள் மிகுதியாக அப்பொழுது கிடைத்தது அதற்கு முக்கியக் காரணமாகும்.

### 6) தமிழ் ஆரியர்

இராமேஸ்வரத்தில் தொன்று தொட்டு திருக்கோயில் பணிகளில் ஈடுபட்டு இருப்பவர்கள் தமிழ்நாடு பிராம்மணர்கள். இவர்களை இராமேசுவரம் திருக்கோயில் ஆவணங்கள் தமிழ் ஆரியர் எனத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. திருக்கோயிலின் பணிகளில் பிராம்மணர்கள் ஈடுபட்டு இருப்பது இயல்பான ஒன்றுதான். என்றாலும் இந்தக் கோயிலின் பூஜை, நைவேத்தியம், பரிசாரகம் போன்ற முக்கியப் பணிகளில் இன்னொரு வகை பிராம்மணர்கள் மேற்கொண்டு இருப்பது தான் இதற்குக் காரணம். அவர்கள் மராட்டா குருக்கள் எனப்பட்ட பஞ்சதேசத்து ஆரியராவார். இவர்கள் இருவரும் இணைந்து திருக்கோயிலில் செயல்படுவது தொடர்ந்து வருகிறது.

### 7) மராட்டா குருக்கள்

இவர்கள் மராட்டா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். மராத்திய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். இவர்கள் இராமேசுவரத்தில் 512 பேர் இருந்தனர் என்பதைத் திருக்கோயில் ஆவணங்கள் குறித்துள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "தேவை உலா" என்ற சிற்றிலக்கியத்தைப் பாடிய மதுரை பலபட்டடை

பகுதியிலும் தங்கச்சிமடம் பாம்பன் பகுதிகளிலும் கிறித்தவ வழிபாட்டுத் தேவலாயங்கள் அமையத் தொடங்கின.

பொதுவாகக் கி.பி. 1964–க்குப் பிறகு தான் இராமேசுவரம் தீவில் கிறிஸ்தவர்களது குடியேற்றம் அதிகரித்துள்ளது. இராமேசுவரத்தைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கும் இறால் மீன்கள் மிகுதியாக அப்பொழுது கிடைத்தது அதற்கு முக்கியக் காரணமாகும்.

### 6) தமிழ் ஆரியர்

இராமேஸ்வரத்தில் தொன்று தொட்டு திருக்கோயில் பணிகளில் ஈடுபட்டு இருப்பவர்கள் தமிழ்நாடு பிராம்மணர்கள். இவர்களை இராமேசுவரம் திருக்கோயில் ஆவணங்கள் தமிழ் ஆரியர் எனத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. திருக்கோயிலின் பணிகளில் பிராம்மணர்கள் ஈடுபட்டு இருப்பது இயல்பான ஒன்றுதான். என்றாலும் இந்தக் கோயிலின் பூஜை, நைவேத்தியம், பரிசாரகம் போன்ற முக்கியப் பணிகளில் இன்னொரு வகை பிராம்மணர்கள் மேற்கொண்டு இருப்பது தான் இதற்குக் காரணம். அவர்கள் மராட்டா குருக்கள் எனப்பட்ட பஞ்சதேசத்து ஆரியராவார். இவர்கள் இருவரும் இணைந்து திருக்கோயிலில் செயல்படுவது தொடர்ந்து வருகிறது.

### 7) மராட்டா குருக்கள்

இவர்கள் மராட்டா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், மராத்திய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். இவர்கள் இராமேசுவரத்தில் 512 பேர் இருந்தனர் என்பதைத் திருக்கோயில் ஆவணங்கள் குறித்துள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "தேவை உலா" என்ற சிற்றிலக்கியத்தைப் பாடிய மதுரை பலபட்டடை

சொக்கநாதபுலவர் இவர்கள் 512 பேர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

"மெய்நூல் துறையின் விதிவழியே பூசிக்கும் ஐந்நூற்றுப் பன்னிருவர் ஆரியரும்" என்பது புலவரது வாக்கு.

இந்தக் குருக்கள் எப்பொழுது எந்தச் சூழ்நிலையில் இந்தத் திருக்கோயில் சேவையில் இணைந்தனர் என்பது தெரியவில்லை. ஆனால் கி.பி. 1747 ஆம் ஆரண்டு குமார முத்து விஜய ரெகுநாத சேதுபதி மன்னர் இந்த மராட்டா குருக்களுக்கும் தமிழ் ஆரியர்களுக்கும் இடையிலான இராமேசுவரம் லட்சுமண தீர்த்தக்கரை உரிமை இயல் வழக்கை விசாரித்த பொழுது இவர்கள் சார்பாகத் திருக்கோயில் ஆவணங்களை (இந்த வழக்கில் காலத்திற்கு முன்னூற்று பன்னிரெண்டு ஆண்டுக்கான) பரிசிலித்தாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதால் அந்த குருக்களின் முன்னோர் கி.பி.1435–ல் இராமேசுவரத்தில் குடியேறி இருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது. (அதாவது பதினைந்தாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் சின்ன உடையான் சேதுபதி ஆட்சியில்) ஆனால் இன்று இவர்களது தாயகம் மராட்டிய மாநிலம் அல்ல தமிழகம் தான். இவர்களது தாய்மொழியும் தமிழாகிவிட்டது. இவர்களில் சிலர் மட்டும் கோயில் திருப்பணிகளில் உள்ளனர்.

தில்லைமூவாயிரவர் என்பது போன்று இவர்களது (512 பேர்களும்) தொடர்ந்து பல ஆவணங்களின் குறிப்பிடப் படுகின்றனர். இந்த அறிவார்ந்த மக்களில் பதினைந்தாம் நூற்றாண்டில் மிகச் சிறப்புற்று விளங்கியவர் பண்டிதர் கயாதரர். இவர் தமிழ்மொழிக்கு அளித்துள்ள காணிக்கை "கயாதர நிகண்டு" என்ற சொற்களஞ்சிய நூல். இவர் இராமேசுவரம் இறைவன் மீது "இராமேசுவரக் கோவை" ஒன்றும் இயற்றினார். ஆனால் இந்த நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. இவர்களது அறிவாற்றலையும் ஆன்மீகப்

பணியையும் சேதுபதி மன்னர்கள் மதித்துப் போற்றினர். இவர்களில் சிறப்புற்று இருந்த சங்கர குருக்களை திருமலை ரகுநாத சேதுபதி மன்னர் (கி.பி. 1658–ல்) இராமநாதபுரத்தில் புதிதாக பிரதிட்டை செய்யப்பெற்ற ராஜராஜேஸ்வரி அம்மனுக்கு "நவராத்திரி உத்சவம்" நடத்துவதற்கு நியமனம் செய்தார் என்ற செய்தி கி.பி.1658–ம் ஆண்டு செப்பேடு மூலம் தெரிய வருகிறது. இதனைப் போன்றே கிழவன் ரகுநாத சேதுபதி. இந்த மராட்டா குருக்களில் முதன்மை பெற்று இருந்த ரகுநாத குருக்கள் என்பவரை இராமேசுவரம் திருக்கோயில் சேதுபதி மன்னர் கட்டளைகளைச் சிறப்பாக நிறைவேற்ற நியமனம் செய்து இருந்தார் என்பது ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ளது. இவரைக் இரட்டைக்குடை. இரட்டைத் திவெட்டி. அக்கிரத் தாம்பூலம் போன்ற விசேஷ மரியாதைகளைக் கோவிலிருந்து பெறுவதற்கு உரியவராகச் செய்ததுடன் ஆண்டுதோறும் பொன்மகமையும் பெறுபவராக ஏற்படுத்தி இருந்தார்.

முதலாவது முத்துராமலிங்க சேதுபதி மன்னர் ஆட்சியின்போது (கி.பி.1762 – 1795) இராமேசுவரத்தில் சேதுபதி மன்னரும் அவரது குடும்பத்தினரும் சமயச் சடங்குகளை மேற்கொள்ளும் பொழுது. அவர்களுக்கு பிராயச்சித்தம். ஆகிய சடங்குகளை சேது மன்னருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் செய்து வைப்பதற்காக தாதாராம் பட்டர் மகன் ரகுநாத குருக்கள் நியமிக்கப்பட்டார் என்ற செய்தியும் உள்ளது.

இவ்விதம் இந்த மராட்டா குருக்களுக்கும் சேதுபதி மன்னர்களுக்கும் இடையில் நல்ல அன்யோனியமான தொடர்புகள் நிலவி வந்தன.

8) பிறசாதி மக்கள்

இராமேசுவரம் குடிமக்களாக மேலே சொல்லப்பட்ட சாதியினரைத் தவிர பிராமணர்களால்லாத இந்துக்களில், ஆயிரவைஸ்யரும் (கோமுட்டி செட்டிகளும்) நாடார்களும், பணிக்கர்களும், யாதவர்களும் இந்த மக்கள் சமுதாயத்தின் பிரிவினர்களாக இருந்து வந்ததை கி.பி. 1747-ம் ஆண்டு செப்பேட்டு வழி தெரிய வருகிறது.

# இயல் - IX

## சில குறிப்புகள்

### 1) இராமலிங்க பிரதிட்டை

இராமேஸ்வரத்தில் இராமபிரானும் சீதாப்பிராட்டியும் கடற்கரை மணலில் சிவலிங்கம் செய்து வழிபட்ட செய்தி தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஸ்ரீரங்க ராமாயணம், ஆனந்த இராமாயணம், அத்யந்த இராமாயணம் என்ற சமஸ்கிருத, தெலுங்கு இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கியங்கள் பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாக இருப்பதால் இந்த ஐதீகம் இராமேஸ்வரம் திருக்கோயிலில் பிற்காலத்தில் புகுத்தி வழங்கப்பட்டதாக இருக்கலாமோ என்ற ஐயம் எழுவது இயல்பு. ஆனால் இந்த ஐயப்பாட்டிற்கு இடமே இல்லையென்பதை கி.பி. ஏழாம் நூற்றாண்டு தேவாரம் உறுதிப்படுத்துகின்றது.

"..............................
தொலைவிலா கொடிய அரக்கரைக் கொன்று வீழ்த்தி சிலையான் செய்த கோவில் திருவிராமேசுவரத்தை.............."

"........................ அன்பு கொண்டு தேடி மால் செய்த கோவில் திருவிராமேச்சுரத்தை நாடிவாழ் நெஞ்சமே................."

இவ்வளவு தெளிவான தேவாரத்தில் "சிலையான் செய்த கோவில்" "மால் செய்த கோவில்" எனக்குறிப்பிட்டு இருந்தும் மகாகவி கம்பர் இந்தச் செய்தியை தமது பார

காவியத்தில் குறிப்பிடவில்லை. தேவாரத்தில் செய்யப்பட்ட இடைச்செருகல் எனவும் கருத்து உள்ளது. வால்மீகி வடமொழி இராமாயணத்திலும் இந்தச் செய்தி இடம்பெறவில்லை.

## 2) இராமபக்தர்களில் சிறந்தவர்

இராமாயணக் கதை நமது நாட்டில் மட்டுமல்லாமல், தென்கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து, கம்போடியா, ஜாவா, சுமத்ரா நாடுகளிலும் வழக்கிலும் எழுத்திலும் இருந்து வருகின்றது. நமது நாட்டைப் பொறுத்தவரையில் இக்கதை பலமாநில மொழிகளில் பல்வேறு இலக்கியங்களாகப் படைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சமஸ்கிருதம், தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம் போன்ற 22 மொழிகளில் உள்ள இராமகாதை இலக்கியங்கள் படித்த மக்களது இதயத்தை ஈர்த்து வந்துள்ளன. இதன் காரணமாகத்தான் ஆண்டு முழுவதும், பல மாநிலங்களில் இருந்து மக்கள் பக்தி உணர்வுடன் இராமநாதசுவாமி தரிசனத்திற்காக இராமேசுவரம் திருக்கோயிலுக்கு வருகை தருகின்றனர்.

இவர்கள் அனைவரிலும் மற்ற மாநிலத்தாரைவிட ஆந்திர மாநில மக்கள், இராமபக்தியில் ஒருபடி மேலானவர்கள் என்று தான் குறிப்பிட வேண்டும். ஆந்திர மாநில பத்ராசலத்தில் தாசில்தாராக இருந்து பணியாற்றிய கோபண்ணா, அங்கு அரசாங்க பணத்தைச் செலவு செய்து இராமபிரானுக்கு கோயில் அமைத்தார் என்பது வரலாறு. இதனை அடுத்து இந்த நிகழ்ச்சிக்கு முன்னும் பின்னும் ஆந்திர மாநிலத்தில் இராமலிங்க சுவாமி பெயரால் பல திருக்கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டு இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 3) ராஜகோபுரம்

இராமேஸ்வரம் திருக்கோயில் கட்டுமானப் பணிகள் ஏறத்தாழ 300 ஆண்டுகள் இடைவெளியில் பல சேது மன்னர்களால் அமைக்கப்பட்டன என்பதை முன்னர் பார்த்தோம். இரண்டாவது சடைக்கன் சேதுபதி இன்றைய இராமேஸ்வரம் திருக்கோவிலுக்கு ஏற்றம் தரும் வகையில் கிழக்கு நுழைவுவாயில் ராஜகோபுரம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்று முயன்றார். கால்கோல் விழா நடைபெற்று கட்டுமானமும் தொடங்கியது. இந்தப் பணிக்கென இராமநாதபுரம் சமஸ்தானம் சாயல்குடி வட்டகையில் இருந்து கிடைக்கப்பெறும் வருவாய் அனைத்தையும் இந்தத் திருப்பணியில் சேது மன்னர் செலவழித்து வந்தார். இந்த மன்னரது புகழையும். வீரப் பொலிவையும் பொறுத்துக் கொள்ள முடியாத மதுரை திருமலை நாயக்க மன்னர் சேது நாட்டின் மீது பெரும் படையை கி.பி.1639ல் மேற்கொண்டார். கோவில் கோபுர கட்டுமானத்திற்கு இடையூறாக அமைந்தது இந்தப் போர். ஓராண்டு கழித்துப் போர் முடிவுற்று இயல்பு நிலை ஏற்பட்டாலும் சேது நாட்டில் அப்பொழுது ஏற்பட்ட பல விதமான இழப்புகளாலும் இந்தத் திருப்பணி நடைபெறவில்லை. அடுத்து கி.பி.1690–ல் கள்ளர் சீமை. சேது நாட்டிலிருந்து தனி நாடாகப் பிரிவினை பெற்றதும் கி.பி.1728–ல் சிவகெங்கைச் சீமை என்ற மற்றுமொரு தன்னரசும் மறவர் சீமையிலிருந்து தனியாகப் பிரிந்து ஏற்பட்டு சேதுநாட்டில் இயல்பான வலிமையும். பெருமையும் குன்றியதால் கி.பி.18ம் நூற்றாண்டின் இறுதிவரை இந்தக் கோபுரத் திருப்பணி தடைபெற்று நின்றுவிட்டது. பொதுவாகத் தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில் இராஜகோபுரம் அமைக்கும் பணி கி.பி.10ம் நூற்றாண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. சோழர்களும். நாயக்கமன்னர்களும் எழுநிலை அல்லது 11 நிலைகள் கொண்ட இராஜ கோபுரங்களை அமைக்கும் பணியைத் தொடங்கினர். இதற்கு எடுத்துக்காட்டாக

தஞ்சை, சிதம்பரம் ஆகிய ஊர்களிலுள்ள திருக்கோயில்களைக் கொள்ளலாம். பிற்காலப் பாண்டியர்களும் சேதுபதி மன்னர்களும் இத்தகைய ஏழுநிலை கோபுரங்களை அமைத்துள்ளனர். திருஉத்திரகோசமங்கை, காளையார் கோவில், திருவாடானை ஆகிய திருக்கோயில் இராஜகோபுரங்களைச் சேதுமன்னர்கள் அமைத்திருப்பதை காணலாம். மன்னர் பாஸ்கர சேதுபதியினைத் தலைவராகக் கொண்ட இராமேஸ்வரம் திருக்கோயில் அறங்காவலர் குழு இந்தத் திருப்பணியைத் தொடங்கியது. ஒரு வகையாக கி.பி. 1902–ல் தேவகோட்டை ஜமீன்தாராகிய திரு.கே.ஏ.எல்.ஏ.ஆர். இராமசாமி செட்டியார் அவர்களது பெரு முயற்சியாலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களது ஒத்துழைப்பினாலும் இந்த இராஜகோபுரத்தின் முதலாவது குடமுழுக்கு 1903–ல் சிறப்பாக நடந்தேறியது. இதனையடுத்து கி.பி.1925, கி.பி.1967, கி.பி.2001 ஆகிய வருடங்களில் மூன்று குடமுழுக்குகள் இந்த கோபுரத்திற்கு நடத்தப் பெற்றுள்ளன.

இராமேஸ்வரம் திருக்கோயிலின் சுவாமி சன்னதிக்கு செல்லும் வாசல் பகுதியில் இந்தக் கோபுரம் அமைக்கப் பட்டுள்ளது. சுமார் 150 அடி உயரத்தில் ஏழுநிலை மாடங்களையும் கோபுரத்தின் உச்சியில் ஏழு செப்புக் கலசங்கல் பொருத்தப்பட்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அக்கினி தீர்த்தக்கரை நோக்கியவாறு கிழக்கில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இந்த அமைப்பு புராணக் காட்சிகளைச் சித்தரிக்கும் சுண்ணாம்பு சுதை உருவங்களுடன் வர்ணங்கள் சேர்த்து அழகாகக் காட்சியளிக்கும் நிலையில் திராவிட பாணியில் அமைக்கப்பட்டுள்ளது.

### 4) மூன்றாவது பிரகாரம்

இராமேஸ்வரத் திருக்கோயில் அமைப்பில் சிறப்பாக விளங்குவது இங்குள்ள மூன்றாவது பிரகாரம் ஆகும். இந்தக்

கோயிலின் அமைப்பைப் போலவே செவ்வக வடிவத்தில் கிழமேலாக சுமார் 840 அடி நீளமும் தென்வடலாக சுமார் 630 அடி நீளமும் உள்ளது. இப்பிரகாரத்தின் நான்கு பக்கங்களிலும் நான்கு வாயில்களுக்கான நடைபாதையும் இடப்பட்டுள்ளது. இந்தப் பிரகாரத்தின் ஒரு கோடியிலிருந்து அடுத்த கோடியினைப் பார்த்தால் இந்தப் பிரகாரத்தின் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள சுமார் 2168 தூண்களின் அமைப்பு காரணமாக ஒரே மாதிரியான தோற்றம் ஏற்படுவது இந்தக் கட்டுமானத்தின் சிறப்பு ஆகும். இந்தப் பிரகாரத்தின் நடைபாதைகள் இருபுறமும் எட்டு அடி உயர திண்ணையும் அதற்கு மேலே வரிசையாக 15 அடி உயர கல்தூண்களும் நாட்டப்பட்டுத் தூண்களுக்கு மேலே பொதிகை, யாளி அமைப்புகளும் அதற்கு மேலாக மூடு பலகையாக கற்பாளங்களும் நிறுவப்பட்டுள்ளன. மொத்தத்தில் இந்தப் பிரகாரத்தின் உயரம் தரையிலிருந்து 31 அடியாகவும் அகலம் 21 அடியாகவும் ஒரே சீராக அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நீண்ட பிரகாரம் தமிழ்நாட்டிலுள்ள பழமை பொருந்திய மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், ஸ்ரீரங்கம் ரங்க நாதப் பெருமாள் ஆலயம், சிதம்பரம் நடராஜர் ஆலயம், காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயம் ஆகியவைகளில் கூட அமைக்கப்படவில்லை. உண்மையில் இந்தியாவில் உள்ள வேறு எந்தக் கோவிலிலும் இத்தகைய நீண்ட கட்டுமான அமைப்பு இல்லை. இந்தப் பிரகார அமைப்பினைக் கண்டு அதிசயித்த மேனாட்டு அறிஞர்கள் இதனை உலகத்தின் எட்டாவது அதிசயம் எனப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். கிபி 19-ம் நுற்றாண்டின் இறுதியில் இங்கு வருகை தந்த பெர்கசன் என்ற பேரறிஞர் இதற்கு ஒப்பாக இந்தியாவிலும் கீழை, மேலை நாடுகளிலும் எந்த அமைப்பும் இல்லை என அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

## இயல் - X

# 1) வரலாற்றில் பதிவு பெற்றுள்ள இராமேஸ்வரத்து வருகைகள்

திரேதாயுகத்தின் யுகதர்மத்தை நிலை நிறுத்துவதற்காக திருமால் அயோத்தியில் மானிடப் பிறவியில் அவதரித்தான். தயரத சக்கர வர்த்தியின் மூத்த திருமகனாக - இராம பிரானாகத் தோன்றினான். அரக்கர்களின் பாவத்தை அழித்து ஒழிக்க மறவுரி அணிந்து மனைவி சிதையுடனும் தம்பி இலக்குவனுடனும் தண்ட காரணியம், பஞ்சவடி, கிஷ்கிந்தை, மகேந்திர புரி ஆகிய பாரத நாட்டில் பல இடங்களுக்கும் சென்று இறுதியில் இலங்கையில் இராவணனை அழித்து ஊர் திரும்பினான் என்பது இராமகாதை தருகின்ற விவரங்கள் ஆகும். இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் இராமரது சிறந்த பணிகளாகக் குறிக்கப் பெறுவது இராவணனை அழிக்கக் கடல் அடைத்து சேது என்ற திருஅணையை அமைத்ததும் இராமேஸ்வரம் கடற்கரையில் பாவ விமோசனத்திற்காக சிதாப்பிராட்டியுடன் இணைந்து சிவலிங்கப் பிரதிட்டை செய்ததும் ஆகும்.

இவைகளை யெல்லாம் படித்து உணர்ந்த மக்கள் மனநிறைவு கொள்ளாமல் சேது அணையையும் இராமேஸ்வர சிவலிங்க பிரதிட்டையையும் நேரில் கண்டு தரிசித்து உய்வு பெற வேண்டும் என்ற உந்துதலினால் பல நூற்றாண்டுகளாக வடக்கிலும் தெற்கிலும் இருந்து சேது யாத்திரையை மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதை வரலாறு

தெரிவிக்கின்றது. இவர்களில் சிறந்த மன்னர்களையும் ஆளுநர்களையும் மக்கள் தலைவர்களையும் வரலாறு இனங்காட்டியுள்ளது. கீழே கண்டுள்ள பட்டியல் அந்தப் பெருமக்களின் பெயர்களைத் தெரிவிக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1. | கி.பி. 864 | இராஷ்டிர கூட மன்னன் மூன்றாவது கிருஷ்ணன் வருகையும் கண்டமார்த்தாண்ட ஆலய அமைப்பு |
| 2. | கி.பி. 970 | பராந்தக சோழன் வருகை துலாபார தானம் |
| 3. | கி.பி. 1169 | பராக்கிரம பாண்டியனுக்கு உதவ வந்த வேங்கைப் படைகள் இராமேஸ்வரத்தில் கரையிறங்குதல். |
| 4. | கி.பி. 1190 | நிசங்க மல்லனும் அவனது இலங்கைப் படைகளும் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை திரும்புதல். |
| 5. | கி.பி. 1311 | தில்லி தளபதி மாலிக்காபூரின் சூறாவளிப் பயணம் |
| 6. | கி.பி. 1318 | தில்லி தளபதி குஸ்ராகான் இராமேஸ்வரம் வந்து திரும்புதல். |
| 7. | கி.பி. 1404 | விஜய நகர மன்னர் இரண்டாவது ஹரிஹரர் இராமேஸ்வரம் வருகை |
| 8. | கி.பி. 1408 | விஜய நகர ஆளுநர் கோப்பதிப்பா இராமேஸ்வரம் வருகை |

9. கி.பி. 1458 சுவாமி அருணகிரிநாதர் இராமேஸ்வரம் வருகை

10. கி.பி. 1483 மகா மண்டலேசுவரர் சாளுவ நரசிம்மா இராமேஸ்வரம் வருகை

11. கி.பி. 1497 விஜயநகர மன்னர் நரசிம்மர் இராமேஸ் -வரத்தில் பதினாறு தர்மங்களையும் செய்தல்.

12. கி.பி. 1517 பேரரசர் கிருஷ்ண தேவராயர் தம் இரு மனைவிகளுடன் முப்பத்து இரண்டு தர்மங் -களையும் செய்தல்.

13. கி.பி. 1532 தென்னகத்து மகா மண்டலேசுவரரான சாளுவ திம்மா இராமேஸ்வரம் வருகை

14. கி.பி. 1547 இத்தாலிய நாட்டுப் பாதிரியார் அந்தோணியோ கிருமி நாலிஸ் இராமேஸ்வரத்தில் சமயப் பிரச்சாரம் செய்தல்.

15. கி.பி. 1550 போர்ச்சுகல் நாட்டுப் பாதிரியார் பிரான்சிஸ் சேவியர் இராமேஸ்வரம் பகுதியில் சமயப் பணி

16. கி.பி. 1604 மதுரை மன்னர் முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கரது ராஜகுரு தலயாத்திரையாக வந்து திரும்புதல்.

17. கி.பி. 1659 தஞ்சை மன்னர் ரெகுநாத நாயக்கர் இராமேஸ்வரம் திருக்கோயிலில் இரண்ய கர்ப்பதானம் நிகழ்ச்சியை மேற்கொள்ளல்.

18. கி.பி. 1661 தாயுமானவ அடிகள் வருகை

19. கி.பி. 1677 மகாராஷ்டிர மன்னர் சிவாஜி இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வருகை

20. கி.பி. 1759 தஞ்சை மன்னர் பிரதாப சிம்மன் இராமேஸ்வரம் வருகை.

21. கி.பி. 1779 தஞ்சை மன்னர் துல்ஜாஜி இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வருகை

22. கி.பி. 1792 திருவரங்கூர் மன்னர் இராமேஸ்வரம் கோயிலுக்கு தலயாத்திரையாக வருதல்.

23. கி.பி. 1795 சென்னை கோட்டை கிழக்கிந்தியக் கம்பெனி கவர்னர் ஹோபர்ட் இராமேஸ்வரம் வருகை.

24. கி.பி.1795 பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மு நாயக்கர் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வருகை.

25. கி.பி. 1795 தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோஜி இராமேஸ்வரம் வருகை.

26. கி.பி. 1802 ஆந்திரநாட்டு சிந்தப் பள்ளி ஜமீன்தார் இராமேஸ்வரத்திற்கு வருகை.

27. கி.பி. 1804 இங்கிலாந்து நாட்டு வாலண்டைன் பிரபு கொழும்பிலிருந்து இராமேஸ்வரத்திற்கு வருகை.

28. கி.பி. 1808 மைசூர் திவான் பூர்ணையா இராமேஸ்வரம் வருகை

29. கி.பி. 1822 தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோஜி இராமேஸ்வரம் வருகை.

30. கி.பி. 1898 வட இந்திய தார் சமஸ்தானத்து ராணி வருகை

31. கி.பி. 1893 சந்நியாசி நரேந்திரதத் (சுவாமி விவேகானந்தர்) தலயாத்திரையாக இராமேஸ் –வரம் வருகை.

32. கி.பி. 1894 சிருங்கேரி மடாதிபதி சுவாமி அபிநவ நரசிம்ம பாரதி வருகை.

33. கி.பி. 1897 அமெரிக்க நாட்டு சிகாகோ நகரில் நடைபெற்ற சர்வ சமய மாநாட்டில் கலந்து கொண்டு தாயகம் திரும்பும் வழியில் சுவாமி விவேகானந்தர் இராமேஸ்வரம் வருகை.

34. கி.பி. 1898 மைசூர் மன்னர் இராமேஸ்வரத்திற்கு தலயாத் திரையாக வந்தது.

35. கி.பி. 1911 கல்கத்தா ஸ்ரீ இராம கிருஷ்ண பரம ஹம்சரது துணைவியார் சாரதா அம்மையார் இராமேஸ்வரம் வருகை.

இவர்களில் பெரும்பாலோர் பேரரசர்கள், மன்னர்கள், மகா மண்டலேசுவரர்கள், பாளையக் காரர்கள், அமைச்சர்கள் என்ற பிரிவினை சார்ந்தவர்கள் ஆவர். இவர்களில் இருவர் மட்டும் சந்நியாசிகள் ஆவர். முதலாமவர், ஆதிசங்கரர் நிறுவிய

முதலாவது சங்கர மடமாகிய சிருங்கேரி மடத்தைச் சார்ந்த ஜகத்குரு நரசிம்ம பாரதி ஆவார். இரண்டாமவர் உலகப் புகழ் பெற்ற சுவாமி விவேகானந்தர் என்ற புனிதத் துறவி ஆவார். சிருங்கேரி மடாதிபதியைப் பற்றிய வேறு செய்திகள் எதுவும் கிடைக்கவில்லையென்றாலும் சுவாமி விவேகானந்தரைப் பற்றிய செய்திகளும் அவர் இராமேஸ்வரம் திருக்கோயிலில் பக்த கோடிகளிடையே ஆற்றிய சொற்பொழிவும் நமக்கு கிடைத்துள்ளன. அவைகளின் சுருக்கத்தை கீழே காணலாம். கொழும்பு வழியாக 22.1.1897ல் இராமநாதபுரம் மன்னரது பாம்பன் துறை முகத்தில் வந்து சேர்ந்தார். சேதுபதி மன்னரும் சேது நாட்டு மக்களும் வழங்கிய பெரும் வரவேற்பில் கலந்து கொண்டு மூன்று நாட்கள் மன்னரது விருந்தினராகப் பாம்பன் மாளிகையில் தங்கியிருந்தார்.

மூன்றாவது நாளான 24.1.1897ல் இராமேஸ்வரம் நகருக்கு விஜயம் செய்தார். பொது மக்களது ஆர்வமிக்க வரவேற்பினால் மனம் நெகிழ்ந்த சுவாமிகள் திருக்கோயிலில் இராமநாத சுவாமியின் தரிசனத்தை முடித்துவிட்டு கூடியிருந்த பக்தகோடிகளிடம் பயனுள்ள சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். இறைவனது சிருஷ்டியாகிய மக்களிடத்தில் இறைவனைப் பற்றிய சிந்தனையும் பக்தியும் எழுவது இயல்பாகும். அந்த பக்தி எவ்விதம் அமைதல் வேண்டும். எப்படி மனித வாழ்க்கையுடன் ஒன்றியிருத்தல் வேண்டும் என்பதைச் சுவாமிகள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அந்த சொற்பொழிவின் சுருக்கம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

மதம் என்பது அன்பில் அமைந்துள்ளது இதயத்தின் தூய்மையான உண்மையான அன்பில் தானே தவிர சடங்குகளில் இல்லை. உடலாலும் மனத்தாலும் தூய்மையாக இல்லாமல் ஒருவன் கோயிலுக்கு வருவதும் சிவபெருமானை

வழிபடுவதும் பயனற்றது. உடம்பாலும் மனத்தாலும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகளை சிவபெருமான் நிறைவேற்றுகிறார். ஆனால் தாங்களே தூய்மையற்றவர்களாக இருந்து கொண்டு பிறருக்கு மத போதனை செய்பவர்கள் இறுதியில் தோல்வியையே அடைகிறார்கள். புறவழிபாடு என்பது அக வழிபாட்டின் அடையாளம் மட்டுமே. அக வழிபாடும் தூய்மையும் தான் உண்மையான விஷயங்கள். இவையின்றிச் செய்யப்படுகின்ற புற வழிபாடு பயனற்றது. இதனை மனத்தில் பதித்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

தாங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு தீர்த்தத் தலத்திற்குச் சென்றால் அந்தப் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப் பட்டுவிடும் என்று நினைக்கும் அளவிற்குக் கீழான நிலைக்கு இந்தக் கலியுகத்தில் மக்கள் வந்து விட்டனர். தூய்மையற்ற உள்ளத்துடன் கோயிலுக்குச் செல்கின்ற ஒருவன் ஏற்கனவே இருக்கின்ற தன் பாவங்களுடன் மேலும் ஒன்றைக் கூட்டுகிறான். புறப்பட்ட போது இருந்ததை விட மோசமானவனாக வீடு திரும்புகிறான். தீர்த்தத் தலங்கள் புனிதமான பொருட்களாலும் மகான்களாலும் நிரம்பி இருப்பவை. மகான்கள் வாழ்கின்ற இடங்களில் கோயில் எதுவும் இல்லையென்றாலும், அந்த இடங்கள் தீர்த்தத் தலங்களே. நூறு கோயில்கள் இருந்தாலும், அங்கே புனித மற்றவர்கள் இருப்பார்களானால் தெய்வீகம் மறைந்து விடும். தீர்த்தத் தலங்களில் வாழ்வதும் மிகவும் கடினமான காரியம் சாதாரண இடங்களில் செய்யப்படும் பாவங்களை எளிதாக நீக்கிக் கொள்ள முடியும். ஆனால் தீர்த்தத் தலங்களில் செய்யப்படும் பாவத்தை நீக்கவே முடியாது.

மனத்தூய்மை, பிறருக்கு நன்மை செய்வது – இதுவே எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழையிடமும்

பல்வீனரிடமும் நோயாளிகளிடமும் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான். விக்கிரகத்தில் மட்டுமே அவரைக் காண்பவனின் வழிபாடு ஆரம்ப நிலையில் உள்ளது. ஒரே ஓர் ஏழைக்கு ஆயினும், அவனது ஜாதி, இனம், மதம் போன்ற எதையும் பாராமல், அவனிடம் சிவபெருமானைக் கண்டு அவனுக்கு உதவிகள் செய்து தொண்டாற்றுபவனிடம் சிவபெருமான் மிகவும் திருப்தி கொள்கிறார். கோயிலில் மட்டுமே தம்மைக் காண்பவனைவிட, இவனிடம் அதிக மகிழ்ச்சி கொள்கிறார்.

ஒரு பணக்காரனுக்குத் தோட்டமொன்று இருந்தது. அதில் இரண்டு தோட்டக் காரர்கள் இருந்தார்கள். ஒருவன் சோம்பேறி, வேலையே செய்யமாட்டான். ஆனால் எஜமான் தோட்டத்திற்கு வந்தால் போதும், உடனே எழுந்து போய் கூப்பிய கைகளுடன் அவரிடம் "ஓ என் எஜமானின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது" என்ற புகழ் பாடி அவர் முன்னால் பல்லை இளித்துக் கொண்டு நிற்பான். மற்றவன் அதிகம் பேசுவதே இல்லை. ஆனால் கடினமாக உழைப்பான். பல வகையான பழங்களையும், காய்கறிகளையும் சாகுபடி செய்து நெடுந்தொலைவில் வசிக்கின்ற அந்த எஜமானின் வீட்டிற்குச் சுமந்து கொண்டு செல்வான். இந்த இரண்டு தோட்டக்காரர்களுள் யாரை எஜமான் அதிகம் விரும்புவார்? சிவபெருமான் தான் அந்த எஜமான். இந்த உலகம் அவரது தோட்டம். இங்கே இரண்டு வகையான தோட்டக் காரர்கள் இருக்கிறார்கள். ஒரு வகையினர் சோம்பேறிகள், ஏமாற்றுக்காரர்கள் அவர்கள் எதுவும் செய்வதில்லை. சிவபெருமானின் அழகான கண்களையும் மூக்கையும் மற்ற குண நலன்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். ஏழைகளான, பலவீனர்களான எல்லா மனிதர்கள், விலங்குகள் மற்றும் அவருடைய படைப்பு அனைத்தையும் மிகுந்த கவனத்தோடு பராமரிப்பவர்கள் மற்றொரு வகையினர்.

இவர்களுள் யார் சிவபெருமானின் அன்பிற்கு உரியவர்கள்? நிச்சயமாக அவரது பிள்ளைகளுக்குச் சேவை செய்பவர்களே. தந்தைக்குச் சேவை செய்ய வேண்டும். சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள். அவரது பிள்ளைகளாகிய இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் முதலில் சேவை செய்ய வேண்டும். கடவுளின் தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே அவரது மிகச் சிறந்த தொண்டர்கள் என்று சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை மனத்தில் இருத்திக் கொள்ளுங்கள்.

மீண்டும் சொல்கிறேன். மனத் தூய்மையுமாய் இருங்கள். உங்களை நாடி வரும் ஏழைகளுக்கு உங்களால் இயன்ற உதவி செய்யுங்கள். இது நற்கர்மம் இதன் பலனாக உங்கள் இதயம் துய்மை (சித்தசுத்தி) பெறும் எல்லோரிலும் உறைகின்ற சிவபொருமான் வெளிப்பட்டுத் தோன்றுவார் அவர் எல்லோரது இதயத்திலும் எப்போதும் இருக்கிறார். அழுக்கும் தூசியும் படிந்த கண்ணாடியில் நம் உருவத்தைப் பார்க்க முடியாது. அறியாமையும் தீய குணங்களுமே நம் இதயக் கண்ணாடியில் படிந்துள்ள தூசியும் அழுக்கும்.

நம் நன்மையை மட்டுமே நினைக்கின்ற சுயநலம். பாவங்கள் அனைத்திலும் முதற் பாவமாகும் "நானே முதலில் உண்பேன் மற்றவர்களை விட எனக்கு அதிகமான பணம் வேண்டும். எல்லாம் எனக்கே வேண்டும்". "மற்றவர்களுக்கு முன்னால் நான் சொர்க்கத்தை அடையவேண்டும். எல்லோருக்கும் முன்னால் நான் முத்தி பெற வேண்டும் என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி சுய நலமற்றவனோ. "நான் கடைசியில் இருக்கிறேன் சொர்க்கம் செல்வதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் நரகத்திற்குச் செல்வதால் என் சகோதரர்களுக்கு உதவ முடியுமானால் அதற்கும் தயாராக இருக்கிறேன்" என்கிறான். இத்தகைய சுயநலமற்ற தன்மையே மதத்திற்கான உரைகல் சுயநலம் இல்லாதவனே மேலான

ஆன்மீக வாதி. அவனே சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான். அவன் படித்தவனாக இருந்தாலும் படிக்காதவனாக இருந்தாலும். அவன் அறிந்தாலும் அறியவில்லை என்றாலும் அவனே மற்ற அனைவரையும் விடச் சிவ பெருமானுக்கு அருகில் இருக்கிறான். சுயநலம் கொண்டவன் எல்லாக் கோயில்களையும் வழிபட்டிருந்தாலும். சிறுத்தையைப் போல் தன உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் திட்டிக் கொண்டிருந்தாலும் அவன் சிவபெருமானிடமிருந்து விலகியே இருக்கிறான்."

இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க சொற்பொழிவாகும். உண்மையான இறையன்பர் யார் என்பதை சுவாமிகள் மிகவும் எளிமையாகவும். தெளிவாகவும் எடுத்துரைத்துள்ளார். இராமேஸ்வரம் திருக்கோயிலுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ஆவணங்களுடன் சுவாமிகளது திருக்கோயில் வருகையும் சொற்பொழிவும் சிறந்த ஆவணங்கள் விளங்குகின்றன.

# ௨) இராமேஸ்வரம் பற்றிய வரலாற்றுச் செய்திகள்

1. கி.பி. 1552 போர்ச்சுக்கல் நாட்டு பாதிரியாரான பிரான்சிஸ் சேவியர் என்பவர் இராமேஸ்வரம் கரையூர், வேர்க்கோடு பகுதிகளில் வாழ்ந்து வந்த. கிறிஸ்த்துவ மதத்தை தழுவிய மீனவர்களுக்காக தேவாலயம் ஒன்றை கரையூர் கடற்கரைப் பகுதியில் அமைத்தார்.

2. கி.பி. 1628 இராமேஸ்வரத்திற்கு வருகை தந்த இராமநாத புரம் மன்னர் கூத்தன் சேதுபதி கோயில் யானை மீது அமர்ந்து நகர்வலம் வந்தபொழுது தமது வலிமையை நிருபித்துக் காட்ட மன்னர் அமர்ந்து இருந்த யானையின் வாலைப் பிடித்து யானை மேலும் நகரவிடாமல் நிறுத்திவிட்டார் முத்துவிஜயன் சேர்வை என்பவர். அன்பளிப்புக் -கள் வழங்கி அவரைப் பாராட்டிய சேது மன்னர் அவருக்கு நாள் தோறும் திருக்கோயி -லில் இருந்து உணவு வழங்க 08.06.1827-ல் செப்பேடு வழங்கி உத்திரவிட்டார். (சென்னை அருட்காட்சியகத்தில் இந்த செப்பேடு உள்ளது)

3. கி.பி. 1640 நமது நாட்டின் நிலப்பரப்பை இராமேசுவரம் திவுடன் இணைப்பதற்காக முதன் முறையாக மண்டபம் தோணித்துறைப் பகுதியையும் பாம்பன் திவின் தெற்குப் பகுதியையும் இணைப்பதற்காக சுமார் 2 கல் தொலைவு நீளத்தில் கடலில் மேலாக பாலம் ஒன்றினை திருமலை நாயக்கரது தளபதி இராமப்பையன்

அமைத்தான். அடுத்து கி.பி.1914ல் ரயில் பாலத்துடனான பாதை மண்டபத்திற்கும் பாம்பனுக்கும் இடையில் கடலின் மீது அமைக்கப்பட்டது. பெருகி வரும் மக்களது தேவைகளுக்கு ஏற்ப கி.பி. 1972ல் நெடுஞ் சாலைப் பாலமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

4. கி.பி. 1659 மிகவும் புனிதமாகக் கருதப்படும் பசுவின் வயிற்றில் இருந்து மனிதன் பிறந்தால். அவன் எத்தகைய புனிதன் என்று சொல்லத் தேவை யில்லை. இயற்கையில் இது நடைபெறக்கூடியது அல்ல. என்றாலும் பசுவின் உருவத்தைப் பொன்னால் செய்து அதன் வயிற்றில் இருந்து பிறப்பது போன்ற வைதிக நிகழ்ச்சி ஒன்றை இராமேஸ்வரம் திருக்கோயிலில் ரகுநாத திருமலை சேதுபதி மன்னர் அவர்கள் மேற்கொண்டார். இதற்கு ஹரண்ய கர்ப்பதானம்" என்று பெயர். இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் அந்தப் பசுவின் உருவத்தைச் சிதைத்து அந்த பொன் தகட்டை அந்தணர் களுக்குத் தானமாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி ஆதி சேதுவான தனுஷ் கோடியில் நடைபெற்றது 12.1.1659.

5. கி.பி. 1725 இராமநாதபுரம் சேதுபதி மன்னரால் மண்டபம் தோணித்துறைக்கும் இராமேசுவரத்திற்கும் இடையில் சேது யாத்திரையாக வரும் பயணி -களது வசதிகளைக் கண்காணிப்பதற்காக சேதுபதியின் மருமகன் தண்டத்தேவர் என்பவர் பாம்பன் ஆளுனராக நியமனம் செய்யப்பட்டு

இருந்தார். இவர் மன்னரது அனுமதியில்லாமல் பயணிகளிடம் ஒரு வரி வசூலித்து வந்ததைக் கேள்விப்பட்டு அந்தச் செயலைச் சிவத் துரோகமாகக் கருதி தண்டத் தேவருக்கு மரண தண்டனை வழங்கினார் சேதுபதி மன்னர். சேதுபதி மக்களும் தண்டத் தேவரது மனைவிகளான சீனி நாச்சியார், லெட்சுமி நாச்சியார் என்ற இரு பெண் மக்களும் தமது கணவரது மரணத்தை அறிந்து திக்குளித்தனர். பின்னர் சிவகுமார முத்து விஜய ரெகுநாத சேதுபதி மன்னரால் அந்தப் பெண்மணிகள் நினைவாக சேதுப்பாதையில் மடங்கள் அமைக்கப்பட்டன. அவையே இன்று தங்கச்சி மடம் அக்காள்மடம் என்ற ஊர்களாக அமைந்துள்ளன.

Rajaram Row Manual of the Ramnad Samasthanam (1891)

6. கி.பி. 1744 சமயப் பொறைக்கும் சமரச மனப்பான்மைக் -கும் முன்னோடிகளில் வழியினராகிக் குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி மன்னர் இராமேசுவரத்தின் தெற்கே அமைந்துள்ள ஆபில் காபில் என்ற உலகின் முதல் மனிதரான ஆதம் நபியின் முதல் மக்கள் சமாதிகளைக் கொண்ட தர்ஹாவின் பராமரிப்பிற்காக இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள புதுக்குளம் என்ற கிராமத்தை சர்வ மானியமாக வழங்கி செப்பேடு ஆணை அளித்துள்ளார்.

7. கி.பி. 1780 இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் அரியான் -குண்டிற்கு முன்னதாக உள்ள ஏகாந்த இராமர்

கோயிலை அடுத்து முஸ்லீம் ஒருவரது அடக்க இடம் உள்ளது. இதனை "நெடுஞ்சாரப்பா தர்ஹா" என மக்கள் அழைத்து வருகின்றனர். இந்த தர்ஹாவை அமைக்க இராமேஸ்வரம் திருக்கோயில் ஆதின கர்த்தர் – இராமநாத பண்டாரம் உதவினார் (ஆதாரம் அந்த இடத்தில் உள்ள கி.பி. 1780-ம் ஆண்டு கல்வெட்டு)

8. கி.பி. 1795 சேதுபதி சீமையைக் கைப்பற்றி ஆங்கிலேயரது ஆட்சியை ஏற்படுத்திய பிறகு இலங்கையில் டச்சுக்காரருக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் ஆங்கிலப் படை அணிகளுக்கு உதவ இராமநாதபுரத்திலிருந்து ஆங்கிலப் படையணிகள் தளபதி பௌஷேர் தலைமையில் பாம்பன் துறையிலிருந்து 13.11.1795 இலங்கை கல்பிட்டியாவிற்கு அனுப்பப்பட்டது.
Fr. S.G. Perera History of Ceylon Part - II Page 18

9. கி.பி. 1796 ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரது ஆதிக்கம் இலங்கைத் தீவில் உறுதிபட ஆரம்பித்ததால் இராமேசுவரத்தில் இருந்து நூற்றுக்கணக்கான மக்களை இராணுவ சேவைக்குத் திரட்டிப் பெரிய தோணிகளில் ஏற்றித் தளபதி ஸ்டுவர்ட் தலைமையில் நீர் கொழும்பு துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.
F.R. S.G. Perera - History of Ceylon, Vo. II Page 18

10. கி.பி. 1798 கி.பி. 1795 வரை மறவர் சீமையின் தன்னரசு மன்னராகத் திகழ்ந்தவர். மன்னர் முத்து இராமலிங்க விஜயரெகுநாத சேதுபதி அவரது ஆட்சிக் காலத்தில் கிழக்குக் கடற்கரையில் தமது நாட்டில் இறக்குமதி. ஏற்றுமதியாகும் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைக்கப் பதினைந்து பெரும் தானியக் களஞ்சியங் களைக் கிழக்குக் கடற்கரையில் அமைத்தார். அவைகளில் ஒன்று இராமேசுவரத்தில் சுடுகாட்டம் பட்டி அருகே அமைந்து இருந்தது. அதில் ஒரே சமயத்தில் 5000 கலம் தானியங்களைச் சேகரித்து வைக்க முடியும்.
Tamil Nadu Archives - Revenue Consultations Vol.91-B (1798 AD) Page 4755

11. கி.பி. 1799 சேதுபதிச் சீமையை ஆக்கிரமித்து ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியார் இராமேசுவரம் தீவில் கிடைக்கும் சாயவேர்களையும் சங்கு களையும் சேகரித்துக் கொள்ளும் உரிமையை ஏலத்துக்கு விட்டதில் குடும்ப லிங்கம் பிள்ளை என்பவர் சங்குத் தொகையை (ஓராண்டிற்கு) 21.735 ஸ்டார் பக்கோடா பணத்திற்கும். சாயவேர் உப்புக்குத்த கையை 14.500 ஸ்டார் பக்கோடா பணத்திற்கும் எடுத்தார்.
Revenue Consultation Vol. 95-B (1799 AD) Page 1319

12. கி.பி. 1802 சேதுபதிச் சீமையில் டச்சுக்காரர்கள் கைத்தறித் துணிகள், தானியம், முத்து, சங்கு ஆகிய பொருட்களை வாங்கி விற்கும் வணிகத்தில் கி.பி.1795 வரை ஈடுபட்டு இருந்தனர். அதனால்

அவர்களது பரங்கிப்பேட்டை அக்கசாலையில் தயாரிக்கப்பட்ட பொன்னாலான பணம் சேதுபதி சீமையில் செலாவணியில் இருந்தது. இந்தப் பணம் ஒன்றுக்கு கி.பி.1802ல் எட்டு செம்மறி ஆடுகளை வாங்கலாம். அல்லது ஒரு நூறுபடி நெல் வாங்கலாம் என்ற அளவிற்கு அதன் மதிப்பு இருந்தது. அப்பொழுது இந்தப் பணத்திற்கு போர்ட்டோ நோவோ பக்கோடா நாணயம் என்று பெயர் இருந்தது.

*13. கி.பி. 1804* ஜயார்ஜ் வாலண்டைன் என்ற இங்கிலாந்து நாட்டுப் பிரமுகர் இலங்கையைச் சுற்றிப் பார்த்துவிட்டு கப்பல் மூலமாக தலை மன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கு 25.1.1804ல் வருகை தந்தார். இராமேசுவரம் திருக்கோயிலுக்கு அவரது வருகையின் பொழுது அவருக்கு அப்பொழுது ஆதினகர்த்த ராயிருந்த பதினான்கு வயது சின்ன இராமநாத பண்டாரம் வரவேற்பு வழங்கியதையும் அதன் தொடர்பாகத் திருக்கோயில் தேவ தாசிகள் சதிர் ஆடியதையும் அவரது பயண நூலில் குறிப்பிட்டு இருக்கிறார்.
Voyages and Travels to India (1809) PP. 342 - 343

*14. கி.பி. 1810* இராமேசுவரம் திருக்கோயில் சேது இராமநாத பண்டாரம் கோயில் சடங்குகளை முறைப்படி நடத்தவில்லை என்று இராமநாதபுரம் ஜமீன்தாரினி மங்களேஸ்வரி நாச்சியார் இராமநாதபுரம் ஜில்லா கலெக்டருக்குப் புகார் அனுப்பினார்.

Madurai District Records Vol. 1157 (1810) Page 39

15. கி.பி. 1816 இராமேசுவரம் திருக்கோயிலுக்குச் சென்று தங்களது காணிக்கைகளைச் செலுத்தும் நெசவாளிகளை இராமநாதபுரத்தில் இருந்த கிழக்கிந்தியக் கம்பெனியில் நெசவுப் பட்டறை கங்காணி குத்தாலிங்கம்பிள்ளை என்பவர் தடுத்து வந்தார். இதனையறிந்த ஜில்லா கலெக்டர். அந்த நெசவுப்பட்டறை அலுவலருக்கு உத்தரவு அனுப்பி அந்தப் பணியாளரது செய்கையைத் தடுத்தார்.

Madurai District Records Vol.No. 1164 (1816 AD) Page 15

16. கி.பி. 1822 படகுப் போக்குவரத்திற்கு ஏற்றதாகப் பாம்பன் கால்வாயை மாற்றியமைக்க ஆங்கில கிழக்கு இந்தியக் கம்பெனியாரது பொறியாளர் சர். ஆர்தர் காட்டன் என்பவர் கி.பி. 1822-ல் அளவீடுகள் மேற்கொண்டார். இந்தக் கால்வாயை அகலப்படுத்தி ஆழப்படுத்தும் பணி கி.பி.1838-ல் தொடங்கியது. கி.பி.1844-ல் 8 அடி ஆழத்திற்கும் கி.பி. 1846-ல் 10.5 அடி ஆழத்திற்குமாக பணிகள் 32.000 பவுன் செலவில் செய்து முடிக்கப்பட்டன.

பிரதான கால்வாய் 4232 அடி நீளத்திலும் 80 அடி ஆழமாகவும் அதனைத் தொடர்ந்து கிழக்கரை கால்வாய் என்ற இரண்டாவது கால்வாய் 12100 அடி நீளம் 150 அடி அகலம் 12 அடி ஆழமுமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால்வாய் வழி 800 தொன் நிறையுள்ள நீராவிக் கப்பல்களும் செல்ல முடியும்.
H.S. Brown Hand Book to the Ports on the coast of India (1897) Page 77

17. கி.பி.1823 இராமேசுவரம் திருக்கோயிலில் சேரநாட்டு மன்னர் "உதய மார்த்தாண்ட கட்டளை" என்ற ஒரு சிறப்புப் பூஜைக்கு ஏற்பாடு செய்து இருந்தார். அதற்கான செலவினைப் பெற கோயில் ஸ்தானிக பட்டர் ஒருவர் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை திருவாங்கூருக்குக் கோயில் பிரசாதங்களுடன் சென்று சேர மன்னரைச் சந்தித்து ரூ.1634/– அணா 6ம் பட்டுத் தபோட்டா துணியும் பெற்றுவருவது வழக்கமாக இருந்தது. கி.பி. 1823–ம் ஆண்டு தொடக்கத்தில் இவ்விதம் திருவாங்கூர் சென்ற பட்டருக்குப் பணமும் துணியும் கொடுக்க சேரமன்னரது திவான் மறுத்துவிட்டார்.

18. கி.பி. 1824 தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கடல்வழி வருகின்ற இலங்கை நாட்டுத் தபால்கள் அவைகளின் போக்கு காரணமாகப் படகுப் போக்குவரத்தைப் பாதித்துக் காலதாமதம் ஏற்படுவதை ஆராய பதிவேடு ஒன்றை தனுஷ்கோடி துறைமுகத்தில் பராமரிப்பது என அரசு முடிவு செய்தது.
Madurai District Records Vol. 4672 (1828 AD) Page 3942

19. கி.பி. 1825 "எலிசா" என்ற பெயர் சூட்டப்பட்ட சரக்குக் கப்பல் ரூ.120000/– மதிப்புள்ள சரக்குகளுடன்

பாம்பன் கடல் வழிப்பாறையில் மோதி 10.1.1826–ல் நீரில் ஆழ்ந்து விட்டது. 14 படகுகளும் தண்டல். லஸ்கர், கூலிகள் என 308 ஆட்களும் முனைந்து முயற்சித்து அந்தக் கப்பலை மிதக்க விட்டனர். இதற்கான செலவு ரூ.130 அணா 13 மட்டுமே.

Madurai District Records : Vol. 4673 (1825 AD) Page 256 - 259

20. கி.பி. 1826 பாம்பன் பாறையில் படகுகளை கடத்திவிடும் பணியில் இராமநாதபுரம் சடைக்கள் சேதுபதி (கி.பி. 1602 – 22) காலம் முதல் ஈடுபட்டிருந்ததை பாம்பன் ஆவில் நெய்னா அம்பலம் என்பவரது உரிமையை ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியார் பறித்து அந்தப்பணிக்கு ஒருவரை அவர்களே நியமித்தனர். அந்தப்பணி மூலம் கிடைக்கும் வருவாயையும் கம்பெனியாரே அனுபவிக்கத் தொடங்கினர்.

Madurai District Records Vol. 4674 (1826 AD) Page 11

21. கி.பி. 1828 மன்னார் குடாக் கடலில் முத்துக் குளிக்கும் சேதுபதி மன்னர்கள் இராமேஸ்வரம் திருப்புல்லாணி, திருப்பெருந்துறை திருக் கோயில்கள் முத்துச் சிலாப நாட்களில் தத்தமது கோவில்களுக்கு இரண்டு தோணிகளை வைத்து முத்துக் குளிக்கும் உரிமையினை வழங்கி இருந்தனர். ஆனால் ஆங்கிலேயரது இலங்கை அரசாங்கம் இராமேசுவரம் திருக்கோயில் தோணிகளுக்கு முத்துக் குளிக்க அனுமதி மறுத்துவிட்டது 20.6.1828.

Madurai District Records Vol. 4676 (1828 AD) Page 155

*22.கி.பி. 1833* இராமேஸ்வரம் திருக்கோயில் நிர்வாகத்திற்குச் சேது இராமநாத பண்டாரத்தை இராமநாத புரம் ஜில்லா கலெக்டர் நியமனம் செய்ததை இராமநாதபுரம் ஜமீன்தார் ஆட்சேபனை செய்தார். இந்த ஆதின கர்த்தருடைய ஒழுக்கத்தையும் நடவடிக்கையையும் விமரிசனம் செய்து இருப்பதுடன் அவருக்கு முன்னர் பணியாற்றிய பண்டாரம் இராமநாதபுரம் ஜமீன்தாரது நியமன உத்திரவினால் நியமிக்கப் பட்டவர் என்பதும் இந்த ஆட்சேபனையில் குறிக்கப்பட்டுள்ளது.

Madurai District Records Vol. 8900 PP. 33

*23.கி.பி. 1835* சென்னையில் உள்ள ரெவின்யூ போர்டார் இராமநாதபுரம் ஜில்லா கலெக்டருக்கு ஒரு உத்தரவு பிறப்பித்தனர். அதில் சேது இராமநாத பண்டாரம் எவ்வளவு காலமாகச் சிறையில் இருக்கிறார் என்பதையும் அதற்கான காரணத்தையும் விசாரித்து அவருக்கு சர்க்யூட் கோர்ட் சிறைத் தண்டனை வழங்கிய உத்தரவு நகலையும் அதில் கோரியிருந்தனர்.

Madurai District Records Vol. 8902 (1835) PP. 315 - 316

*24.கி.பி. 1897* அமெரிக்க நாட்டு சிக்காக்கோ நகரில் நடை பெற்ற அனைத்துலகச் சமயங்களில் பேரவையில் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட சுவாமி விவேகானந்தர்.

நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் தாயகம் திரும்பும் பொழுது நமது நாட்டில் பாம்பன் துறைமுகத்தில் 22.1.1897 கரை இறங்கினார் தமது அமெரிக்கப் பயணத்தை மேற் கொள்ளுமாறு வலியுறுத்தி பயண வசதிகளைச் செய்து கொடுத்த இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக சுவாமிகள் பாம்பனுக்கு வந்தார்.

பாம்பன் துறைமுகத்தில் அரச மரியாதை களுடன் வரவேற்ற இராமநாதபுரம் மன்னரும் அவரது பாம்பன் மாளிகையில் அவருடன் தங்கியிருந்தார். 24.1.1897ல் இராமேசுவரம் திருக்கோவிலுக்கு வருகை தந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு அங்கு கூடியிருந்த ஆத்திகப் பெருமக்களிடையே ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினார். இதனை இராமநாதபுரம் வழக்கறிஞர் நாகலிங்கம் பிள்ளை மொழியாக்கம் செய்து உதவினார்.

25.கி.பி. 1928 ராயல் இந்திய ஆர்மியை சேர்ந்த கேப்டன் மியுவெல் என்பவர் இராமேஸ்வரத்திற்கு வருகை தந்து திருக்கோயிலின் சிறப்பான நிகழ்ச்சியினை தொகுத்து Rameswaram the sacred Island என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

26.கி.பி. 1950 இராமேஸ்வரம் திருக்கோயிலில் நிரந்தர தர்மகர்த்தாவான இராமநாதபுரம் சேதுபதி மன்னர் இராமேஸ்வரம் திருக்கோவிலுக்கு வருகை தரும் பொழுதெல்லாம் அவரைப்

பாம்பன் ரயில் நிலையத்திலும் பின்னர் இராமேஸ்வரம் இரயில் நிலையத்திலும நாதஸ்வர மங்கள இசையுடன் வரவேற்கும் முறை இந்த ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது.

*27.கி.பி. 1964* தொடர்ந்து 3 நாட்களாக இராமேஸ்வரம் திவுப் பகுதியை தாக்கிய மழை. புயல் காரணமாக தனுஷ்கோடி கிராமம் 23.12.1964ம் தேதி நள்ளிரவில் கடல் நீரில் மூழ்கியது. அந்தத் திவின் மேற்குப் பகுதியான பாம்பனில் அமைக்கப்பட்டிருந்த இரும்பிலானது இரயில் பாலமும் சிதைவு பெற்றது. ஆனால் இராமேஸ்வரம் திருக்கோயிலும் ஊரும் எந்தவித பாதிப்பிற்கும் ஆளாகாமல் தப்பியது ஒரு அதிசய நிகழ்வு ஆகும்.

# இயல் - XI

## ஆவணங்களின் சுருக்கம்

இராமேஸ்வரம் திருக்கோவிலுக்கு அறக்கொடையாக வழங்கப்பட்டுள்ள நிலக்கொடைகள், சர்வமான்ய நிலங்களின் பட்டியல், இவை எந்த மன்னர் ஆட்சியில் எப்பொழுது வழங்கப்பட்டன என்பன போன்ற விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இணைப்புப் பட்டியலில் கண்டுள்ள ஊர்கள் அனைத்தும் இராமேஸ்வரம் திருக்கோயில் கைங்கரியத்திற்காக அறக்கொடைகளாக வழங்கப்பட்டு இருப்பதாலும் அந்தத் தர்மம் சந்திராதித்த காலம் வரை தொடர்ந்து நடக்க வேண்டுமென்று தானம் வழங்கிய மன்னர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சியை அடுத்து நமது நாட்டில் மக்கள் ஆட்சி ஏற்பட்டு உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் குடிமக்களுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்களுக்கான பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.

ஆதலால் இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் மக்கள் அரசு இந்த ஊரின் நிலங்களைக் குடிமக்களுக்கு வழங்கிவிட்டதால் அந்த நிலங்களின் வருவாய்களைக் கொண்டு நடைபெற்று வந்து திருக்கோயில் பணிகள் தடைபெறக் கூடாது என்பதற்காக ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு அந்தக் கிராமங்களில் இருந்து வசூலிக்கின்ற அடிப்படை நிலத் தீர்வைத் தொகையை இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வழங்கி வருகின்றனர். இந்தத்

தொகை "தஸ்திக் அலவன்ஸ்" எனப்படும். இந்த வருவாயினைக் கொண்டுதான் கோயில் திருப்பணிகள் அன்றாட அபிசேக பூஜை. நெய்வேத்தியம். ஆண்டு விழாக்கள் நிர்வாகத்தினால் நிறைவேற்றி வைக்க முடிகிறது.

அந்த ஊர்களின் பட்டியல் இணைப்பாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

## இராமேஸ்வரம் திருக்கோவிலுக்குச் சேதுபதி மன்னர்கள் வழங்கிய நிலக்கொடைப்பட்டியல்

1. பேராவூர் (இராமநாதபுரம் வட்டம்)
2. மானாங்குடி
3. லாந்தை
4. புளியங்குடி (முதுகுளத்தூர் வட்டம்)
5. குமாரக்குறிச்சி (முதுகுளத்தூர் வட்டம்)
6. கருமல் (முதுகுளத்தூர் வட்டம்)
7. கருங்குளம் (முதுகுளத்தூர் வட்டம்)
8. கள்ளிக்குளம் (முதுகுளத்தூர் வட்டம்)
9. கரிசல்குளம் (முதுகுளத்தூர் வட்டம்)
10. விடந்தை (முதுகுளத்தூர் வட்டம்)
11. பொட்டல்குளம் (முதுகுளத்தூர் வட்டம்)
12. கண்ணன் பொதுவான் (முதுகுளத்தூர் வட்டம்)
13. வெங்குளம் (முதுகுளத்தூர் வட்டம்)
14. முத்தன்கூட்டம் (திருவாடானை வட்டம்)
15. தி. புனவாசல் (திருவாடானை வட்டம்)
16. பழங்குளம் (திருவாடானை வட்டம்)
17. மங்களம் (திருவாடானை வட்டம்)
18. நிலமழகிய மங்களம் (திருவாடானை வட்டம்)
19. முகிழ்த்தகம் (திருவாடானை வட்டம்)
20. சாம்பனேந்தல் (திருவாடானை வட்டம்)
21. குலமாணிக்கம் (திருவாடானை வட்டம்)

22. ஊரணக்குடி (திருவாடானை வட்டம்)
23. கலங்காப்புளி (திருவாடானை வட்டம்)
24. துத்தியேந்தல் (திருவாடானை வட்டம்)
25. நாகரனேந்தல் (திருவாடானை வட்டம்)
26. நம்புதாளை (திருவாடானை வட்டம்)
27. இராமநாதமடை (திருவாடானை வட்டம்)
28. சின்னத்தொண்டி (திருவாடானை வட்டம்)
29. செக்கான்திடல் (திருவாடானை வட்டம்)
30. ஓடைக்கால் (திருவாடானை வட்டம்)
31. வட்டாணம் (திருவாடானை வட்டம்)
32. ஆர்.வி. வாகை (திருவாடானை வட்டம்)
33. விளத்தூர் (பரமக்குடி வட்டம்)
34. தியாகவன்சேரி (பரமக்குடி வட்டம்)
35. குளத்தூர் (பரமக்குடி வட்டம்)
36. சேதுகால் (பரமக்குடி வட்டம்)
37. மும்முடிச்சாத்தான் (பரமக்குடி வட்டம்)
38. சேமனூர் (பரமக்குடி வட்டம்)
39. பாண்டியூர் (பரமக்குடி வட்டம்)
40. வணங்கானேந்தல் (பரமக்குடி வட்டம்)
41. வெங்கிட்டங்குறிச்சி (பரமக்குடி வட்டம்)
42. அன்னவாசல் (மானாமதுரை வட்டம்)
43. டி. சிறுவானூர் (தேவகோட்டை வட்டம்)
44. பூலாங்குடி (தேவகோட்டை வட்டம்)
45. கண்டமங்களம் (தேவகோட்டை வட்டம்)
46. துத்தக்குடி (தேவகோட்டை வட்டம்)
47. புதுவயல் (தேவகோட்டை வட்டம்)
48. களபங்குடி (தேவகோட்டை வட்டம்)
49. அய்யம்பட்டி (சாத்தூர் வட்டம்)
50. உப்பத்தூர் (சாத்தூர் வட்டம்)
51. செட்டிக்குறிச்சி (அருப்புக்கோட்டை)
52. திருவிருந்தாள்புரம் (அருப்புக்கோட்டை)

53. வாகைக்குளம் (அருப்புக்கோட்டை)
54. கத்திப்பாறை (அருபபுக்கோட்டை)
55. மாயவனேரி (திருச்சுழி வட்டம்)
56. மழவராயேன்தநல் (திருச்சுழி வட்டம்)
57. குறையறவாசித்தான் (திருச்சுழி வட்டம்)
58. சிலந்திகுளம் (திருச்சுழி வட்டம்)
59. எம். சொரிக்குளம் (திருச்சுழி வட்டம்)
60. கண்டுகொண்டான் மாணிக்கம் (திருச்சுழி வட்டம்)
61. சம்பந்தனேந்தல் (திருச்சுழி வட்டம்)
62. வீரைப்பட்டி (எட்டையாபுரம் வட்டம்)
63. தோமாலைப்பட்டி (எட்டையாபுரம் வட்டம்)
64. டி. அருணாசலபுரம் (எட்டையாபுரம் வட்டம்)
65. சக்கிலியப்பட்டி (எட்டையாபுரம் வட்டம்)
66. கீழ் நாட்டுக்குறிச்சி (எட்டையாபுரம் வட்டம்)
67. ஆவணம் (ஆவுடையார்கோவில் வட்டம்)
68. பூவலனி (ஸ்ரீவைகுண்டம் வட்டம்)
69. சேதுக்குவாய்த்தான் (திருச்செந்தூர் வட்டம்)
70. முத்துராமலிங்கபுரம் (ஒட்டப்பிடாரம் வட்டம்)
71. தோக்கானேந்தல் (இளையான்குடி வட்டம்)
72. வீரன்வயல் (திருத்துரைப்பூண்டி வட்டம்)
73. வீளனேரி (சிவகெங்கை வட்டம்)
74. செம்பனூர் (காரைக்குடி வட்டம்)

மேலேகண்ட ஊர்களைத் தவிர இராமேஸ்வரத்திற்கு எதிரே அமைந்துள்ள இலங்கை நாட்டிலும் யாழ்ப்பாணப் பகுதியில் பல ஊர்களை அந்தப் பகுதியில் ஆட்சி செய்த தமிழ் சிங்கள மன்னர்கள் இராமேஸ்வரம் திருக்கோவில் கைங்கரியங்களுக்காக சர்வ மானியமாக வழங்கியிருந்தனர். அவைகளின் வருவாய்களை இராமேஸ்வரம் திருக்கோயில் தேவஸ்தானத்தைச் சார்ந்த ஊழியர்கள் ஆண்டுக்கொருமுறை அங்குசென்று வதூலித்து வந்தனர். அந்த நாடு கி.பி.1843ல்

ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற பிறகு இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கான வருவாயினை அங்கு வசூலித்தல் இயலாத காரியம் ஆகிவிட்டது. இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு உரியனவாக அங்கு இருந்த ஊர்கள் ஊர்களின் பெயர்களும் அவைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வருவாய் விவரங்களும் அறிவதற்கு அரிதாகிவிட்டது.

# இயல் - XII

# புண்ணியர்களைப் பயந்த புனித பூமி

தலம், தீர்த்தம், மூர்த்தி என்ற முப்பெரும் சிறப்புக்களை உடையது இராமேஸ்வரம் என்பதை முந்தைய பக்கங்களில் படித்தோம். இந்தப் புண்ணிய பூமியில் ஆன்மிகத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் அணி சேர்த்த புண்ணியர் சிலரை இங்கு பார்ப்போம்.

### 1) பண்டிதர் கயாதரர்

இராமேஸ்வரம் திருக்கோயிலின் கருவறையில் இராமநாத சுவாமிக்கும் ஏனைய இறைமேனிகளுக்கும் பூஜை, அபிஷேகம் நைவேத்தியம் ஆகிய தெய்வ கைங்கரியங்களில் பல நூற்றாண்டுகளாக ஈடுபட்டு இருப்பவர்கள் மகாராஷ்ட்ர பிராமணர்கள் ஆவர். இது தமிழக திருக்கோயில்களில் வழிபாட்டு நடைமுறைகளுக்கு வேறுபட்டது ஒன்று ஆகும். ஏனெனில் காஞ்சிபுரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலான அனைத்துத் திருக்கோயில்களிலும் கருவறையில் தெய்வ காரியங்களை நிறைவேற்றி வைப்பவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பிராமணர்கள் ஆவர்.

இந்த மகாராஷ்ட்ர பிராமணர்களை எப்பொழுது எந்த மன்னர்கள் கோயில் கைங்கரியங்களைச் செய்ய ஏற்பாடு செய்தனர் என்பது அறிவதற்கு இல்லை. ஆனால் இவர்கள் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேதுபதி மன்னரது செப்புப்

பட்டையத் தினின்றும் சொக்கநாத புலவர் பாடிய "தேவை உலா" என்ற இலக்கியத்திலிருந்தும் இந்த அந்தணர்கள் மொத்தம் 512 பேர் என்பதும் அவர்கள் கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதல் இராமேஸ்வரத்தில் இருந்து வருவதும் தெரிய வருகிறது. இவர்களைப் பண்டாக்கள என்ற சொல்லால் மக்கள் குறிப்பிட்டு வழங்கி வருகின்றனர்.

இந்த அந்தணர் மரபில் தோன்றியவர் தான் பண்டிதர் கயாதரர் என்பவர். கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரைப் பற்றிய செய்திகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை யென்றாலும் அன்றைய காலகட்டத்தில் அவர் தமிழுக்குச் செய்த அரும்பணியை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. தமிழ் மொழியின் சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரும் அகராதிகளும். பேரகராதிகளும் தமிழில் தோன்றாத நிலையில் பண்டிதர் கயாதரர். இத்தகைய அகராதி ஒன்றினை. வரைந்து உதவியுள்ளார். அந்த நூலின் பெயர் கயாதரர் நிகண்டு என்பது ஆகும். இந்த நிகண்டு தோன்றுவதற்கு முன்னர் திவாகரம் நிகண்டு. பிங்கலந்தை நிகண்டு. சூடாமணி நிகண்டு என்ற மூன்று நிகண்டுகள் (செய்யுளில் அமைந்த அகராதி) மட்டும் பண்டிதர்களது பயன்பாட்டில் இருந்து வந்தன. அன்றைய நிலையில் வளர்ந்து வந்துள்ள தமிழ் மொழியின் சொல்லாட்சிக்கு கூடுதலான இலக்கம் தருவதாக இந்த நூல் அமைந்துள்ளது. மேலும் இந்த ஆசிரியர் இராமேஸ்வரத்தில் குடி கொண்டுள்ள இராமநாத சுவாமியை போற்றி இலக்கியம் ஒன்றும் படைத்துள்ளார். இராமநாதர் மீதான அந்தக் கோவை நூல் இன்று கிடைப்பதற்கு அரிதாக உள்ளது.

### 2) சுவாமி சதாசிவ பிரம்மேந்திரர்

இவர் இராமேஸ்வரம் தலத்தில் சோம அவதானி. பார்வதி அம்மாள் என்ற தம்பதியருக்கு கி.பி. 1850 இல் மகனாகப் பிறந்தவர். மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு விஜய

நகர நாயக்கர்கள் தமிழ்நாட்டை ஆட்சி செய்த பொழுது வடக்கே ஆந்திர நாட்டிலிருந்து இந்தத் தம்பதியினர் மதுரையில் குடியேறினர். பல வருடங்களாக அவர்களுக்குப் பிள்ளைப்பேறு கிடைக்காத காரணத்தினால் இந்த தம்பதியினர் இராமேஸ்வரத்தில் குடியேறி வாழ்ந்து வந்ததுடன் நாள்தோறும் இராமநாத சுவாமியை நினைந்தவர்களாக பல அறப்பணிகளில் ஈடுபட்டு வந்தனர். அவர்களது இறை பக்தியின் பயனாக ஒரு ஆண்குழந்தை அவர்களுக்குப் பிறந்தது. அந்த குழந்தைக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் சிவராமகிருஷ்ணன் என்பதாகும்.

பிள்ளை பாலகனாகி இளைஞனாக வளர்ந்த பொழுது அவன் தெலுங்கு. சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் அவைகளில் உள்ள தர்ம சாஸ்திரங்களையும் கற்றுத் தெளிந்தான். அன்றைய கால வழக்கப்படி அவனுக்கு 10வயது நிரம்பிய சிறுமி ஒருத்தியை பால்ய மணம் செய்து வைத்தனர். சில காலமாக தமது இல்லற வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்த அந்த இளைஞன் இல்லறம் என்பது ஆசைகளின் சங்கமம் என்பதையும் அதில் இணைந்து விட்டால் இறைவனைத் தொழுவதற்கும் பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கும் இடர்ப்பாடாக இருக்கும் என்ற முடிவிற்கு வந்தார். ஒரு நாள் தமது பெற்றோர்களுக்குக் கூடத் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறி கால்நடையாகவே கால்போன போக்கில் நடந்து சென்றார். குடந்தை நகரை அடைந்தவுடன் அங்குள்ள காமகோடி பீடாதிபதியை வணங்கித் தம்மை சீடனாக ஏற்று ஆசிர்வாதம் செய்யுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். ஆச்சாரியரும் அந்த இளைஞனது ஆன்மிக நம்பிக்கையை வளர்க்கும் வண்ணம் அவனைத் தமது சீடனாக ஏற்றுக் கொண்டார். அங்கு வேறு பல நூல்களையும் தர்ம சாஸ்திரங் களையும் கற்றுப் பெரும் பண்டிதரர்னார் அந்த மடத்திற்கு வருகின்ற ஆன்மிகத்தில் சிறந்த பண்டிதர்களுடன் வாதிட்டுத் தமது புலமையை நிரூபித்து வந்தார்.

அதனை அறிந்த அவனது ஆச்சாரியார் பேசுதலை நிறுத்தி மௌனத்தில் இறைவனைக் காணுமாறு உபதேசித்தார். அன்று முதல் ஆழ்கடல் போல அமைதியுற்ற இளைஞன் மோனத்திலும் நிட்டையிலும் இறை இன்பத்தை உணர்ந்தான். அடுத்த நாள் அந்த மடத்திலிருந்தும் வெளியேறி திகம்பர கோலத்துடன் (நிர்வாண) ஊர்ஊராகச் சுற்றி அலைந்து பாமரர்களது ஏச்சிற்கும் பக்திமான்களது போற்றுதலுக்கும் உரிய சதாசிவர் பிரம்மேந்திரா என அழைக்கப்பட்டார். அவரது ஆன்மிக பலத்தினால் அடையப் பெற்ற அவரது சித்திகளைக் கண்டுணர்ந்த புதுக்கோட்டை, தஞ்சை மன்னர்கள் அவருக்கு தக்க மரியாதைகளைச் செய்து மகிழ்ந்தனர். இறுதியில் சேலம் மாவட்டத்தை ஒட்டிய கொடுமுடி என்ற ஊரை அடுத்த நேரூர் என்ற இடத்தில் ஜீவசமாதி அடைந்தார். அவர் இயற்றிய சில தெலுங்குப் பாடல்கள் மட்டும் இன்று நமக்குக் கிடைக்கிறது.

### 3) பாம்பன் சுவாமிகள்

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முருகன் அருள் பெற்ற மிகச்சிறந்த இறை அடியார் அருணகிரி சுவாமிகள் இயற்றிய 6000க்கு மேற்பட்ட இன்னிசைப் பாடல்கள் இன்றும் திருப்புகழ் என ஒலித்துக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். இவரைத் தமது ஆன்மிக குருவாக ஏற்று அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தியும் பல தமிழ் இலக்கியங்களைப் படைத்தவருமானவர் பாம்பன் சுவாமிகள் ஆவார். இவரது சமாதி சென்னை நகரில் திருவான்மியூரில் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இவர் பிறந்து வளர்ந்தது இராமேஸ்வரம் என்பதை பலரும் அறியார்.

பாம்பன் சுவாமிகள் என அழைக்கப்படுகின்ற இவர் கி.பி.1849–இல் இராமேஸ்வரம் தலத்தில் பிறந்தார். இவரது

பெற்றோர்கள் அப்பொழுது இவருக்கு இட்ட பெயர் அப்பாவு என்பது ஆகும். தமிழிலும் வடமொழியிலும் இம்மைக்கும் மறுமைக்கும் உதவும் மிகச்சிறந்த கல்வியை இராமேஸ்வரத்தில் உள்ள பண்டிதர் ஒருவரிடம் பயின்று தேர்ச்சி பெற்றார். இவரது தந்தை இராமேஸ்வரத்தை அடுத்த பாம்பனைச் சேர்ந்தவர் ஆதலால் இவருக்கு பாம்பன் சுவாமிகள் என்ற பெயர் பிற்காலத்தில் ஏற்பட்டது.

இளமை வயது முதல் முருகப் பெருமான் மீது இடையறாத பக்திப் பெருக்கினால் பல பாடல்களைப் புனைந்து பாடிக் கொண்டிருந்தார். பிரப்பன்வலசையில் உள்ள வீட்டிற்கு வந்து தங்கிய இவர் அந்த உறவின் ஒருவரது கிராமத்தின் வட புறத்தில் உள்ள தோட்டம் ஒன்றில் ஒரு பெரிய குழியினை வெட்டி அதில் அமர்ந்து தவமிருந்தார். அன்ன ஆகாரமின்றி ஆறுமுகனது தரிசனத்தைக் கண்டபிறகுதான் தமது தவத்தை முடிப்பதாகக் கூறிவிட்டு தவத்தினை மேற்கொண்டார். நாற்பதாவது நாளில் குமரக் கடவுளது அழகுக் கோலத்தை கண்டு பரவசமிக்கவராக அந்த இடத்திலிருந்து எழுந்து வந்தார். அதுமுதல் எங்குமே நிலைபெறாமல் தொடர்ந்து வடக்கு நோக்கிப் பயணம் மேற்கொண்டவராகச் சென்னை மாநகரின் தென் பகுதியில் உள்ள திருவான்மியூரை அடைந்த பிறகுதான் அங்கு அவர் நிலையாகத் தங்கினார். இரவும் பகலும் முருகனது புகழ்பாடும் பணியில் அவரது நாட்கள் கழிந்தன. மிகப்பெரிய அழியாக் கூட்டமொன்று அவரை எப்பொழுதும் சூழ்ந்தவாறு பணிவிடைகளைச் செய்து வந்தது. இறுதியாக கி.பி.1929–இல் அந்த இடத்திலேயே ஜீவ சமாதி அடைந்தார்.

அந்த இடத்தை ஒரு சிறந்த புனிதத் தலமாக அவரது அடியார்கள் தொடர்ந்து பராமரித்து வருகின்றனர். அவர் இயற்றிய இலக்கியங்களை பதிப்பித்தும் அவை பற்றிய

சொற்பொழிவுகளை நடத்தியும் அவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# 2. இந்த நூலில் பயின்று வருகின்ற வட்டார வழக்குகள்

## 1) கோயில் நடை

திருக்கோயிலின் முகப்புப் பகுதியைக் குறிப்பதாகும்.

## 2) பட்ட காணிக்கை

சேதுபதி மன்னர்கள் சேதுநாட்டின் ஆட்சிப் பொறுப்பை – சேதுபதி பட்டத்தை ஏற்றதன் அறிகுறியாக இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு ஒரு கிராமத்தை காணிக்கையாக வழங்கி வந்தனர். பட்டத்திற்கு வந்த மன்னர் வழங்கும் முதல் காணிக்கை இங்ஙனம் பட்ட காணிக்கை எனப் பெயர் பெற்றது.

## 3) பஞ்ச தேசத்து ஆரியர்

இராமேஸ்வரம் திருக்கோயிலின் ஆவணங்களின்படி ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மராட்டம், கொங்கணம், கேரளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய ஐந்து பகுதிகளிலிருந்து பிராமணர்கள் (ஆரியர்) இராமேஸ்வரத்தில் குடியேறி உள்ளனர். அப்பொழுதெல்லாம் இந்திய மலைக்குத் தென் பகுதியிலுள்ள மக்கள் மட்டும் தான் இராமலிங்க தரிசனத்திற்காக யாத்திரையாக வந்து சென்றனர். அவர்களது மதச் சடங்குகளை இராமேஸ்வரத்தில் மேற்கொள்ளுவதற்கும் இராமேஸ்வரம் திருக்கோயிலின் அன்றாடப் பணிகள் பலவற்றை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பை இந்த வேத

வித்தகர்கள் ஏற்று நடத்தி வந்தனர். அதனால் இவர்கள் பஞ்ச தேசத்து ஆரியர் என வழங்கப்பட்டனர்.

### 4) இரண்ய கர்ப்ப தானம்

இந்து சமய சாஸ்திரங்களில் கோதானம், பூதானம், கன்னிகாதானம் என்பன போன்று முப்பத்திரண்டு வகையான தானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அவைகளில் சேராதது இந்த வகையான தானமாகும். அதாவது பூவுலகில் கங்கை நீருக்கு அடுத்தபடியாக தூய்மையானதாக, பவித்திரமானதாக கருதப்படுவது பசுவாகும். இந்தப் பசுவின் வயிற்றிலிருந்து ஒரு மனிதன் பிறப்பு எய்தினால் அவனும் நிச்சயமாக மிகவும் புனிதமானவனாக கருதப்படுவான் அல்லவா? ஆதலால் ஒரு பசுவின் உருவத்தைப் பொன் தகடுகளால் செய்து அதன் வயிற்றிலிருந்து மனிதன் பிறப்பது போன்ற ஒரு சடங்கினைச் செய்த பிறகு அந்தப் பசுவின் உருவத்தை சிதைத்து அதில் பயன்பட்டிருந்த பொன் தகடுகள் அந்தணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்டன. இரணிய = பொன், கர்ப்ப = வயிறு, தானம் = தர்மம் ஆதலால் இந்த வகையான சடங்கு – தானம் இரணிய கர்ப்பதானம் எனப்பட்டது.

இத்தகைய சடங்கினை கி.பி. 1655ல் இராமநாதபுரம் மன்னர் திருமலை ரெகுநாத சேதுபதியும் கி.பி. 1659இல் தஞ்சை மன்னர் ரெகுநாத நாயக்கரும் இராமேஸ்வரம் திருக்கோயிலில் நிறைவேற்றினர் என்ற செய்தியை வரலாற்று ஏடுகள் தெரிவிக்கின்றன.

### 5) சந்தி

இராமேஸ்வரம் திருக்கோயிலில் நாள்தோறும் ஆகம முறைப்படி ஆறுகால பூஜைகள் நடைபெற்றுவருகின்றன. ஒரு

வேளை பூஜைக்கும் மற்றொரு வேளை பூஜைக்கும் இடைப்பட்ட குறுகிய காலத்தில் சிறப்பான சில பூஜைகள் மேற்கொள்ளப்பட்டன. அவைகள் சந்தி என்றும் அவை நடைபெறும் நேரம் கால சந்தி என்றம் அழைக்கப்பட்டன.

இத்தகைய சந்தி பூஜை ஒன்றைத் திருவிதாங்கூர் மன்னர் (பெயர் தெரியவில்லை) இவர் இராமேஸ்வரம் யாத்திரையின் போது (பெரும்பாலும் 16வது நூற்றாண்டில்) சந்தி பூஜை நடைபெறுவதற்கு உரிய திரவியத்தைக் கோயிலுக்கு வழங்கி உள்ளார். அதனைக் கொண்டு இன்றளவும் திருக்கோயிலில் காலை நேர திருஅனந்தல் பூஜைக்கு அடுத்து உதய மார்த்தாண்ட சந்தி என்ற சிறப்பு வழிபாடு நடைபெற்று வருகிறது. இத்தகைய சந்தி பூஜைகளைப் பாண்டிய மன்னர்கள் பலர் பல திருக்கோயில்களில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்த நிகழ்ச்சிகளைப் பல கல்வெட்டுக்கள் வழி அறிய முடிகிறது.

## 6) கடவுச் சீட்டு

இராமேஸ்வரம் திவிலிருந்து வெளியே செல்லுவதற்கும் திவிற்குள் வருவதற்கும் வழங்கப்படும் அனுமதிச் சிட்டு.

## 7) அள்ளுத்தீர்வை

நவதானியங்கள் விற்பனைக்காக வைத்திருப்போரிடமிருந்து தீர்வையாக பெறக்கூடிய பணத்திற்குப் பதிலாக அந்த தானியங்களின் மூலையில் இருந்து இரு கைகளையும் சேர்த்து அள்ளி எடுத்துக் கொள்ளும் தானியம் அள்ளுத் தீர்வை எனப்பட்டது.

8) ஆக்கினை

குற்றவாளிகளை விசாரித்து அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை ஆக்கினை எனப்பட்டது.

9) தேடகம்

இறைவனது திருமேனிகளை பவனியாக எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் சப்பரம். தேடகம் எனப்படும்.

10) நிர்மாலியம்

கருவறையிலுள்ள திரு மேனிகளுக்கு முந்தைய நாள் சாத்தப்பட்ட திருமாலைகள்

11) கைவித்தாரம்

திருக்கோயிலில் உற்சவ நாட்களில் இறைவனது திருமேனிகளுக்கு கவர்ச்சிகரமாக அணிமணிகளையும் மலர்களையும் கொண்டு அலங்காரம் செய்பவர்

# 3. சுவாமி விவேகானந்தரின் இராமேஸ்வரம் வருகை

இந்தியத் திருநாட்டிற்கு கி.பி. 19ம் நூற்றாண்டு வழங்கிய அருட்கொடை சுவாமி விவேகானந்தராவார். இணையற்ற தத்துவ மேதையாக பிற்காலத்தில் புகழ்பெற்ற சுவாமிகளின் இயற்பெயர் நரேந்திர தத்தர். இன்றைய கல்கத்தா நகரின் புறநகர் பகுதியில் பிறந்தவர். கல்லூரியில் படிக்கும் பொழுதே இவரது இதயத்தில் ஆன்மீகச் செறிவு நிறைந்திருந்தது. இறைவன் எத்தகைய ரூபத்தில் இருப்பான் அவனை எவ்விதம் காண்பது என்ற வினாக்கள் அவரது உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. கல்கத்தா நகரின் இன்னொரு பகுதியான காளிகட்டம் என்ற இடத்தில் காளியின் உபாசகராக வாழ்ந்த ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரை ஒரு நாள் சந்தித்தார். அந்த இளைஞர் இறைவனை தமக்குக் காட்ட முடியுமா? என்ற கேள்வியையும் அந்த மகானிடம் இளைஞன் கேட்டான். மகிழ்ச்சியுற்ற அந்த மகான் அவருக்குச் சில மந்திரங்களை உபதேசித்து கண்களை மூடிக் கொண்டு கடவுளது உருவினைக் கண்டு கொள்க. அவ்விதமே அந்த இளைஞனும் செய்து இறைவனைத் தனது தியானம் மூலம் கண்டு களிப்பெய்தினார்.

அன்றிலிருந்து நரேந்திர தத்தர் ஸ்ரீ இராம கிருஷ்ணரிடம் எல்லையற்ற மதிப்பும் பக்தியும் கொண்டு அவரது பிரதான சீடராக விளங்கினார். கி.பி. 1893–ல் தமது குருவின் அனுமதி பெற்றுப் பாரத நாட்டின் புனிதத் தலங்கள் அனைத்தையும் காண்பதற்காக தலயாத்திரை ஒன்றை மேற்கொண்டார்.

கன்னியாகுமரி செல்லும் வழியில் சென்னைக்கு வந்த அந்த இளம் துறவியை இராமநாதபுரம் இளம் மன்னர் பாஸ்கர சேதுபதியவர்கள் சந்தித்து மகிழ்ந்ததுடன் சுவாமிகளிடம் வேண்டுகோள் ஒன்றினையும் சமர்ப்பித்தார். எதிர்வரும் 11.9.1893ல் அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் உலகத்தின் அனைத்துச் சமயங்களின் வல்லுனர்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று நடக்க இருப்பதையும் இந்திய நாட்டின் ஏகப்பிரதிநிதியாக சுவாமிகள் அதில் கலந்து கொண்டு நமது நாட்டின் சமயம் பண்பாடு, தத்துவங்கள் ஆகியவை பற்றிய சொற்பொழிவினை ஆங்கில மொழியில் நிகழ்த்துமாறு கேட்டுக் கொண்டார். சுவாமிகளும் தமது தலயாத்திரையை கன்னியாகுமரியில் முடித்துவிட்டுத் திரும்பிய பிறகு மன்னரது வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்தார். மகிழ்ச்சியுற்ற மன்னா அமெரிக்க நாட்டிற்குச் சுவாமிகள் சென்ற வர பயண ஏற்பாடுகளையும் தமது சொந்தச் செலவில் செய்தார். சுவாமிகளும் அன்று பம்பாய் துறைமுகத்திலிருந்து கப்பலில் அமெரிக்க நாட்டிற்குப் பயணமானார்.

இந்தப் பயணம் சுவாமிகளுக்கு மிகச் சிறந்த அனுபவத்தினையும் புகழினையும் பெற்றுத்தந்ததுடன் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள மக்களுக்கு நமது நாட்டின் தத்துவச் சிறப்பினை எடுத்துச் சொல்லும் வாய்ப்பினை வழங்கியதுடன் ஆங்காங்கு அவரது குருவான ஸ்ரீ இராமகிருஷ்ணரது பெயரில் பல திருமடங்களை நிறுவக் கூடிய வாய்ப்பையும் அளித்தது. பிரான்ஸ் நாட்டில் இருந்த ரொமைன் ரோலண்டு என்ற அறிஞரும் இங்கிலாந்து நாட்டுப் பெருமாட்டி ஒருவரும் சுவாமிகளது சிறந்த சீடர்களானர்கள் (இந்தப் பெண்மணி பின்னர் அருட் சகோதரி நிவேதிதா என்ற பெயருடன் கல்கத்தா ஆசிரமத்தில் வந்து கடைசி வரை அங்கேயே வாழ்ந்து வந்தார்)

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு தாயகம் திரும்பும் வழியில் சுவாமி பயணித்த கப்பல் இலங்கையின் கொழும்பு துறைமுகத்தை அடைந்தது. அங்கு கரையிறங்கிய சுவாமிகள் வடக்கே யாழ்ப்பாணத் திற்குச் காரில் சென்று அங்கிருந்து படகு வழியாக இராமநாதபுரம் மன்னரது துறைமுகமான பாம்பனில் 22.1.1897–ல் பிற்பகலில் கரையிறங்கினார். மிகுந்த ஆரவாரத்துடனும் மகிழ்ச்சியுடனும் சுவாமிகளுக்கு மன்னர் வரவேற்பு நல்கினார். அடுத்த இரு நாட்கள் மன்னரது பாம்பன் மாளிகையில் தங்கியிருந்து விட்டு 24.1.1897 அன்று சுவாமிகள் அண்மையில் உள்ள இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு விஜயம் செய்தார். சுவாமி தரிசனம் முடிந்த பிறகு கோயிலில் கூடியிருந்த பக்தகோடிகளுக்கு அருளுரை ஒன்றை வழங்கினார். இந்த சொற்பொழிவு ஏற்கனவே இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 25.1.1897 அன்று பாஸ்கர சேதுபதி மன்னர் இராமநாதபுரம் அரசவையில் வரவேற்றுச் சிறந்த அரச மரியாதைகளை நல்கிக் கௌரவித்தார்.

# 4. வெளிநாட்டார் குறிப்புகளில் இராமேஸ்வரம்

## 1) அல்பருனி (கி.பி. 1030)

இவர் பாரசிக நாட்டைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர். இவரது வரலாற்றுக் குறிப்புகள் நமது நாட்டின் வரலாற்றிற்குப் பயனூட்டுவதாக உள்ளன. இராமேஸ்வரம் பற்றி இவர் வரைந்துள்ள குறிப்புகள் கிழே கொடுக்கப்பட்டுள்ளன.

"........... அடுத்து உள்ளது உம்மல் நாரா அல்லது இராமேஸ்வர். இந்த ஊர் இலங்கைக்கு எதிர்க்கரையில் உள்ளது. இவைகளுக்கு இடைப்பட்ட கடலின் தொலைவு 12 பர்சங் ஆகும். பஞ்சயவாரிலிருந்து இராமேஸ்வரம் 40 பர்சங் தொலைவிலுள்ளது. இராமேஸ்வரத்திலிருந்து சேது பந்தர் 2 பர்சங் தொலைவிலுள்ளது. சேது பந்தா என்பது கடலில் அமைக்கப்பட்ட அணை என்பது பொருள். தசரதச் சக்கரவர்த்தியின் மகனான இராமன் இந்த அணையை அமைத்தான். நிலப்பரப்பிலிருந்து இலங்கையின் கோட்டையை இணைப்பதற்காக இந்த அணை கட்டப்பட்டது. இப்பொழுது வெவ்வேறான குன்றுகளாக இந்தப் பகுதி காணப்படுகிறது. இவைகளுக்கிடையில் கடல் அலைகள் நிறைந்துள்ளன"

பஞ்சயவார் என்பது தஞ்சாவூராக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (Sachau - Alberui's India, Vol. I PP 208 - 10 quoted by K.A. Neelakandashastri in his forign notices of South India (1972) PP 131-132

### 2) ஜார்ஜ் வாலன்டினா பிரபு

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் சுற்றுப் பயணமாக இலங்கை வந்தவர். கி.பி. 1803 இல் இலங்கையின் எதிர்க்கரையான இராமேஸ்வரத்திற்கும் அடுத்து இராமநாதபுரத்திற்கும் வருகை மேற்கொண்டார்.

இவர் இராமேஸ்வரம் வந்தடைந்த பொழுது அப்பொழுது இராமேஸ்வரம் திருக்கோயிலின் ஆதின கர்த்தராக இருந்த சின்ன இராமநாதன் என்பவர் இராமேஸ்வரம் திருக்கோயிலில் அவருக்கு வரவேற்பு அளித்ததை தமது பயணக் குறிப்புகளில் விவரமாக வரைந்துள்ளார். அவரை இராமேஸ்வரம் திருக்கோயிலின் முகப்பில் மேளதாளத்துடன் ஆதின கர்த்தர் அவரைச் சிறப்பாக வரவேற்றதையும் அடுத்து அவரை கோயிலுக்குள் இட்டுச் சென்றதையும் குறிப்பிட்டுள்ளார். கோயில வாசலில் கோயிலைச் சேர்ந்த சதிர்க்காரிகள் (நாட்டிய நங்கைகள்) பாட்டுப் பாடியும் கைவிரல்களை அசைத்தும் கண்களை சிமிட்டியும் நாட்டியம் ஆடியதை மகிழ்ச்சியுடனும் வினோதமாகவும் குறிப்பிட்டுள்ளார். நாட்டியக் காரிகள் பாட்டுக்கு ஏற்றபடி கை விரல்களையும் கண் விழிகளையும் அசைத்து அபிநயம் பிடித்தது அவருக்கு ஒன்றும் புரியாத புதிராகவும் வியப்பாகவும் இருந்ததாக வரைந்துள்ளார்.

### 3) ஜேம்ஸ் பர்தசன் குறிப்புகள்

இந்தக் கோயில் இந்திய நாட்டிலுள்ள கோயில்களை விடப் பிரம்மாண்டதானதாகவும் கலை நுணுக்கம் நிறைந்த தாகவும் காணப்படுகிறது. இந்தப் பகுதியை ஆண்ட சேதுபதி மன்னர்கள் இறைவனுக்குச் செலுத்தியுள்ள மிகவும் சிறந்த காணிக்கையாக இந்தக்கோயில் காணப்படுகிறது. ஏராளமான கற்களைக் கொண்டு பல நூறு தொழிலாளிகள் பல வருடங்கள்

பாடுபட்ட உழைப்பின் சின்னமாகும்.........

History of India and the great eastern Architecture (1876)

## 5. நிறைவு வரிகள்

இந்தியத் திருநாட்டின் ஆன்மீக வளர்ச்சிக்கும் பாரம்பரிய சமய உணர்வுகளுக்கும் இருப்பிடமாக ஏறத்தாழ 14 நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கின்ற இராமேஸ்வரம் திருக்கோயிலைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் திரட்டி இந்த நூலில் கொடுக்கப்பட்டு உள்ளது. திராவிடக் கோயில் கட்டுமானப் பணிக்கும் சேதுநாட்டு முடியுடை வேந்தர்களான சேது மன்னர்களது தளராத முயற்சிக்கும் இறை நம்பிக்கைக்கும் ஏற்ற எடுத்துக்காட்டாக மட்டும் அல்லாமல் சேதுநாட்டுச் ஸ்தபதிகள், கல்தச்சர்கள், பாட்டாளிகள் போன்ற தொழிலாளி வர்க்கத்தில் சிறந்த பங்களிப்பாக விளங்கி வருவது இந்தத் திருக்கோயில் ஆகும். இதனைப் பல நூற்றாண்டுகளாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்த மதுரை நாயக்க மன்னர்கள், சேதுபதி மன்னர்கள், கன்னட நாட்டு மன்னர்கள் ஆகியோர்களுடன் இலங்கை நாட்டின் சிங்கள மன்னர்களது பங்களிப்பும் இந்தக் கோயிலின் கம்பீரமான தோற்றத்திற்கும் பிரம்மாண்டமான கட்டுமானங்களுக்கும் காரணமாக அமைந்திருப்பதை வரலாற்றின் ஏடுகளிலிருந்து அறியும் பொழுது நமது உள்ளத்தில் ஒரு புதுவிதமான நெகிழ்ச்சியும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது.

இந்திய நாட்டின் சமய ஒற்றுமையையும் கலாச்சார மரபுகளையும் நமது முன்னோர்கள் எந்த அளவில் கண்ணுங் கருத்துமாகக் காத்து வந்துள்ளனர் என்பதையும் இந்தத் திருக்கோயில் கட்டியங் கூறிக் கொண்டு கலியுக வாமனனாக உயர்ந்து நிற்கின்றது. ஆனால் இந்தக் கலைப் பெட்டகத்தை சமய

நல்லிணகத்தின் சின்னத்தை எந்த அளவிற்கு இன்றைய சந்ததியினர் பேணி வருகின்றனர் அல்லது பேணி வருவார்கள் என எண்ணும்பொழுது நமது உள்ளத்தில் மிகப்பெரிய சூனியம் நிறைகிறது.

காரணம் இந்திய நாடு ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலை அடைந்த பிறகு இந்தத் திருநாட்டின் மன்னர்களான மக்களின் மனோபாவத்தில் தமது மூதாதையர்கள் பற்றிய வரலாற்று உணர்வு மங்கி மறைந்து கொண்டே வருவது ஆகும். கங்கை நதித் திரத்தில் அவதரித்த காகுத்தன் கால்நடையாக பன்னிரெண்டு ஆண்டுகள் நடந்து சென்று நமது நாட்டின் தென்கோடியிலான மகேந்திரமலை வரை பல்வேறு பட்ட மொழி. இனம். குலம் ஆகியவகளைக் கொண்ட மக்களின் சிறந்த பிரதிநிதிகளைத் தமது சுற்றமும் கிளையுமாகக் கொண்டு அதர்மத்தை வெற்றி கொள்வதற்கு முயன்று வெற்றி பெற்றான் என்ற இதிகாசம் நமது கருத்திலே கலந்து நின்ற பொழுதிலும் நாம் அந்தத்திக்கிலே இதுவரை ஒரு காலடி கூட எடுத்துவைத்து முன்னேறவில்லை என்பதுதான் நமது உண்மை அனுபவம் ஆகும்.

இவ்விதம் இதிகாசத்தைப் போற்றிப் பரவும் நாம் அந்த பக்திக் காவியம் வலியுறுத்துகின்ற ஆன்ம நேயம். சகோதரத்துவம். சமய நல்லிணக்கம். தேசிய ஒற்றுமை ஆகியவைகளையும் நாம் இனிமேலாவது நிறைந்த மனதுடனும் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையுடனும் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு முயற்சித்தல் வேண்டும் என்பது காலத்தின் கட்டளை ஆகும். இதனை நமக்குத் தெளிவாகவும். நிதரிசனமாகவும் நினைவுறுத்துவது தான் "இராமேஸ்வரம் திருக்கோயில்" இந்தத் தொகுப்புரையைக் கவனத்துடன் படித்தால் நமக்கு. நம்மைப் பற்றி. நமது நாட்டைப் பற்றி. நமது சமுதாயத்தைப் பற்றிப் பல புதிய சிந்தனைகள் தோன்றுவது

உறுதி. அந்தச் சிந்தனைகளின் வழி நாமும் நமது எதிர்காலச் சந்ததியும் நமது முன்னோர்களது ஆன்மீகக் கலை, இலக்கியத் தொண்டுகளை நினைவு கொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம் பெறுவோமாக.

## நெஞ்சம் மறப்பதில்லை......

இராமேஸ்வரம் திருக்கோயில் பற்றிய இந்த நூலினைத் தொகுப்பதற்கு ஆர்வமூட்டிய அன்பர்கள் அனைவருக்கும் மற்றும் இந்த நூலின் மூலப்படியினை மெய்ப்புடன் ஒப்பிட்டுப் பொறுமையுடன் திருத்தங்கள் செய்து கொடுத்த தமிழ்ப் பேராசிரியர் திரு.மை. அப்துல்சலாம் அவர்களுக்கும் இந்த நூலின் அச்சுப் பணியினைக் கண்காணித்து உதவிய முருகாலயம் திரு. முத்துசுவாமி அவர்களுக்கும் எனது நெஞ்சத் தடத்தில் இருத்தி மகிழ்கிறேன்.

- **ஆசிரியர்**



## Dr.S.M. கமால்

இராமநாதபுரம் தமிழ்ச் சங்க நிறுவனர்; 35 ஆண்டுகளாக பல இலக்கிய, வரலாற்று கருத்தாய்வு அரங்குகளை நடத்தியவர். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் மற்றும் 12 இலக்கிய, வரலாற்று அமைப்புக்களின் செயற்குழு, பொதுக்குழு, மாநிலக் குழுக்களின் ஆயுள் உறுப்பினர். திருவருட்பேரவை மாநில செயற்குழு உறுப்பினர். உலக திருக்குறட்கழக மாநிலக் குழு உறுப்பினர்.

### ॐ நூலாசிரியர் ☙

1. இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புக்கள் (1984)
2. விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987)
3. மாவீரர் மருது பாண்டியர் (1989)
4. முஸ்லீம்களும், தமிழகமும் (1990)
5. மன்னர் பாஸ்கர சேதுபதி (1992)
6. சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1994)
7. சேதுபதியின் காதலி (1996)
8. சீர்மிகு சிவகங்கைச்சீமை (1997)
9. சேதுபதி மன்னரும், ராஜ நர்த்தகியும் (1998)
10. திறமையின் திரு உருவம் ராஜா தினகர் (1999)
11. செந்தமிழ் வள்ளல் சீதக்காதி (2000)
12. மறவர் சீமை மாவீரன் மயிலப்பன் (2001)
13. சேதுபதி மன்னர் கல்வெட்டுக்கள் (2002)
14. சேதுபதி மன்னர் வரலாறு (2003)

### ॐ பெற்ற விருதுகள் ☙

இமாம் சதக்கத்துல்லா அப்பா விருது; தமிழ்ப்பணிச் செம்மல் விருது; சேது நாட்டு வரலாற்றுச் செம்மல் விருது; பாஸ்கர சேதுபதி விருது; சேவாரத்னா விருது; தமிழ்மாமணி விருது; தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க விருது; வள்ளல் சீதக்காதி விருது; பசும்பொன் விருது